
பிரதமோபசம சம்யக்த்துவம் பெறும்முன் அடையும்

# பஞ்சலப்தி




ஹிந்தி மூலம்

டாக்டர் உஜ்வலா ஷா, M.B.B.S., D.C.H., D.G.P.

தமிழாக்கம்

து. பூபாலன், B.E.,

பிரதமோபசம சம்யக்த்துவம் பெறும்முன் அடையும்

# பஞ்சலப்தி

ஹிந்தி மூலம்
**திருமதி உஜ்வலா ஷா M.B.B.S., D.C.H., D.G.P.**

தமிழாக்கம்
**து.பூபாலன் B.E.,**

வெளியீடு
**ஸ்ரீ அகளங்கர் அநேகாந்த மன்றம்**

5/82, 4வது தெரு, எஸ். ஆர். பி. காலனி
சென்னை 600082

**பொருளடக்கம்**


| | | |
|---|---|---|
| i | மூல நூலாசிரியரின் முகவுரை - டாக்டர். உஜ்வலா ஷா | 4 |
| ii | மூலநூல் பதிப்பாளரின் முகஉரை - பண்டிட். தினேஷ்பாய் ஷா | 6 |
| iii | அணிந்துரை - கரந்தை அ. சுகுமாரன் | 8 |
| iv | மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்பாளரின் முகவுரை- து. பூபாலன் | 10 |

| | | |
|---|---|---|
| **1.** | **கர்மம்-மூலப் பிரக்ருதிகள்** | **12** |
| **2.** | **கர்மம்-உத்தரப் பிரக்ருதிகள்** | **27** |
| **3.** | **கர்மம்-உத்தரப்பிரக்ருதிகள்-பாகம் 2** | **40** |
| **4.** | **கர்ம சம்பந்தமான சில வரையறைச் சொற்கள்** | **52** |
| **5.** | **பிரதமோபசம சம்யக்த்துவம் பெறும் தகுதி** | **67** |
| **6.** | **க்ஷயோபசமலப்தி மற்றும் விசுத்திலப்தி** | **80** |
| **7.** | **தேசனாலப்தி** | **93** |
| **8.** | **பிராயோக்யலப்தி** | **107** |
| **9.** | **கரணலப்தி-அதப்பிரவர்த்தகரணம்** | **122** |
| **10.** | **கரணலப்தி-அபூர்வகரணம், அநிவ்விருத்தி கரணம்** | **141** |
| **11.** | **பிரதமோபசம சம்யக்த்துவம்** | **159** |
| **12.** | **சாஸ்திரதானம் அளித்தவர்களின் விபரம்** | **176** |


**அச்சிட்டோர்:** ஸ்ரீ பாலாஜி ஆஃப்செட்,
சென்னை-600082
போன்: 25505566, 9444675566.

**முதல் பதிப்பு:** செப்டம்பர், 2020 - 500 பிரதிகள்.

## மூல நூலாசிரியரின் முகவுரை

தமிழ் சொந்தங்களுக்குச் சொல்வது யாதெனில்

சமண தத்துவ அறிமுகம், கரணானுயோக அறிமுகம் மற்றும் காரணகாரிய இரகசியம் எனும் மூன்று நூல்களையும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள திருவாளர். து.பூபாலன் அவர்கள் இப்பொழுது மிகக் குறைந்த நேரத்திலேயே நான்காவது நூலான பிரதமோபசம சம்யக்த்துவம் பெறும்முன் அடையும் **பஞ்சலப்தி** எனும் நூலையும் அவரே மொழிபெயர்த்து வெளியிடுகிறார் என்பதை அறியும் பொழுது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஜின ஆகமத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மிகவும் ஆழமானவை மற்றும் அவை பரமானந்தத்தைத் தரக்கூடியவை. ஜின ஆகமத்தின் கோட்பாடுகள், மிகுந்த ஆர்வத்தையும், உற்சாகத்தையும் கொடுப்பவை. அதனால்தான் கரணானுயோகத்தை இன்றும் பல ஆர்வலர்கள் படிக்கின்றனர் மற்றும் அதன் பிரபாவனையையும் செய்கின்றனர்.

நான் என் கடந்தகால வாழ்க்கையை உற்று நோக்கும் பொழுது என்னை அறநெறியில் ஈடுபடுத்திய அந்நிகழ்வு என் நினைவுக்கு வருகிறது. 1975-ஆம் ஆண்டு **தர்மசக்கரம்** எனும் தீர்த்த யாத்திரையில் பங்கு கொண்டபோது நானும் என் கணவரும் ஆகமத்தின் கோட்பாடுகளை சிறிது சிறிதாக அறியும் வாய்ப்பைப் பெற்றோம். பல பண்டிதர்கள் மற்றும் பூஜ்ய ஸ்ரீ கான்ஜி சுவாமி அவர்களிடமிருந்து ஆன்ம ஞானத்தைப் பெற முயற்சி செய்தோம். நான்கு அனுயோகங்களின் பல நூல்களைப் படித்தோம், மற்றவர்களுக்குப் படிப்பிக்கவும் செய்தோம். இந்நிகழ்வுகள் எல்லாம் தானாகவே நடைபெற்றன. நாங்கள் இயற்றியுள்ள நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படும் என்று நாங்கள் எங்கள் கனவில்கூட நினைத்துப் பார்த்ததில்லை, அப்படிப்பட்ட ஒரு ஆசையும் எங்களுக்கு இருந்ததில்லை, ஆனால் நிமித்த-நைமித்திக சம்பந்தத்தால் திரு. பூபாலன் ஜி அவர்களின் முயற்சியால் இதுவும் இப்போது நடைபெற்றுள்ளது.

இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் இருந்து எனக்கு ஒரு ஃபோன் கால் வந்தது. அமெரிக்காவிலிருந்து திரு. பூபாலன் அவர்கள் என்னிடம் பேசினார்கள். அவரை நான் முன்பு எப்பொழுதும் சந்தித்ததில்லை. அன்று அவர் www.jainsiddhant.org பற்றி பேசினார். அவருக்கு நான் எங்கள் ஃபேஸ்புக் லிங்க் பற்றிய விவரங்களை வழங்கினோம். எங்கள் பிரவசனங்களின் நேரலையை அவர் கேட்கலாயினார். தினம் அவர் மூன்றரை மணி நேரம் வரை எங்கள் பிரசவசனங்களைக் கேட்டு ஆன்ம நலம் பெற்றார். அதன் தொடர்ச்சியாக அவர் எங்களால் இயற்றப்பட்டுள்ள அனைத்து நூல்களையும் பெற்று அவற்றையும் ஸ்வாத்யாயம் செய்தார், அந்த நூல்களின் பிரவசனங்களையும் கேட்டார். அந்நூல்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ள கருத்துக்களின் ஆழத்தை அவர் தன் புலமையால் நன்கு அறிந்தார்.

அறத்தின்பால் உள்ள ஈடுபட்டால் அவர் அனைத்து நூல்களையும் ஒன்றன்பின் ஒன்றாக சிறிது காலத்திலேயே மொழிபெயர்த்தார். அவர் எங்களால் இயற்றப்பட்ட **சமண தத்துவ அறிமுகம், காரணகாரிய இரகசியம்** மற்றும் **கரணானுயோக அறிமுகம்** முதலான

நூல்களை மொழிபெயர்த்து இதற்கு முன்பு வெளியிட்டுள்ளார். ஒவ்வொரு நூலை வெளியிடும் பொழுதும், அது எங்கள் கரங்களால் தான் வெளியிடப்பட வேண்டும் என்கிற வேண்டுதலையும் அவர் வைத்தார். அதன்படி நாங்கள் நூல்களை வெளியிட்டு மகிழ்ந்தோம்.

இப்பொழுது பஞ்சலப்தி எனும் நூலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது. அவருக்கு நாங்கள் நன்றி சொல்ல கடமைப் பட்டுள்ளோம். ஆகமத்தின் அடித்தளமாக கருதப்படும் இந்த நூலை நம் நாட்டிலும், வெளி நாடுகளிலும் பலர் படித்துப் பயன் பெற்றுள்ளனர். இப்பொழுது திருவாளர் பூபாலன் அவர்களின் முயற்சியால் தமிழ் பேசும் அறவுணர்வு உள்ள மக்களும் இந்நூலை படித்து தர்மலாபம் பெறுவர்.

இந்நூல்களை வெளியிட்டு தமிழ்மொழி பேசும் நன்மக்களின் சுவாத்யாயத்திற்கு அவர் துணை நிற்கிறார். அவர் எதிர்காலத்திலும் இப்படி மக்களுக்கு ஆன்மநலம் விளைவிப்பதில் நிமித்தமாக இருப்பார் என்று எண்ணும் பொழுது நாங்கள் மிக்க மகிழ்ச்சி கொள்கிறோம்.

கொரோனா வின் சோதனைக் காலத்தில் உடல், பொருள் மற்றும் மனதால் திருவாளர் து.பூபாலன் அவர்கள் தமிழ் மொழியில் பஞ்சலப்தி எனும் நூலை வெளியிடுகிறார், இவ்வாறு அவர் சோதனை காலத்தையும் சாதனை காலமாக மாற்றியுள்ளார். எதிர்காலத்திலும் சுவாத்யாயம் மற்றும் ஜினதர்ம பிரபாவனையில் முழு முனைப்புடன் செயல்படுவார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அவர் முயற்சிகள் வெற்றி பெறட்டும். ஜினவாணியின் மர்மம் திக்கெட்டும் பரவட்டும்.

நாம் அனைவரும் ஆன்மனை உற்றுநோக்கி அதில் ஆழ்ந்து மோக்ஷமார்க்கத்தில் முன்னேறுவோமாக. இதுவே என் பாவனை ஆகும்.

சயான் மேற்கு, மும்பை. டாக்டர். உஜ்வலா ஷா.
4-8-2020 போன்: 97573 93637

## மூலநூல் பதிப்பாளரின் முகஉரை

உங்களுடன் ஒருசில வார்த்தைகள்

என் துணைவியார் டாக்டர். உஜ்வலா ஷா அவர்கள் எழுதிய பஞ்சலப்தி எனும் இந்த புத்தகத்தை நான் 2002-ல் மராத்தி, ஹிந்தி, குஜராத்தி மொழிகளில் பதிப்பித்தேன். திருவாளர்.பூபாலன் அவர்கள் ஃபோன் செய்து உங்களுடைய பஞ்சலப்தி நூலின் தமிழ் மொழிபெயர்ப்பை முடித்து விட்டேன், அது வெகுவிரைவில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட உள்ளது என்று தெரிவித்தபோது நாங்கள் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தோம். இதில் என்ன ஒரு வியப்பு என்றால், நாங்கள் திரு.பூபாலன் அவர்களை இந்த நூலை மொழிபெயர்ப்பதற்கான எந்த ஒரு விண்ணப்பத்தையும் அவர் முன் வைக்கவில்லை, ஆனால் யார் ஜினாகமத்தின் மர்மத்தை உணருகிறாரோ அவர், எவர் ஒருவரின் வேண்டுதலும் இல்லாமல் ஜினவாணியின் மர்மத்தை, தர்மத்தில் ஈடுபாடு கொண்டுள்ள சாதர்மி உயிர்களிடத்தும் சென்று சேர்ப்பதற்கான முயற்சியை மேற்கொள்வார்.

திரு. பூபாலன் அவர்கள் டாக்டர். உஜ்வலா ஷா இயற்றியுள்ள மற்ற மூன்று நூல்களை இதுவரை மொழிபெயர்த்துள்ளார். அவருடைய இந்த அற உணர்வையும், செயல்பாட்டையும் எவ்வளவு பாராட்டினாலும் அது மிகையாகாது. இந்த நூலை வெளியிட முற்படும்போது நாங்கள் அவருக்கு பொருளாதார ரீதியில் ஏதாவது உதவி தேவைப்பட்டால் நாங்கள் செய்வதற்கு முனைப்புடன் இருக்கிறோம் என்று தெரிவித்த போதிலும் அவர் அதை வேண்டாம் என்று மறுத்து விட்டார். ஜினவாணியின் மர்மத்தை ஒவ்வொரு உயிரிடத்தும் சென்று சேர்ப்பதற்கு அவர் உடலாலும், உள்ளத்தாலும், பொருளாலும் உதவுவதற்கு முனைப்புடன் உள்ளார். அவரை எவ்வளவு பாராட்டினாலும் அது மிகையாகாது.

பஞ்சலப்தி எனும் இந்நூலை படிப்பதனால் கர்ம வினைகள் பற்றிய புரிதல் ஏற்படும் மற்றும் பிரதமோபசம சம்யக்த்துவத்தை பெறும்பொழுது ஓர் உயிரின் பரிணாமங்கள்-எண்ணங்கள் எப்படி இருக்கின்றன மற்றும் அவ்வுயிரின் கர்ம வினைகளின் நிலை எப்படி இருக்கும் என்பதைப் பற்றிய அறிதல்-புரிதல் ஏற்படும். இதைப்பற்றிய அறிதல் வியவஹார சம்யக்த்துவத்திற்கு நிமித்தமாக அமையும். தன் ஆன்மனில் நம்பிக்கைக் கொள்ளுதல், தன்னை அறிதல் மற்றும் தன் ஆன்மனில் நிலைத்தல் இதுதான் உண்மையில் நிச்சய சம்யக்த்துவம் என்று ஸ்ரீ கான்ஜி ஸ்வாமி அவர்கள், யோகிந்து தேவர் இயற்றியுள்ள பரமாத்மப்பிரகாசகம் எனும் நூலை ஆதாரமாகக் கொண்டு தன் பிரவசனங்களில் அடிக்கடி விளக்குவார். உண்மையில் வியவகாரம் மற்றும் நிச்சய சம்யக்த்துவம் இரண்டும் ஒரே நேரத்தில் தான் ஏற்படும்.

நாம் நம் ஆன்மாவை உள்ளூர உணர வேண்டும் என்றால் ஆன்மாவைப் பற்றி நாம் அறிய வேண்டியதுதான், ஆனால் கர்மங்களைப் பற்றியும் நாம் ஏன் அறிய வேண்டும்? என்று நீங்கள் வினவலாம். ஆனால் ஆறு பொருட்களின் இயல்பை அறிவதனால் ஆன்மப் பொருள் பற்றிய தெளிவான ஞானம் ஏற்படும் என்பதையும் நாம் கவனத்தில்

கொள்ள வேண்டும். நான்கு அனுயோகங்களின் பிழிவு வீதராகத்தன்மையை அடைவதுதான் என்று ஆச்சாரிய குத்தகுந்தர் எடுத்துரைக்கிறார்.

தியானத்தின் நான்கு பிரிவுகளில் விபாகவிசயம் மற்றும் அபாயவிசயம் இவற்றில் வினைகளின் நிலையை பற்றிய கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவைகளைப் பற்றிய சிந்தனை வேண்டும். சம்யக்திருஷ்டி எப்பொழுதும் தர்ம தியானத்துடன் இருப்பார். சம்யக்திருஷ்டிக்கு கர்ம வினைகளைப் பற்றிய சிந்தனையும் உண்டு. நாம் அனைவரும் கர்மவினைகள் பற்றிய சிந்தனையும் செய்ய வேண்டும்.

இந்த நூல் கரணானுயோகத்தின் அடிப்படை நூலாகும். இந்நூலை படிப்பவர்கள் கண்டிப்பாக ஞான லாபம் பெறுவார்கள். அனைவரும் இந்நூலைப் படித்து பயன்பெற்று ஆன்ம நலம் பெறவேண்டும் என்பதே என் பாவனை ஆகும்.

சயான் மேற்கு, மும்பை.
4-8-2020

பண்டிட். தினேஷ்பாய் ஷா
போன்; 87794 99255

## அணிந்துரை

இது கணிணி காலமா, கைபேசி காலமா, டிவி காலமா அல்லது கலிகாலமா என்று நாம் ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலையில், மக்களிடம் நூல்களைப் படிக்கும் பழக்கம் முன்போல் இல்லாமல் குறைந்து வருவதாக அறிஞர்கள் கருதுகிறார்கள். இப்போது ஒரு வயது குழந்தைகளிடமும் கைபேசியைப் பெற்றோர்கள் விளையாடக் கொடுத்துவிட்ட பின், அவர்கள் அதிலேயே மூழ்கி தனித்தவர்களாகி, மழலையை மறந்து, பேச்சை மறந்து, பிறரை மறந்து, பிறகு உறவு என்ன என்பதே தெரியாதவர்களாக மாறிவிடுகின்றனர். இந்த இலட்சணத்தில் பரந்த நூல் வாசிப்பு எங்கிருந்து வரும்; அதில் இருக்கும் சுகம் எங்கே தெரியும்! அதிலும் அறநூல்களும், நீதி நெறி நூல்களும், தத்துவ விரிவுரைகளும் அவர்களுக்கு இனிக்க வாய்ப்பில்லைதான்!

ஆனால் இந்த காலகட்டத்திலும் விடாப்பிடியாக ஜினதர்மத்தை விளக்கி எழுதியும், பிரவசனம் செய்தும், பல இடங்களுக்குச் சென்று அறம் பரப்புவோர் அருகிவிடவில்லை! ஏனெனில் சமவசரணத்தில் எழுந்த திவ்யஒலி, என்றும் எப்போதும் அழியுமாறில்லை. மக்களிடம் அன்றிருந்த ஞானத்திற்கும், ஞாபகச்சக்திக்கும் ஏற்றவாறு வாய்வழியாகவே உபதேசிக்கும் முறையும், கேள்வி ஞானத்தின் வழியாகவே அவற்றின் சாரத்தை ருசிக்கும் தன்மையும் இருந்ததால், தர்மம் பரம்பரையாக ஆன்றோர்கள் மூலம் தழைத்து வந்தது. பிறகு காலமாறுபாட்டால், மக்களிடம் அறிவு மந்தநிலை அடைய அடைய, எழுத்துப் பூர்வமாக நூல்வடிவம் தேவைப்பட்டது. இந்த நிலையிலும் நம் ஆச்சாரிய பரம்பரையினர், விடாது ஜினவறத்தைக் காத்து, போற்றி, ஆகமங்களாக, அதனை ஒட்டிய பல நூல்களாக நமக்கு அளித்து வந்தனர். இன்றும், மேலே முதலில் கூறிய இக்கட்டான சூழ்நிலையிலும் அந்த ஆச்சாரியர்களின், மற்றும் நூலாசிரியர்களின் வழி நிற்போர், ஆங்காங்கே நம் பாரத புண்ணிய தேசத்தில், பணியாற்றி வருகின்றனர். இது நமது தர்மத்தின் வலிமையையும், நேர்மையையும், உண்மையையுமே காட்டுகிறது எனில், அது மிகையில்லை.

இந்த வரிசையில் மும்பையில் வசிக்கும் டாக்டர். உஜ்வலா ஷா அவர்கள் ஓயாது பல நகரங்களுக்குச் சென்று, ஜினதர்மத்தை பிரவசனம் செய்தும், நூல்களாக எழுதி வெளியிட்டும், தன் மகள்களுக்கு கடிதங்கள் மூலம் தத்துவங்களை விளக்கியும், அருகனின் அறஅமுதத்தை எங்கும் பிரவாகமாக ஓடச்செய்யும் முயற்சியில் பெரிதும் வெற்றி கண்டுள்ளார். அவருடைய பிரவசனங்களும், புத்தகங்களும் இந்தியாவில் மட்டுமின்றி உலகெங்கிலும் அமோக வரவேற்பைப் பெற்று, ஆகம ஒளியை இன்றும் பரப்பி வருகிறது. அவரது நூல்களில், பிரவசனங்களில் ஈர்க்கப்பட்டும், அவர்களின் இந்தி நூல்களை ஆழப் பயின்றும், அவரிடம் தொடர்பு கொண்டும், பொறியாளர் திரு.து.பூபாலன் அவர்கள் இதுவரை **சமண தத்துவ அறிமுகம், காரண காரிய இரகசியம், கரணானுயோக அறிமுகம்** ஆகிய மூன்று நூல்களை நம் தமிழ் சமூகம் பயன் கொள்ளுமாறு, மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். இப்போது நான்காவதாக இந்நூல்: **பஞ்சலப்தி**.

இந்நூல் பதினோரு கடிதங்கள் வடிவமாக, அடுத்த படிநிலைகளாகத் தத்துவ விளக்கங்களைத் தருகிறது. பஞ்சலப்தியை விளக்கப் புகுமுன் காதி, அகாதியாகிய

எண்வினைகளை, விளக்கமாக, அடித்தளமாக விவரிக்கிறார். அதன் 148 உத்தரப் பிரக்ருதிகளை (உட்பிரிவுகளை) விளக்கும்போது, காதிகர்மங்கள் 47 உத்தரப்பிரக்ருதிகள் யாவும் பாபப்பிரக்ருதிகள் என்றும், அகாதிகர்மம் 101ல், 68 புண்ணிப் பிரக்ருதிகளாகவும், 53 பாபப் பிரக்ருதிகளாகவும் பந்தமாகும் விந்தையை சுவைபட விளக்குகிறார். மேலும், ஒரு சமயத்தில் கர்ம பரமாணுக்கள் குழுவாக உதயமாகும் சமூகத்தை நிஷேகம் என்பதையும், கர்மப் பிரக்ருதிகளின் தீவிர மற்றும் மந்த பலன் தரும் ஸ்பர்தகங்களின் நான்கு நிலைகளையும், கர்மங்களின் ஸ்திதியும், பலன் தரும் தன்மையும் குறைந்தும் அதிகமாகவும் ஆகும் நிலைகளான அபகர்ஷணம், உத்கர்ஷணம் பற்றியும், விளக்கியபின், கர்மத்தை தணிவு செய்து அஞ்ஞானி உயிர் சம்யக்த்துவத்தை பெறும் தகுதியை பிரதமோபசம சம்யக்த்துவம் என்றும் விரிவாக விளக்குகிறார்.

பிரதமோபசம சம்யக்த்துவம் பெறும் தகுதிக்கு முன் நிகழும் நம்பிக்கையும், ஒழுக்கமுமாகிய சுப சாதனைகளை அடைதலே லப்தி எனப்படும். லப்திகள் க்ஷயோபசமலப்தி, விசுத்திலப்தி, தேசனாலப்தி, பிரயோக்யலப்தி, கரணலப்தி ஆகியவை ஐந்து லப்திகளும் படிப்படியாக ஜீவனில் ஏற்படுகிறது. இதன் விளக்கங்களை, சஹடாலா, பஞ்சவிம்சதி, மோட்சமார்க்கப்பிரகாசம், லப்திசாரம் முதலான சாஸ்திரங்களிலிருந்து தக்க மேற்கோள்களைத் தந்து இந்நூல் தெளிவாக்குகிறது.

நூலில் வரும் அநேக ஆழமான, தத்துவ அரும்பதங்களைத் தனியாகப் பட்டியலிட்டு, சிறிய பொருள் விளக்கம் தந்து, இறுதியில் இணைத்தால் உதவியாக இருக்கும் என்று கருத வேண்டியுள்ளது. ஆனால் நூலினுள்ளேயே தெள்ளத்தெளிவாக, விரிவாக அத்தத்துவச் சொற்கள் விளக்கப்பட்டிருப்பதால், நூலாசிரியர், தனி இணைப்பு மிகை என்று கருதி யிருக்கக்கூடும்.

இந்நூலைப் படிக்கும்போது, இது ஒரு மொழிபெயர்ப்பு நூல் என்ற உணர்வே ஏற்படா வண்ணம், இக்கடினமான தத்துவ விசாரமாகிய இந்நூலைச் சரளமாக, எளிமையாக திரு. பூபாலன் அவர்கள் ஆக்கியுள்ளார். மூல நூலில் உள்ள ஆழ்ந்த கருத்துக்களை, விஷய விவரங்களை சிந்தாமல், சிதறாமல், மிகாமல், குறையாமல் இவர் மொழி பெயர்த்திருக்கும் திறன் பெரிதும் பாராட்டத்தக்கது. தமிழில் ஜைன தத்துவ பெட்டகங்களில் இது மேலும் ஒரு இணைப்பு என்று தயங்காமல் நாம் பாராட்டலாம். இவர் தொண்டு மேன்மேலும் சிறக்க வாழ்த்துவோம்.

ஜவகர்நகர், சென்னை-82.
போன்: 98416 98993

அன்பன்
கரந்தை அ. சுகுமாரன்.

## மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்பாளரின் முகவுரை

**ஸம்மத்தோ ணாணம் ணாணாதோ ஸவ்வ பாவ உவலத்தீ |**
**உவலத்த பயத்தோ புண ஸேயாஸேயம் வியாணோதி ||**

நற்காட்சியால் நல்லறிவும், நல்லறிவால் உலகிலுள்ள எல்லாப் பொருள்களின் உண்மையான அறிவும், அந்த மெய்யறிவால் உயிருக்கு நன்மை பயப்பது எது, தீமையை விளைவிப்பவை எவை என்று பிரித்தறியும் அறிவும் உண்டாகின்றன என்று ஆச்சாரிய குந்தகுந்தர் தர்சனபாகுடத்தில் கூறியுள்ளார். இதிலிருந்து நாம் முதலில் பெறவேண்டியது நற்காட்சியே-நன்னம்பிக்கையே என்று தெரிகிறது.

**தத்வார்த்த சிரத்தானம் சம்யக்தர்சனம்**

ஏழு தத்துவங்களை அறிந்து அதில் நம்பிக்கை கொள்ளுதல் நற்காட்சி என்று ஆச்சாரிய உமாஸ்வாமி தத்வார்த்தஸூத்திரத்தில் கூறியுள்ளார். நற்காட்சியே முக்திப் பாதையின் முதல் படியாகும். அந்த நற்காட்சியை முதன்முதலாகப் பெறும் அனாதி மித்யாதிருஷ்டி உயிர், எந்தப் பாதையில் பயணித்து அந்த முதற்படியை எப்படி அடைகிறது என்பதை எளிமையாக விளக்கும் நூலே உங்கள் கையில் தவழும் **பஞ்சலப்தி** என்ற இந்த நூலாகும்.

டக்டர். உஜ்வலா ஷா அவர்களால் எழுதப்பட்டு, அவருடைய கணவர் பண்டிட். தினேஷ்பாய் ஷா அவர்களால் 2002-ல் ஹிந்தி, மராட்டி, குஜராத்தி மொழிகளில் வெளியிடப்பட்டதே இந்த நூலாகும். அதிஷ்டவசமாக நான் இந்த நூலை ஸ்வாத்யாயம் செய்யவும், இது சம்பந்தமான பண்டிட். தினேஷ்பாய் ஷா அவர்களின் பிரவசனங்களை இணையதளம் வாயிலாகக் கேட்கும் பாக்கியமும் பெற்றேன். நான் பெற்ற ஆனந்த அனுபவத்தை சக தமிழ் சமணர்களும், குறிப்பாக இளம் தலைமுறையினரும் பெறவேண்டும் என்ற நோக்கில் இந்த அருமையான நூலை எளிய தமிழ்நடையில், எல்லோரும் சுலபமாக புரிந்து கொள்ளும் வகையில் மொழிபெயர்ப்பு செய்தேன்.

மொழிபெயர்ப்பு முடிவடைந்ததும், பண்டிட். தினேஷ்பாய் ஷா மற்றும் டாக்டர். உஜ்வலா ஷா அவர்களை தொலைபேசி வழியாகத் தொடர்பு கொண்டு, இந்த நூலுக்கு முகவுரைகளை எழுதி அனுப்பும்படி வேண்டினேன். அவர்கள் என்னைப் பாராட்டியதோடு மட்டுமல்லாமல், நூல் வெளியிட பணஉதவி தேவைப்பட்டாலும் செய்யத் தயாராக இருப்பதாகக் கூறினார்கள். தமிழ் நாட்டிலும் தர்ம சம்பந்தமான நூல்கள் வெளியீட்டுக்காக தானமளிக்க தாராள மனம் படைத்த நம் நண்பர்கள் இருப்பதை எடுத்துச்சொல்லி அவர்களுக்கு என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்தேன். இதைக் கேட்ட அவர்கள் சந்தோஷம் அடைந்ததோடல்லாமல், தமிழ் சொந்தங்களுக்கு சாஸ்திர சுவாத்யயத்தின் அவசியத்தையும், அதன் இன்றியமையாமையையும் எடுத்துக் கூறும் வகையில் அழகான முகவுரைகளை எழுதி அனுப்பினார்கள். அவர்கள் இருவருக்கும் என் பணிவு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர். உஜ்வலா ஷா அவர்கள் எழுதிய நான்கு கடிதம் வழி ஜைன தத்துவ அறிமுக நூல்களில், இது நான்காவது நூலாகும். **சமண தத்துவ அறிமுகம், காரண காரிய இரகசியம்** ஆகிய இரண்டு நூல்களை ஜூலை, 2019-திலும், **கரணானுயோக அறிமுகம்** என்ற மூன்றாவது நூலை பிப்ரவரி, 2020-திலும் மொழிபெயர்த்து வெளியிட்டேன். மூன்றாவது நூலை அச்சிட்டு

வெளியிடும் செலவு முழுவதும் சாஸ்திரதானம் அளித்து உதவியது போலவே, இந்த நூல் வெளிவரவும் பவ்விய நண்பர்கள் முழுமையாக சாஸ்திர தானம் அளித்திருக்கிறார்கள் என்பது, அவர்களுக்கு மார்கப்பிரபாவனையில் இருக்கும் ஈடுபாட்டைக் காணமுடிகிறது. சாஸ்திர தானமளித்த அனைவரையும் என் முழுமனதுடன் பாராட்டுவதோடல்லாமல், அவர்கள் குடும்பத்தார்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலின் மொழிபெயர்ப்பின் போது என்னை ஊக்குவித்த முனைவர் வி.தனகுமார் ஜெயின் சாஸ்திரியார் அவர்களுக்கும், மொழிபெயர்ப்பில் எனக்குப் பேருதவியாக இருந்த திரு.ஜெயராஜ் சாஸ்திரியார் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூலில் அச்சுப்பிழை எதுவும் இல்லாதவகையில் பிழை திருத்தம் செய்வதில் உதவிய திருவாளர்கள் மன்னார்குடி பத்மராஜ் இராமசாமி, கரந்தை அ.சுகுமாரன், அவர்கள் இருவருக்கும் நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.

பிழை திருத்தத்திற்கு உதவியதோடல்லாமல் குறுகிய காலஅவகாசத்தில் அருமையான ஒரு அணிந்துரை எழுதி உதவிய கரந்தை திரு.அ.சுகுமாரன் அவர்களுக்கு என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். எப்போதும்போல இந்த நூலையும் அருமையாகவும், நேர்த்தியாகவும் அச்சிட்டுத்தந்த நண்பர் ஸ்ரீ பாலாஜி ஆப்செட் நிறுவனராகிய திரு.சுப்பையா அவர்களுக்கும் என் பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலின் மொழிபெயர்ப்பு முழுக்க முழுக்க டாக்டர் உஜ்வலா ஷா அவர்களின் கருத்துக்களும், மொழிநடையும் அப்படியே இருக்குமளவுக்கு மிகுந்த கவனத்துடன் செய்திருக்கிறேன். எங்கு மேலும் கொஞ்சம் விளக்கினால் நன்றாகப் புரியும் என்று தோன்றிய இடத்தில் **[ ]-** இக்குறியீட்டுக்குள் என் க்ஷயோபசம ஞானத்திற்குத் தெரிந்த அளவில், கூடுதல் விஷயங்களையும் கொடுத்திருக்கிறேன். இந்த நூலில் பவ்வியர்கள் ஏதாவது தவறு கண்டால் எனக்குத் தெரியப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், திருத்தி வாசித்துக் கொள்ளவும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். பெருமுயற்சியின் காரணமாக வெளிவந்துள்ள இந்த நூலை தமிழ்ச் சமணர்கள் ஆர்வத்தோடு ஸ்வாத்யாயம் செய்து ஆன்ம நலம் அடைய வேண்டும் என்ற பாவனையுடன்,

சென்னை-600082. து.பூபாலன்
18-08-2020 போன்: 9840448643

## கர்மம்-மூலப் பிரக்ருதிகள்

**கடிதம்-1** **25-4-2002**

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

**காரண காரிய இரகசியம்** என்ற கடிதம்வழி ஸ்வாத்யாயத்தின் மூலம் தத்துவஞானம், பொருட்களின் அமைப்பு மற்றும் அவைகள் சுதந்திரமாகச் செயல்படும் விதம் ஆகியவைகளைப் பற்றி ஆழமாகவும், தெளிவாகவும் தெரிந்து கொண்டோம் என்று நீங்கள் இருவரும் கூறினீர்கள். இந்த தத்துவம் இப்படித்தான் இருக்கிறது, வேறு எந்த விதமாகவும் இல்லை என்ற முழுநம்பிக்கை வராதவரை, தத்துவங்கள் எப்படி கேவலி பகவானால் விவரிக்கப்பட்டதோ அப்படியே தத்துவங்களைப் பற்றி முடிவுக்கு வராதவரை, நிமித்தமே காரியம் நிகழக்காரணம், அதாவது நிமித்தமே கர்த்தா என்ற நம்முடைய மூடநம்பிக்கை நம்மைவிட்டுப் போவதில்லை. எதுவரை இந்த உயிருக்கு நிமித்தத்தின் ஆட்சியே எல்லா நிகழ்விலும் கோலோச்சுகிறது என்ற நம்பிக்கை இருக்கிறதோ, நிமித்தத்தாலேயே காரியம் நிகழ்கிறது மற்றும் சரியான நிமித்தம் கிடைக்காததால் என்னுடைய குறிப்பிட்ட காரியம் நிகழாமல் தடைபட்டு நிற்கிறது என்ற நம்பிக்கை இருக்கும்வரை; ஒவ்வொரு திரவியத்தின் சுதந்திரம், இயல்பு, அவைகளின் தன்நிறைவான செயல்பாடு மற்றும் அவைகளில் தானாகவே காரியங்கள் நிகழ்தல் முதலியன வெல்லாம் மூடநம்பிக்கை கொண்ட உயிரின் கவனத்திற்கு வருவதில்லை. அந்த உயிர்களுக்கு இந்தத் தத்துவங்களின் விஷயங்களில் கொஞ்சம்கூட நம்பிக்கை வருவதில்லை.

உயிரும், புத்கலமும் இரண்டு சுதந்திரமான திரவியங்கள் மற்றும் அவைகளின் ஒவ்வொரு பர்யாயமும்-ஒவ்வொரு சமயநேர நிலையும், ஒவ்வொரு அவஸ்தையும் அவைகளிளேயே அதாவது அதனதனிலேயே, சுயமாகவே, அவைகளின் சுய குறிப்பிட்டத் தகுதியாலேயே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆறு திரவியங்களிலும் இந்த விதியே-நியமமே காணப்படுகிறது. ஆறு திரவியங்களின் பெயர்களை என்னவோ நாம் தெரிந்து வைத்திருக்கிறோம். யாராவது கேட்டால்கூட விரைவாக அவைகளை எடுத்துச் சொல்லுகிறோம். ஆனால் உண்மையில் இந்த ஆறு திரவியங்களின் அஸ்தித்துவத்தை, நிலையான இருப்புத் தன்மையை உண்மையாக நாம் நம்புகிறோமா? என்று நம் மனதில் நாமே சிந்தித்து ஆலோசனை செய்துப்பார்க்க வேண்டியது அவசிமானதாகும். உடலே நான் என்று நம்பிக்கொண்டு உடம்பிலிருந்தும் வேறான உயிர் பெயர் கொண்ட பதார்த்தம் ஏதாவது இருக்கிறதா என்ன?! என்பது பற்றிய கேள்வியும், அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லையே என்ற தவறான நம்பிக்கையுமே பொதுவாகப் பெரும்பாலான மக்களிடம் காணப்படுகிது. தங்கள் கண்களால் காணப்படும் மற்றும் இந்திரியங்களால் அறியப்படும் வஸ்த்துக்களை மட்டுமே அதாவது தங்களுடைய புலன்களால் பார்த்து அறியப் படுபவைகளே நிலையான பொருள்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையே இந்த உயிர்களுக்கு இருக்கிறது. தன்னால் பார்க்கப்படும் பொருள்கள் மீதுதான் இந்த உயிர் நம்பிக்கை வைக்கிறதே ஒழிய, அவைகளைப் பார்க்கும் ஸ்வயம் நான் ஒரு உயிராவேன், உடலிலிருந்து வேறான தனித்தன்மை வாய்ந்த நிலையான [முக்காலத்திலும்

அழிவில்லாத] பதார்த்தமாவேன் என்பது பற்றிய சிறிய வாசனைகூட இந்த உயிருக்கு இதுவரை வரவில்லை.

சாஸ்திர ஸ்வாத்யாயம் செய்வதின் பிரயோஜனம் குறிப்பிட்ட சில விஷயங்களப் பற்றி தெரிந்து கொள்வது மட்டுமேயல்ல, ஆனால் அதன்மூலம் தன் ஸ்வரூபத்தை-உண்மையான வடிவத்தை அறிந்து கொள்வதும் மற்றும் புத்கலங்கள் முதலான பிற திரவியங்களிலிருந்து தனியான மற்றும் தன் குண பர்யாயங்களிலிருந்து எப்போதும் பிரிந்து போகாத, அபேத, நிஜ சுத்தாத்மாவை அறிந்து, நம்பி அதை அனுபவம் செய்வதே சாஸ்திர ஸ்வாத்தியாயத்தின் உண்மையான பிரயோஜனமாகும். சாஸ்திர ஸ்வாத்யாயத்தின் சாராம்சமே தன்னைத்தான் அறிவதற்கே என்று உணருதல் வேண்டும்! இதனால் தான் ஒவ்வொரு சாஸ்திரத்தின் சாராம்சமும் வீதராகத்துவமாகும் என்று சொல்லப்படுகிறது. **கரணானுயோக அறிமுகம்** என்ற கடித வடிவப் புத்தகத்தின் மூலம் அது சம்பந்தமான நுட்பங்களைத் தெரிந்து கொண்டபோது, நாம் நம் ஸ்வரூபத்தை எப்படி அடையாளம் காணவேண்டும் என்றும், திரவியானுயோகம் மூலம் கற்ற சித்தாந்தங்களை கரணானுயோகத்தில் எப்படிப் பொருத்திப் பார்க்க வேண்டும் என்ற நோக்கிலும் நாம் விவாதித்திருக்கிறோம். அந்தப் புத்தகத்தில் நாம் உயிரின் 20 பிரரூபணைகள் மற்றும் கர்ம சம்பந்தமான மேலோட்டமான சர்ச்சைகள் பல செய்திருக்கிறோம். அவைகளில் சம்யக்த்துவம் பெறும்முன் நிகழும் ஐந்து லப்திகள் (பஞ்சலப்தி) சம்பந்தமான குறிப்பு வந்தது, அதைப்பற்றியும் ஓரளவு சர்ச்சை செய்திருக்கிறோம்.

அதைப்பற்றி மேலும் ஆழமாகத் தெரிந்துகொள்ள நான் உங்களை **மோக்ஷமார்க்கப்பிரகாசம்** மற்றும் **இரத்தின கிரண்டக ஸ்ராவகாச்சாரம்** ஆகிய இரண்டு நூல்களின் விளக்க உரைகளைப் படிக்கும்படி தூண்டியிருந்தேன். நீங்களும் அந்த நூல்களைப் படித்தீர்கள் என்றும், மேலும் அது சம்பந்தமான பிரவசனங்களையும் கேட்டீர்கள் என்றும் கூறினீர்கள். ஆனாலும் பிரயோக்யலப்தி மற்றும் கரணலப்தி சம்பத்தமான விஷயங்கள் கொஞ்சம்கூட உங்கள் புரிதலுக்கு வரவில்லை என்றும், இப்போதே அவைகளைப்பற்றி எங்களுக்கு விரிவாகப் புரியும்படிச் சொல்லுங்கள் என்றும் கேட்டிருந்தீர்கள். பல வித்துவான்கள் கூட மிகுந்த ஆர்வத்தோடு நீங்கள் **பஞ்சலப்தி** சம்பந்தமாக விரிவான விளக்கங்களுடன் ஒரு புத்தகத்தை அவசியம் எழுதுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயங்களைப் பற்றி **லப்திசாரம்** என்ற நூலை இன்று காலை ஸ்வாத்யாய நேரத்தில் கற்பித்துக் கொண்டிருந்தேன். எதிரில் அமர்ந்து ஸ்வாத்யாயத்தில் பங்குபெற்ற மக்களுக்கு இந்த விஷயங்களைக் கற்பிப்பதே மிகவும் கடினமாக இருக்கிறது. அப்படி இருக்கும்போது இந்த மிகக்கடினமான விஷயங்களை எழுத்து வடிவில் எழுதி எப்படிப் புரியவைக்க முடியும் என்று சிந்தனையும், இதை எழுதுவதில் தயக்கமும் இருந்து கொண்டிருக்கிறது.

ஆனால் பண்டிட் ஸ்ரீ.யஷ்பால்ஜி ஜெயின் அவர்கள் பல மாதங்களாக என்னை இந்த விஷயம் பற்றி எழுதும்படி உந்துதல் அளித்துக்கொண்டே இருக்கிறார். அவர் சமண தத்துவமுகாம்களில் மற்றும் மும்பையில் நேரில் சந்திக்கிறபோதும்; மேலும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போதும் **பஞ்சலப்தி** பற்றி எழுத ஆரம்பித்து விட்டீர்களா? என்று என்னிடம் கேட்டுக் கொண்டேயிருக்கிறார்.

இன்று 2,600-ஆவது மஹாவீரர் பிறந்த தினத்தை நாடு முழுவதும் மக்கள் மிகவும் உற்சாகத்துடன் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் தைரியத்தை வரவைத்துக்கொண்டு இன்று இந்த மஹாவீர ஜெயந்தியன்று இந்த புதிய விஷயம் பற்றி எழுதத் துவங்குகிறேன். மஹாவீரருடைய திவ்யத்தொனியில் வெளிவந்ததும், ஆச்சாரிய பரம்பரையின் மூலம் நமக்குக் கிடைக்கப்பெற்ற கிரந்தங்களின் ஆதாரத்திலும், இந்த பஞ்சலப்தி பற்றி இன்று முதல் நாம் சர்ச்சை செய்யலாம். முதலில் நம்முடைய சாசன நாயகர் பகவான் மஹாவீர ஸ்வாமிக்கு நான் அனேகமுறை ஆத்மார்த்தமாக நமோஸ்து! நமோஸ்து! நமோஸ்து! என்று கூறி வணங்குகிறேன். பகவான் மஹாவீரர் நம் பரத ஷேத்திரத்தின் நிகழ்கால 24 தீர்த்தங்கரர்களில் கடைசி தீர்த்தங்கரர் ஆவார். அவருடைய திவ்யத்தொனி மூலம் மோக்ஷமார்க்கத்தின் உபதேசம் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஒரு தீர்த்தங்கரர் காலத்திற்குப் பிறகு அடுத்த தீர்த்தங்கரர் தோன்றி கேவலஞானம் அடையும்வரை முந்தய தீர்த்தங்கரரின் சாசனகாலம் என்று சொல்லப்படுகிறது. பரத க்ஷேத்திரத்தில் இந்த ஐந்தாம் காலம் முழுவதும் பகவான் மஹாவீரரின் சாசன காலமே யாகும்.

பகவான் மஹாவீரரின் ஓங்காரவடிவ திவ்யத்தொனி விழத் தொடங்கியது. அதைக் கேட்டு கணதரர்கள் பன்னிரண்டு அங்கங்களை, அதாவது திரவிய ஸ்ருதத்தை, ஜினாகமத்தை தொகுத்து வாய்வழியாக எடுத்துக் கூறினார்கள். பல வருடங்கள்வரை இந்த ஞானம் ஆச்சாரிய பரம்பரையின் மூலம் அவர்களுடைய சீடர்களுக்கு செவிவழிச் செய்தியாகவே எடுத்துச் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் ஞாபகமறதி அதிகமானதாலும், கால தோஷத்தாலும் அதிக அளவு ஞானத்தின் பகுதி அடுத்தடுத்த சந்ததியர்களுக்கு கிடைக்காமல் போனது. அப்போது முனிவர்களின் மிகக் குறைந்த அறிவில் இருந்த ஞானமே **ஷட்கண்டாகமம்** என்ற பெயரில் முதன்முதலில் எழுத்து வடிவில் ஓலைச்சுவடிகளில் எழுதி வைக்கப்பட்டது. இதை **பிரதம ஸ்ருதஸ்கந்தம்** என்று சொல்கின்றனர். இதில் உயிர் மற்றும் கர்மம் சம்பந்தமான விரிவான விளக்கங்கள் இருக்கின்றன. இவைகளின் முதல் மூன்று காண்டங்களின் விரிவான விளக்க உரையை ஆச்சாரிய குந்தகுந்தர் **பரிக்கர்மம்** என்ற பெயரில் ஒலைச்சுவடியில் எழுதி வைத்தார். [நம்முடைய துரதிஷ்டம் இப்போது அந்த ஓலைச்சுவடியோ அல்லது அதன் புத்தக வடிவமோ நமக்குக் கிடைக்கவில்லை.]

ஆகமத்தின் இரண்டாவது கிளையை, அதாவது இரண்டாவது ஸ்ருதஸ்கந்தம் என்று எதைச் சொல்கின்றனரோ, அதன் பரம்பரையில் **சமயசாரம், பிரவசனசாரம், நியமசாரம், அஷ்டபாகுடம், பஞ்சாஸ்திகாயம்** மற்றும் அனேக சாஸ்திரங்கள் எழுதப்பட்டன. இப்போது இந்த எல்லா சாஸ்திரங்களும், மற்றும் இந்த சாஸ்திரங்களுக்கு காலங்காலமாக ஆச்சாரியர்களால் எழுதப்பட்ட விளக்கஉரை நூல்களும், மொழிபெயர்ப்புகளும் மற்றும் பல வித்துவான்கள் மூலம் விரிவாகவும், தெளிவாகவும் வாய்வழியாகச் சொல்லப்பட்ட பிரவசனங்களும் இன்றும் நமக்குக் கிடைத்திருப்பதால், நாம் எல்லோரும் மிகவும் பாக்கியசாலிகள் என்றுதான் சொல்லவேண்டும்.

ஆச்சாரியர்களின் இந்த மூல கிரந்தங்களை நாம் தொடக்கத்திலிருந்து முடியும்வரை முழுவதுமாக ஸ்வாத்யாயம் செய்ய வேண்டியது அவசியமாகும். குறிப்பிட்ட காதைகளை / சூத்திரங்களின் பிரவசனங்களை மட்டும் கேட்பதால் அந்த ஆகமத்தின் ஒட்டுமொத்த அர்த்தமும் நமக்குக் கிடைத்து விடாது. ஏனென்றால் ஆகமங்களில் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நோக்கில் விஷயங்கள் எடுத்துச் சொல்லப்படுகின்றன. ஒரு ஆச்சாரியரே வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாக விளக்கமளிக்கிறார். குந்தகுந்தாச்சாரியர் **சமயசாரம்** எழுதியிருக்கிறார், அவரே **பிரவசனசார**மும் எழுதியிருக்கிறார். பிரவசனசாரம் ஞானத்தை பிரதானமாக் கொண்டு அதாவது அறிவுசார்ந்த நடையில் எழுதியிருக்கிறார். அங்கு அவர் திரவியம் எந்த உணர்வில் பரிணமிக்கிறதோ அந்த சமயத்தில் அந்த திரவியம் அந்த பாவ(bhava) வடிவமாகவே, அந்த உணர்வு வடிவமாகவே மாறிவிடுகிறது, திரவியம் விபாவ வடிவில், இராக வடிவில் பரிணமிக்கிறது; இது அந்த திரவியத்தின் விபாவஸ்சுபாவம், அதாவது திரிபு உணர்வு, அதாவது கெட்ட வழியில் செயல்படுதல் என்று சொல்கிறார்.

அந்த குந்தகுந்த ஆச்சாரியரே சமயசாரத்தை நம்பிக்கையை, திருஷ்டியை பிரதானமாகக்கொண்டு அதாவது நம்பிக்கை சார்ந்த நடையில் எழுதியிருக்கிறார். அதில் இராகம் உயிரினுடையதே அல்ல, அது நிச்சயமாக கர்மத்தினுடையதாகும், கர்மத்தால் செய்யப்பட்டதாகும், புத்கலமாகும் என்று கூறுகிறார். இங்கு இராகம் முதலியவைகளுடன் நான்தான் இதை செய்கிறேன் என்ற ஸ்வமித்துவ புத்தியை விட்டுவிட்டு நிஜ சுத்தாத்மாவின் பக்கம் பார்க்க வேண்டும், அதாவது பர்யாயத்தின் பக்கம் பார்க்காமல் இயல்பின், ஸ்வபாவத்தின், திரிகால சுத்த திரவியத்தின் பக்கம் பார்க்க வேண்டும் என்று பவ்வியர்களுக்கு தெரியப்படுத்துவதே இங்கு ஆச்சாரியரின் நோக்கமாகும், motive-வாகும்.

கோமட்டசாரம் முதலான கரணானுயோக நூல்களில் கர்மம், அதன் பந்தம், உதயம் முதலானவைகள் பற்றி விரிவான விளக்கங்கள் சொல்லப்படுகின்றன. அது நமக்கு நிமித்தங்களைப் பற்றிய அறிவு கொடுக்க, நிமித்தங்களைப் பற்றி நமக்கு எடுத்துச்சொல்ல வழங்கப்படும் விளக்கங்களாகும். இன்றுவரை நாம் நம்மை தாழ்ந்தவராகவும், ஏழையாகவும், கர்மத்துக்கு அடிபணிந்தவராகவும் நம்பிக்கொண்டு வருகிறோம், கர்மமே உயிரைவிட வலிமையானது, சக்தி வாய்ந்தது என்று நம்பிக்கொண்டு இருக்கிறோம். கர்மமே நமக்கு சுக துக்கங்களைக் கொடுக்கிறது, கர்மமே நம்மை ஆசை, வெகுளி, மயக்கங்களை அடையச் செய்கிறது என்று நம்புகிறோம். கரணானுயோக நூல்களின் ஸ்வாத்யாயம் மூலம் கர்மம் சம்பந்தமான பந்தம், உதயம் மற்றும் அதன் பல நிலைகள் பற்றிய அறிவு பெற்றவுடன், நமக்கு கர்மங்களின் வேறுபட்டத் தன்மை புரியவருகிறது. இந்த பயிற்சி மூலம் கர்மோதயத்தால் அடையப்படும் பிறபொருள்கள் மற்றும் நம்முடைய இயல்பு இரண்டையும் பிரித்தறியும் அறிவை, பேதவிஞ்ஞானத்தை நாம் சுலபமாகவே பெற்று விடுகிறோம்.

தர்சனமோஹனீயத்தின் பிரிவான மித்யாத்துவ கர்மத்தின் உதயத்தால் உயிர் மூடநம்பிக்கை கொள்கிறது என்று சாஸ்திரத்தில் சொல்லப்படுகிறது. அதைப்படித்து நாம் ‘என்ன, இந்த கர்மம் என்னிடம் அனாதி காலமாகவே இருக்கிறது, ஒவ்வொரு சமயமும்

உதயத்திற்கு வருகிறது; பிறகு எப்படி நான் சம்யக்த்துவம்-நற்காட்சி பெறமுடியும்? என்று நாம் கருதினால்; நமக்கு பயம்தான் வரும். ஆனால் கர்மத்தைப் பற்றிய அறிவு பெற்று, நான் கர்மத்திலிருந்தும் வேறானவன் என்ற விழிப்புணர்வு அடைந்து, ஸ்வயம் நம்முடைய ஸ்வரூபத்தை அறிந்து, சுய சுத்தாத்மாவில் ஒன்றிவிட்டால் சம்யக்த்துவத்தை பெறுகிறோம் என்ற அறிவு வந்த பிறகு நம்முடைய பயம் நம்மைவிட்டு ஓடிவிடுகிறது. உண்மையில் நம்முடைய சம்யக்தரிசன வடிவ காரியத்தை வெளிப்படுத்த நாம் கர்மத்தின் பக்கம் பார்க்க வேண்டிய அவசியமேயில்லை. நாம் சம்யக்தரிசனம் பெற, நம்மில் கேவலஞானவடிவ சுத்தகாரியம் நிகழத் தேவையான காரணம் என்னவோ நம்மில் நம்முடனேயே எப்போதும் நிலைகொண்டிருக்கிறது. இப்போது மாலை வேளையில் நடைபெறும் நியமசாரம் ஸ்வாத்யாயத்தில் இதைப்பற்றிய விளக்கத்தையே படித்துக் கொண்டிருக்கிறோம். இப்போதெல்லாம் உங்களுடைய அப்பா மாலையில் ஒரு மணி நேரம் பிரவசனசாரமும், மேலும் ஒரு மணி நேரம் நியமசாரமும் பிரவசனம் செய்து கொண்டு இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதான்.

ஸ்வபாவ பர்யாயம் உற்பத்தியாகக் காரணம் என்னவோ அந்தந்த திரவியத்திலேயே முக்காலத்திலும் நிலை கொண்டுள்ளது என்று நியமசாரத்தில் மீண்டும் மீண்டும் சொல்லப் பட்டிருக்கிறது. கேவலஞானவடிவ சுத்த காரியத்தை ஆச்சாரியர்கள் **காரியஸ்வபாவஞானம்** என்று சொல்லியிருப்பதின் காரணம் என்ன? ஞானாவரண கர்மத்தின் க்ஷயத்தால்-அழிவால் கேவலஞான பர்யாயம் உற்பத்தியாகிறதா என்ன? கண்டிப்பாக இல்லை! அதற்குக் காரணம் என்னவோ ஜீவதிரவியத்தில் முக்காலமும் நிலைகொண்டிருக்கிறது இதையே **காரணஸ்வபாவஞானம்** என்று சொல்லப்படுகிறது. ஞான பர்யாயத்திற்கு அது முக்காலத்திலும் உபாதான காரணமாகும் [இப்போது நமக்கு வெளிப்படும் மதி, ஸ்ருத ஞானம்கூட அந்த காரணஸ்வபாவ ஞானத்திலிருந்துதான் வெளிப்படுகிறது.] மேலும் கேவலஞான பர்யாயத்தை வெளிப்படுத்தும் சாமர்த்தியமும் ஒவ்வொரு சமயமும் நம்மிடமே நிலைகொண்டுதான் இருக்கிறது.

நம்முடைய இந்த சாமர்த்தியம் எப்போது நமக்குத் தெரியவருகிறதோ அப்போது பிற திரவியங்களின் மகிமை சுலபமாகவே நம்மிடமிருந்து விடுபட்டுப் போகிறது, பிற பொருள்களின் லட்சியம் நம்மிடமிருந்து விலகி விடுகிறது. நம்மிடமே எப்போதுமுள்ள சுய சாமர்த்தியத்தின் மகத்துவம் நமக்குத் தெரியவருகிறது. அப்போது நம்முடைய ஞானோபயோகம் நம்முடைய இந்த திரிகால ஸ்வபாவத்தில் நிலைகொண்டு ஒன்றி விடுகிறது, அதாவது நம் அறிவின் உபயோகம் நம் நிலையான திரிகால ஸ்வபாவத்தில் ஈர்த்துக் கொள்ளப்படுகிறது, அதாவது நம் நிகழ்கால அறிவு நம் முக்காலத்திலும் நிலையான சுத்த ஸ்வபாவத்தில் மூழ்கிவிடுகிறது, அப்போது வேறு எதுவும் செய்யாமலேயே சம்யக்தரிசனத்தை நாம் அடைகிறோம். அந்த ஸ்வபாவத்திலேயே மேலும் அதிகமாக ஆழ்ந்து போவோமானால், ஒன்றிவிடுவோமானால் அந்த சுத்தோபயோகத்தின் மூலம் கேவலஞானம் நம்மிடம் வெளிப்பட்டு விடும்.

எப்போது உயிரில் கேவலஞானம் உற்பத்தியாகிறதோ அந்த சமயத்திலேயே அந்த உயிருடன் பந்தமாகியிருந்த எல்லா ஞானாவரண கர்மமும் அதனுடைய சுய உபாதானத் தகுதியினால் அதுவே சுயமாகவே கர்ம நிலையிலிருந்து அழிந்து விடுகிறது. [வேறு புத்கல

வடிவமாக மாறி அதற்கு உயிருடன் இருந்த தொடர்பை துண்டித்துக் கொள்கிறது.**]** ஒரே சமயத்தில் நிகழும் இந்த இரண்டு திரவியங்களின் வெவ்வேறு பர்யாயங்களுக்கும் இடையே உள்ள நிமித்த நைமித்திக சம்பந்தத்தைப் பற்றி நமக்கு அறிவு புகட்டவே, சாஸ்திரங்களில் ஞானாவரண கர்மத்தின் அழிவால் கேவலஞானம் உற்பத்தியானது என்று சொல்லப்படுகிறது. கர்மங்களைப் பற்றி என்னென்ன வர்ணனைகள் சாஸ்திரங்களில் வருகிறதோ அங்கெல்லாம் உயிர் மற்றும் கர்மங்களின் இப்படிப்பட்ட நிமித்த நைமித்திக சம்பந்தமே இருக்கிறது என்று நாம் மனதில் கொள்வது அவசியமாகும். மேலும் இந்த உறுதியான முடிவுடனேயே உயிர் மற்றும் கர்மம் சம்பந்தமாக ஆகமங்களில் சொல்லப்படும் எல்லா விளக்கங்களையும் சரியாகப் புரிந்து கொண்டு அப்படியே ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்.

உயிரின் பரிணாமங்களைப் பற்றி சாஸ்திரங்களில் விவாதம் செய்யும்போது, அந்த உயிர் அதுவாகவே, சுயமாகவே செய்யும் பரிணாமங்களின் நிமித்தத்தால் எந்தெந்த கர்மங்கள் தானாகவே உயிருடன் பந்தமாகின்றன, அல்லது எந்தெந்த கர்மங்கள் உயிருடன் பந்தமாவது தானாகவே நின்றுபோகின்றன போன்ற விளக்கங்கள் சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றன. இவ்வாறு சாஸ்திரங்களில் சொல்லப்படுவதின் நோக்கம், கர்மப்பிரக்ருதிகள் அடையும் நிலைகளைப்பற்றி நமக்கு எடுத்துச் சொல்லுவதற்காக அல்ல, ஆனால் அந்தந்த கர்மங்கள் பந்தமானால் அல்லது அந்தந்த கர்மங்கள் பந்தமாகாவிட்டல், அந்த சமயத்தில் அந்த உயிர் தானாகவே எப்படிப்பட்ட பரிணாமத்தை, எப்படிப்பட்ட உணர்வை தோற்றுவிக்கிறது என்று நமக்கு எடுத்துக்காட்டவே அவ்வாறு சொல்லப்படுகிறது என்ற சரியான அர்த்தத்தில் நாம் அந்த கர்ம சம்பந்தமான விளக்கங்களைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இப்போது இங்கு **பிரதமோபசம சம்யக்த்துவம் நிகழும்முன் எந்த ஐந்து லப்திகள் விதிப்படி நிகழ்கிறதோ,** அதன் இயல்புபற்றி வர்ணனை செய்யும்போது, நாம் உயிரின் உணர்வுகள் மற்றும் அதே சமயத்தில் கர்மத்தில் நிகழும் நிலை வேறுபாடுகள் ஆகியவைகளின் ஆதாரத்தில் சர்ச்சை செய்யவிருக்கிறோம். அந்த எல்லா விஷயங்களைப் பற்றி நல்ல விழிப்புணர்வு அடைய இப்போது கர்ம சம்பந்தமான சில சொற்களைத் தெரிந்து கொள்வது, மற்றும் சில வரையறைச் சொற்கள் மேலும் அந்த வரையறைகளின் அர்த்தங்களையும் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

**லப்தி** என்ற சொல்லின் அர்த்தம் **லாபம்** அல்லது **பெறுதல்** என்பதாகும். உலக வாழ்க்கையில் நாம் எந்த காரியத்திலும் அதனால் கிடைக்கும் லாபத்தை, ரூபாயை, பணத்தை வைத்துத்தான் கணக்கிடுகிறோம். ஹே உயிரே! நீ என்னவோ ஒரு சைத்தன்ய சக்தியின் பிண்டமான, அறிவு மற்றும் உணர்வு மயமான ஆத்மா; ஆனால் ரூபாய் முதலான தன சம்பந்தமான பொருட்கள் எல்லாம் ஜடம், அசேத்தனம், புத்கலத்தாலான பிண்டமாகும். இந்த புத்கலத்தின் அதிகரிப்பு அல்லது இழப்பினால் உனக்கு என்ன லாபம் அல்லது நஷ்டம் வரப்போகிறது? ஆம், புலன் தொடர்பற்ற அறிவு மற்றும் புலன் தொடர்பற்ற சுகம், ஆனந்தம் உன்னில் உண்டாவதே உண்மையான லாபமாகும், உனக்கு கிடைக்கும் அழிவில்லாதப் பேரின்பமாகும்.

அப்படிப்பட்ட பரிபூரண, இந்திரியத் தொடர்பில்லாத, அனந்தஞானம் மற்றும் அனந்தசுகம் என்னவோ நீ மோக்ஷம் பெறுவதால்தான் உனக்குக் கிடைக்கிறது. மோக்ஷம் என்பதின் அர்த்தம் ஆத்மா முழுமையாக, சம்பூரணமாக சுத்தமடைதல் மற்றும் உயிருடன் சத்தாவில் இருக்கும் எல்லாக் கர்மங்களும் முழுமையாக அழிந்துபோதல் எனலாம். இந்த மோக்ஷத்தை பெறுதல் சம்வரை மற்றும் நிர்ஜரை மூலம் நிகழ்கிறது. **கர்ம பந்தத்தில் உண்டாகும் இழப்பு சம்வரை, மற்றும் கர்ம சத்தாவில் உண்டாகும் இழப்பு நிர்ஜரை** எனப்படுகிறது. வேறு விதமாகச் சொல்ல வேண்டுமென்றால் **புதிய கர்மம் பந்தமாகாமல் இருத்தல் சம்வரை, மற்றும் பழைய பந்தமான கர்மத்தில் அதிக மாத்திரையில்-அதிக அளவில் கர்மம் விழுந்து போதல் நிர்ஜரை** எனலாம். உயிரின் பரிணாம நோக்கில் பார்த்தோமானால் **பரிணாமத்தில் சுத்தம், தூய்மை இருத்தல் சம்வரை, அந்த சுத்தம் வளர்ச்சியடைதல் நிர்ஜரை மற்றும் அந்த சுத்தம் முழுமை பெருதல் மோக்ஷம்** என்றுச் சொல்லப்படுகிறது.

**சுத்தம் என்றால் சுத்தோபயோகம், ஆத்மஸ்திரத்தன்மை, ஆத்மாவில் ஆழ்தல், சுத்த ஆத்மாவை எதிர்கொள்ளல், ஆத்மாவை நோக்கும் உணர்வுநிலை** எனலாம். எப்போது உயிர் சுத்தோபயோகத்தில் [பார்ப்பது, அறிவதில் மட்டும் இருந்து கொண்டு விருப்பு, வெறுப்பு, மயக்கம் இல்லாமல்] இருக்கிறதோ அப்போது அந்த உயிருக்கு அதீந்திரிய ஆனந்த அனுபவம் கிடைக்கிறது. அறிவின் உபயோகம் நிகழும்போது, அறிதல் காரியம் நிகழும்போது விருப்பு, வெறுப்பு வடிவ துவர்ப்பு உணர்வு வருதல், கஷாய உணர்வு கொள்ளுதல் துக்கத்தைக் உண்டுபண்ணும் உணர்வுநிலை யாகும். சஹடாலாவில் **ராகாதி ப்ரகட் யே துஃக்க தேன்** என்று சொல்லப் பட்டிருக்கிறது. சுத்தோபயோகம் விருப்பு, வெறுப்பு அற்ற வீதராக, நடுநிலைமை உணர்வுநிலை நிகழ்வதால் அப்போது துன்பம் எதுவும் இல்லாத நிராகுல சுகம் அனுபவத்திற்கு வருகிறது.

இந்த சுகம் எப்படிப்பட்டது? என்று நீங்கள் கேட்கலாம். இந்த சுகத்திற்கு ஈடான உலகியல் சுகம் பற்றிய உதாரணம் எதுவும் கொடுக்க வியலாது. நாம் உலக வழக்கில் எதைச் சுகம் என்று எண்ணுகிறோமோ அந்த விஷய போகத்தில் துக்கமே மிஞ்சுகிறது. ஆனால் நாம் பிரம்மையினால் அதை சுகம் என்று எண்ணுகிறோம். விஷயம் என்ற சொல்லின் அர்த்தம் ஐந்து இந்திரியங்களின் விஷயங்கள் என்பதாகும். நாம் உடல், நாக்கு, மூக்கு, கண், காது இவைகளால் முறையே புத்கலங்களை தொடுவதால், சுவைப்பதால், நுகர்வதால், காண்பதால், கேட்பதால் அது பற்றிய விஷயங்களை அறிகிறோம். இந்த விஷயங்களை அறியும் உயிர் அவைகளில் சிலவற்றை விரும்புகிறது, மற்றும் அவைகளை அறிந்து கொண்டே நான் இந்த பிற திரவியங்களைப் போகம் செய்கிறேன், அனுபவிக்கிறேன் என்ற எண்ணம் கொள்கிறது.

உண்மையில் பார்த்தால் உயிருக்கு குறிப்பிட்ட இச்சை வருகிறது, உதாரணத்திற்கு ஒருவருக்கு லட்டு சாப்பிட வேண்டும் என்ற இச்சை வருவதாக வைத்துக் கொள்வோம். அந்த இச்சையினால் அவருக்கு லட்டு சாப்பிடக் கிடைக்கும்வரை, லட்டு சாப்பிடக் கிடைக்கவில்லையே என்ற துக்கத்தை அவர் அனுபவம் செய்கிறார். லட்டு கிடைத்து அதைச் சாப்பிடுவதால் அவருடைய இச்சை பூர்த்தியாகிறது; அந்த இச்சையால் உண்டான துக்கம் குறைந்து போகிறது. ஆகையால் அவர் லட்டு சாப்பிட்டதால் தான் சுகம்

அடைந்ததாக எண்ணுகிறார். உண்மையில் லட்டு உண்டதால்தான் அவர் சுகமடைந்தாரானால் மேலும் அதிக லட்டுக்களைச் சாப்பிட்டால் மேலும் அதிக சுகத்தை அவர் அடைய வேண்டும் அல்லவா! யாராவது இரண்டு, நான்கு......ஐம்பது லட்டுகளைச் சாப்பிட்டால் அவர் நிலைமை என்னவாகும்? என்பதை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். என்ன? இதைக் கற்பனை செய்து பார்க்கும்போதே நம் தலை சுற்றுகிறதா ! இல்லையா?

ஒருவருக்கு லட்டு சாப்பிட இச்சை வந்தது, ஆனால் அவர் லட்டு சாப்பிடும்போதே மற்றும் பல இனிப்புகளையோ அல்லது வேறு பல விஷயங்களையோ போகம் செய்ய வேண்டும் என்ற இன்னும் பல இச்சைகள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. இது நாம் தினமும் அனுபவம் செய்யும் விஷயம்தான். ஆகையால் லட்டு சாப்பிட்டும்கூட அந்த உயிருக்கு மேலும் பல இச்சைகள் அந்த சமயத்திலேயே உண்டாகும் காரணத்தால்; அந்த பலவேறு இச்சைகள் பூர்த்தியாகாத நிலையில், அந்த உயிர் துக்கத்தையே அனுபவம் செய்த வண்ணம் இருக்கிறது. இதற்கு வேடிக்கையான ஒரு உதாரணம் ஒன்று சொல்கிறேன் கேளுங்கள். தராசு தட்டில் அனேக தவளைகளை (frogs) எடைபோட வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள்! ஒரு தவளையைத் தட்டில் வைத்துவிட்டு அடுத்த தவளையை தட்டில் வைக்க எடுப்பதற்குள் முதலில் வைத்த தவளை தட்டிலிருந்து துள்ளி வெளியே குதித்து விடுகிறது. இச்சையின் விஷயத்தில் இந்த நிலைதான் நமக்கு உண்டாகிறது! ஒரு இச்சை பூர்த்தியாவதற்குள் நமக்கு மேலும் புதிய பல இச்சைகள் தோன்றி விடுகின்றன. ஆனால் நம் இச்சைகளுக்கு உகந்தார்போல் தேவையான பல பதார்த்தங்கள் நமக்குக் கிடைப்பதில்லை. இந்த காரணத்தால் உயிர் கிடைக்காத பொருள்களின் மேல் விருப்பு அல்லது வெறுப்பு கொள்கிறது. அதனால் அது எப்போதும் துக்கத்தையே அனுபவம் செய்த வண்ணம் இருக்கிறது. இவ்வாறு இந்திரிய சுகம் எல்லாம் உயிருக்கு தீராத துக்கத்தைக் கொடுப்பவைகளாகவே இருக்கின்றன.

இதிலிருந்து விபரீதமான, வேறான அதீந்திரியசுகம், ஆத்மாவிலிருந்தே உற்பத்தியாவதால் அதாவது நம்முள் இருந்தே உற்பத்தியாவதால் அது சுதந்திரமானது, எளிதானது, இந்திரிய விஷயங்களின் தொடர்பு இல்லாதது. ஆத்மாவை அறியும்போது அதாவது சுத்தோபயோகம் நிகழும்போது விருப்பு, வெறுப்பு வடிவ எண்ணங்கள், விகல்பங்கள் இல்லாததால் உயிருக்கு நிராகுல வடிவ, துக்கமற்ற பூரண சுகானுபவம் உண்டாகிறது. இந்த சுகம் தடை எதுவும் இல்லாதது; அதாவது இந்த சுகம் கூடுவதோ, குறைவதோ இல்லை. உடனிருப்பவைகளால் அதாவது பிற பொருள்களால் உண்டாகும் சுகதுக்கம் சாதாவேதனீய அல்லது அசாதாவேதனீய கர்மோதய நிமித்தத்தால் கூடுதல், குறைதல் நிகழ்கிறது. ஆனால் ஆத்மானுபவத்தால் உற்பத்தியாகும் சுகத்தை வேதனீயகர்ம உதயம் எந்த தடையும் செய்ய முடியாததாகவே இருக்கிறது. ஒப்பற்ற அப்படிப்பட்ட அதீந்திரிய சுகம்பெற யார்தான் விரும்ப மாட்டார்கள்? சஹடாலாவில் -

**ஆத்ம கோ ஹித ஹை சுக, சோ சுக ஆகுலதாபின் கஹியே |**
**ஆகுலதா சிவமாங்கி ந, தாதை சிவமக லாக்யெள சஹியே ||**

என்று கூறப்படுகிறது.

**எந்த கஷ்டமுமில்லத சுகம் மோக்ஷத்தில் கிடைப்பதால் உயிர்கள் மோக்ஷமார்க்கத்தில் ஈடுபடவேண்டும், அதுவே உயிரின் உண்மையான சாதனையாகும், அதுவே ஆத்மாவுக்கு லாபமானதாகும்.** உலக வாழ்க்கையில் பணம், சொத்து சம்பந்தமான லாபம் அடைந்த பிறகும்கூட குழப்பமும், கஷ்டங்களும், அனுபவிப்பதில் தடைகளும் எங்கே முடிவுக்கு வருகிறது? பணம் மற்றும் வருமானத்தைக் கண்காணிப்பதும், பிறகு அதற்கு வருமானவரி செலுத்துவதும், வருமானவரியைக் குறைக்க விபரங்களைத் தெரிந்து கொள்வதும், வரிகுறைப்புக்குப் பலவிதமான முயற்சிகளை மேற்கொள்வதுமான பல கவலைகளைப் பட வேண்டியிருக்கிறது. ஆத்மசுகத்தில் மேற்கூறிய எந்த கஷ்டமும் பட வேண்டியதாக இல்லை. ஆத்மசுக அனுபவம் பெற எந்த வரியும், யாருக்கும் செலுத்த வேண்டியதில்லை. [உலக வழக்கில் சொல்லவேண்டுமென்றால் ஆத்மசுகம் எந்த செலவும் இல்லாமல் முழுவதும் இலவசமாகவே கிடைக்கிறது.] சிறியவர்-பெரியவர், ஏழை-பணக்காரர், ஆண்-பெண் இதோடு மட்டுமல்ல மனமுடைய ஐம்புல விலங்குகள்கூட இந்த ஆத்ம சுகத்தை எந்த செலவும் இல்லாமல் அனுபவிக்க முடியும். இப்படிப்பட்ட ஆத்ம சுகத்தை அனுபவிக்க விரதம், உபவாசம், தீர்த்தயாத்திரை முதலான கடினமாகத் தோன்றும் எந்த உடல் சம்பந்தமான செயல்களும் செய்ய வேண்டிய அவசியமில்லை. எந்த உடல் மற்றும் பண கஷ்டமுமில்லாத ஆத்மசுகம், சம்யக்தரிசனம், நற்காட்சி பெறுவதால் நமக்கு எளிதாகவே கிடைக்கிறது.

சம்யக்தரிசனம் மற்றும் ஆத்மானுபூதி பற்றிய விஷயத்தில் நாம் முன்னர் மூன்று (**சமண தத்துவ அறிமுகம், காரண காரிய இரகசியம், கரணானுயோக அறிமுகம்**) புத்தகங்களில் விரிவாகவே சர்ச்சை செய்திருக்கிறோம். இப்போது நாம் சம்யக்தரிசனம் பெறும் முன்னரும், பெறும்போதும் உயிரின் பரிணாமத்தில், உயிரின் உணர்வில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்கின்றன மற்றும் அந்த சமயத்தில் கர்மங்களில் எந்த விதமான கொந்தளிப்புகள் ஏற்படுகின்றன என்று பார்க்க விருக்கிறோம். நாம் இவைகளைப் பற்றி தெரிந்து கொள்ள, அதற்குத் தேவையான சில கர்ம சம்பந்தமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியவைகளிலிருந்து துவங்கலாம். பஞ்சலப்தி பற்றி எடுத்துச் சொல்வதை விட்டுவிட்டு நான் கர்மகாண்டம் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்து விட்டேன் என்று நீங்கள் நினைக்க வேண்டாம்.

ஒவ்வொரு உயிரும் அனாதி காலமாக கர்ம பந்தத்துடன், கர்மக்கட்டுண்ட நிலையில்தான் இருக்கிறது. முதலில் உயிர் சுத்தமாக இருந்தது, பிறகு கர்மம் அதனுடன் வந்து பந்தமானது என்பதில்லை. எவ்வாறு தங்கச்சுரங்கத்தில் தங்கத்தாது வடிவில் தங்கம் அனாதியாகவே காணப்படுகிறதோ அதுபோல, உயிர் கர்மத்துடன் அனாதி காலமாகவே ஒன்றோடொன்று கட்டுண்ட நிலையில்தான் இருக்கின்றன. ஆனாலும் கூட இரண்டு திரவியங்களும் அவைகளின் தனித்தன்மையை எப்போதும் இழக்காமல் இருக்கின்றன. கர்மம் புத்கலத் திரவியத்தால் ஆனது என்பதும், கார்மண வர்கணை பெயர் கொண்ட புத்கல ஸ்கந்தத்தால் ஆனது என்பதும் உங்களுக்கு முன்னரே தெரிந்த ஒரு விஷயம்தான்.

கர்மம் கட்டுதல் என்றால் கர்மம் உயிருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுதல் என்று பொருள். உயிர் தானாக, தன்னில், தன் சுய தகுதியால் விருப்பு, வெறுப்பு, மயக்க உணர்வு

கொள்கிறது, அந்த சமயத்தில் கார்மண வர்கணைகள் அதுவே, அதிலிருந்தே, அதன் தகுதியாலேயே தன்னை கர்மவடிவமாக மாற்றிக்கொண்டு உயிருடன் பந்தத்தை ஏற்படுத்திக் கொள்கிறது. மேலும் அந்த கர்மத்திற்கும் உயிருக்கும் **சம்ஸ்லேஷ சம்பந்தம்,** ஒரு விசேஷமானத் தொடர்பு உண்டாகிறது. அதாவது உயிரின் அசங்க்யாதப் பிரதேசங்களில் இந்த கர்மம் ஏகக்ஷேத்திராவஹாக, அதாவது இரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று குறிப்பிட்ட காலம்வரை பிரிய முடியாத சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்கிறது. அந்த குறிப்பிட்ட காலத்திறகுப் பிறகு அந்த கர்மம் சுயமாகவே கர்மமில்லாத நிலையை அடைகிறது, வேறு புத்கல ஸ்கந்த வடிவில் தன்னை மாற்றிக் கொண்டு உயிரிடமிருந்து பிரிந்து விடுகிறது. அந்த சமயத்தில் அந்த கர்மத்தின் பலன் உயிருக்குக் கிடைக்கிறது. இதையே கர்மம் உதயமானது அல்லது கர்மம் நிர்ஜரை ஆனது அல்லது கர்மம் உயிரிடமிருந்து விழுந்து விட்டது என்று சொல்லப்படுகிறது. இது பொதுவான, சாதாரணமான எல்லா உயிர்களிடமும் நிகழும் கர்மநிர்ஜரை யாகும். இந்த நிர்ஜரை மோக்ஷமார்க்கத்தில் நிகழும் சம்வரை பூர்வமான நிர்ஜரை யல்ல.

கர்ம உதய சமயத்தில் கர்மத்தின் பலன் உயிருக்குக் கிடைக்கிறது. அந்த பலனை உயிர் அறிவதோடு மட்டும் நிற்காமல், சுயமாகவே அந்த பலனில் தனக்கு வேண்டியது, வேண்டாதது என்று கற்பனை செய்து, அந்த பலன் சம்பந்தமானவற்றின் மேல் விருப்பு, வெறுப்பு உணர்வு கொள்கிறது. அதனால் உயிர் இடைவிடாது, எப்போதும் புதிய கர்மத்தைக் கட்டிக்கொள்கிறது. மகள்களே! நாம்கூட அனாதி காலமாக ஒவ்வொரு சமயமும் புதுப்புது கர்மங்களைக் கட்டிக்கொண்டு வருகிறோம். முன்னர் கட்டிக் கொண்ட கர்மங்களின் பலனை ஒவ்வொரு சமயமும் அனுபவம் செய்து கொண்டும் வருகிறோம். ஒவ்வொரு சமயமும் பழையகர்ம உதயமும், புதியகர்ம பந்தமும் நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது. இவ்வாறு உயிருடன் கர்மத்தின் இருப்பு இடைவிடாது இருந்து கொண்டே வருகிறது.

உயிர் எந்த நேரமும் வெவ்வேறு உணர்வுகளைக் கொள்கிறது, அந்த நிமித்தத்தால் வெவ்வேறு கர்மத்தைக் கட்டிக்கொள்கிறது. அதன் பலனால் இந்த உயிர் நான்கு கதிகளில், 84-லட்சம் யோனிகளில் பிறந்து, சிலகாலம் வாழ்ந்து, இறந்த வண்ணம் இந்த மூவுலகத்திலும் சுற்றித் திரிந்து கொண்டு வருகிறது. ஒருபொறி உயிர் முதல் ஐம்பொறி உயிர்வரை வெவ்வேறு பிறவிகளில் பிறந்து இந்த உயிர் சுயமாகவே அந்தந்த பிறவி வடிவமாகவே தன்னை அனுபவம் செய்து கொண்டு [தான் உண்மையில் யார் என்று அறியாமல், நான் ஏன் இப்படி துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்ற எண்ணம் கொஞ்சம்கூட இல்லாமல்] மூவுலகிலும் பல பிறவிகளில் சுற்றித்திரிந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு உயிர் **பர்யாயமூட**மாகி பிச்சைக்காரனைப்போல, பிற திரவியங்களிடம் சுகத்தைப் பிச்சை எடுத்துக்கொண்டு, வெவ்வேறு பிறவிகளில் அலைந்துத் திரிந்து கொண்டு இருக்கிறது. நம்முடைய இந்த பரிதாபகரமான நிலையைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டால் உண்மையிலேயே நமக்கு அழுகை வந்துவிடும். ஆனால் **தான்** என்ற அஹங்காரத்தால், கர்வத்தால், அஞ்ஞானத்தால் இதுவே சுகம் என்று எண்ணிக்கொண்டு, இந்த உயிர் தன்னைப் உயர்வாக எண்ணிக்கொண்டு மகிழ்ச்சியாக உலகில் பல

பிறவிகளில் பிறந்து, இறந்து சுற்றித் திரிகிறது. **பர்யாயமூடம் என்பதின் பொருள் கிடைத்த பிறவியில் ஏகத்துவபுத்தி கொள்ளுதலாகும்**, அதாவது பெற்ற உடலையே தான் ஸ்வயம் ஆத்மா என்று நம்புதல் எனலாம். மனித பர்யாயத்தை பெற்ற உயிர் தன்னை ஒரு மனிதனாகவே நம்புகிறது. விலங்குகதி உயிர் தன்னை ஒரு விலங்காகவே நம்புகிறது. கிடைத்த அந்தந்த உடலிலிருந்து ஸ்வயம் தன் ஆத்மாவின் அஸ்தித்துவம் வேறாகும் என்ற அறிவு இல்லாததாகவே இதுவரை உயிர் வாழ்ந்து கொண்டு இருக்கிறது.

கிடைப்பதற்கு மிகவும் அரியது மனிதபவம்-மனிதப்பிறவி; மேலும் அந்த மனித பவத்தில் ஜினவாணியை கேட்கும் சௌபாக்கியம் பெறுதல் அதைவிட அரிதிலும் அரிதாகும். இவை எல்லாம் கிடைத்த பிறகும்கூட பணம் சம்பாதிக்க வேண்டும், செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்ற ஏக்கமே இந்த உயிரை வசப்படுத்தி வைத்திருக்கிறது. பிற பொருள்களின் மேல் இருக்கும் ஏக்கம் என்ற பூதம், உயிரின் கழுத்தில் ஏறி அமர்ந்து சவாரி செய்து கொண்டு, இரவும் பகலும் எருது, குதிரை போன்ற விலங்குகளை வேலை வாங்குவது போல, உயிரை வேலை வாங்குகிறது. அந்தப் பரிதாபமான உயிரின் மோசமான நிலையைப் பாருங்கள்! விலங்குகளுக்குக் கூட ஒரு நாளில் இரண்டு நேரங்களில் உண்ண உணவும், நீரும் கிடைக்கிறது, இரவில் தூங்கும் அதிஷ்டமும் இருக்கிறது. ஆனால் இந்த கோட்டான் மனித உயிர் உண்ணவும், குடிக்கவும், தூங்கவும்கூட நேரமில்லாமல் சொத்து சேர்ப்பதற்காக எந்த நேரமும் ஓடிக்கொண்டே இருக்கிறது. பிச்சை எடுப்பவன் ஐந்து, பத்து என பிச்சை எடுக்கிறான், ஆனால் இந்த மஹாலோபி மனித உயிரோ மிகப்பெரிய பிச்சைக்காரனாகவே எப்போதும் அலைந்து கொண்டிருக்கிறது. அதனுடைய ஏக்கமும், பேராசையும் ஒருபோதும் முடிவுக்கு வந்தபாடில்லை. இந்த உயிர், நான், என் மனைவி மற்றும் குழந்தைகளுக்காகவே கடுமையாக உழைக்கிறேன் என்று சாக்குச் சொல்கிறது. ஆனால் தன் மனைவி, குழந்தைகள் பக்கம் திரும்பிப்பார்க்கக்கூட இதற்கு ஓய்வு எங்கே கிடைக்கிறது? இந்த பரிதாபமான நிலையில் ஆத்மசாந்தி மற்றும் தான் உண்மையில் யார் என்று தன்னைப் பற்றிச் சிந்திக்க நேரம் கிடைப்பது என்பதோ எப்போதும் எதிர்காலத்தில் தான் இருக்கிறது.

நாம் கர்மம் சம்பந்தமான சர்ச்சை செய்து கொண்டிருந்தோம். உயிருடன் கர்மம் பந்த நிலையில் இருக்கிறது. பெரிய அளவில் அதன் சத்துவம் எப்போதும் இருந்து கொண்டிருக்கறது. அதிலிருந்து ஒவ்வொரு சமயமும் கொஞ்சம் பழைய கர்மம் வெளியேறுகிறது அதாவது உதயத்திற்கு வருகிறது, ஒவ்வொரு சமயமும் புதிய கர்மமும் பந்தமாகிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு சமயமும் அனந்த பரமாணுக்கள் பந்தமாகின்றன, பந்தமாகும் அந்த பரமாணுக்களின் எண்ணிக்கையை **சமயப்பிரபத்த** என்று சொல்கின்றனர். முன்னர் கட்டிக்கொண்ட கர்மத்திலிருந்தும் அதே சமயப்பிரபத்த அளவே, அனந்த பரமாணுக்களே உதயத்திற்கு வந்து வெளியேறுகின்றன. பொதுவாக இதை கர்மம் பந்தமானது அல்லது கர்மம் உதயத்திற்கு வந்தது என்று சொல்கிறோம். ஆனால் இந்த கர்மங்கள், அவைகளின் இயல்புக்கு தகுந்தாற்போல் எட்டு வெவ்வேறு ஜாதியாக இருக்கின்றன. அதாவது வெவ்வேறு கர்மங்களின் காரியங்களும் வெவ்வேறாகவே இருக்கின்றன. பொதுவாக இந்த கர்மங்களை **கர்மப்பிரக்ருதி** என்று சொல்கின்றனர். இந்த எட்டு கர்மப்பிரக்ருதிகளை **மூலப்பிரக்ருதிகள்** என்றும்

சொல்கின்றனர். மூலப்பிரக்ருதிகளின் பெயர்களாவன: 1.**ஞானாவரணம்,** 2.**தர்சனாவரணம்,** 3.**மோஹனீயம்,** 4.**அந்தராயம்,** 5.**வேதனீயம்,** 6.**ஆயுள்,** 7.**நாமம்,** 8.**கோத்திரம்.** அவைகளின் இயல்புகளுக்குத் தகுந்தாற்போல் அவைகளின் பெயர்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி இப்போது நாம் மேலும் விரிவாகப் பார்க்கலாம்.

1.ஞானாவரணம் என்பதின் பொருள் ஞானத்தை மறைப்பது. எந்த கர்மம் உயிரிடம் ஞானம் முழுவதும் வெளிப்படாமல் மறைக்கிறதோ, அதாவது ஞான குணத்தின்சக்தியை ஞானபர்யாயத்தில் முழுவதும் வெளிப்பட விடாமல் தடுக்கிறதோ, அந்த கர்மப்பிரக்ருதியை ஞானாவரண கர்மம் என்று சொல்கின்றனர். மகள்களே! இங்கு காரியம் நிகழ்வதற்கு எது நிமித்தமாக இருக்கிறதோ அதையே காரியத்தை செய்தது அதாவது ஞானாவரண கர்மமே ஞானத்தை மறைக்கிறது என்று சொல்லப்படும். ஆனால் இங்கு உயிரும், கர்மமும் இரண்டு வெவ்வேறு திரவியங்கள்; அவைகளின் தனித்தன்மையையும், அவைகளின் சுதந்திரத்தன்மையைம் எப்போதும் மனதில் வைத்துக்கொண்டு கர்மத்தின் செயலை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் கர்மமே உயிருக்கு நல்லது, கெட்டது செய்கிறது என்று நீங்கள் நம்பிவிடுவீர்களானால், உயிர் கர்மத்தை சார்ந்திருப்பது என்ற கற்பனையால் நீங்கள் சோகமடைவீர்கள்.

ஆகமங்களில் கூறப்படுவதின் சரியான அர்த்தத்தைப் புரிந்து கொள்ளும் பொறுப்பு உங்களிடம்தான் இருக்கிறது, ஏனென்றால் இந்த விஷயம் பற்றி விரிவான விவாதத்தை நாம் முன்னர் **காரண காரிய இரகசியம்** என்ற புத்தகத்தில் செய்திருக்கிறோம். சாஸ்திரங்களில் எட்டு கர்மங்களின் ஸ்வரூபம் பற்றியும் உதாரணம் மூலம் புரியவைக்கிறார்கள். எடுத்துக்காட்டாக ஒரு பிம்பத்தின் முகம் துணியால் மூடப்பட்டிருந்தால், அந்த மூடப்பட்ட துணியின் காரணத்தால், அந்த பிம்பத்தின் எழிலை நம்மால் நன்றாக அறிய முடியாது போகும், அதுபோல ஞானாவரண கர்மம் நம் ஞானத்தை மறைப்பதால் நமக்கு பார்க்கும் பொருளைப்பற்றிய சரியான அறிவு பெறமுடியாமல் போகிறது.

2.தர்சனாவரண கர்மம் பொருளைப் பார்க்க வொட்டாமல் தடுக்கிறது. உயிரின் தர்சனகுணத்தின் சக்தி அதன் பர்யாயத்தில் முழுவதுமாக வரவிடாமல் தர்சனாவரண கர்மம் மூடுகிறது. அரண்மனை வாயிலில் நிற்கும் காவல்காரன் அரசரைப் பார்க்க விடாமல் நம்மை தடுத்து விடுவதுபோல எனலாம். எப்படி அரண்மனைக் காவல்காரன் இராஜாவை பார்க்க விடுவதில்லையோ, அதுபோல தர்சனாவரண கர்மம் நாம் பார்ப்பதில் மறைப்பை உண்டாக்குகிறது. தர்சனம் என்பதின் பொருள் **சாமான்ய அவலோகன்** செய்தல் அதாவது பொதுவான கண்ணோட்டம் செய்தல் [ஒரு பொருளை அதன் சிறப்புக்களை நோக்காமல் அதன் இருப்பை மட்டும் பார்ப்பதையே சாமான்ய அவலோகன் என்று சொல்கின்றனர்] என்பது என்னவோ உங்களுக்குத் தெரிந்ததுதான்.

3.மோஹனீய கர்மம் உயிரை மோஹம் கொள்ளச் செய்கிறது, அதாவது உயிரின் செயல்களில் கவனக்குறைவு கொள்ளவைக்கிறது. சாராயம் அல்லது மதுபானத்தை எடுத்துக்கொள்வதின் மூலம் உயிர் மயக்கம் அடைகிறது. மதுபானம் எப்படி உயிருக்கு

மயக்கத்தை உண்டுபண்ணுகிறதோ அதுபோல, மோஹனீய கர்ம உதயம் உயிரை மயக்கமடையச் செய்கிறது. மோஹனீய கர்மம் தர்சன மோஹனீயம், சாரித்திர மோஹனீயம் என இரண்டு விதமாக இருக்கிறது. தர்சன மோஹனீயத்தின் மித்தியாத்துவ கர்ம உதயத்தால் உயிர் மூடநம்பிக்கை கொள்கிறது. சிரத்தை குணத்தில் விபரீத நம்பிக்கைகள் உண்டாகின்றன. சாரித்திர மோஹனீயகர்ம உதயத்தால் உயிர் கோபம், கர்வம், கபடம், பேராசை முதலான கஷாயங்களையும்-துவர்ப்பு உணர்வுகளையும், மற்றும் ஹாஸ்யம் முதலான ஒன்பது நோகஷாய உணர்வுகளையும் கொள்கிறது. உயிர் எப்போது ஸ்வயமாகவே விருப்பு, வெறுப்பு உணர்வு கொள்கிறதோ அப்போது சாரித்திர மோஹனீய கர்ம உதயம் காணப்படுகிறது. கர்மம் உயிரை கட்டாயப்படுத்தி விருப்பு, வெறுப்பு உணர்வு கொள்ளச் செய்வதில்லை.

4.அந்தராய கர்மம் இடையூறு அதாவது இடையில் வந்து தடையை உண்டு பண்ணும் கர்மமாகும். கொடுப்பவர் மற்றும் பெறுபவர்களுக்குமிடையே இடைவெளியை உண்டு பண்ணுவது அந்தராயம். எவ்வாறு தானம்தர விரும்பும் இராஜாவை அவருடைய கருவூலக் காப்பாளர் தடுக்கிறாரோ, தானம் தருவதில் தடை உண்டுபண்ணுகிறாரோ, அதுபோல அந்தராய கர்மம் தானம், லாபம், போகம், உபபோகம் மற்றும் வீரியத்தில் இடையூறு செய்கிறது. தானம், லாபம், போகம், உபபோகம் மற்றும் வீரியம் உயிரின் குணங்களாகும். அந்தராய கர்ம உதய நிமித்தத்தால் மேற்கூறிய உயிரின் குணங்களின் சக்தி அதன் பர்யாயத்தில் முழுமையாக வெளிப்பட முடிவதில்லை. ஸ்வபாவ பர்யாயத்தால் உண்டாகும் ஆனந்தத்தின் தானத்தை தனக்கே கொடுத்தல், அதற்கு லாபம் உண்டாதல், அந்த லாபத்தை அனுபவம் செய்தல், அதையே மீண்டும் மீண்டும் அனுபவித்தல் முதலியன இந்த குணத்தின் காரியங்களாகும். புருஷார்த்தம் வீரிய குணத்தின் பர்யாயமாகும். உயிரின் ஸ்வரூபத்தை-இயல்பை பர்யாயத்தில் வெளிப்படுத்துதல் வீரிய குணத்தின் காரியமாகும். ஞானாவரணம், தர்சனாவரணம், மோஹனீயம் மற்றும் அந்தராயம் ஆகிய இந்த நான்கு கர்மங்களை காதிகர்மம் என்று சொல்கின்றனர். மற்ற நான்கு கர்மங்களை அதாவது வேதனீயம், ஆயுள், நாமம், கோத்திரம் ஆகிய நான்கு கர்மங்களை அகாதி(யா) கர்மங்கள் என்று சொல்கின்றனர்.

5.வேதனீயகர்ம நிமித்தத்தால் உயிருக்குச் சாதகமான அல்லது பாதகமான பொருள்கள் (சொத்து, சுகபோகப் பொருள்கள், அல்லது சங்கடங்கள் தரும் பொருட்கள்) கிடைக்கின்றன. அந்த சமயத்தில் உயிர் மோஹனீயகர்ம நிமித்தத்தால் அந்த பொருள்களில் வேண்டியது, வேண்டாதது என்று கற்பனை செய்து, சுகத்தையோ துக்கத்தையோ அடைகிறது. சுகதுக்கத்தை உண்டு பண்ணுவது வேதனீய கர்மமாகும். எவ்வாறு தேன் பூசப்பட்ட வாள்முனையை நக்கினால் தேன்சுவையின் இன்பமும், நாக்கு அறுபடும் துன்பமும் ஏற்படக் காரணமாகிறதோ அதுபோல, வேதனீயகர்ம உதயம், உயிர் சுகதுக்கங்களை அடையச் செய்கிறது. வேதனீயகர்மம் இந்திரியம் மற்றும் மனத்தால் உண்டாகும் சுகதுக்கத்தையே உயிருக்கு உண்டு பண்ணமுடியும், ஆனால் ஆன்மசுகம் பெறுவதில் வேதனீயம் எந்த பாதிப்பும் செய்ய முடியாததாகவே இருக்கிறது.

6.ஆயுட்கர்ம நிமித்தத்தால் உயிர் குறிப்பிட்ட பர்யாயத்தில், கதியில் வாழ்கிறது. பர்யாயம் என்றால் ஒரு குறிப்பிட்ட பவத்தில் பிறத்தலுக்கு எது நிமித்தமாக இருக்கிறதோ

அதை ஆயுட்கர்மம் என்று சொல்கின்றனர். எவ்வாறு சிறைச்சாலையில் கைதி சங்கலியால் கட்டிவைக்கப்படுவதால் அல்லது மரத்தூணீல் கைதியின் கால்கள் கட்டப்பட்டுள்ளதால், அந்தக்கைதி அந்த இடத்தை விட்டு வேறு எங்கும் போகமுடியாமல் அந்த இடத்திலேயே இருக்க வேண்டியிருக்கிறதோ, அதுபோல ஆயுட்கர்மம் உயிரை குறிப்பிட்ட பிறவியில் அதாவது மனிதப்பிறவி, விலங்குப்பிறவி, நரகப்பிறவி, தேவபிறவி ஆகிய நான்கு பிறவிகளில் குறிப்பிட்ட காலம் வாழும்படிச் செய்கிறது, மரணமடைய விடுவதில்லை, வேறு பிறவியில் செல்லவும் முடியாமல் செய்கிறது.

7.நாமகர்ம உதயத்தால் உடலமைப்பு உண்டாகிறது. பலவகையான அதாவது அனேக விதமான உடலமைப்பு உண்டாவது நாம கர்மத்தாலாகும். எவ்வாறு ஒரு ஓவியர் பலவிதமான ஓவியங்களை வரைகிறாரோ அதேபோல நாமகர்மம் உயிருக்கு மனித, நரக, தேவ, விலங்கு முதலிய கதியில் வாழத் தேவையான பல்வேறு உடலமைப்புகளைச் செய்கிறது.

8.கோத்திர கர்ம நிமித்தத்தால் உயிருக்கு உயரந்த அல்லது தாழ்ந்த கோத்திரம் கிடைக்கிறது. எவ்வாறு குயவன் மண்ணில் பெரிய அல்லது சிறிய பாத்திரங்களைச் செய்கிறாரோ, விலை உயர்ந்த அல்லது மலிவான மண்பாண்டங்களை உருவாக்குகிறாரோ அதுபோல, கோத்திர கர்மம் உயிருக்கு உயர்ந்த அல்லது தாழ்ந்த நிலைகளைப் பெற வைக்கிறது.

இவைகளப் பற்றிய சர்ச்சையை நாம் **கரணானுயோக அறிமுகம்** என்ற புத்தகத்தில் செய்திருக்கிறோம், அதையே இங்கு உங்களுக்கு ஞாபகப் படுத்தியிருக்கிறேன். அந்த புத்தகத்தில் அவைகளைப் பற்றி மீண்டும் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள். மகள்களே! கர்மம் பந்தமாகும்போது நான்கு வகையாக கர்மபந்தம் பற்றிய வர்ணனை ஆகமங்களில் செய்யப்படுகின்றன. அந்த வகைகளாவன 1.**பிரக்ருதி பந்தம்,** 2.**பிரதேச பந்தம்,** 3.**ஸ்திதி பந்தம்,** 4.**அனுபாக பந்தம்.**

கர்மத்தின் எந்த செயல் சம்பந்தமான பிரக்ருதி பந்தமாகிறதோ, அதை பிரக்ருதி பந்தம் என்று சொல்கின்றனர். சற்றுமுன் கர்மத்தின் எட்டு மூலப்பிரக்ருதிகள் பற்றிப் பார்த்தோம். அந்த ஒவ்வொரு பிரக்ருதியிலும்கூட பல பிரிவுகளும், அவைகளில் உட்பிரிவுகளும் இருக்கின்றன, அவைகளை **உத்தரப்பிரக்ருதி** என்று சொல்கின்றனர். இந்த எட்டு மூலப்பிரக்ருதியின் பந்தம் மற்றும் உதயம் ஒவ்வொரு சமயமும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது; இதற்கு விதிவிலக்கு ஆயுட்கர்ம பந்தம் ஒன்று மட்டுமே. ஏனெனில் ஆயுட்கர்மத்தின் பந்தம் குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டுமே நிகழ்கிறது. மற்றும் ஏழு கர்மங்களின் பந்தம் ஒவ்வொரு சமயமும் நிகழ்கிறது. இந்த ஏழு கர்மங்களின் மூலப்பிரக்ருதிகளின் பந்தம்கூட குறிப்பிட்ட குணஸ்தானத்தில் மற்றும் குறிப்பிட்ட கதியில் உள்ள உயிர்களிடம் வெவ்வேறாக பந்தமாகின்றன. அடுத்த கடிதத்தில் நாம் உத்தரப்பிரக்ருதிகளைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

இந்த உத்தரப்பிக்ருதிகள் பற்றி கவலைப்பட ஒன்றுமில்லை. அவைகளின் பந்தம் எவ்வாறு தடுக்கப்படுகின்றன, எந்தெந்த உயிர்களுக்கு எந்தெந்த பந்தங்கள்

நிகழ்கின்றன, சம்யக்த்துவம் அடையும் முன்னும், சம்யக்த்துவம் அடைந்த பிறகும் உத்தரப்பிரக்ருதிகளின் பந்தம் எவ்வாறு குறைந்துகொண்டே போகிறது, பந்தம் இல்லாமல் போவது எந்த விதிப்படி அல்லது எந்த முறையில் நிகழ்கிறது, கர்மம் எந்த முறையில் அழிகிறது முதலியவைகள் பற்றிய அறிவு பெற்ற பிறகு, சம்சாரச் சுழற்சியின் இரகசியம் நமக்கு நன்கு தெரியவருகிறது. மேலும் அதிலிருந்து விடுபடும் மோக்ஷமார்க்கத்தின் ஸ்வரூபம் பற்றிகூட நமக்கு நன்றாகத் தெரிய வருகிறது. அது சம்பந்தமான தகவலும் மிகவும் சுவாரஸ்யமானது தான். அந்த சுவாரஸ்யங்களைப் பற்றி நாம் அடுத்த கடிதத்தில் பார்க்கலாம்.

ஜெய் ஜினேந்திரா!

- உங்கள் அம்மா

## கர்மம்-உத்தரப் பிரக்ருதிகள்

**கடிதம்-2** **19-5-2002**

பிரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

**கரணானுயோக அறிமுகம்** என்ற புத்தகத்தை ஸ்வாத்யாயம் செய்த பிறகு மேலும் கரணானுயோக சம்பந்தமான விஷயங்களைத் தெரிந்துகொள்வதில் உங்கள் இருவருக்கும் இருக்கும் ஆர்வத்தைப் பார்த்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். முலப்பிரக்ருதிகளின் ஸ்வரூபம் பற்றித் தெரிந்து கொண்ட பிறகு இப்போது நாம் உத்தரப்பிரக்ருதிகள் பற்றி கொஞ்சம் சர்ச்சை செய்யலாம்.

ஞானாவரண கர்மத்திற்கு ஐந்து உத்தரப்பிரக்ருதிகள் உள்ளன. அவைகளின் பெயர்களாவன: 1.**மதி ஞானாவரணம்,** 2.**ஸ்ருத ஞானாவரணம்,** 3.**அவதி ஞானாவரணம்,** 4.**மனப்பர்யய ஞானாவரணம்,** 5.**கேவல ஞானாவரணம்.** ஞானத்தின் ஐந்து பர்யாயங்களின் பெயர்கள் உங்களுக்குத் தெரிந்ததுதான், அந்தப் பெயர்களுக்குப்பின் ஆவரணம் என்ற சொல்லைச் சேர்ப்பதால் அந்தந்த குறிப்பிட்ட பர்யாயஞானத்தை மறைக்கும் கர்மப்பிரக்ருதியின் பெயரை சுலபமாகவே நம்மால் தெரிந்து கொள்ளமுடியும்.

தர்சனாவரணத்திற்கு ஒன்பது உத்தரப்பிரக்ருதிகள். தர்சன குணத்திற்கு நாம் நான்கு பர்யாயங்களைத் தானே பார்த்தோம், பிறகு தர்சனாவரணப் பிரக்ருதிகள் மட்டும் எப்படி ஒன்பது என்று சொல்கிறீர்கள்? என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். அப்படி கேள்வி எழுவதும் சரியானதே! தர்சன குணத்திற்கு சக்ஷுதர்சனம், அசக்ஷுதர்சனம், அவதிதர்சனம், கேவலதர்சனம் என நான்கு பர்யாயங்கள்தான். அத்னுடன் ஆவரணம் என்ற சொல்லைச் சேர்ப்பதால் அந்தந்த குறிப்பிட்ட தர்சனபர்யாயத்தை மறைக்கும் கர்மப் பிரக்ருதிகளாவன: 1.**சக்ஷு தர்சனாவரணம்,** 2.**அசக்ஷு தர்சனாவரணம்,** 3.**அவதி தர்சனாவரணம்,** 4.**கேவல தர்சனாவரணம்** என்ற நான்கு பிரக்ருதிகளாகும். இதனுடன் நித்திரை அதாவது தூக்கம் சார்ந்த ஐந்து கர்மப் பிரக்ருதிகளும்கூட தர்சனத்தை மறைக்கும் பிரக்ருதிகளாக இருக்கின்றன. மிகஆழ்ந்த தூக்கம் முதல் லேசான தூக்கம் வரை 1.**ஸ்தியானக்ருத்தி,** 2.**நித்ராநித்ரா,** 3.**பிரசலாபிரசலா,** 4.**நித்ரா,** 5.**பிரசலா** என தூக்கம் சம்பந்தமான கர்மப்பிரக்ருதிகள் ஐந்து இருக்கின்றன

ஸ்தியானக்ருத்தி தர்சனாவரண கர்ம உதயத்தின்போது உயிருக்கு மிக ஆழ்ந்த தூக்கம் வருகிறது. எழுப்பினாலும்கூட தூக்கம் கலைவதில்லை, தூங்கிக்கொண்டே இருக்க வைக்கிறது. தூக்கத்திலேயே இவர்கள் பல அரிய காரியங்களைச் செய்கின்றனர், பேசக்கூட செய்கின்றனர், எந்தவிதமான எச்சரிக்கை உணர்வும் இவர்களுக்கு இருப்பதில்லை. நித்ராநித்ரா தர்சனாவரணகர்ம உதயதின்போது கண்களைத் திரக்கக்கூட முடியாதவர்களாக இருக்கிறார்கள். பிரசலாபிரசலா தர்சனாவரணகர்ம உதயதின்போது தூக்கத்தில் உமிழ்நீர் வாயிலிருந்து பாய்கிறது அதாவது சொள்ளு விட்டுக்கொண்டும், கை கால்களைக்கூட அசைத்துக் கொண்டும் தூங்கும்நிலை காணப்படுகிறது. நித்ராகர்ம உதயத்தின்போது நடப்பவர்கள் ஒரே இடத்தில் நின்று

விடுகின்றனர், [கார் ஓட்டும்போது தூக்குவது போல எனலாம்] நின்று கொண்டிருப்பவர் உட்கார்ந்து விடுவார்கள் அல்லது கீழே விழுந்துகூட விடுவார்கள், அவர்களுடைய மந்த நிலையை அல்லது அசதியைப் போக்கிக்கொள்ளத் தூங்கிவிடுதல் இந்த கர்ம உதயத்தாலாகும். பிரசலா தர்சனாவரணகர்ம உதயத்தால் அரைத்தூக்கம் தூங்குவார்கள் அதாவது தூங்கிக்கொண்டே கொஞ்சம் அருகில் நடப்பதை அறியும் நிலையில் இருப்பார்கள்.[ஸ்வாத்யாம் செய்யும் இடத்தில் அமர்ந்து தூக்கக் கலக்கத்தில் இருப்பவர்கள் இந்த தூக்கம் தூங்குவதைப் பார்க்கலாம்.] அவ்வப்பொது லேசான தூக்கம் வரும், பாதி கண்களை மூடிக்கொண்டு தூங்குவார்கள். மற்ற நான்கு தர்சனாவரண கர்மங்களின் காரியம் அந்த சொற்களுக்கு உகந்தார்போல் தர்சண குணத்தின் சக்தியில் மறைப்பை உண்டுபண்ணுவன என்பதை நீங்களே புரிந்து கொண்டிருப்பீர்கள்.

மோஹனீய கர்மம் **தர்சனமோஹனீயம்** மற்றும் **சாரித்திரமோஹனீயம்** என இரண்டு விதமாக இருக்கின்றன. அவைகளில் தர்சனமோஹனீயம் 1.**மித்யாத்துவப் பிரக்ருதி,** 2.**சம்யக்மித்யாத்துவப் பிரக்ருதி,** 3.**சம்யக்துவப் பிரக்ருதி** என மூன்று உத்தரப் பிரக்ருதிகள் இருக்கின்றன. இந்த மூன்றில் பந்தமாவது என்னவோ மித்யாத்துவப் பிரக்ருதி ஒன்று மட்டுமேயாகும். பிரதமோபசம சம்யக்த்துவம் அடையும் காலத்தில் இந்த கர்மமே மூன்று துண்டுகளாகி மூன்று பிரக்ருதிகளாக பிரிகின்றன. அதைப்பற்றிய விரிவான சர்ச்சையை பின்னர் நாம் செய்ய விருக்கிறோம்.

சாரித்திர மோஹனீய கர்மத்திற்கு 25 உத்தரப்பிரக்ருதிகள் இருக்கின்றன. உயிரின் கஷாயம் மற்றும் நோகஷாயத்தின் பெயர்களும் இந்த உத்தரப்பிரக்ருதிகளின் பெயர்களும் ஒன்றாகவே இருக்கின்றன. உயிரின் விருப்பு, வெறுப்பு உணர்வுகளை கஷாயம் என்று சொல்கின்றனர், மேலும் இந்த பிரக்ருதிகளை கஷாயகர்மம் என்று சொல்கின்றனர். எப்போது உயிருக்கு கோபகஷாய உணர்வு வருகிறதோ அப்போது கர்மத்தில் குரோதகர்ம உதயம் காணப்படுகிறது. இவைகளின் பெயர்கள்கூட உங்களுக்குத் தெரிந்தவைகள்தான். அவைகளாவன: **அனந்தானுபந்தி குரோத, மான, மாயா, லோபம்**-நான்கு தீவிர கஷாய கர்மங்கள். **அப்ரத்யாக்யான குரோத, மான, மாயா, லோபம்**-நான்கு மந்த கஷாய கர்மங்கள். **பிரத்யாக்யான குரோத, மான, மாயா, லோபம்**-நான்கு மந்ததர கஷாய கர்மங்கள். **சஞ்சுவலன குரோத, மான, மாயா, லோபம்**-நான்கு மந்ததம கஷாய கர்மங்கள். **ஹாஸ்யம், ரதி, அரதி, சோகம், பயம், ஜுகுப்சை**-6 நோகஷாய [கஷாயங்களை ஊக்கப்படுத்துகின்ற] கர்மங்கள். **ஸ்திரிவேதம், புருஷவேதம், நபும்சகவேதம்-**3 வேதகஷாய [புணர்ச்சி உணர்வுகளைத் தூண்டும்] நோகர்மங்கள். இவ்வாறு சாரித்திர மோஹனீய கர்மத்திற்கு மொத்தம் 25 பிரிவுகளாக உத்தரப் பிரக்ருதிகள் இருக்கின்றன.

அந்தராய கர்மத்திற்கு ஐந்து உத்தரப்பிரக்ருதிகள் இருக்கின்றன. அவைகள் 1.**தானாந்தராயம்,** 2.**லாபாந்தராயம்,** 3.**போகாந்தராயம்,** 4.**உபபோகாந்தராயம்,** 5.**வீர்யாந்தராயம்** என்பனவாகும். தானம் முதலான உயிரின் ஐந்து குணங்களின் பெயர்களை நாம் முன்னரே பார்த்திருக்கிறோம். அந்த பெயர்களுடன் அந்தராயம் என்ற சொல்லைச் சேர்த்தால் வரும் இந்த ஐந்தும் அந்தராய கர்மத்தின் உத்தரப்பிரக்ருதிகளின் பெயர்கள் என்பது உங்களுக்கு சுலபமாகவே ஞாபகத்திற்கு வந்துவிடும்.

வேதனீய கர்மத்திற்கு 1.**சாதா வேதனீயம்** 2.**அசாதா வேதனீயம்** என இரண்டு உத்தரப் பிரக்ருதிகள் இருக்கின்றன. ரதி மோஹனீயகர்ம உதயகாலத்தில் இந்திரிய விஷயங்களில் சுக அனுபவம் தோன்றச்செய்வது சாதாவேதனீய கர்மமாகும். அரதி மோஹனீயகர்ம உதயகாலத்தில் இந்திரிய விஷயங்களில் துக்க அனுபவம் தோன்றச்செய்வது அசாதா வேதனீய கர்மமாகும்.

ஆயுள் கர்மத்திற்கு 1.**மனித ஆயுள்,** 2.**தேவ ஆயுள்,** 3.**விலங்கு(திரியன்ச) ஆயுள்,** 4.**நரக ஆயுள்** என நான்கு உத்தரப் பிரக்ருதிகள் இருக்கின்றன.

நாம கர்மத்தின் தொண்ணூற்றுமூன்று (93) உத்தரப் பிரக்ருதிகளைப் பற்றிப் பார்க்கும்முன் கோத்திர கர்மத்தின் இரண்டு உத்தரப் பிரக்ருதிகளைப் பற்றிப் பார்க்கலாம். அவை 1.**உச்ச கோத்திரம்,** 2.**நீச்ச கோத்திரம்** என இரண்டாக இருக்கின்றன.

நாம கர்மத்தின் 93 உத்தரப் பிரக்ருதிகளின் எண்ணிக்கையைப் பார்த்து பீதி அடையத் தேவையில்லை. ஏனென்றால் அவைகளில் பிண்டப்பிரக்ருதிகள் 14 தொகுதிகளாகவும், அபிண்டப்பிரக்ருதிகள் அதாவது பிண்டத்தொகுதியாக இல்லாத 28 ஜோடி பிரக்ருதிகளும் உள்ளன. பிண்டம் மற்றும் ஜோடி பிரக்ருதிகளாக அவைகளை நாம் சுலபமாக நினைவில் வைத்துக் கொள்ளமுடியும். முதலில் அவைகளின் பெயர்களை பட்டியலிட்டு பிறகு அவைகளின் இயல்புகள் பற்றிப் பார்க்கலாம்.

1.**கதி-4**, 2.**ஜாதி-5**, 3.**சரீரம்-5**, 4.**பந்தனம்-5**, 5.**சங்காதம்-5**, 6.**சம்ஸ்தானம்-6**, 7.**சம்ஹனனம்-6**, 8.**அங்கோபாங்கம்-3**, 9.**ஸ்பர்சம்-8**, 10.**ரசம்-5**, 11.**கந்தம்-2**, 12.**வர்ணம்-5**, 13.**கத்யானுபூர்வி-4**, 14.**விஹாயோகதி-2** என நாம கர்மத்தில் 14 பிண்டப்பிரக்ருதிகளின் தொகுதிகள் இருக்கின்றன.

1.**அகுருலகு,** 2.**உபகாதம்,** 3.**பரகாதம்,** 4.**உச்சுவாசம்,** 5.**ஆதபம்,** 6.**உத்யோதம்,** 7.**திரசம்,** 8.**ஸ்தாவரம்,** 9.**பாதரம்,** 10.**சூட்சமம்,** 11.**பர்யாப்த்தி,** 12.**அபர்யாப்த்தி,** 13.**பிரத்யேகம்,** 14.**சாதாரணம்,** 15.**ஸ்திரம்,** 16.**அஸ்திரம்,** 17.**சுபம்,** 18.**அசுபம்,** 19.**சுபகம்,** 20.**துர்பகம்,** 21.**சுஸ்வரம்,** 22.**துஸ்வரம்,** 23.**ஆதேயம்,** 24.**அனாதேயம்,** 25.**யசஸ்கீர்த்தி,** 26.**அயசஸ்கீர்த்தி,** 27.**தீர்த்தங்கரம்,** 28.**நிர்மாணம்** என நாம கர்மத்தில் 28 அபிண்ட ஜோடிப் பிரக்ருதிகள் இருக்கின்றன. **[**அகுருலகு, உச்சுவாசம், தீர்த்தங்க்கரம், நிர்மாணம் இவைகள் மட்டும் ஜோடிகளில்லை**]** கொஞ்சம் பயிற்சி செய்தால் சுலபமாக இந்த பெயர்களை நம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம்.

இவைகளின் அர்த்தங்களை தெரிந்து கொள்ள உங்களுக்கு ஆர்வமாக இருக்கும். ஆனால் அதற்குமுன் அவைகளைத் தெரிந்து கொள்வதின் நோக்கத்தை மனதில் கொள்ள வேண்டும். உடலின் ஸ்பர்சம், ரசம், கந்தம், வர்ணம், வடிவம், கதி, இந்திரியங்கள்-புலன்கள், எலும்புகளின் அமைப்பு மற்றும் வலிமை, உடலசைவு, குரல் முதலான பல விஷயங்கள் நாமகர்மத்தின் உதய நிமித்தத்தால் அமைகின்றன. இவைகளைப் பற்றி தெரிந்து கொள்வதால் **உடலே நானாவேன்** என்ற அனாதி காலமாக நம்மிடம் இருக்கும் மூடநம்பிக்கை நம்மிடமிருந்து சுலபமாகவே அழிந்து விடுகிறது. இந்த கர்ம

பிரக்ருதிகளின் பெயர்களை நினைவில் வைத்துக்கொள்வதன் மூலம் நம் புத்திசாலித் தனத்தைக் காண்பிப்பது நம் நோக்கமல்ல; ஆனால் இந்த கர்மங்களின் பலனால் கிடைக்கும் விஷயங்களிலிருந்து ஸ்வயம் நான் வேறானவன் என்று பிரித்தறிவதே நம்முடைய நோக்கமாகும்.

உடல் வேறு, கர்மம் வேறு, மற்றும் உயிர் வேறாகும். இவைகள் ஒவ்வொன்றின் செயல்பாடுகள் அதனதனில் ஸ்வயமாகவே, சுய காரணத்தாலேயே நிகழ்கின்றன. ஆனால் அவைகளில் நிமித்த-நைமித்திக சம்பந்தம் காணப்படுகிறது, ஆகையால் நாம கர்மத்தின் காரணத்தால் உடலமைப்பு உண்டாகிறது அல்லது உயிர் கர்மத்தை கட்டிக்கொண்டது என ஆகமங்களில் விவரிக்கப்படுகின்றன. இவ்வாறான விவரிப்புகள் இருந்தாலும்கூட ஒவ்வொரு பரமாணு மற்றும் உயிரின் சுதந்திரத் தன்மையை அவசியம் நம் கவனத்தில் கொள்ள வேண்டும். [நிமித்த-நைமித்திகம் என்றால் இரண்டு வெவ்வேறு நிகழ்வுகள் ஒரே இடத்தில், ஒரே சமயத்தில் நிகழ்கின்றன. இரண்டும் சுதந்திரமான நிகழ்வுகள். இப்படிப்பட்ட synchronised-ஒத்திசைக்கப்பட்ட நிகழ்வுகள் இயற்கையாகவே அதாவது இயற்கையின் விதிப்படியே-அதாவது இயற்கையின் அதிகாரத்திலேயே-அந்தந்த பொருள்களில் சுயசக்தியாலேயே நிகழ்கின்றன. குறைந்த அளவு அறிவே-க்ஷயோபசம ஞானமே உள்ள நமக்கு, அந்த நிகழ்வுகளைப் பார்த்து, ஒரு பொருள் அதன் அருகிலேயே இருக்கும் வேறொரு பொருளின் செயலைச் செய்வதாக, ஒருவகையான பிரம்மை நமக்கு உண்டாகிறது என்பதை நாம் அறிய வேண்டும்.]

**நாம கர்மத்தின் காரணத்தால் உடலின் குறிப்பிட்ட அமைப்பு உண்டாகிறது என்று நீங்கள் கூறுகிறீர்கள். நம் விஞ்ஞானிகள் அவர்களுடைய பரிசோதனைக்கூடத்தில் அவர்கள் விரும்பும் வர்ணம் உடைய உயிர்களை உற்பத்தி செய்கிறார்கள், டெஸ்ட்டியூப் குழந்தைகளை (test-tube babies) மற்றும் பிரதிகளை-க்ளோன்ஸ்களை (clones-களை) உருவாக்கம் செய்கிறார்கள் என்பதை நாம் இந்த காலத்தில் நேரடியாகவே-பிரத்யக்ஷமாகவே பார்க்கிறோம், கேட்கிறோம். அப்படியிருக்க உங்களால் விளக்கிச் சொல்லப்படும் நாமகர்ம சித்தாந்தத்தால் என்ன பிரயோஜனம்?** என்று உங்களுக்குக் கேட்கத் தோன்றலாம்.

மகள்களே! எல்லாவற்றிற்கும் முதலில் இந்த கர்ம சித்தாந்தம் பற்றிய அறிவு அல்லது இவ்வாறு சொல்லக் கேட்பது சர்வஞ்ஞரிடமிருந்து பெறப்பட்டது என்பதையும், நான் எதையும் சுயமாக சொல்லவில்லை என்பதையும் நீங்கள் கவனத்தில் கொள்ளுங்கள். அடுத்து விஞ்ஞானிகள் உயிரை செய்தார்களா அல்லது உடல் முதலான புத்கலங்களையா? அஸ்தித்துவ குணம் பொருள்களில் இருக்கும் ஒரு பொது குணமாகும், அது எல்லா திரவியங்களிலும் இருக்கிறது. அந்த காரணத்தால் திரவியம் அழிவதுமில்லை மற்றும் யாராலும் உற்பத்தி செய்யப்படுவதுமில்லை. இதைப்பற்றி நாம் மிகவும் விரிவாகவே விவாதித்துப் புரிந்து கொண்டிருக்கிறோம். ஆகையால் விஞ்ஞானிகள் உயிரையோ அல்லது உடலையோ உற்பத்தி செய்யவில்லை. அந்த உயிர் எங்கோயோ இறந்து அந்த டெஸ்ட்டியூபில் தன் சுயசக்தியாலேயே பிறந்தது. எப்போதும் எங்கும் புதியதாக உயிர் என்பது உற்பத்தியாவதில்லை.

**விஞ்ஞானிகள் அந்த உடலின் அமைப்பை அவர்களுடைய விருப்பப்படி செய்தார்கள் என்பதை நீங்கள் எப்படி மறுக்க முடியும்?** என்று நீங்கள் கேட்கலாம். உடல் புத்கலத்தால் ஆன ஸ்கந்தம்-ஒரு பிண்டமாகும். ஆஹார வர்க்கணை பெயர்கொண்ட புத்கல வர்க்கணையால் ஆனது. ஆஹார வர்க்கணை அனந்தானந்த புத்கல பரமாணுக்கள் சேர்ந்த ஸ்கந்தமாகும். விஞ்ஞானிகள் புத்கல பரமாணுக்களை செய்தார்களா? அல்லது அவைகளின் ஸ்பர்ச, ரச, கந்த, வர்ணம் முதலான குணங்களை தயார் செய்தார்களா? அல்லது அதில் மாற்றங்களை செய்தார்களா? என்று நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம்.

**அம்மா, திரவியம் மற்றும் குணங்களை யாரும் செய்வதில்லைதான், அவைகள் அனாதிஅனந்த காலமாக எப்போதும் இருக்கின்றன என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். ஆனாலும் விஞ்ஞானிகள் அவர்களுக்கு எப்படி வேண்டுமோ அப்படி மாற்றங்களை அவர்களுடைய பரிசோதனைச் சாலையில் உற்பத்தி செய்தார்கள், பார்த்தீர்களா! அவர்கள் பச்சை நிறத்தில் முயலை உற்பத்தி செய்தார்கள். மேலும் சாதாரணமாக தவளை எப்படி இருக்கிறதோ அப்படியே அவர்களுடைய விஞ்ஞானக்கூடத்தில் பரிசோதனை மூலம் தவளையை உண்டாக்கினார்கள் அல்லவா** என்று நீங்கள் சொல்லலாம்.

மகள்களே! ஒவ்வொரு திரவியமும் அல்லது குணத்தின் ஒவ்வொரு பர்யாயமும் அவைகளின் சுய சாமர்த்தியத்தாலேயே தோன்றுகின்றன, ஒவ்வொரு திரவியத்தின் ஒவ்வொரு குணத்தின் அனந்தானந்த அவஸ்தைகள்-மாற்றங்கள்-பர்யாயங்கள் நிச்சயிக்கப்பட்டதாகும் என்பதை நாம் ஏற்கனவே படித்திருக்கிறோம்; மேலும் அவைகளை அறிவில் சிந்தனை செய்து அதுவே உண்மை என்றும் நாம் உறுதியும் செய்திருக்கிறோம். எந்த ஒரு திரவியமும் ஸ்வயம் அதன் பர்யாயத்தையும் செய்யும் மற்றும் பிற திரவியத்தின் பர்யாயத்தையும் செய்யும் என்று சொல்வது முக்காலத்திலும், எப்போதும் சாத்தியமில்லை. விஞ்ஞானிகள் அவர்களுடைய (அவர்களின் ஆத்மாவுடைய) காரியத்தையும் செய்கிறார்கள் மற்றும் அவருடைய உடலின் செயலையும் செய்கிறார்கள் என்பதுகூட சாத்தியமில்லை, பிறகு பிற உயிர்களின் உடலை அவர்களுடைய விருப்பப்படி செய்தார்கள் என்ற நம்பிக்கை மஹா மித்யாத்துவமாகும், மிகப்பெரிய மூடநம்பிக்கை யாகும்.

விஞ்ஞானிகள்கூட ஆராய்ச்சி செய்கிறார்கள், அவர்களுக்கு எது தெரியாதோ அது சம்பந்தமாக சிலவற்றை சிலசமயம் சாதிக்கிறார்கள், பலவற்றை அவர்கள் சாதிப்பதில்லை. அவர்கள் புதிய திரவியத்தை உறபத்தி செய்வதில்லை, அவைகளில் புதிய குணத்தை சேர்ப்பதுமில்லை, அதன் மாற்றங்களை அவர்களுடைய விருப்பத்தின்படி மாற்றுவதுமில்லை. அவர்களால் அப்படிச் செய்யவும் முடியாது. விஞ்ஞானிகளை மற்றும் அவர்களுடைய பரிசோதனைகளை நீங்கள் பாராட்டுகிறீர்களா அல்லது அவர்களுடைய பரிசோதனை ஆய்வுகளின் மேல் நீங்கள் நம்பிக்கை கொள்கிறீர்களா? அவர்களுடைய பரிசோதனையில் க்ளோன்கள் - டெஸ்டியூப் குழந்தை தயாராவதில் மிக அதிக அளவில் ஹிம்சைகள் நிகழ்கின்றன என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை!

எதை எம்பிரியோ (embryo-கருமுளை) என்று சொல்கிறார்களோ அதில் குறிப்பிட்ட செல்லை (cell-ஐ) அல்லது டிஷ்யூவை எடுத்து அதன் உள்ளே செல்லும் வகையில் ஒரு அமைப்பை பரிசோதனைக்கூடங்களில் செய்கின்றனர். இந்த பரிசோதனையின்போது நிறைய எம்பிரியோக்கள் வீணாக அழிகின்றன. பிறகு எப்போது அதற்கு தேவையாவர்கள் கிடைக்கிறார்களோ அப்போது அதை உபயோகப் படுத்துகின்றனர். எம்பிரியோவை-கரு முளையை கர்ப்பம் என்றுதான் சொல்ல வேண்டும். அது ஒரு அம்மாவின் கருப்பையில் உதிரத்தில் வாழ்ந்தாலும் அல்லது சோதனைக்குழாயில் வாழ்ந்தாலும் ஒவ்வொரு எம்பிரியோவும் ஒரு மனித பர்யாயம்-மனிதபவம் தான். ஒரு கொலை செய்பவருக்கு சட்டம் தண்டனை கொடுக்கிறது, ஆனால் பரிசோதனை என்ற பெயரில் ஆயிரக்கணக்கான எம்பிரியோக்களை உற்பத்தி செய்து அழிக்கப்படுகின்றன. ஆகையால் இவ்விதமான பரிசோதனைச் சாலையில் சோதனைக்குழாய் குழந்தைகளை உண்டுபண்ணுவதை பாராட்டுதல், அதற்கு உடன்படுதல், அந்த செயலை ஆமோதித்தல் எல்லாம் மஹா ஹிம்சைக்கும், பெரிய கொலைகளுக்கும் சமமாகும். அதனால் கொலை செய்தால் எந்த பாபகர்மம் கட்டுமோ அந்த பாபகர்மத்தைக் கட்டிக்கொள்ள நேரிடும்.

நீங்கள் இருவரும் எம்பிரியாலஜி விஷயம் பற்றி படித்திருக்கிறீர்கள். மோனா, நீ உன் மருத்துவப் படிப்பில் இதைப்பற்றி படித்திருக்கிறாய். ரீனா நீ கூட குழந்தைகளின் வளர்ச்சி விஷயத்தில் கல்லூரியில் இதைப்பற்றி படித்திருக்கிறாய். ரீனா ஒரு விஷயத்தைப் பற்றி என்னிடம் விளக்கம் கேட்டு அதைப்பற்றி என்னை சிந்திக்க ஊக்கப்படுத்தினாய். கருத்தடுப்புக்காக **காப்பர் டி** உபயோகிப்பதால் கர்ப்பம் ஒரு பெண்ணின் வயிற்றில் தங்குவதில்லை, அது கருவை அந்த பெண்ணின் கருப்பையிலிருந்து வெளியே தள்ளி விடுகிறது. இதன் பொருள் அந்த பெண் கர்ப்பம் என்னவோ தரிக்கிறாள் ஆனால் அவர் காப்பர் டி வைத்துக்கொண்ட காரணத்தால் சாதகமற்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டு அந்த கர்ப்பம் கலைந்து விடுகிறது. காப்பர் டி வைத்துக்கொள்ளப் பரிந்துரை செய்வது, பல கர்ப்பங்களைக் கலைப்பதற்கு சமமான ஒரு கொடுமையான செயல் மற்றும் மஹா பாபம் அல்லவா! என்று ரீனா அப்போது என்னிடம் சர்ச்சை செய்தது இப்போது என் நினைவுக்கு வருகிறது.

இங்கே பாருங்கள்! எந்த விஷயம் பற்றிய விரிவான தகவல்களைத் தெரிந்து கொண்ட பிறகு அந்த விஷயம் செய்யத் தகுதியானதா-தகுதியற்றதா என்பதை நாமே சுயமாகவே முடிவுசெய்து கொள்ளமுடியும். இங்குகூட கர்மம் பற்றி விரிவான தகவல்களை பெறுவதன் நோக்கம், கர்மத்திலிருந்தும் வேறான நிஜசுத்தாத்மாவை, நாம் அங்கீகரம் செய்யவேண்டும் என்பதற்குத்தான். இதுவரை கர்ம உதயத்தால் கிடைக்கும் பொருள்களையே நாம் நம்முடைய வடிவம் மற்றும் சிறப்பு என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். அவைகளிலிருந்தும் வேறான ஒரு மிகப்பெரிய மகிமை கொண்ட ஒரு பதார்த்தமான ஆத்மாவைப்பற்றி-என்னைப்பற்றி தெரிந்து கொள்ளவும் இல்லை, பிறர் சொல்லக் கேட்கவுமில்லை அதனால் இதுவரை என்மேல் எனக்கே நம்பிக்கை இல்லாத நிலையில் தான் இருக்கிறேன் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

நாமகர்மத்தால் உடலில் குறிப்பிட்ட அமைப்பு உண்டாகிறது என்பதுகூட நிமித்த நோக்கில் சொல்லப்பட்டதாகும். யோகத்தின் நிமித்தத்தால் உயிர் கர்ம, நோகர்மங்களை

ஈர்த்துக்கொள்கிறது என்று முன்னரே நாம் படித்துத் தெரிந்து கொண்டிருக்கிறோம். எதுவரை நாம் மனிதகதியில் இருக்கிறோமோ அதுவரை நாம் ஏன் ஔதாரிக உடலுக்குத் தேவையான பரமாணுக்களையே கிரஹனம் செய்கிறோம்? வைக்ரியிக உடலின் பரமாணுக்களை ஏன் கிரஹிப்பதில்லை? சிகப்பாக இருக்கும் மனிதர் ஏன் சிகப்பு வர்ண பரமாணுக்களையே கிரஹிக்கிறார்? கருப்பாக இருப்பவர் கருப்பு வர்ண பரமாணுக்களையே ஏன் கிரஹிக்கிறார்? என்று கொஞ்சம் நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

இதற்குக் காரணம் அவரவர்களுடைய குறிப்பிட்ட நாமகர்மத்தின் உதயமாகும். மனிதர் மற்றும் விலங்குகளுக்கு ஔதாரிக சரீர நாமகர்மம் உதயத்தில் இருக்கிறது, ஆகையால் அவைகள் ஔதாரிக ஜாதி பரமாணுக்களையே கிரஹிக்கின்றன. அதனுடன் குறிப்பிட்ட ஸ்பர்ச, ரச, கந்த, வர்ண பெயர்கொண்ட நாமகர்ம உதயத்தால், குறிப்பிட்ட அதே வகையான பரமாணுக்களையே கிரஹிக்கின்றன. ஆனால் இந்த நாமகர்ம நிமித்தத்தால் நிகழும் புத்கலத்தின் அவஸ்தையை-மாற்றத்தை தெரிந்து கொள்ளாமல், அஞ்ஞானி உயிர் இவைகளால் உண்டான உடலை மட்டுமே தன் வடிவம் என்று அறிகிறது, நம்புகிறது.

சமயசாரம் பின் இணைப்பு (பரிசிஷ்டம்) பற்றி பிரவசனம் செய்தபோது பூஜ்ய ஸ்ரீகான்ஜி ஸ்வாமி இவ்வாறு கூறுகிறார் "அஞ்ஞானி உயிர் ஸ்வயம் தன்(ஆத்மாவின்) அஸ்தித்துவத்தை அடையாளம் காணாமல், நம்பாமல் பிற திரவியத்தின் பர்யாயத்தை அதாவது வடிவத்தையே தான் என்று நம்புகிறது. அறிவால் என்னவோ ஜடம், சேதனம் இரண்டுமே அறியப்படுகிறது. ஆனால் அசேதனத்தின் வெளிப்பாட்டையே அதாவது தொட்டு அறியப்படும் உடல்-ஸ்பர்சம், உடலின் நிறம் முதலானவைகளிலேயே என் இருப்பு-அஸ்தித்துவம் இருக்கிறது என அந்த அஞ்ஞானி நம்புகிறார். என்னுடைய உடல், என்னுடைய புகைப்படம், என்னுடைய வீடு, என்னுடைய துணிமணிகள் என்றே இந்த அஞ்ஞானியின் உயிர் இன்றுவரை நம்பிக்கொண்டிருக்கிறது. மேலும் இந்த பொருள்களைச் சேர்க்கவும் மற்றும் பாதுகாக்கவும் இதன் அனந்த பவங்களை வீணடித்திருக்கிறது. ஸ்வயம் தன்னில் ஞானம், தர்சனம், ஆனந்தம், சாந்தி முதலான அனந்த உணர்வுகள் இருப்பதை நம்பாமல், அசேதனப் பொருள்களின் நிலைகளையே தனது உணர்வுகள் என்று நம்பிக்கொண்டு அந்த அஞ்ஞானி ஜடமாக ஆகிவிட்டது, அது தன் சைத்தன்யத்தை நாசம் செய்து விட்டது. இதன் பொருள் ஆத்மாவே இல்லாததுபோல் (தற்கொலை) செய்துகொள்கிறது. ஆத்மாவை அழிப்பவர் மஹாபாபியாவார், இல்லையா?" என்று ஸ்ரீகான்ஜி ஸ்வாமி கேட்கிறார்.

**ஸ்வபாவம் மற்றும் பரபாவம் இரண்டையும் அறிவது நானாவேன், ஆனால் நான் பரபாவத்தில் இல்லை. என்னுடைய ஞானத்தில்-என்னுடைய உணர்வில் பரபாவம் அறியப்படுகிறது, அப்படி அறிவதே ஸ்வயம் என்னுடைய உணர்வாகும் என்று ஞானி-தர்மி உயிர் நம்புகிறது.** இந்த விஷயங்களை கவனத்தில் வைத்து இப்போது நாம் நாம கர்மத்தின் 93 உத்தரப் பிரக்ருதிகளின் இயல்பு மற்றும் அவைகளின் காரியத்தைப் பற்றி சர்ச்சை செய்யலாம். நீங்கள்கூட இவைகளைத் தெரிந்து கொள்வதில் ஆர்வமாக இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. **லப்தி** பற்றிய அத்தியாயத்தில் இந்த பிரக்ருதிகள் சம்பந்தமாக சர்ச்சை செய்யப்படும்போது குழப்பம் இல்லாமலிருக்க, இப்போதே அவைகளைப்பற்றி நாம் சர்ச்சை செய்வது அவசியமாகும்.

**கதி நாமகர்மம்:** எந்த கர்ம உதயத்தால் ஆத்மா ஒரு பிறவியிலிருந்து அடுத்த பிறவி எடுக்க வேறு இடத்திற்குச் செல்கிறதோ-இதுவரை இருந்த உடலை விட்டுவிட்டு வேறு உடலை ஏற்க இடம் பெயர்கிறதோ, அந்த நாமகர்மத்தை கதிநாமகர்மம் என்று சொல்கின்றனர். எதன் உதயத்தால் உயிருக்கு நரகப்பிறவி அமைகிறதோ அது நரககதி நாமகர்மமாகும். எதன் உதயத்தால் உயிருக்கு விலங்குப்பிறவி அமைகிறதோ அது திரியன்சகதி நாமகர்மமாகும். எதன் உதயத்தால் உயிருக்கு மனிதப்பிறவி அமைகிறதோ அது மனிதகதி நாமகர்மமாகும். எதன் உதயத்தால் உயிருக்கு தேவப்பிறவி அமைகிறதோ அது தேவகதி நாமகர்மமாகும்.

**ஜாதி நாமகர்மம்:** ஜாதி நாமகர்மம் ஏகேந்திரிய ஜாதி, இரண்டு இந்திரிய ஜாதி, மூன்று இந்திரிய ஜாதி, நான்கு இந்திரிய ஜாதி, ஐந்து இந்திரிய ஜாதி என ஜாதி நாமகர்மம் ஐந்து விதமாக இருக்கின்றன. எத்தனை ஏகேந்திரிய உயிர்கள் இருக்கின்றனவோ அவைகளில் ஏகேந்திரிய அஸ்தித்துவ நோக்கில் [ஏகேந்திரிய உயிர்கள் எல்லாம் தொடு(ஸ்பர்ச) பொறி மட்டுமே கொண்டவை என்ற நோக்கில்] சமமாகும், இதை **சாத்ருஸ்யபாவம்** என்று சொல்லப்படுகிறது. ஏகேந்திரியமும் இரண்டு இந்திரியமும் சமானமாகி ஒன்று மற்றொன்றுடன் சேரமுடியாது, ஆகையால் இதை **அவ்யபிசாரி** என்று சொல்கின்றனர். அவ்யபிசாரி சாத்ருஸ்யபாவத்தின் ஆதாரத்தில் உயிர்களை ஒன்று சேர்த்து, தொகுத்து (group-ஆகப்பிரித்து) **ஜாதி** என்ற பெயரால் அழைக்கின்றனர். எந்த கர்மத்தின் உதயத்தால் ஒரு உயிரை ஏகேந்திரியம் என்று சொல்கிறோமோ அந்த நாமகர்மத்தை ஏகேந்திரியஜாதி நாமகர்மம் என்று சொல்கின்றனர். நிகழ்காலத்தில் நமக்கு பஞ்சேந்திரியஜாதி நாமகர்ம உதயம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது, ஆகையால் நாம் பஞ்சேந்திரிய உயிர்கள் என்று அழைக்கப்படுகிறோம்.

இங்கே பாருங்கள்! நம்முடைய விருப்பு, வெறுப்பு காரணங்களால் பல்வேறு விதமான கதி மற்றும் ஜாதி நாமகர்மங்களை நாம் கட்டிக் கொள்கிறோம், மேலும் அதன் உதயம் வரும்போது அந்த நிலையை அடையப் பெறுகிறோம். ஜீவத்துவ சக்தி நோக்கில் எல்லா உயிர்களும் சமமாக இருந்தாலும்கூட, வெவ்வேறு உயிர்கள் வெவ்வேறு நிலையில் காணப்படுகின்றன, நான்கு கதிகளிலும் மற்றும் ஐந்து ஜாதிகளிலும் காணப்படுகின்றன. உயிர்களின் இந்த பல்வேறு விதமான பிறவி நிலைகளை என்னவோ நாம் கண்கூடாகவே பார்க்கிறோம். சிலர் கர்மங்களின் இருப்பையே மறுக்கின்றனர். எட்டு கர்மங்களின் உதயத்தால் உயிர்களுக்கு வெவ்வேறு பலன்கள், வெவ்வேறு மனைவி, மக்கள், சொத்து, சுகங்கள் கிடைக்கின்றன. அவைகளின் ஆதாரத்தில் சுலபமாகவே நாம் கர்மங்களின் இருப்பை நிரூபிக்க முடிகிறது.

**சரீர நாமகர்மம்:** எதன் உதயத்தால் உயிருக்கு எந்தவகை உடல் உற்பத்தியாகிறதோ (body formation) அது சரீர நாமகர்ம உதய நிமித்தத்தாலாகும். சரீர நாமகர்மம் 1.ஔதாரிகசரீர நாமகர்மம், 2.வைக்ரியிகசரீர நாமகர்மம், 3.ஆஹாரகசரீர நாமகர்மம், 4.தைஜசசரீர நாமகர்மம், 5.கார்மணசரீர நாமகர்மம் என ஐந்து விதமாகும்.

**பந்தன நாமகர்மம்:** அந்தந்த உடலின் பெயரிலேயே பந்தன நாமகர்மம் இருக்கிறது. இதுவும் ஐந்து விதமாகும். 1.ஔதாரிகபந்தன நாமகர்மம், 2.வைக்ரியிகபந்தன நாமகர்மம்,

3.ஆஹாரகபந்தன நாமகர்மம், 4.தைஜசபந்தன நாமகர்மம், 5.கார்மணபந்தன நாமகர்மம் என்பனவாகும். சரீர நாமகர்மம் உதயமாகும்போது ஆஹார வர்க்கணைவடிவப் புத்கல ஸ்கந்தங்கள் உயிர் பிரதேசத்தில் கிரஹிக்கப் படுகின்றன. அவைகளின் பிரதேசங்களில் ஒன்றுக்கொன்று சன்ஸ்லேஷ சம்பந்தம் எதனால் உண்டாகிறதோ அதற்கு நிமித்தம் இந்த பந்தன நாமகர்மமாகும்.

**சங்காத நாமகர்மம்:** எதன் உதயத்தால் ஔதாரிகம் முதலான உடல்களில் ஓட்டை அல்லது துளைகள் (body without gaps and holes) இல்லாமல் ஒட்டுமொத்த உருவமாக அமையக் காரணமாக இருக்கிறதோ அதை ஔதாரிகம் முதலான சங்காத நாமகர்மம் என்று சொல்கின்றனர். இந்த கர்மம்கூட அந்தந்த உடலில் பெயரில் ஐந்து விதமாக இருக்கின்றன. அவைகளாவன 1.ஔதாரிகசங்காத நாமகர்மம், 2.வைக்ரியிகசங்காத நாமகர்மம், 3.ஆஹாரகசங்காத நாமகர்மம், 4.தைஜசசங்காத நாமகர்மம், 5.கார்மணசங்காத நாமகர்மம் என ஐந்தாகும்.

**சம்ஸ்தான நாமகர்மம்:** எதன் உதயத்தால் ஔதாரிகம் முதலான உடல்களில் வடிவம்(ஆகாரம்) அமைகிறதோ அதை சம்ஸ்தான நாமகர்மம் என்றுசொல்கின்றனர். இது ஆறு வகையாகும்.

**1.சமசதுரஸ்ச சம்ஸ்தானம்**-சமமான சதுர வடிவமான உடலமைப்பு-நாலாபக்கமும் சம அளவில் அமையும் அழகான உடலமைப்பு.

**2.நியக்ரோதபரிமண்டல சம்ஸ்தானம்**-ஆலமரம் போல மேல்பாகம் பெரியதாகவும், கீழ்பாகம் மெலிந்தும் அமையும் உடலமைப்பு.

**3.ஸ்வாதி சம்ஸ்தானம்**-மேல்பாகம் மெலிந்தும், கீழ்பாகம் பெரியதாகவும் அமையும் உடலமைப்பு.

**4.குப்ஜக சம்ஸ்தானம்**-கூன் முதுகுடன் அமையும் உடலமைப்பு. (Hunchback body).

**5.வாமன சம்ஸ்தானம்**-குள்ளமான வடிவில் அமையும் உடலமைப்பு.

**6.ஹுன்டக சம்ஸ்தானம்**-அனேக விதமான சொல்லால் சொல்ல முடியாததாக (அவக்தவ்ய) அமையும் உடலமைப்பு.

**அங்கோபாங்க நாமகர்மம்:** எதன் உதயத்தால் உடலில் அங்கங்கள், மற்றும் உபஅங்கங்கள் என்ற வேறுபாடுகள் காணப்படுகிறதோ அது அங்கோபாங்க நாமகர்மமாகும். ஸ்தாவர ஏகேந்திரிய உயிர்களிடம் இந்த கர்மம் உதயமாவதில்லை. திரச உயிர்களிலேயே இந்த கர்மத்தின் உதயம் காணப்படுகிறது. அங்கம் என்றால் கை, கால், தலை முதலிய முக்கிய உறுப்புகளாகும், மற்றும் உப அங்கம் என்றால் கை கால்களில் உள்ள விரல்கள் முதலிய சிறிய அவையவங்களாகும். இந்த கர்மம் 1.ஔதாரிக

அங்கோபாங்கம், 2.வைக்ரியிக அங்கோபாங்கம், 3.ஆஹாரக அங்கோபாங்கம் என மூன்று பிரிவுகள் உள்ளன.

**சம்ஹனன நாமகர்மம்:** சம்ஹன்னம் என்ற சொல்லை நீங்கள் பலமுறை கேட்டிருப்பீர்கள், இப்போது அதன் பொருள் உங்களுக்குப் புரியவரும். எதன் உதயத்தால் எலும்புகளின் குறிப்பிட்ட வலிமை மற்றும் பல பிணைப்பில்-குறிப்பிட்ட சிறப்பு அம்சங்கள் காணப்படுகின்றன, அதையே சம்ஹனன நாமகர்மம் என்று சொல்கின்றனர். சம்ஹனனம் என்றால் எலும்புகளின் அமைப்பு எனலாம். சம்ஹனன நாமகர்மம் ஆறுவிதமாக இருக்கின்றன. இதன் உதயத்தால் ஆறு விதமான எலும்பின் அமைப்புகள் அடையப் பெறுகிறோம். சம்ஹனன நாமகர்ம உதயம் மனிதகதி மற்றும் இரண்டு இந்திரியம் முதலான விலங்குகதி உயிர்களில் மட்டுமே காணப்படுகின்றன. ஏகேந்திரிய ஜாதி விலங்கு கதியிலும் மற்றும் தேவ, நாரகி கதி உயிர்களிடமும் சம்ஹன்ன நாமகர்மம் காணப்படுவதில்லை.

**1.வஜ்ரவிரஷபநாராச சம்ஹனனம்:** எந்த உடலில் வஜ்ரத்திற்கு சமமான எலும்புகள், வஜ்ரமயமான போர்வையால் முழுவதும் மூடப்பட்ட இணைப்புகாளால் இணைக்கப்பட்டும் இருக்கின்றதோ அந்த உடலமைப்பை வஜ்ரவிருஷபநாராச சம்ஹனனம் என்று சொல்கின்றனர். எந்த எலும்பு வஜரத்திற்கு சமமாக அசைக்க முடியாத வலிமை உடையதாக இருக்கிறதோ அதை வஜ்ரம் என்று சொல்கின்றனர். விருஷப நாரச என்றால் முழுமையாக மூடப்பட்ட எலும்புகளின் இணைப்பு என்று பொருள். எப்படி எஃகால் ஆன கீலால் வாசற்படியில் கதவுகள் பூட்டப் பட்டிருக்கிறதோ அதுபோல என அறிக.

**2.வஜ்ரநாராச சம்ஹனனம்:** எந்த உடலில் வஜ்ரத்திற்கு சமமான எலும்புகள் என்னவோ இருக்கும் ஆனால் அவைகளின் இணைப்பு வஜ்ரமயமாகவும் ஆனால் அந்த இணைப்பு வஜ்ரப் போர்வையால் மூடப்படாததாக ஆனால் சாதாரணப் போர்வையால் மூடப்பட்டதாக காணப்படுகிறதோ அந்த உடலமைப்பை வஜ்ரநாராச சம்ஹனனம் என்று சொல்கின்றனர்.

**3.நாராச சம்ஹனனம்:** எந்த உடலில் எலும்புகளின் இணைப்பு சாதாரண கீலால் பிணைக்கப் பட்டிருக்கும் ஆனால் அந்த இணப்புக்கள் வஜ்ரத்திற்கு சமமான வலுவான கீல்களாக இருப்தில்லையோ அந்த உடலமைப்பை நாராச சம்ஹனனம் என்று சொல்கின்றனர்.

**4.அர்தநாராச சம்ஹனனம்:** எந்த உடலில் எலும்புகள் முழுவதும் மூடப்படாத இணைப்புகளால் ஆனதோ அந்த உடலமைப்பை அர்தநாராச சம்ஹனனம் என்று சொல்கின்றனர்.

**5.கீலித சம்ஹனனம்:** எந்த உடலில் வஜ்ரம் போன்ற எலும்புகள் இல்லையோ மற்றும் அவை ஒன்றுக்கொன்று மூடப்படாத இணைப்புகளால் பிணைக்கப்பட்டு இருக்கின்றனவோ அந்த உடலமைப்பு கீலித சம்ஹனனம் என்று சொல்கின்றனர்.

**6.அசம்ப்ராப்தாஸ்ருபாடிகா சம்ஹனனம்:** எத்த உடலில் எலும்புகள் ஒன்றுக்கொன்று கீல் இணைப்புகளால் இணையாமல், நரம்புகளால் இணைக்கப் பட்டிருக்கிறதோ அந்த உடலமைப்பை அசம்ப்ராப்தாஸ்ருபாடிகா சம்ஹனனம் என்று சொல்கின்றனர்.

சரமசரீரி உயிர்களுக்கு-தத்பவ மோக்ஷகாமி அதாவது அதே பவத்தில் முக்தி அடையும் உயிர்களுக்கு வஜ்ரவிருஷபநாராச சம்ஹனன உடல் அமைகிறது என்று முன்னர் நாம் நிமித்த உபாதானம் விஷயம் பற்றி தெரிந்து கொண்டபோது **காரண காரிய இரகசியம்** என்ற புத்தகத்தில் பார்த்தோம். அதாவது அந்த உயிர்களுக்கு அந்த குறிப்பிட்ட நாமகர்ம உதயம் காணப்படுகிறது. ஆனால் அந்த சம்ஹனனம் மோக்ஷம் பெற எந்த உதவியும் செய்வதில்லை. ஏழாம் நரகம் செல்லும் மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கும்கூட இந்த வஜ்ரவிருஷபநாராச சம்ஹனன உடலமைப்பே காணப்படுகிறது.

பெண்களுக்கு கீழ்மூன்று சம்ஹனன உடலில் ஏதாவது ஒரு உடலமைப்பே காணப்படுகிது. அதனால் அவர்கள் பெண் பர்யாயத்தில் மோக்ஷம் பெறமுடியாத நிலை காணப்படுகிறது, மேலும் ஆறாம் நரகத்திற்கு கீழேயும்கூட அடுத்த பிறவி எடுக்க பெண்பிறவியிலிருந்து செல்ல முடியாத நிலையும் காணப்படுகிறது. கரணானுயோகத்தில் அப்படிப்பட்ட மறுக்க முடியாத விதி-நியமம் இருந்தும்கூட பெண் பர்யாயத்திலும் முக்தி பெறப்படுகிறது என்ற நம்புதல் மஹா அஞ்ஞானம் என்பதையே காட்டுகிறது.

பரதஷேத்திரத்தில் இப்போது ஐந்தாம் காலம்-தீக்காலம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த காலத்தில் இங்கு பிறக்கும் மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு கீழ்மூன்று சம்ஹனனத்தில் ஏதாவது ஒன்றே அமைகிறது. ஆகையால் ஐந்தாம் காலத்தில் நக்னமுனி தீக்ஷை எடுத்தவர்கள்கூட ஸ்ரேணி ஏறும் புருஷார்த்தம் செய்ய முடியாதவர்களாகவே இருக்கின்றனர். அதுபோல அடுத்த பிறவியில் கிரைவேக்கியம் செல்லும் முனிவர்களுக்குக்கூட உத்தம சம்ஹனனமாக கருதப்படும் முதல் மூன்று சம்ஹனன உடலமைப்புகளே காணப்படுகின்றன. எனவே இந்த தீக்காலத்தில் யாரும் (திகம்பர முனிவர் உட்பட) 16-ஆம் கல்பத்திற்குமேல்-அச்சுத கல்பத்திற்குமேல் சென்று பிறவி எடுக்க முடியாத நிலையே காணப்படுகிறது.

இரண்டாவது அல்லது மூன்றாவது சம்ஹனனதாரி உயிரே (திகம்பர முனிவரே) உபசமஸ்ரேணி ஏறி 11-ஆம் குணஸ்தானம்வரை செல்லும் புருஷார்த்தம் செய்யமுடியும், ஆனால் அவர்களால் க்ஷபகஸ்ரேணியில் ஏறும் புருஷார்த்தத்தைச் செய்யமுடியாது. [ஐந்தாம்கால திகம்பர முனிவர்கள் ஏழாம் குணஸ்தானத்திற்குமேல் செல்ல முடியாதவர்களாகவே இருக்கின்றனர்.] இவ்வாறே உடலமைப்பிற்கும் முக்திப்பாதையில் முன்னேறுவதற்கும், முக்தி அடைவதற்கும் நிமித்த-நைமித்திக சம்பந்தம் இருக்கிறது. மீண்டும் ஒரு விஷயத்தை சொல்லிவிடுகிறேன்-எந்த ஒரு சம்ஹனனமும் உயிரின் புருஷார்த்தத்திற்கு சாதகமாவும் இல்லை, பாதகமாகவும் இல்லை. உயிர் உடல் இரண்டுக்குமிடையே **அத்யந்தாபாவ்** இருக்கிறது.

**ஸ்பர்ச, ரச, கந்த, வர்ண நாமகர்மம்:** எந்த கர்மத்தின் உதய நிமித்தத்தால் உடலில் ஸ்பர்சம், ரசம், கந்தம், வர்ணம் முதலியன கணப்படுகிறதோ அந்த கர்மங்களை முறையே ஸ்பர்ச நாமகர்மம், ரச நாமகர்மம், கந்த நாமகர்மம், வர்ண நாமகர்மம் என்று

சொல்கின்றனர். புத்கல திரவியத்தில் ஸ்பர்சம் முதலான குணங்களுக்கு 20 பர்யாயங்கள் இருக்கின்றன என்பதை நாம் முன்னரே தெரிந்து கொண்டிருக்கிறோம், அவை ஞாபகத்தில் இருக்கிறதா? அதில் ஸ்பர்ச குணத்திற்கு எட்டு பர்யாயங்கள், ரச குணத்திற்கு ஐந்து பர்யாயங்கள், கந்த குணத்திற்கு இரண்டு பர்யாயங்கள், வர்ண குணத்திற்கு ஐந்து பர்யாயங்கள் என பார்த்தோமல்லவா, அதனுடன் நாமகர்மம் என்ற சொல்லைச் சேர்த்தால் 20 நாமகர்மங்கள் வரும். அவைகள் கீழ்கண்டவாறு இருக்கின்றன.

ஸ்பர்ச நாமகர்மத்தின் எட்டு பிரிவுகளாவன: **சொரசொரப்பு, மழமழப்பு, பளு, லேசு, பசை, வரட்சி, சீதம், உஷ்ணம்.** ரச நமகர்மத்தின் ஐந்து பிரிவுகளாவன: **கசப்பு, கரிப்பு, துவர்ப்பு, புளிப்பு, இனிப்பு.** கந்த நாமகர்மத்தின் இரண்டு பிரிவுகளாவன: **நன்நாற்றம், துர்நாற்றம்.** வர்ண நாமகர்மத்தின் ஐந்து பிரிவுகளாவன: **கருப்பு, நீலம், சிகப்பு, மஞ்சள், வெள்ளை.**

**கத்யானுபூர்வி நாமகர்மம்:** இதன் காரியத்தைப் பார்த்தால் உங்களுக்கு வேடிக்கையாக இருக்கும். கதி நாமகர்மத்துடன் அதே பெயர்கொண்ட கத்யானுபூர்வி அதாவது கதிப்ராயோக்யானுபூர்வி கர்மமும்கூட பந்தமாகிறது. உயிர் ஒவ்வொரு சமயமும் ஏதாவது கதி மற்றும் கத்யானுபூர்வி கர்மத்தை பந்தித்த வண்ணமே இருக்கிறது. மனிதகதியுடன் மனுஷ்யகத்யானுபூர்வி கர்மமும்கூட பந்தமாகிறது அதுபோல மற்ற கதிகளுடன்கூட அதனதன் கத்யானுபூர்வியும் பந்தமாகிறது என்று தெரிந்து கொள்ளுங்கள். ஆனால் இதில் ஒரு வேடிக்கையான விஷயம் என்னவென்றால் கதி நாமகர்மத்தின் உதயம் என்னவோ ஒவ்வொரு சமயமும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது, ஆனால் கத்யானுபூர்வியின் உதயம் என்னவோ விக்ரக கதியின்போது மட்டுமே நிகழ்கிறது. இந்த காரணத்தால் இதை ஷேத்ர விபாகி கர்மம் என்று சொல்கின்றனர். இங்கு விபாகம் என்றால் கர்மத்தின் பலன் அல்லது உதயம். அடுத்த பிறிவி எடுக்க உயிர் இடம் பெயர்கிறது, அப்போது மட்டுமே இந்த கர்ம உதயம் நிகழ்கிறது. இந்த கர்மத்தின் காரியம் என்னவென்று கேட்பீர்களானால், இதன் நிமித்தத்தால் உயிரின் முற்பிறவி வடிவம் விக்ரக கதியில் எப்போதும் இருக்கிறது. புதிய கதிக்கு கொண்டு செல்லும் காரியம்கூட இந்த கர்ம உதய நிமித்தத்தாலாகும். சரியாகப் புரியவில்லையா என்ன? பரவாயில்லை, மீண்டும் சொல்கிறேன் கேளுங்கள். மனுஷ்யகதிப்ராயோக்யானுபூர்வி அல்லது மனுஷ்யகத்யானுபூர்வி, தேவகத்யானுபூர்வி, திரியன்சகத்யானுபூர்வி, மற்றும் நரககத்யானுபூர்வி என இந்த கர்மம் நான்கு விதமாகும்.

எந்த உயிர் வேறு இடத்தில் இறந்து, மனிதகதியில் பிறவி எடுக்க இடம்விட்டு வேறு இடம் செல்லும்போது அந்த விக்ரக கதியில் மனுஷ்யகத்யானுபூர்வி நாமகர்ம உதயம் இருக்கிறது. உதாரணத்திற்கு இவ்வாறு எடுத்துக் கொள்ளுங்கள், ஒரு நாய் இறந்து மனித பிறவி எடுக்கப்போகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். விக்ரக கதியின் முதல் சமயத்திலேயே அதன் மனித ஆயுளின் உதயம் தொடங்கி விடுகிறது, மனிதகதி நாமகர்மத்தின் உதயமும் தொடங்கி விடுகிறது. ஆனால் மனுஷ்யகத்யானுபூர்வி நாம கர்மத்தின் உதய காரணத்தால் அதன் முற்பிறவியான நாய் பிறவியில் அது இருந்த வடிவம் விக்ரக கிதியில் இருக்கும்வரை இருந்து கொண்டிருக்கிறது. மனித உடலை ஏற்கும் முதல்

சமயத்திலிருந்துதான் அந்த உயிர் மனித வடிவத்தைப் பெறுகிறது. இது உங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறதல்லவா!

கத்யானுபூர்வி நாமகர்மத்தின் உதயம் விக்ரக கதியில் அதிலும் திருப்பத்துடன் உள்ள விக்ரக கதியில்தான் காணப்படுகிறது. ஆனால் ருஜுகதியில் அதாவது திருப்பம் இல்லாத நேரான விக்ரக கதியில் சென்று அதே சமயத்தில் வேறு பிறவி எடுக்கும் உயிர்களிடம் இதன் உதயம் காணப்படுவதில்லை. அப்படி ஏன்? மற்றும் வேறு குறிப்பிட்ட கதி சம்பந்தமான வடிவத்தை எப்போது அடையும்? என்று நீங்கள் கேட்கலம். இரண்டு கேள்விகளுக்கும் ஒரே பதில்தான். சம்ஸ்தான நாமகர்ம உதயத்தால், உயிருக்கு அந்த குறிப்பிட்ட கதி சம்பந்தமான உடலின் வடிவம் அடையப்படுகிறது. ஆஹார பர்யாப்தி முடிய ஒரு சமயம் இருக்கும்போதே சம்ஸ்தான நாமகர்மத்தின் உதயம் தொடங்கி விடுகிறது, அந்த உயிருக்கு புதிய வடிவமும் கிடைத்து விடுகிறது. எங்கு பிறவி எடுக்கிறதோ அங்கே முன்னரே செய்யப்பட்ட உடல், தயார்நிலையில் இருக்கிறது, உயிர் அங்கு சென்று அதனுள் புகுந்து கொள்கிறது என்று எண்ண வேண்டாம். பழைய ஆடையை அல்லது கிழிந்துபோன ஆடையை விட்டுவிட்டு புதிய ஆடையை-முன்னரே தயார் செய்யப்பட்ட ஆடையை போட்டுக்கொள்வது போல இங்கு முன்னரே தயாரிக்கப்பட்ட உடல்கள் இல்லை. உயிர் உடல் சம்பந்தமான பரமாணுக்களை கிரஹிக்கிறது, அது பிண்ட வடிவமாகி பிறகு உடல் வடிவமாக ஆகிறது. ஹே உயிரே! உடலின் இந்த வடிவத்தையே நீ என்று எண்ண வேண்டாம், இதன் வடிவம், நிறம் முதலியவற்றை உண்னுடையது என்று நம்பாதே! இதற்கு உபாதான காரணம் என்னவோ ஆஹார வர்கணையாகும் மற்றும் இந்த உடல் அமைய நிமித்த காரணம் நாமகர்மத்தின் உதயமாகும். உனக்கும் இந்த உடலுக்கும் [ஏகக்ஷேத்ர அவஹாக சம்பந்தம் தவிர] வேறு எந்த சம்பந்தமும் இல்லை. இதை நன்கு தெரிந்துகொண்டு உன்னிலிருந்தும் உடல் வேறானது என்று அறிந்துகொள்.

**விஹாயோகதி நாமகர்மம்:** விஹாயம் என்றால் வானம்-ஆகாசம். அகாசத்தில் செல்லுதல் விஹாயோகதி யாகும். ஆனால் பறவைகள் ஆகாயத்தில் பறப்பது அல்லது விக்ரக கதியில் செல்வது என்ற பொருள்களில் இதை எடுத்துக்கொள்ள வேண்டாம். ஏனென்றால் விக்ரக கதியிலோ அல்லது அபர்யாப்த்த நிலையிலோ இந்த கர்மத்தின் உதயம் காணப்படவில்லை. விஹாயோகதி என்பதின் பொருள் நகர்தல்-நடை-செல்கை என்பதாகும். யானையின் செல்கை, வாத்து நடத்தல் போல என அறிக. இது 1.பிரசஸ்த விஹாயோகதி, 2.அபிரசஸ்த விஹாயோகதி என இரண்டு விதமாகும்.

இவ்வாறு 4 கதி, 5 ஜாதி, 5 சரீரம், 5 பந்தனம், 5 சங்காதம், 6 சம்ஸ்தானம், 3 அங்கோபாங்கம், 6 சம்ஹனனம், 20 ஸ்பர்ச ரச கந்த வர்ணம், 4 கத்யானுபூர்வி, மற்றும் 2 விஹாயோகதி என 14 பிண்டப் பிரக்ருதிகள் பற்றி பார்த்தோம். இவை எல்லாம் சேர்ந்து 65 உத்தர பிண்டப் பிரக்ருதிகள் இருக்கின்றன. அடுத்த கடிதத்தில் அபிண்டப் பிரக்ருதிகள் பற்றிப் பார்க்கலாம்.

ஜெய் ஜினேந்திரா!

-உங்கள் அம்மா

**கர்மம்-உத்தரப்பிரக்ருதிகள்-பாகம் 2**

**கடிதம்-3** **16-6-2002**

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

நாமகர்மத்தின் உத்தரப் பிரக்ருதிகளின் பல புதிய பெயர்களைக் கேட்டு இவைகளை நாங்கள் எப்படி ஞாபகத்தில் வைத்துக்கொள்ளப் போகிறோம் என்று கவலையை வெளிப்படுத்தி இருந்தீர்கள். மகள்களே! கவலைகொள்ள வேண்டாம். கவலை கொள்வதால் ஞாபகம் என்னவோ வரப்போவதில்லை. ஆமாம், இவைகளை எப்போது படிக்கிறீர்களோ அப்போது இவைகளின் இயல்பு அல்லது இவைகளின் காரியம் என்ன என்று உங்களுக்கு புரியவருகிறதா இல்லையா? அவ்வளவுதான், இவ்வளவு தெரிந்திருந்தால் போதும். எதிர்காலத்தில் எந்த சந்தர்ப்பத்திலாவது ஏதாவது பிரக்ருதியின் பெயர் வருமானால் அப்போது நீங்கள் இந்த புத்தகத்தின் பக்கத்தைத் திருப்பி இந்த கடிதத்தை உங்களால் பார்க்க முடியும் அல்லவா! பிண்டப் பிரக்ருதிகளைப் பற்றிப் பார்த்த பிறகு, இப்போது அபிண்டப் பிரக்ருதிகளைப் பற்றி சர்ச்சை செய்யலாம், வாருங்கள். அகுருலகு, உபகாதம், பரகாதம் மற்றும் உச்வாசம் இந்த நான்கையும் ஒன்றாகப் நினைவில் கொள்ள சுலபமாக இருக்கும். ஆகையால் அவைகளின் காரியங்களை இப்போது பார்க்கலாம்.

**அகுருலகு நாமகர்மம்:** இந்த கர்மத்தின் உதயத்தால் உடல் இரும்பு குண்டுபோல அதிக பளுவாக இல்லாமலும், காகிதப்பூ போல மிகலேசாக பறந்து போகாமலும் இருக்கிறது. அதனால் அகுரு, அலகு இரண்டையும் சேர்த்து **அகுருலகு** என்று சொல்கின்றனர்.

**உபகாத நாமகர்மம்:** சுய-தீங்கு விளைவிக்கும் சக்தி வருதலை அல்லது தற்கொலை செய்து கொள்வதை உபகாதம் என்று சொல்கின்றனர். எந்த கர்மத்தின் உதயத்தால் உடலின் அவயவம் உயிரின் துன்பத்திற்குக் காரணமாக அமைகிறதோ அதை உபகாத நாமகர்மம் என்று சொல்கின்றனர். பெரிய கொம்பு, நீண்ட மார்பகங்கள், மிகப்பெரிய வயிறு முதலியன உயிருக்கு துன்பம் தரும் அவயவங்களாகும்.

**பரகாத நாமகர்மம்:** பிற உயிர்களுக்கு தீங்கு இழைத்தல் அல்லது பிற உயிர்களைக் கொல்லுதல் பரகாதம் என்று சொல்லப்படுகிறது. எந்த கர்மத்தின் உதயத்தால் உடலில் பிற உயிர்களுக்குத் தீங்கிழைக்கக் காரணமான புத்கலங்களின் அமைப்பு உண்டாகிறதோ அதை பரகாத நாமகர்மம் என்று சொல்கின்றனர். உதாரணமாக பாம்பின் வாயில் உள்ள விஷப்பற்கள், தேள் கொடுக்கு முதலியவற்றில் பிற உயிர்களுக்கு தீங்கு செய்யும் விஷம் உற்பத்தியாதல், சிங்கம், புலி, சிறுத்தை முதலியவற்றின் கூர்மையான கால் நகங்கள் மற்றும் பற்கள், சில மரங்களின் விஷப் பழங்கள் முதலியன பரகாத நாமகர்ம உதயம் நிமித்தத்தால் உண்டாகின்றன.

**உச்வாச நாமகர்மம்:** எந்த கர்மத்தின் உதயத்தால் உயிர் மூச்சை உள்ளே இழுத்து வெளியே விடும் சாமர்த்தியத்தைப் பெறுகிறதோ அதை உச்வாச அல்லது ஸ்வாசோச்வாச

நாமகர்மம் என்று சொல்கின்றனர். ஆதப மற்றும் உத்யோத நாமகர்மம் என்ற இரண்டு பெயர்களை ஒன்றாக நினைவில் கொள்ள சுலபமாக இருக்கும், ஆகையால் அவைகளை இப்போது பார்க்கலாம்.

**ஆதப நாமகர்மம்:** எந்த கர்மத்தின் உதயத்தால் உடலில் ஆதபம் அதாவது உஷ்ணத்துடன் கூடிய ஒளி-பிரகாசம் தோன்றுகிறதோ, அதை ஆதப நாமகர்மம் என்று சொல்கின்றனர். சூரிய விமானத்தின் பாதர பிருத்விகாயிக உயிர்களிடம் ஆதப நாமகர்ம உதயம் காணப்படுகிறது.

**உத்யோத நாமகர்மம்:** எந்த கர்மத்தின் உதயத்தால் உடலில் உத்யோத அதாவது உஷ்ணமில்லாத ஒளி-பிரகாசம் தோன்றுகிறதோ, அதை உத்யோத நாமகர்மம் என்று சொல்கின்றனர். சந்திர விமானத்தின் பாதர பிருத்விகாயிக உயிர்கள், மின்மினிப் பூச்சி மற்றும் சில உயிர்களில் உத்யோத நாமகர்ம உதயம் காணப்படுகிறது. நெருப்பில் உஷ்ணமும், பிரகாசமும் இருப்பதால் அக்னிகாயிக உயிர்களில் ஆதப நாமகர்ம உதயமிருக்குமல்லவா? என்று நீங்கள் கேட்கக்கூடும்.

அக்னிகாயிக உயிர்களிடம் ஆதப நாமகர்மத்தின் உதயம் காணப்படவில்லை. அதில் உஷ்ணம் இருக்கிறது ஆனால் அதை ஆதப என்று சொல்வதில்லை, அதை தேஜச என்று சொல்கின்றனர். இந்த உஷ்ணம், உஷ்ண ஸ்பரிசநாமகர்ம உதயத்தால் உண்டாகிறது. சூர்யவிமானத்தில் உள்ள பிருத்விகாயிகங்களின் சர்வாங்கத்திலும்-எல்லா பிரதேசத்திலும் உஷ்ணம் உண்டாகிறது, அதையே ஆதப என்று சொல்கின்றனர். சந்திர விமானத்தில் உள்ள பிருத்விகாயிக்களின் எல்லா பிரதேசங்களிலும் உண்டாகும் உஷ்ணமற்ற பிரகாசத்தை உத்யோத என்று சொல்கின்றனர்.

திரியன்ச கதியில் உள்ள ஏகேந்திரிய, பர்யாப்த, பாதர, பிருத்வி காயிகங்களிடமே ஆதப நாமகர்ம உதயம் காணப்பட முடியும். சூக்ஷம உயிர்கள், அக்னிகாயிகங்கள், வாயுகாயிகங்கள், அபர்யாப்தங்கள், வனஸ்பதிகாயிகங்கள், ஜலகாயிகங்கள் மற்றும் திரச உயிர்கள் முதலியனவற்றில் ஆதப நாமகர்ம உதயம் ஏற்படுவதில்லை. உத்யோத நாமகர்மத்தின் உதயம்கூட பாதர, பர்யாப்த, பிருத்விகாயிக, ஜலகாயிக, பிரத்யேக வனஸ்பதிகாயிக, மற்றும் பர்யாப்த இரண்டு இந்திரியம் முதல் சஞ்சி பஞ்சேந்திரிய திரியன்ச உயிர்களில் சில உயிர்களிடம் மட்டும் காணப்படுகிறது. மற்ற கதி உயிர்களிடம் ஆதப அல்லது உத்யோத நாமகர்மங்களின் உதயம் நிகழ்வதில்லை.

போதும்! இப்போது இன்னும் கொஞ்ச நாமகர்மப்பிரக்ருதிகளைப் பற்றி பார்க்க வேண்டியது மீதமிருக்கிறது. யாத்திரையில் மலை ஏறும்போது கொஞ்சம் படிகளே மீதம் இருக்கும்போது, மேலே கோயிலின் கோபுர தர்சனம் கிடைத்தால் நாம் புதிய புத்துணர்ச்சியுடன் படிகளை ஏற முற்படுகிறோம் அல்லவா! அதுபோல இப்போது 22 நாமகர்ம பிரக்ருதிகள் மட்டுமே நாம் பார்க்க வேண்டியது மீதமிருக்கிறது. இவைகள் பத்து ஜோடிகளாக இருக்கின்றன. நான்கு ஜோடிகள் ஒரு குழுவாகவும்-தொகுதியாகவும், ஆறு ஜோடிகள் ஒரு குழுவாகவும்-தொகுதியாகவும், மற்றும் இரண்டு தீர்த்தங்கர நாமகர்மம்,

நிர்மாண நாமகர்மம் (கட்டுமான நாமகர்மம்) என்பனவாகும். இப்போது இவைகளைப் பற்றிப் பார்க்கலாம்.

திரசம்-ஸ்தாவரம், பாதரம்-சுட்க்ஷமம், பர்யாப்தி-அபர்யாப்தி, பிரத்யேகம்-சாதாரணம் இந்த நான்கு ஜோடிகளில் பொருத்தமான இரண்டில் ஒரு பிரக்ருதியின் உதயமே உயிர்களிடம் காணப்படுகிறது.

**திரச நாமகர்மம்:** இரண்டு இந்திரியம் முதல் பஞ்சேந்திரியம் வரை உள்ள உயிர்களை திரசம் என்று சொல்கின்றனர். திரச நாமகர்ம உதயத்தால் உயிர் திரச பர்யாயத்தில் பிறவி எடுக்கிறது.

**ஸ்தாவர நாமகர்மம்:** ஐந்து விதமான ஏகேந்திரியங்களை ஸ்தாவரம் என்று சொல்கின்றனர். ஸ்தாவர நாமகர்ம உதயத்தால் உயிர் ஸ்தாவர பர்யாயத்தில் பிறவி எடுக்கிறது.

**பாதர நாமகர்மம்:** பாதர நாமகர்ம உதயத்தால் உயிர் பிறவற்றால் தடுக்கப்படும், மற்றும் தான் பிறவற்றை தடுக்கும் உடலைப் பெறுகிறது. பாதர உடல் சுவர் அல்லது பிற திடப் பொருள்களைக் கடந்து செல்ல முடியாது, மற்றும் பாதர உடலை வேறு திட பொருள்களும் குறுக்கே புகுந்து செல்ல முடியாது. இரண்டு இந்திரியம் முதலான உயிர் பாதர உடலை [பருஉடல்] உடையனவே. ஏகேந்திரியம் பாதரம், சூட்க்ஷமம் என இரண்டு வகையான உடலையும் உடையனவாகவே காணப்படுகின்றன.

**சூட்க்ஷம நாமகர்மம்:** சூட்க்ஷம நாமகர்ம உதயத்தால் பிற பொருள்களால் தடை செய்ய முடியாத உடல் பெறப்படுகிறது, அதுவும் தன்னால் வேறு பொருள்களைத் தடைசெய்ய-கட்டுப்படுத்த முடியாததாக இருக்கிறது. சூட்க்ஷம மற்றும் பாதர உயிர்கள் சம்பந்தமாக நாம் **கரணானுயோக அறிமுகம்** என்ற நூலில் விரிவான சர்ச்சை செய்திருக்கிறோம். அங்கு பர்யாப்த, அபர்யாப்த உயிர்கள் பற்றியும், ஆறு பர்யாப்திகள் பற்றியும் விரிவான விசாரணை செய்திருக்கிறோம்.

**பர்யாப்த நாமகர்மம்:** பர்யாப்த நாமகர்ம உதயத்தால் ஆஹாரம் முதலான ஆறு பர்யாப்திகள் உருவாகின்றன, இவைகள் விதிப்படி முழுமையடைபவைகளாக இருக்கின்றன. பர்யாப்தி என்றால் முழுமை பெறுதல். ஆஹார பர்யாப்தி, சரீர பர்யாப்தி, இந்திரிய பர்யாப்தி, சுவாசோச்வாச பர்யாப்தி, பாஷா பர்யாப்தி, மற்றும் மன பர்யாப்தி என ஆறு பர்யாப்திகள் இருக்கின்றன.

**அபர்யாப்த நாமகர்மம்:** அபர்யாப்த நாமகர்ம உதயத்தால் ஒரு பர்யாப்திகூட முழுமை பெறுவதில்லை. அதற்கு முன்னரே உயிர் மரணமடைந்து விடுகிறது. எல்லா பர்யாப்திகளும் உருவாகத் தொடங்கி விடுகின்றன ஆனால் ஒன்றுகூட முழுமையடைவதில்லை. இந்த உயிர்கள் லப்தி அபர்யாப்தகம் - லப்தியபர்யாப்தக உயிர் என்று சொல்கின்றனர். அவை ஒரு சுவாசத்தின் 18-ல் ஒரு பாக நேரத்தில் மரணமடைந்து விடுகின்றன. அவைகளுக்கு ஒரு பவம்-பிறவி இவ்வளவு சிறியதாக இருக்கிறது ஆகையால் இதை **சூத்ரபவம்** என்று சொல்கின்றனர். ஏகேந்திரியம் முதல் மனமுடைய

பஞ்சேந்திரியங்கள்வரை எல்லா ஜாதியிலும் அபர்யாபத உயிர்கள் (சூத்ரபவம் எடுக்கும் உயிர்கள்) காணப்படுகின்றன.

பிரத்யேகம் மற்றும் சாதாரணம் என உடல்கள் இரண்டு விதமாக இருக்கின்றன. பிரத்யேகஉடலி உயிர் அதாவது ஒரு உடலுக்கு ஒரு உயிர் மட்டுமே சொந்தம் கொண்டாடுவது. ஆனால் சாதாரணஉடலி உயிர் என்றால் ஒரு உடலில் அனந்த உயிர்கள் ஒவ்வொன்றும் தன்உடல்போல உரிமையுடன் வாழ்வது, அதாவது ஒரு உடலில் அனந்த உயிர்கள் ஒன்றாக வாழ்வது. [ஒரு வீட்டில் குடும்பத்தில் உள்ள பல உயிர்கள் வாழ்வது போல என அறியவும்] பெரும்பாலான உயிரினங்களுக்கு ஔதாரிக உடலே காணப்படுகிறது. பிரத்யேகம், சாதாரணம் என்ற பிரிவு வனஸ்பதிஉடலி உயிர்களில் மட்டுமே காணப்படுகின்றன. மற்ற ஏகேந்திரியங்களும் மற்றும் எல்லா திரச உயிர்களும் பித்யேக உடலை உடையவைகளே யாகும்.

**பிரத்யேக நாமகர்மம்:** பிரத்யேக நாமகர்ம உதயத்தால் உயிருக்கு பிரத்யேக உடல் கிடைக்கிறது. [இதை தனி உடலி என்றும் கூறுகின்றனர்]

**சாதாரண நாமகர்மம்:** சாதாரண நாமகர்ம உதயத்தால் உயிர்களுக்கு பொதுவான உடல் கிடைக்கிறது. நிகோத உயிர்களிடம் சாதாரண நாமகர்ம உதயம் காணப்படுகிறது. இவைகளிலும் சூட்சமம், பாதரம் என இரண்டு பிரிவுகள் காணப்படுகின்றன். [சாதாரண உடலை பொதுஉடல் என்றும் கூறுகின்றனர்]

மற்ற ஆறு ஜோடி நாமகர்மங்களின் பெயர்கள் ஸ்திரம்-அஸ்திரம், சுபம்-அசுபம், சுபகம்-துர்பகம், சுஸ்வரம்-துஸ்வரம், ஆதேயம்-அனாதேயம், யசஸ்கீர்த்தி-அயசஸ்கீர்த்தி என்பனவாகும். இப்போது இவைகள் ஒவ்வொன்றின் இயல்பு பற்றியும் பார்க்கலாம்.

**ஸ்திர நாமகர்மம்:** ஸ்திர நாமகர்மத்தின் உதயத்தால் உடலில் தாது மற்றும் உபதாதுக்கள் அதனதன் இடத்தில் இருக்கின்றன-அவைகளில் சிதைவு அல்லது விரிசல் உண்டாவதில்லை. தாது என்பதின் பொருள் தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்கள் என்று எண்ண வேண்டாம். மனித மற்றும் விலங்கு கதி உயிர்களின் உடல்களில் ஏழு தாதுக்கள் இருக்கின்றன. அந்த தாதுக்கள் பற்றியே இங்கு பேசப்படுகின்றன. அவைகளாவன சாறு(ரசம்), இரத்தம்(சிகப்பு அணுக்கள்), மாமிசம்(இறைச்சி), கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை, சுக்ர(நொதி-enzyme) அவைகள் இந்த வரிசையிலேயே முழுமை பெறுகின்றன. இவைகளைத் தவிர ஏழு உபதாதுக்கள் கூட இருக்கின்றன, அவைகளாவன வாதம், பித்தம், சிலேஷமம், சிரம், தசை, தோல், அடிவயிறு(உதராக்னி). ஸ்திர நாமகர்ம உதயத்தால் ரசம் முதலான தாதுக்கள் குறிப்பிட்ட காலம்வரை அந்த வடிவில் மாறாமல் இருக்கின்றன.

**அஸ்திர நாமகர்மம்:** அஸ்திர நாமகர்ம உதயத்தால் தாது மற்றும் உபதாதுக்கள் ஒரே இடத்தில் நிலைத்திராமல் இயங்கும் வடிவில் [இரத்தம் உடலில் ஓடுவதுபோல] செயல்படுகின்றன. ரச தாதுவிலிருந்தே மற்ற தாதுக்கள் உற்பத்தியாகின்றன.

**சுப நாமகர்மம்:** சுப நாமகர்ம உதயத்தால் உடலின் அவயவங்கள்-முகம் முதலியன ஆழகாக இருக்கின்றன அதாவது வசீகரமாக, மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாக அமைகின்றன.

**அசுப நாமகர்மம்:** அசுப நாமகர்ம உதயத்தால் உடலின் அவயவங்கள்-முகம் முதலியன ஆழகற்றதாக இருகின்றன அதாவது அருவருப்பான, துக்கம் தரக்கூடியதாக அமைகின்றன.

**சுபக நாமகர்மம்:** சுபக நாமகர்ம உதயத்தால் பிறர் அந்த உயிரிடம் காதல்-அன்பு காட்டுகின்றனர்.

**துர்பக நாமகர்மம்:** துர்பக நாமகர்ம உதயத்தால் பிறர் அந்த உயிரிடம் அன்பு காட்டுவதில்லை. உடல் அழகாக இருந்தாலும்கூட பிறர் இதை அவமதிக்கின்றனர்.

**சுஸ்வர நாமகர்மம்:** சுஸ்வர நாமகர்ம உதயத்தால் வசீகரமான-கவர்ச்சியான குரல்வளம் கிடைக்கிறது.

**துஸ்வர நாமகர்மம்:** துஸ்வர நாமகர்ம உதயத்தால் வசீகரமற்ற-கொடுமையான குரல்வளம் கிடைக்கிறது.

**ஆதேய நாமகர்மம்:** ஆதேய நாமகர்ம உதயத்தால் அற்புதமான அதாவது பிரகாசமான உடலமைப்பு கிடைக்கிறது.

**அநாதேய நாமகர்மம்:** அநாதேய நாமகர்ம உதயத்தால் அசிங்கமான அதாவது அருவருப்பான உடலமைப்பு கிடைக்கிறது.

**யசஸ்கீர்த்தி நாமகர்மம்:** யசஸ்கீர்த்தி நாமகர்ம உதயத்தால் உலகத்தார் விரும்பும்படியான நல்லொழுக்கம் உண்டாகிறது.

**அயசஸ்கீர்த்தி நாமகர்மம்:** அயசஸ்கீர்த்தி நாமகர்ம உதயத்தால் உலகத்தார் வெறுக்கும்படியான தீய பழக்கங்கள் உண்டாகின்றன. வாருங்கள்!

இன்னும் இரண்டு பிரக்ருதிகளே பார்க்க வேண்டியிருக்கிறது.

**நிர்மாண நாமகர்மம்:** நிர்மாண நாமகர்ம உதயத்தால் உடலின் அவயவங்கள் சரியான முறையில் உற்பத்தியாகின்றன. இது ஸ்தான (இட)நிர்மாணம், பிரமாண(அளவு)நிர்மாணம் என இரண்டு விதமாகும். ஜாதி நாமகர்மத்திற்கு உகந்தார்போல் கண்கள் முதலான உறுப்புக்கள்(அவயவங்கள்) எங்கு இருக்க வேண்டுமோ அந்த இடத்தில் உருவாக ஸ்தான நிர்மாண நாமகர்மம் நிமித்தமாகும். எப்படி மீனுக்கு கண்கள் அதன் உடலில் குறிப்பிட்ட இடத்திலும், தவளைக்கு கண்கள் அதன் உடம்பில் குறிப்பிட்ட இடத்திலும், மனிதர்களுக்கு கண்கள் அவர்களின் உடலில் குறிப்பிட்ட இடத்திலும் இருப்பது போல

அமைய இந்த நாமகர்மமே நிமித்தமாகும். பிரமாண நாமகர்ம உதயத்தால் கண்கள் முதலியன எந்த அளவில் அதாவது நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கையிலும், அளவிலும் (numbers and size) உறுப்புகள் உருவாக நிமித்தமாகும்.

**தீர்த்தங்கர நாமகர்மம்:** தீர்த்தங்கர நாமகர்ம உதயத்தால் உயிர் தீர்த்தங்கரராக ஆகும் பிறவியை எடுக்கிறது. அவரிடமிருந்து திவ்யத்தொனி வருகிறது, சமவசரண வைபவங்கள் அமைகின்றன மேலும் பஞ்ச கல்யாணம் முதலான பல அதிசயங்கள் அந்த பிறவியில் நிகழ்கின்றன.

இந்த 93 நாமகர்மப் பிரக்ருதிகளின் வர்ணனையைப் படித்துத் தெரிந்துகொண்ட பிறகு நீங்கள் எந்தெந்த பிரக்ருதிகளைக் கட்டிக்கொள்ளலாம் என்று சிந்தனை செய்கிறீர்கள்? வேறு எது இல்லை என்றாலும் தீர்த்தங்கரப் பிரக்ருதி ஒன்றாவது பந்தம் செய்யத் தகுதியானது அல்லவா என்ற எண்ணம் உங்கள் மனதில் ஓடுகிறதா? முதன்முதலில் இந்த விஷயத்தில் நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். இந்த பிரக்ருதிகளின் பெயர்கள் எல்லாம் தெரியாவிட்டாலும்கூடப் பரவாயில்லை. ஆனால் எல்லாவற்றையும்விட முக்கியமான ஒரே விஷயம் என்னவென்றால், நாம் நம் அறிவில் நன்கு சிந்தித்து **எந்த ஒரு கர்மமும் பந்தம் செய்ய தகுதியானதே அல்ல** என்ற ஒரு உறுதியான முடிவுக்கு வரவேண்டும். இதுவே மிகமிக அவசியமான ஒன்றாகும்.

ஒரு கர்மத்தின் பலனால் அல்லது உதயத்தால் கிடைக்கும் பொருள்களில் யாருக்கு ருசி இருக்கிறதோ, அதனால் சுகம் கிடைக்கிறது என்ற புத்தி இருக்கிறதோ, எனக்கு இந்த கர்ம உதயம் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற புத்தி இருக்கிறதோ, அவர் கர்ம பந்தத்தை ஏற்கக்கூடியதாக-செய்ய வேண்டியதாக நம்புகிறார். இது அவருடைய மூடநம்பிக்கை-மித்யாத்துவமாகும். இதிலிருந்து பந்த தத்துவ சம்பந்தமாகவும் மற்றும் எல்லா தத்துவங்கள் சம்பந்தமாகவும் அவருக்கு விபரீதமான நம்பிக்கையே இருக்கிறது என்பதே வெளிச்சமாகிறது.

நாமகர்மத்தின் உத்தரப் பிரக்ருதிகளில் சில சுபப் பிரக்ருதிகள்-புண்ணிய வடிவம் கொண்டவை மற்றும் சில அசுபப் பிரக்ருதிகள்-பாப வடிவம் கொண்டவை. புண்ணிய பரிணாமத்தால்-சுபஉணர்வு கொள்வதால்-விசுத்த பரிணாமத்தால் பிரசஸ்த்த-சுப(புண்ணிய) பிரக்ருதிகள் பந்தமாகின்றன. மற்றும் பாப பரிணாமத்தால்-அசுபஉணர்வு கொள்வதால்-சங்க்லேஷ (தன் விருப்பம்போல காரியம் நிகழ வேண்டும் என்ற தீராத இச்சை உணர்வால்) பரிணாமத்தால் அபிரசஸ்த்த-அசுப(பாப) பிரக்ருதிகள் பந்தமாகின்றன.

கர்மம் புத்கல திரவியத்தாலான ஒரு பொருள், அது பிற பொருள் (பர திரவ்யம்), என்னுடைய பொருள் அல்ல. அதைக் கட்டிக் கொள்வதோ, விடுவதோ எந்த உயிரின் ஆதிக்கத்திலும் இல்லை. அனந்தவீரியம் கொண்ட அரஹந்த பகவான்கூட கர்மத்தின் எந்த ஒரு அவஸ்தையையும்-பர்யாயத்தையும் மாற்ற முடியாதவராகவே இருக்கிறார். ஆகையால் புண்ணியப் பிரக்ருதிகளை பந்தம் செய்தல் என்பது நம் விருப்பத்திற்கு

உதந்தார்போல் நடப்பதில்லை (நம் இஷ்டம்போல் நிகழ்வதில்லை) என்பது உறுதியாகிறது-நிரூபணமாகிறது.

**எந்த சுப உணர்வால் புண்ணியப் பிரக்ருதி பந்தமாகிறதோ, அந்த சுபஉணர்வு என்னவோ உயிரின் பரிணாமமாகும். ஆகையால், அந்த உயிர் அந்த பரிணாமத்தை சிந்தித்து, தெரிந்து செய்யமுடியும் இல்லயா? அது நம்மால் செய்யக்கூடியது தான் இல்லையா?** என்று நீங்கள் கேட்கலாம்.

மகள்களே! ஹே உயிர்களே!! அனாதி காலமாக இந்த மூடநம்பிக்கையால் இந்த உயிர் பாதிக்கப் பட்டிருக்கிறது. எல்லா தர்மங்களும் (philosophies) உயிரும், உடலும் வேறுவேறு என்றே நம்புகின்றன. ஆனால் ஆசை முதலான உயிரில் தோன்றும் உணர்வுகளிலிருந்தும் [விகார உணர்வுகளிலிருந்தும்] கூட உயிர் வேறானது என்பது பலருக்கும் அவர்கள் எண்ணத்தில் வருவதில்லை. குறிப்பிட்ட சுபஉணர்வு கொள்ளுதல் தகுதியானதே என்று நம்புதல் என்னவோ ஆஸ்ரவமும், பந்தமும் ஏற்க வேண்டிய தத்துவங்கள் என்ற புத்தியினாலாகும். சுபஉணர்வு கொள்ளுதல் என்னுடைய கையில் இருக்கிறது, என் விருப்பம்போல விகார உணர்வுகளை மாற்றமுடியும் அல்லது அதையே செய்யமுடியும் என்று நம்புபவர் ஜீவ தத்துவமும், ஆஸ்ரவ-பந்த தத்துவங்களும் ஒன்றுக்குள்ஒன்றே என நம்பிக்கொண்டிருக்கிறார் என்று பொருள். ஏழு தத்துவங்களின் சரியான இயல்பும்-சரியான ஸ்வரூபமும் மற்றும் அந்த தத்துவங்களுக்குள் உள்ள வேறுபாடுகளும் அவருடைய எண்ணத்தில் வரவேயில்லை!

நீங்களே முடிவு செய்து பூஜை செய்யும்போதும், சாஸ்திர ஸ்வாத்யாயம் செய்யும்போதும் இடையில் ஏதாவது வேவ்வேறு சிந்தனைகள் உங்கள் மனதில் ஏன் வருகிறது? என்று சொல்லுங்கள் பார்க்கலாம். நாம் விருப்பம்போல அந்த சிந்தனைகள் வரவில்லை அல்லவா! நாம் சுபஉணர்வு கொள்ளும்போது எப்படி அந்த அசுப உணர்வுகள் நாம் விருப்பமில்லாமலேயே, இயல்பாகவே, அந்த பர்யாயத்தின் சுயத்தகுதியாலேயே நம்மில் தோன்றிவிடுகிறதோ அதுபோல, அசுபஉணர்வு கொள்ளும்போதுகூட இடையில் இயல்பாகவே சுபஉணர்வும் புகுந்து விடுகிறது. இந்த இயற்கையான நிகழ்வுகள் அஞ்ஞானிகளுக்குத் தெரிவதில்லை, அவர் அந்த இராக உணர்வை தான் செய்வதாக நம்புகிறார்- தானே அதன் கர்த்தா என்று நம்புகிறார்.

ஞானி உயிர்கள் சுப-அசுப உணர்வுகள் முதலானவைகளிலிருந்து தன் தனித்த நிலைப்புத் தன்மையை(ஸ்வ அஸ்தித்துவத்தை) வேறுபடுத்தி அறிகின்றனர். ஞானிகளுக்குக்கூட சுப-அசுப உணர்வுகள் வருகின்றன, ஆனாலும்கூட அந்த திரிபு உணர்வுகளை அவர்கள் செய்வதாக எண்ணுவதில்லை, கர்த்ருத்வபுத்தி கொள்வதில்லை. அவைகளை, அவர்கள் பார்ப்பவர்களாக அதாவது தன்னில் தோன்றும் விகார உணர்வுகளைப் பார்ப்பவர்களாக மட்டுமே இருக்கிறார்கள். [ஞாதா திருஷ்டாவாக இருக்கிறார்கள், அதை அவர்கள் செய்வதாக நம்பிக்கை கொள்வதில்லை.] அஞ்ஞானிகள் சுபஉணர்வுகள் செய்ய வேண்டும் அல்லவா? அப்படி செய்யாமல் நாம் தர்மத்தில் எப்படி இருக்க முடியும்? என்று எண்ணுகிறார்கள்-நம்புகிறார்கள்.

ஷோடசகாரண பாவனை நோன்பு நோர்ப்பதால், தீர்த்தங்கர நாமகர்மம் பந்தமாகிறது என்று அஞ்ஞானி உயிர் சாஸ்திரத்தில் படிக்கிறது. நான்கூட தீர்த்தங்கரப் பிரக்ருதி கட்டிக்கொள்வேன், தீர்த்தங்கரப் பிரக்ருதி பந்திப்பது எவ்வளவு நல்ல விஷயம் என அந்த அஞ்ஞானி உயிர் நினைக்கிறது. ஆனால் சம்யக்திருஷ்டி உயிருக்கே தீர்த்தங்கரப் பிரக்ருதியின் பந்தம் நிகழமுடியும் என்ற விஷயத்தை, அந்த அஞ்ஞானி தெரிந்திருக்கவில்லை. ஜினேந்திர பகவானால் சொல்லப்பட்ட மோக்ஷமார்க்கம் எல்லா உயிர்களும் பெறவேண்டும் என்ற சுப உணர்வும், இதுபோன்ற பிற சுப உணர்வுகளும் ஞானிகளுக்கு இயல்பாகவே வருகின்றன, அப்போது தீர்த்தங்கரப் பிரக்ருதி தானாகவே அப்படிப்பட்ட ஞானிகளுக்கு பந்தமாகிறது. ஆனால் எந்த உணர்வால் தீர்த்தங்கரப் பிரக்ருதி பந்தமாகிறதோ, அந்த பரிணாமங்களை அவர் செய்யத் தகுதியானது என்று நம்புவதில்லை-உபாதேயம் அதாவது தீர்த்தங்கரப் பிரக்ருதி பந்தமாக ஷோடசகாரண பாவனை நோன்பு ஏற்க வேண்டியது அவசியம் என்று நம்புவதில்லை. ஆனால் அந்தரங்கத்தில் நிலைத்திருக்க முடியாதபோது அந்த ஞானிக்கு ஜினேந்திர பகவானால் சொல்லப்பட்ட மோக்ஷமார்க்கம் எல்லா உயிர்களும் பெறவேண்டும் என்ற சுபஉணர்வு இயல்பாகவே வருகிறது. [அதாவது தீர்த்தங்கரப் பிரக்ருதி பந்தித்துக் கொள்ள வேண்டும் என்ற இச்சையோடு ஷோடசகாரண பாவனை நோன்பு நோர்ப்பவர்களுக்கு ஆஸ்ரவ, பந்த தத்துவங்களை செய்ய வேண்டியதே என்ற எண்ணம் இருப்பதால் அவர் ஞானியும் இல்லை, அப்படிப் பட்டவர்களுக்கு தீர்த்தங்கரப் பிரக்ருதி பந்தமாவதும் இல்லை.] உண்மையில் சொல்ல வேண்டுமென்றால் ஒருமுறை தீர்த்தங்கரப் பிரக்ருதி பந்தமாகத் தொடங்கி விட்டால், எட்டாம் குணஸ்தாணம்வரை ஒவ்வொரு சமயமும் இடைவிடாமல் அது பந்தமாகிக் கொண்டே இருக்கிறது. சிலர் அந்த பவத்திலேயே தீர்த்தங்கரராக ஆகிறார்கள், சிலர் தேவ அல்லது நரக கதியில் ஒரு பவம் எடுத்து பிறகு தீர்த்தங்கரராக ஆகிறார்கள்.

இப்போது எந்தெந்த பிரக்ருதிகள் சுப, அசுப அதாவது புண்ணிய மற்றும் பாப பிரக்ருதிகள் என்று பார்க்கலாம். நாம் கர்மங்களின் எட்டு மூலப் பிரக்ருதிகளையும், மற்றும் அதன் உட்பிரிவுகளான 148 உத்தரப் பிரக்ருதிகளின் விரிவான வர்ணனைகளையும் பற்றிப் பார்த்தோம். சாஸ்திரங்களில் சில இடங்களில் இந்த பிரக்ருதிகளை 122-ஆக கணக்கிடும் முறையும் காணப்படுகின்றன. அவைகளைக் கண்டு நீங்கள் பிரமிப்படைய வேண்டாம். 148 பிரக்ருதிகளில் சிலப் பிரக்ருதிகளை ஒன்றாக சேர்த்து 122 ஆக கணக்கிடும் வழக்கமும் இருக்கிறது. அது எப்படியெனில் 5 சரீரம், 5 பந்தனம், 5 சங்காதம் ஆகிய நாமகர்மங்களைத் தனித்தினியாக கணக்கிடாமல், 5 சரீர நாமகர்மத்திலேயே பந்தன, சங்காத நாமகர்மங்களைச் சேர்த்து 15-க்கு பதில் 5-ஆக கணக்கில் எடுத்துக் கொள்கின்றனர். அதேபோல ஸ்பர்சம் முதலான 20 பிரக்ருதிக்கு பதில் ஸ்பர்சம், ரசம், கந்தம், வர்ணம் இந்த நான்கில் அவைகளின் உட்பிரிவுகளை சேர்த்து 20-க்கு பதில் 4-ஐ எண்ணிக்கையில் எடுத்துக் கொள்கின்றனர்.

இவ்வாறு (10+16) 26-ஐ 148-ல் கழிக்க (148-26) 122 பிரக்ருதிகளாகக் கணக்கிடும் வழக்கமும் உள்ளது. இவைகளில் சம்யக் மித்யாத்துவம் மற்றும் சம்யக்த்துவப் பிரக்ருதிகள் இரண்டும் நேரடியாக பந்தமாகும் தகுதி இல்லாததால், பந்தத் தகுதியானப் பிரக்ருதிகளின் எண்ணிக்கை (122-2) 120 தாகும். **லப்தி** அத்யாயத்தில் பாபப் பிரக்ருதிகளின் பலன்தரும்

சக்தி(அனுபாகம்) அனந்த மடங்கு குறைகிறது, மற்றும் புண்ணியப் பிரக்ருதிகளின் பலன்தரும் சக்தி(அனுபாகம்) அனந்த மடங்கு அதிகரிக்கிறது போன்ற வர்ணனைகளை பார்க்க இருக்கிறோம். அவைகளின் பொருளை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவே, நாம் இங்கு இந்த கர்ம பிரக்ருதிகளில் எவை பாபப் பிரக்ருதிகள், எவை புண்ணியப் பிரக்ருதிகள் என்று பிரித்துப் பார்க்க இருக்கிறோம். எட்டு கர்மங்களில் காதி கர்மம் அகாதி கர்மம் என இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. நாம் அவைகளின் எந்த உத்தரப் பிரக்ருதிகளைப் பார்த்தோமோ அந்த வடிவில் இந்த பாப, புண்ணியப் பிரக்ருதிகளைப் பிரித்துப் பார்க்கலாம்.122 பிரக்ருதிகளின் கணக்குப்படி வரும் பாப, புண்ணியப் பிரக்ருதிகளின் எண்ணிக்கையை ( )-இந்த அடைப்புக்குறியில் காண்கிறீர்கள்.

| காதி கர்மம் | அகாதி கர்மம் |
|---|---|
| ஞானாவரணம் - 5 | வேதனீயம் - 2 |
| தர்சனாவரணம் - 9 | ஆயுள் - 4 |
| மோஹனீயம் - 28 | நாமம் - 93 (67) |
| அந்தராயம் - 5 | கோத்திரம் - 2 |
| மொத்தம் - 47 | மொத்தம் 101 (75) |

**இவற்றில் காதி கர்மத்தின் எல்லாப் பிரக்ருதிகளும் பாபப்பிரக்ருதிகளே யாகும்.**

| புண்ணியப் பிரக்ருதிகள் | பாபப் பிரக்ருதிகள் |
|---|---|
| சாதா வேதனீயம் - 1 | அசாதா வேதனீயம் - 1 |
| சுபாயுள்(மனித, தேவ, திரியன்ச) - 3 | அசுபாயுள் (நரக) - 1 |
| சுப நாமகர்மம் - 63 (37) | அசுப நாமகர்மம் - 50 (34) |
| உச்ச கோத்திரம் - 1 | நீச்ச கோத்திரம் - 1 |
| மொத்தம் - 68 (42) | மொத்தம் 53 (37) |

அகாதி கர்மத்தில் புண்ணிப்பிரக்ருதிகள் மற்றும் பாபப்பிரக்ருதிகள் இரண்டுமே காணப்படுகின்றன. இவ்வாறு 148 பிரக்ருதிகளில் 68 புண்ணியப் பிரக்ருதிகள் மற்றும் காதி, அகாதி இரண்டிலும் சேர்த்து 47+53=100 பாபப்பிரக்ருதிகள் இருக்கின்றன. 68 புண்ணியப் பிரக்ருதிகள் மற்றும் 100 பாபப்பிரக்ருதிகள் இரண்டையும் சேர்த்தால் மொத்தம் 168 பிரக்ருதிகள் வருகின்றன, ஆனால் நீங்கள் முதலில் மொத்தம் 148 உத்தரப் பிரக்ருதிகள் இருக்கின்றன என்றுதானே கூறினீர்களே, அது எப்படி? என்று கேட்கிறீர்களா?

உங்கள் கேள்வியிலிருந்து நீங்கள் மிகவும் கவனத்துடன் படிக்கிறீர்கள் என்பது தெரிகிறது. இது மிக நல்ல விஷயம்தான். 168-ல் ஸ்பர்சம் முதலான 20 பிரக்ருதிகள்

புண்ணியம், பாபம் இரண்டிலும் சேர்ந்திருக்கின்றன. புண்ணியப் பிரக்ருதியில் புண்ணிய ஸ்பர்சம் முதலான 20-ம், பாபப் பிரக்ருதியில் பாப ஸ்பர்சம் முதலான 20-ம் சேர்ந்திருக்கின்றன. இவைகளை 122 பிரக்ருதிகள் என்ற கணக்கின்படி சொல்லவேண்டுமென்றால் 42 புண்ணியப் பிரக்ருதிகள், (47+37) 84 பாபப் பிரக்ருதிகள், ஆக மொத்தம் 126 பிரக்ருதிகளாகும். இப்போது இவ்வளவு விரிவாகப் பார்த்த பிறகு, சுப நாமகர்மம், அசுப நாமகர்மம் இரண்டையும்கூட நாம் கட்டங்களில் போட்டு பார்க்கலாம்.

| நம கர்மம் | புண்ணியம் | பாபம் |
|---|---|---|
| கதி | தேவகதி, மனிதகதி - 2 | நரககதி, திரியன்சகதி -2 |
| ஜாதி | பஞ்சேந்திரியம் -1 | 1 முதல் 4 இந்திரியங்கள் -4 |
| சரீரம் | எல்லா சரீரமும் - 5 | - |
| பந்தனம் | எல்லா பந்தனமும் - 5 | - |
| சங்காதம் | எல்லா சங்காதமும் - 5 | - |
| அங்கோபாங்கம் | எல்லாம் - 3 | - |
| ஸ்பர்சனாதி | எல்லாம் - 20 | எல்லாம் - 20 |
| சமஸ்தானம் | சமசதுரஸ்ய - 1 | மற்ற எல்லாம் -5 |
| சம்ஹனனம் | வஜ்ரவிரஷபநாராச- 1 | மற்ற எல்லாம் -5 |
| அனுபூர்வி | மனுஷ்ய, தேவ கதியானுபூர்வி - 2 | நரக, திரியன்ச கதியானுபூர்வி -2 |
| விஹாயோகதி | பிரசஸ்த விஹாயோகதி - 1 | அபிரசஸ்த விஹாயோகதி -1 |
| அகுருலகு | அகுருலகு -1 | - |
| பரகாதம் | பரகாதம் - 1 | உபகாதம் - 1 |
| உச்வாசம் | உச்வாசம் - 1 | - |
| ஆதபம் | ஆதபம் - 1 | - |
| உத்யோதம் | உத்யோதம் - 1 | - |
| திரசம் முதலியன | திரசம், பாதரம் பர்யாப்தம், பிரத்யேகம் - 4 | ஸ்தாவரம், சூட்சமம், அபர்யாப்தம், சாதாரணம் - 4 |
| ஸ்திரம் முதலியன | ஸ்திரம், சுப, சுபக, சுஸ்வர, ஆதேய, யசஸ்கீர்த்தி - 6 | அஸ்திரம், அசுப, சுபக, துஸ்வர, அநாதேய, அயசஸ்கீர்த்தி - 6 |
| தீர்த்தங்கர | தீர்த்தங்கர - 1 | - |
| நிர்மாணம் | நிர்மாணம் - 1 | - |
| மொத்தம் | 63 | 50 |

கர்மம் அனாதி காலமாக இடைவிடாமல் பந்தித்துக் கொண்டிருக்கிறது. ஆயுள் பந்தம் சில நேரங்களில் மட்டும் நிகழ்கிறது, மற்ற ஏழு மூல பிரக்ருதிகளும் இடைவிடாமல் பந்தமாகிக் கொண்டிருக்கின்றன. உயிர் சுபஉணர்வு கொண்டாலும், அசுபஉணர்வு கொண்டாலும் எட்டு கர்மங்களின் பந்தமும் நிகழ்கிறது. அவைகளில் காதி கர்மங்கள் எல்லாம் பாப வடிவமேயாகும், உயிருக்குத் தீமை பயப்பவைகளே யாகும். அகாதி கர்மங்களில் பாபம், புண்ணியம் என இரண்டு விதமாகும், அவைகளில் புண்ணியப் பிரக்ருதிகளின் பந்தம் சுப உணர்வால்-தூய பரிணாமத்தால் நிகழ்கிறது மற்றும் பாபப் பிரக்ருதிகளின் பந்தம் அசுப உணர்வால்-சங்லேஷ பரிணாமத்தால் [கர்மத்தால் வரும் கஷ்டங்களை போக்கும் எல்லா முயற்சிகளும் பயனில்லாமல்போக அதை எப்படி போக்குவது என்ற சிந்தனையில் ஆழ்வதால்] நிகழ்கிறது.

இதிலிருந்து சுபஉணர்வு கொண்டாலும்கூட கர்ம பந்தம் நிகழ்கிறது, பந்தத்திலிருந்து தப்பிக்க முடியாது என்பது நிரூபணமாகிறது. ஆனால் சம்யக்த்துவத்தைப் பெற்றதும் மித்யாத்துவமும், அனந்தானுபந்தி ஆகிய கஷாயங்கள் பந்தமாவது நின்று போகிறது; அந்த சமயத்திலிருந்து குறிப்பிட்ட பிரக்ருதிகளின் பந்தம் தடைபட்டுப் போகிறது, அதாவது அந்த பிரக்ருதிகள் **பந்த வியுச்சுத்தி** ஆகின்றன. படிப்படியாக அப்ரத்யாக்யானாவரணம், பிரத்யாக்யானாவரணம், சஞ்சுவலனம் ஆகிய கஷாயங்களின் உதயமின்மை நிகழ்கிறது, அதற்கு உகந்தார்போல பிரக்ருதிகளின் பந்த வியுச்சுத்தியும் நிகழ்கிறது.

இவ்வாறு கர்ம பந்தம் இல்லாமல் போவதே சம்வரை யாகும். சம்வரையுடன், நிர்ஜரையும் நிகழ்கிறது அதாவது சத்தாவில் இருக்கும் கர்மங்கள்கூட அதிக அளவில் உயிரை விட்டு விலகி விடுகின்றன. பந்தம் நிகழாமல் இருத்தல் சம்வரை மற்றும் சத்துவம் குறைந்து கொண்டே போதல் நிர்ஜரை எனப்படுகிறது. இதையே மோக்ஷமார்க்கம் என்று சொல்கிறோம். ஏனென்றால் இந்த வழியில் சென்றுதான் நாம் மோக்ஷத்தைப் பெற வேண்டும்.

இங்கு பிரக்ருதிகளின் பந்தம் நின்று போவது பற்றி சர்ச்சை செய்தோம். ஆனால் பந்தம், பிரக்ருதி பந்தம், பிரதேச பந்தம், ஸ்திதி பந்தம், மற்றும் அனுபாக பந்தம் என நான்கு வகையாக இருப்பதைப் பார்த்திருக்கிறோம், அவை உங்கள் ஞாபகத்தில் இருக்கிறதா?

உயிர் எப்போது சமயக்த்துவத்தைப் பெறுகிறதோ அப்போது இந்த நான்கு வகையான பந்த இழப்பும் நிகழ்கிறது. குறிப்பிட்ட சில பிரக்ருதிகளின் பந்தம் நின்றுபோகிறது, மற்ற பிரக்ருதிகளின் பிரதேச பந்தம் குறைந்த எண்ணிக்கையில் நிகழ்கிறது, கர்மங்களின் ஸ்திதி பந்தமும் ஒரு கோடாகோடி கடற்காலத்திற்கும் குறைவாகவே ஆகிறது, மற்றும் பாப கரமங்கள் குறைந்த பலன்தரும் அளவில் பந்தமாகின்றன. புண்ணிய கர்மங்களின் ஸ்திதி என்னவோ குறைகிறது ஆனால் அவைகளின் பலன் தரும் சக்தி அதிகமாகிறது. சம்யக்த்துவம் பெற்ற பிறகு இவைகள் எல்லாம் நிகழவே செய்கின்றன.

ஆனால் எப்போது உயிர் தன் ஸ்வரூபத்தை தெரிந்து கொள்வதில் ஆவல் கொள்கிறதோ, தத்துவஞான சம்பந்தமாகவும், தன் ஆத்ம சம்பந்தமாகவும் அந்த பவ்விய உயிருக்கு ருசியும், ஆர்வமும் உண்டாகிறதோ அப்போதிருந்து, அதாவது சம்யக்த்துவம்

அடையும்முன் நிகழும் பஞ்சலப்தி பெறும் காலத்தில்கூட கர்மங்களில் எந்தனை மாற்றங்கள் நிகழ்கின்றன, கர்மங்களின் சக்தி எவ்வாறு தளர்வடைகின்றன, என்பதைப்பற்றி நாம் பார்த்தோமானால், **நாம் காரணமின்றி கர்மங்களுக்கு பயந்து கொண்டிருந்தோம், எப்போது நமக்கு ஆத்மபுத்தி வருகிறதோ அப்போதெல்லாம் கர்மங்கள் நடுநடுங்கிப் போகின்றன என்று சாஸ்திரங்களில் சொல்லப்படுவது நியாயமானதே** என்று நீங்கள் சொல்வீர்கள்.

கர்மங்களில் நிகழும் எல்லா மாற்றங்களும், கர்மங்களின் சுய தகுதியால் நிகழ்கின்றன, நாம் கர்மத்தில் எதுவும் செய்ய வேண்டியதாக இல்லை-நாம் எதுவும் செய்யவும் முடியாது! கர்மங்களின் அந்த நிலைகளை-மாற்றங்களை சரியாகப் புரிந்து கொள்ள அதற்குமுன் சிலவற்றைத் தெரிந்துகொள்வது அவசியமாகும். அவைகளைப் பற்றி நாம் அடுத்த கடிதத்தில் பார்க்கலாம்.

ஜெய் ஜினேந்திரா.

- உங்கள் அம்மா.

## கர்ம சம்பந்தமான சில வரையறைச் சொற்கள்

**கடிதம்-4** **7-7-2002**

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

ஒரு பக்கம் கர்ம சம்பந்தமான தகவல்களைப் படித்து, குறிப்பாக நாமகர்மத்தின் உத்தரப் பிரக்ருதிகள் (கிளைகள்) மற்றும் அவைகளின் காரியங்களைத் தெரிந்து கொண்டதால் நீங்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டதாகவும், உங்களுடைய பல சந்தேகங்கள் விலகியதாகவும், மறுபக்கம் இவைகளை எல்லாம் தெரிந்து கொள்ளாமல் சம்யக்த்துவம்-நற்காட்சி பெறமுடியாதா என்ன? என்ற கேள்வியையும் எழுப்பி இருக்கிறீர்கள். அதற்கு பதில், அவசியம் பெற முடியும் என்பதேயாகும்.

ஒருவருக்கு ஏதாவது வியாதி வந்தால் அதற்கு சிகிச்சைபெற அவர் மருத்துவரிடம் செல்கிறார். மருத்துவரால் கொடுக்கப்பட்ட மருந்தின் பெயர், அதன் இரசாயனப் பெயர், அது வேலை செய்யும் விதம், உடலில் அதனால் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் அது எப்படி உடலிலிருந்து வெளியேரும் இவைகளை எல்லாம் பற்றி அவர் தெரிந்திருக்காவிட்டாலும், அவர் அந்த மருந்தை உட்கொண்டால் நலமடைய மாட்டாரா என்ன? அவர் நோயிலிருந்து குணமடைய மாட்டாரா என்ன? நீங்களே சொல்லுங்கள். அந்த டாக்டருக்கே ஒரு வியாதி வந்து விட்டால், அந்த வியாதியை குணமாக்கும் மருந்துகளின் பெயர்கள் அவருக்கு தெரியுமாதலால், அவர் வியாதி தானாகவே குணமாகிவிடுமா என்ன? அல்லது அவர்கூட அந்த மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டுமா? அந்த மருந்துகளைச் சாப்பிட்டே அவர்கூட நலமடைவார், இல்லையா? மருந்தை சாப்பிடுவதால் நோய் குணமாகும் என்ற திடநம்பிக்கை அவருக்கு இருக்கிறதல்லவா. ஆனால் அந்த வியாதி வந்தவர், மருந்து கடைக்குச் சென்று அவர் விருப்பப்படி ஏதாவது ஒரு மருந்தை வாங்கிச் சாப்பிட்டால் என்னவாகும்? அவர் நோயிலிருந்து இல்லை, அவர் வாழ்க்கையையே கூட இழக்க நேரலாம் அல்லவா!

அதேபோல ஒரு உயிர் கர்ம சம்பந்தமாக எதுவும் தெரிந்திருக்காவிட்டாலும், அவரால் சம்யக்த்துவத்தைப் பெறமுடியும். ஆம், ஆனால் அவர் ஜினேந்திர பகவானால் உபதேசிக்கப்பட்ட பிரயோஜனமான ஏழு தத்துவங்களை அப்படியே நம்பி, அவைகளை ஆய்வு மூலம் உறுதி செய்து, தான் யார், பிற பொருள்கள் எவை என்ற அறிவு (பேதவிஞ்ஞானம்) பெற்று, தன் நிலையான இயல்பு எப்படி இருக்கிறதோ அப்படியே ஆய்வின் மூலம் அறிந்து, கர்ம உதயத்தால் கிடைக்கும் போகப் பொருள்கள் தான் சம்பாதித்தவை, தான் அனுபவிப்பவை என்ற புத்தி கொள்ளாமல், உடலே நான் அல்ல, ஆசை முதலான என்னில் தோன்றும் திரிபு உணர்வுகள் என்னுடையதல்ல என்ற அறிவு பெற்றால், அந்த உயிர் சம்யக்த்துவத்தை அடைய முடியும்.

எனக்கு ஒன்று சொல்லுங்கள், இங்கு நாம் ஆகமங்களில் சொல்லப்பட்ட விஷயங்களைத் தெரிந்து கொள்கிறோமே அது உண்மையா அல்லது பொய்யா? அவைகள் என்னவோ நூற்றுக்கு நூறு சதவிகிதம் உண்மையல்லவா? அப்படி என்றால்

உண்மையைத் தெரிந்து கொள்வதால் நம்முடைய ஞானம் வளர்ச்சி அடைகிறதா அல்லது மங்கிப் போகிறதா? தொலைக்காட்சியில் செய்திகளைத் தெரிந்து கொள்ளப் பொதுவாக எல்லோரும் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறார்கள், உலகில் நடக்கும் விஷயங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ளவதில் ஆர்வமுடைய இந்த உயிர், தன்னில் அனாதி காலமாக என்ன நடக்கிறது என்பதை மறந்துவிட்டு, மற்ற எல்லா வெளி விஷயங்களையும் தெரிந்து கொள்வதில் பயித்தியம் பிடித்து அலைகிறது!

நம்மில் தோன்றும் ஒவ்வொரு சமய உணர்வின் நிமித்தத்தால் எவ்வளவு மற்றும் எவ்வாறு கர்மம் பந்தமாகிறது, அவை எப்போது எந்த பலனைத் தருகிறது? இந்த கர்ம பந்தம் மற்றும் கர்ம பலனிலிருந்து நம்முடைய நிலைப்புத் தன்மை வேறானதா, இல்லையா? இதிலிருந்து விடுபட வழி ஏதாவது இருக்கிறதா? புண்ணியம் செய்வதால் மோக்ஷமார்க்கம் ஆரம்பமாகுமா, ஆகாதா? இந்த விஷயங்களைப் பற்றியெல்லாம் கொஞ்சம்கூட சிந்தனை இல்லாமல், அது எதையெல்லாம் பார்க்கிறதோ அவைகளில் தான் நினைப்பதை செய்து, தானும் மோக்ஷமார்க்கத்தில் இருப்பதாக சமாதானமடைகிறது.

மகள்களே! மோக்ஷமார்க்கம் மிகவும் எளிமையானதும், சுலபமாக அணுகக்கூடியதும், இயற்கையானதும், இன்பமளிப்பதும், மகிழ்ச்சிகரமானதுமாகும். ஆனால் உயிர்களுக்கு இதன்மீது நம்பிக்கைதான் கொஞ்சம்கூட இருப்பதாகத் தெரியவில்லை. இதுதான் இரகசியம். நான் சில செயல்களைச் செய்யவேண்டும், அப்போதுதான் நான் மோக்ஷமார்க்கத்தில் சாதனை செய்ததாகும் என்ற குழப்பம் இந்த உயிர்களிடம் காணமுடிகிறது. நல்லுணர்வு கொள்ளுவதும் மற்றும் உடலால் செய்யும் செயல்களும்தான் தர்மம், முக்திப்பாதை என்று இந்த உயிர் நம்புகிறது. ஆனால் நல்ல மற்றும் கெட்ட உணர்வுகளற்ற முக்காலத்திலும் கம்பம் போன்று நிலையான ஞானானந்தமய வடிவமானது ஸ்வயம் ஆத்மா-நானாகிய உயிராவேன் என்பது இந்த உயிருக்கு ஏற்புடையதாக இல்லை. உடலால் செய்யப்படும் செயல்கள் எல்லாம் ஜடத்தின் (அறிவு இல்லாத பொருளின்) செயல்களாகும், பிறபொருளின் செயலாகும், உயிர் அதைச் செய்யவே முடியாத செயலாகும்! நல்ல மற்றும் கெட்ட உணர்வுகள் விபாவ-திரிபு உணர்வுகளாகும், அவை ஆத்மாவின் இயல்பான உணர்வுகளல்ல, உயிரின் ஸ்வபாவத்திற்கு எதிரான திரிபு உணர்வுகளாகும். அப்படி இருக்கும்போது இயல்புக்கு எதிரான காரியங்களைச் செய்வதால் இந்த உயிரிடம் இயல்பான மாற்றம், ஸ்வபாவ பர்யாயம் எப்படி வெளிப்படும்?

நற்காட்சி வடிவ. நன்னம்பிக்கை வடிவ இயல்பான மாற்றம், ஸ்வபாவ பர்யாயம் ஆத்மாவில் வெளிப்பட்ட பிறகே மோக்ஷமார்க்கத்தில் அந்த உயிர் செல்லும் பயணம் ஆரம்பிக்கும். அதற்குமுன் அந்த ஆத்மா ஐந்து லப்திகளை அவசியம் அடையும். அந்த ஐந்து லப்திகளின், இயல்புகளைப் பற்றி தெரிந்துகொள்ள சில வரையறை சொற்களை (technical terms-களை) தெரிந்து கொள்வது அவசியமாகும். இப்போது நாம் அவைகளைப் பற்றிப் பார்க்கலாம்.


கர்மபந்தம் நான்கு விதமாகச் சொல்லப்படுகிறது என்று முன்னர் நாம் பலமுறை படித்திருக்கிறோம். எந்த கர்மப் பிரக்ருதியின் பந்தம் நிகழ்கிறதோ அது **பிரக்ருதி பந்த**மாகும். எவ்வளவு எண்ணிக்கையில் கர்ம பரமாணுக்கள் பந்தமாகிறதோ, அந்த

பரமாணுக்களின் எண்ணிக்கையை **பிரதேச பந்தம்** என்று சொல்கின்றனர். ஒரு சமயத்தில் அனந்த கர்ம பரமாணுக்கள் பந்தமாகின்றன, அதை **சமயப்பிரபத்தம்** அதாவது ஒரு சமயத்தில் பந்தமானவைகள் என்று சொல்கின்றனர். பந்தமாகும் சமயத்திலேயே அந்த கர்மம் அதிகபட்சம் எவ்வளவு காலம்வரை உயிருடன் கட்டுண்டு-பந்தித்த நிலையில் இருக்கும் மற்றும் எப்போது அது கர்ம வடிவிலிருந்து விடுபட்டு உயிரை விட்டுப் பிரியும் என்பதும் நிச்சயிக்கப்படுகிறது. இந்த கால அளவை **ஸ்திதி பந்தம்** என்று சொல்கின்றனர். அந்த கர்ம பரமாணுக்களின் பலன் தரும் சக்தியை **அனுபாக பந்தம்** என்று சொல்கின்றனர். பந்தமான பிறகு கர்மம் உயிர் பிரதேசத்தில் பந்த நிலையிலேயே இருக்கிறது. இதை **சத்துவம்** அல்லது கர்மத்தின் சத்தா என்று சொல்கின்றனர். கர்மம் பந்தமான பிறகு குறிப்பிட்ட காலம்வரை அதன் உதயம் அல்லது உதீரணை நிகழ்வதில்லை, அந்த காலத்தை **ஆபாதாகாலம்** என்று சொல்கின்றனர். ஆபாதாகாலத்திற்குப் பிறகு கர்ம **உதயம்** துவங்குகிறது அதாவது பலன் கொடுத்துவிட்டு உயிரை விட்டு விழுந்து விடுகிறது அதாவது கர்ம நிலையிலிருந்து கர்மமில்லாத புத்கல வடிவை அடைகிறது. இதை கர்ம **நிர்ஜரை** என்று சொல்கின்றனர். இது பொதுவான கர்ம நிர்ஜரையாகும், மோக்ஷமார்க்கத்தை கொடுக்கவல்ல நிர்ஜரை இல்லை.

இவ்வாறு ஒவ்வொரு சமயமும் ஒரு சமயப்பிரபத்த அளவு பந்தமும், ஒரு சமயப்பிரபத்த நிர்ஜரையும் நிகழ்கிறது. இந்த முறையில் உயிரின் சத்தாவில் அனந்தானந்த கர்மம் சத்தா வடிவில் இருந்து கொண்டிருக்கிறது. அதிலிருந்து ஒவ்வொரு சமயமும் ஒரு சமயப்பிரபத்த கர்மங்கள் விழுகின்றன, ஒரு சமயப்பிரபத்த அளவு பந்தமாகிக் கொண்டும் இருக்கிறது. இதனால் கர்மத்தின் சத்துவம் எப்போதும் உயிருடன் இருந்த வண்ணம் உள்ளது. ஒரு சமயத்தில் பந்தமான பரமாணுக்கள் ஒன்றாக உதயத்திற்கு வருவதில்லை ஆனால் ஆபாதாகாலம் முடிந்ததும் அடுத்த சமயத்திலிருந்து ஸ்திதியின் கடைசி சமயம்வரை இடைவிடாது கொஞ்சம் கொஞ்சமாக பரமாணுக்கள் விழுந்த வண்ணம் இருக்கின்றன. இந்த காலத்தை கர்மத்தின் **உதய காலம்** என்று சொல்கின்றனர். ஒரே சமயத்தில் உதயமாகும் கர்ம பரமாணுக்களின் சமூகத்தை **நிஷேகம்** என்று சொல்கின்றனர்.

ஒரு சமயத்தில் பந்தமான கர்ம பரமாணுக்கள் தொடர்ந்து அனேக வருடங்கள்வரை உதயத்திற்கு வந்த வண்ணம் இருக்கின்றன. நாம் ஒவ்வொரு சமயமும் கர்மத்தை பந்தம் செய்து கொண்டும் இருக்கிறோம். ஆகையால் எந்தெந்த கர்ம பரமாணுக்களின் ஸ்திதி முழுமையடைகிறதோ அவை தனித்தனியாக பல சமயங்களில் பந்தமான பரமாணுக்களாக இருந்தாலும், அவைகள் ஒன்றாக சேர்ந்தே உதயத்திற்கு வருகின்றன. அவைகளின் ஒட்டுமொத்த பலனை அவைகள் உயிருக்கு கொடுத்துவிட்டு விழுந்து விடுகின்றன. இவ்வாறு சத்தாவில் இருக்கும் கர்மங்களில் எந்தெந்த பரமாணுக்களில் சமமான ஸ்திதி இருக்கிறதோ அவைகளின் சமூகத்தையே நிஷேகம் என்று சொல்கின்றனர். இவைகளை சத்துவத்தில் இருக்கும் நிஷேகங்கள் என்றும் சொல்லுவார்கள். இவைகளிலிருந்து ஒவ்வொரு சமயமும் ஒரு நிஷேகம் உதயத்திற்கு வந்து விழுந்து விடுகின்றன.

நிகழ்காலத்தில் உதயமாகும் நிஷேகத்தை **முதல் நிஷேகம்** என்று சொல்கின்றனர். அதை ஒரு குறுக்குக்கோடு மூலம் படத்தில் காட்டுகின்றனர். அதற்குமேல் வேறு ஒரு





குறுக்குக்கோடு போட்டு அதை இரண்டாவது நிஷேகம் என்று சொல்கின்றனர். இவ்விதமாக ஒவ்வொரு சமத்திற்கு ஒவ்வொரு நிஷேகம் என்ற வகையில் ஒவ்வொரு கர்மத்திற்கும் அதனதன் அனேக நிஷேகங்கள்-அனேக கோடாகோடி கடற்காலங்கள்வரை உதயத்திற்கு வரக்கூடிய நிஷேக அமைப்பு உயிருடன் சத்தா வடிவில் இருக்கின்றன. கர்மங்களின் ஸ்திதியைப் பற்றி எடுத்துச் சொல்வதற்கே நிஷேக அமைப்பு ஆகமங்களில் குறுக்கு கோடுகள் மூலம் காட்டப்படுகிறது. இதுபோலவே உயிரில் கர்மங்கள் வரிசையாக நிற்கின்றன என்று எடுத்துக் கொள்ளாதீர்கள். கர்மங்கள் பந்தமாகும்போது அவை உயிரின் அசங்க்யாத பிரதேசங்களிலும், அதன் பரமாணுக்கள் சமமாகவே பரவி நிற்கின்றன. ஆனால் அவை உயிரின் எந்தப் பகுதியில் இருந்தாலும் எந்தெந்த பரமாணுக்களில் சமமான ஸ்திதி காணப்படுகிறதோ, அவைகளை நிஷேகம் என்று சொல்கின்றனர்.

கர்ம பரமாணுக்களில் அவை கர்மமாக மாற்றமடையும்போதே கர்மத்தின் ஸ்திதியும் அதன் பலன்தரும் சக்தியும்கூட உறுதியாகி விடுகிறது, அதாவது கர்ம பரமாணுக்களில் அதனதன் அனுபாக சக்தியும் அதனுடனேயே உறுதி படுத்தப்பட்ட நிலையில் பந்தமாகின்றன. இந்த சக்தியை **அவிபாக பிரதிசேதம்** என்ற அளவையைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. கர்ம பரமாணுக்களில் அவைகளின் பலன்தரும் சக்தி இத்தனை அவிபாகபிரதிசேதம் என்பதாக இருக்கிறது. ஒவ்வொரு கர்மப் பரமாணுவையும் ஒரு **வர்கம்** என்றும் சொல்கின்றினர். எந்த பரமாணுவில் அதாவது எந்த வர்கத்தில் சமான அளவு அவிபாக பிரதிசேத சக்தி இருக்கிறதோ அந்த வர்கங்களை ஒன்றாக சேர்த்து **வர்கணை** என்று சொல்கின்றனர்.

எல்லாவற்றையும்விட குறைந்த அவிபாக பிரதிசேதம் கொண்ட வர்கணையை ஜகன்ய வர்கணை அல்லது முதல் வர்கணை-பிரதம வர்கணை என்று சொல்கின்றனர். எதில் அதுபோல இரண்டு மடங்கு அவிபாக பிரதிசேதம் இருக்கிறதோ அதாவது பலன் தரும் சக்தி இரட்டிப்பாக இருக்கிறதோ அப்படிப்பட்ட வர்கணையை **இரண்டாவது வர்கணை** என்று சொல்கின்றனர். முதல் வர்கணையை (அதாவது மிகக் குறைந்த சக்தி கொண்ட வர்கத்திலிருந்து இரண்டு மடங்கு சக்திக்கு கீழே உள்ள எல்லா வர்கங்களையும்) கீழேயும் பிறகு இரண்டு மடங்கு சக்தி கொண்ட இரண்டாவது வர்கணையை அதற்கு மேலேயும்

ஆகமங்களில் மேலே படத்தில் காட்டியபடி காண்பிக்கின்றனர். அனந்த வர்கணைகளின் சமூகத்தை **ஸ்பர்தகம்** என்று சொல்கின்றனர். வர்கணைகளில் வர்கத்தின் அவிபாக பிரதிசேதம் அதிகரித்துக்கொண்டே போகப்போக, எந்த வர்கணையில் இரண்டு மடங்காக ஆகிறதோ அங்கிருந்து இரண்டாவது ஸ்பர்தகம் தொடங்குகிறது, அந்த சக்தி மூன்று மடங்கு ஆகும்போது மூன்றாம் ஸ்பர்தகம் தொடங்குகிறது. [இதுபோல அனந்த ஸ்பர்தகங்கள் கொண்டதாக ஒவ்வொரு நிஷேகமும் இருக்கிறது.]

எந்த ஒரு சமயத்தில் பந்தமான பரமாணுக்களின் நிஷேக அமைப்பைப் பார்த்தாலும் அதில் முதல் நிஷேகத்தில் மிகஅதிக எண்ணிக்கையில் பரமாணுக்களும், மேலே போகப்போக உள்ள நிஷேகங்களில் பரமாணுக்களின் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே போகிறது. [அதனால்தான் நிஷேக அமைப்பு படத்தில் குறுக்கு கோடுகளின் அளவு குறைந்து கொண்டே போவதுபோல காட்டப்படுகிறது.]




நிஷேக அமைப்போ அல்லது ஸ்பர்தக அமைப்போ அவைகள் எல்லாம் வரைபடங்களாகும், சித்திர வடிவில் நாம் சுலபமாகப் புரிந்துகொள்ள வரையப்பட்டவைகளாகும். பொருளின் விலையில் ஏற்ற இறக்கங்களைக் காட்டும் வரைபடங்கள் போலவும், கிரிக்கெட் ஆட்டத்தில் ரன்கள் எப்படி எடுக்கப்பட்டன எனபதை தொலைகாட்சி நிகழ்ச்சிகளில் காட்டுகிறார்களே அதுபோலவும்தான் என இதையும் தெரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு கர்ம பிரக்ருதியிலும் அனந்தானந்த வர்கணைகளும், ஸ்பர்தகங்களும் இருக்கின்றன. அங்கு குறைந்த பலன்தரும் சக்தியிலிருந்து அதிதீவிர பலன்தரும் சக்தி கொண்ட அனேக ஸ்பர்தகங்களைப்பற்றி எடுத்துச்சொல்ல உவமைகள் கொடுத்து-அதற்குப் பொருத்தமான பெயர்களைக் கொடுத்து நமக்கு புரியவைக்கப் படுகிறது.

காதி மற்றும் அகாதி கர்மங்களில் உள்ள ஸ்பர்தக அமைப்புகளின் பெயர்கள் கீழே விளக்கப்பட்டுள்ளபடி இருக்கின்றன. காதி கர்மத்தில் மந்தத்திலிருந்து தீவிர சக்தி கொண்ட ஸ்பர்தகங்களை **1.கொடி**(லதா-creeper), **2.மரம்** (கட்டை-wood), **3.எலும்பு** (அஸ்தி-bone), **4.கல்** (ஷைல்-stone) என நான்கு வகைப்படுத்திச் சொல்கின்றனர். கொடி மென்மையானது ஆனால் கட்டை அந்த அளவு மென்மையானதாக இல்லை,

கொடியைவிட அதிக சக்தி வாய்ந்ததாக-பலம் கொண்டதாக இருக்கிறது. அதேபோல கொடி பெயர் கொடுக்கப்பட்ட ஸ்பர்தகங்களின் பலன் தரும் சக்தி மந்தமாக இருக்கிறது. கொடியைவிட கட்டை அதாவது மரம் கடினமாக இருக்கிறது, அதுபோல இந்த பெயர் கொண்ட ஸ்பர்தகங்களின் பலன் தரும் சக்தி அதிகமாக இருக்கிறது. இதைவிட அதிக சக்தி அஸ்தி அதாவது எலும்பு பெயர்கொண்ட ஸ்பர்தகங்களில் காணப்படுகின்றன. இதையும் விட மிக அதிக சக்தி கல்(ஷைல்) பெயர்கொண்ட ஸ்பர்தகங்களில் காணப்படுகின்றன. கொடியைவிட கட்டையும், கட்டையைவிட எலும்பும், எலும்பைவிட கல்லும் கடினமாக இருப்பதுபோல இந்த ஸ்பர்தகங்களில் சக்தி கூடிக்கொண்டே போகிறது எனப் புரிந்து கொள்ளவேண்டும். இது போன்ற எல்லாவகையான சக்தி கொண்ட ஸ்பர்தகங்களும் கர்மப் பிரக்ருதிகளில் காணப்படுகின்றன. இவ்விதமாக ஞானாவரணம், தர்சனாவரணம், மோஹனீயம் மற்றும் அந்தராயம் ஆகிய காதி கர்மங்களில் தீவிரத்தன்மை நோக்கில் கல், எலும்பு, கட்டை, கொடி என பலன்தரும் சக்திக்கு ஒப்ப நான்கு நிலைகளாக ஸ்பர்தகங்களை ஆகமங்களில் வர்ணனை செய்யப்படுகிறது. எப்போது எந்த கர்மத்தில் நான்கு பலன்தரும் சக்திகளும் கொண்ட ஸ்பர்தகங்கள் பந்தமாகிறதோ அதை **சதுஸ்தானகத்**-நான்குநிலைக்கட்டு அல்லது நான்குநிலை பந்தம் என்று சொல்கின்றனர்.

உயிர் விசுத்த-தூய உணர்வு கொள்ளும் நிமித்தத்தால் எப்போது அதிதீவிர சக்தி கொண்ட காதிகர்மப் பிரக்ருதி பந்தமாகவில்லையோ அப்போது **திரிஸ்தானகத்**-மூன்றுநிலைக்கட்டு-எலும்பு, கட்டை, கொடி நிலைகொண்ட ஸ்பர்தகங்கள் மட்டுமே பந்தமாகின்றன, கல் நிலைகொண்ட ஸ்பர்தகங்கள் பந்தமாவதில்லை. அதுபோல உயிரின் பரிணாமத்தூய்மைக்கு ஏற்ப **துவிஸ்தானகத்**-இரண்டுநிலைக்கட்டு பந்தமாகும்போது கட்டை மற்றும் கொடி நிலை ஸ்பர்தகங்கள் மட்டுமே பந்தமாகின்றன; கல், எலும்பு நிலை ஸ்பர்தகங்கள் பந்தமாவதில்லை.

காதி கர்மங்களில் பலன்தரும் நோக்கில் ஸ்பர்தகங்களின் கல், எலும்பு, கட்டை, கொடி என நான்கு நிலைகளைப் பார்த்தோம். அதேபோல அகாதி கர்மங்களில் உள்ள ஸ்பர்தகங்களுக்குக்கூட நான்கு நான்கு நிலைகளில் ஆகமங்களில் வர்ணனை செய்யப்படுகின்றன. அகாதி கர்மங்களில் புண்ணியம் மற்றும் பாபம் என இரண்டு விதமான பிரக்ருதிகளும் இருப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆகையால் புண்ணிய ஸ்பர்தகங்களின் பலன் தரும் சக்திக்கு ஏற்ப அதன் நான்குநிலைப் பெயர்கள் வேறாகவும், பாப ஸ்பர்தகங்களின் பலன் தரும் சக்திக்கு ஏற்ப அதற்கான வேறு நான்குநிலைப் பெயர்கள் வேறாகவும் ஆகமங்களில் கொடுக்கப்பட்டு அவைகளின் பலன் தரும் சக்தி பற்றி விளக்கம் அளிக்கப்படுகிறது.

அகாதி கர்மத்தின் புண்ணியப் பிரக்ருதிகளில் மந்தத்திலிருந்து தீவிர பலன் தரும் ஸ்பர்தகங்களின் நான்கு ஸ்தானங்களின்-நிலைகளின் பெயர்களாவன **1.வெல்லம், 2.காண்டு(கோவா), 3.சர்க்கரை, 4.அமிர்தம்.** இந்த நான்குப் பொருள்களின் இனிப்புத்தன்மை முறையாக அதிகமாகிக்கொண்டே போகும். அதுபோல இந்த புண்ணியப் பிரக்ருதி ஸ்பர்தகங்களில் பலன்தரும் சக்தி அதாவது அனுபாகம் அதிகமாகிக்கொண்டே போகும். இவைகளில் துவிஸ்தனகத்-இரண்டுநிலைக்கட்டு என்று சொல்லும்போது

வெல்லம் மற்றும் கோவா நிலைகொண்ட ஸ்பர்தகங்களின் பந்தம் மட்டுமே நிகழ்கின்றன என்று புரிந்து கொள்ளவேண்டும் மற்றும் சதுஸ்தானகத்-நான்குநிலைக்கட்டு என்று சொல்லும்போது நான்கு நிலை ஸ்பர்தகங்களும் பந்தமாகின்றன என்று புரிந்து கொள்ளவேண்டும்.

அகாதி கர்மத்தின் பாபப்பிரக்ருதிகளில் மந்தத்திலிருந்து தீவிர பலன்தரும் ஸ்பர்தகங்களின் நான்கு ஸ்தானங்களின்-நிலைகளின் பெயர்களாவன **1.வேம்பு 2.கடுக்காய், 3.விஷம், 4.ஆலஹால விஷம்.** இந்த நான்குப் பொருள்களின் கசப்புத் தன்மை அதிகரித்துக் கொண்டே போகும். அதேபோல இந்த ஸ்பர்தகங்களில் பலன்தரும் சக்தியின் தீவிரம் அதிகரித்துக்கொண்டே போகும். எப்போது உயிரின் பரிணாமங்களில்-உணர்வுகளில் தூய்மைத்தன்மை அதிகரித்துக் கொண்டே போகிறதோ அப்போது அகாதி கர்மங்களின் பாபப்பிரக்ருதிகளின் அனுபாக பந்தம்கூட துவிஸ்தானகத்-இரண்டுநிலை பந்தம் நிகழ்கிறது, சதுஸ்தானகத்-நான்குநிலைகளும் பந்தமாவதில்லை. இதோடு மட்டுமல்ல முன்னர் பந்தமான சதுஸ்தானகத்-நான்குநிலைக்கட்டுகளில் உள்ள ஸ்பர்தகங்களின் பலன்தரும் சக்தி பலமடங்கு தாழ்ந்துகொண்டே போகின்றன, மற்றும் சத்தாவில் இருக்கும் கர்மங்களின் துவிஸ்தானகத்-இரண்டுநிலை பலன்தரும் சக்தி மட்டுமே மிஞ்சியிருக்கின்றன. இதைப்பற்றிய விரிவான சர்ச்சையை தகுதியான இடத்தில் பின்னர் செய்யவிருக்கிறோம். இப்போது காதி மற்றும் அகாதி கர்ம ஸ்பர்தகங்களின் பலன்தரும் சக்தியின் நான்கு நான்கு நிலைகளை கட்டங்களில் போட்டு மீண்டும் நன்றாகப் புரிந்து கொள்ளலாம்.

| ஸ்பர்தகங்களின் நான்கு நிலைகள் | | |
|---|---|---|
| **காதி கர்மம்** | **அகாதி கர்மம்** | **அகாதி கர்மம்** |
| **பாபம்(எல்லாம்)** | **புண்ணியம்** | **பாபம்** |
| **கல்** | **அமிருதம்** | **ஆலஹாலம் விஷம்** |
| **எலும்பு** | **சர்க்கரை** | **விஷம்** |
| **கட்டை** | **கோவா** | **கடுக்காய்** |
| **கொடி** | **வெல்லம்** | **வேம்பு** |

காதி கர்மத்தில் சர்வகாதி, தேசகாதி என இரண்டுவகை பிரக்ருதிகள் காணப்படுகின்றன. கேவல ஞானாவரணம், கேவல தர்சனாவரணம் முதலியன சர்வகாதி பிரக்ருதிகளாகும். மதி ஞானாவரணம், சுருத ஞானாவரணம், அவதி ஞானாவரணம், மனப்பர்யய ஞானாவரணம் முதலியன தேசகாதி பிரக்ருதிகளாகும். மேலும் இந்த கர்மங்களின் சர்வகாதி, தேசகாதி

பிரக்ருதிகளில் உள்ள ஸ்பர்தகங்கள் கூட சர்வகாதி ஸ்பர்தகங்கள், தேசகாதி ஸ்பர்தகங்கள் என இரண்டு வகையாக இருக்கின்றன.

நாம் காதி கர்மத்தில் கல், எலும்பு, கட்டை, கொடி என நான்குவகை ஸ்பர்தகங்களைப் பார்த்தோம். அவைகளில் கல், எலும்பு மற்றும் கட்டையில் பெரும்பான்மைப் பகுதி-பஹுபாக ஸ்பர்தகங்கள் சர்வகாதி ஸ்பர்தகங்களாக இருக்கின்றன. கட்டையில் மீதமுள்ள சிறிய ஒருபகுதி-ஒருபாக ஸ்பர்தகங்களும், கொடி நிலையில் உள்ள எல்லா ஸ்பர்தகங்களும் தேசகாதி ஸ்பர்தகங்களாக இருக்கின்றன.

சர்வகாதி பிரக்ருதிகளின் ஸ்பர்தகங்கள் எல்லாம் சர்வகாதி ஸ்பர்தகங்களாகவும், தேசகாதி பிரக்ருதிகளின் ஸ்பர்தகங்கள் எல்லாம் தேசகாதி ஸ்பர்தகங்களாகவும் இருக்கப்போகின்றன. இவைகளைப்பற்றித் தனியாக எடுத்துச்சொல்ல என்ன அவசியமிருக்கிறது? என்று நீங்கள் கேட்கலாம். சொல்லவேண்டிய அவசியமிருக்கிறது, நீங்கள் சொன்னதில் சர்வகாதி பிரக்ருதிகளின் ஸ்பர்தகங்கள் எல்லாம் சர்வகாதியாகும் என்ற ஒரு பாதி மட்டுமே சரி, ஆனால் தேசகாதி பிரக்ருதியில் சர்வகாதி மற்றும் தேசகாதி ஆகிய இரண்டு விதமான ஸ்பர்தகங்களுமே இருக்கின்றன. இதை மீண்டும் உங்களுக்குப் புரியும்படி சொல்கிறேன். அதற்குமுன் பெரும்பான்மை பகுதி மற்றும் சிறிய ஒருபகுதி (பஹுபாகம் மற்றும் ஒருபாகம்) என்றால் என்ன என்பதைப் பார்க்கலாம். நீங்கள் 1000 என்ற எண்ணை 10-ஆல் பாகம் செய்து பஹுபாகம் மற்றும் ஒருபாகம் செய்யவேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். முதலில் 1000-த்தை 10-ஆல் வகுக்க (1000/10=100) நூறு வரும், அதாவது ஒரு பாகத்தின் அளவு 100 ஆகும். மொத்தத்தில் ஒரு பாகத்தை எடுத்துவிட பஹுபாகம் வரும், அதாவது 1000-100=900 மீதம் இருக்கும். ஆகையால் பஹுபாகம் 900 மற்றும் ஒருபாகம் 100 என்றும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

கட்டை நிலையில் அனந்த ஸ்பர்தகங்கள் இருக்கின்றன. அதை தகுதியான சிறிய அனந்தத்தால் வகுத்தால்கூட அனந்தமே வரும். அவைகளில் பெரும்பகுதி மற்றும் ஒருபகுதி செய்யுங்கள். கட்டை நிலையில் பெரும்பகுதி சர்வகாதி ஸ்பர்தகங்கள் மற்றும் ஒருபகுதி தேசகாதி ஸ்பர்தகங்களாகும். இங்கே கருத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால் பிரக்ருதி தேசகாதியாக இருந்தாலும் அதனுடைய ஸ்பர்தகங்களில் சர்வகாதி ஸ்பர்தகங்கள் மற்றும் தேசகாதி ஸ்பர்தகங்கள் இரண்டுமே இருக்கின்றன என்பதைத்தான்.

| **ஸர்வகாதி பிரக்ருதி** | **தேசகாதி பிரக்ருதி** | **தேசகாதி பிரக்ருதி** |
|---|---|---|
| ஸர்வகாதி ஸ்பர்தகம் | ஸர்வகாதி ஸ்பர்தகம் | தேசகாதி ஸ்பர்தகம் |
| கல் | கல் | கட்டை(ஒரு பகுதி) |
| எலும்பு | எலும்பு | கொடி |
| கட்டை (பெரும் பகுதி) | கட்டை(பெரும் பகுதி) | |

இந்த நான்குநிலை கட்டுகளை இப்போது ஞானாவரண (அறிவை மறைக்கும்) கர்மத்தில் பொருத்திப் பார்க்கலாம். கேவலஞானாவரணம் சர்வகாதி (கேவல ஞானத்தை முழுமையாக மறைக்கவல்ல) பிரக்ருதியாகும். அதன் எல்லா ஸ்பர்தகங்களும் சர்வகாதியாகும், அதாவது பதுங்கி நின்று கேவலஞானம் வெளிப்படாதபடி தாக்குவதாகும். இந்த கர்ம உதயம் உயிரின் பர்யாயத்தில்-நிகழ்காலத்தில் கேவலஞானத்தை வெளிப்படுத்த விடுவதில்லை. கர்மம் உயிரில் எதுவும் செய்ய முடியாததுதான், ஆனால் எப்போது உயிர் அதுவாகவே கேவலஞானவடிவில் பரிணமிக்கத் தகுதி கொள்ளாமல் இருக்கிறதோ அப்போது அதற்கு நிமித்தமான கேவலஞானாவரண கர்ம உதயம் அங்கு காணப்படுவதால் அதன்மேல் கேவலஞானத்தை வரவிடாமல் தடுத்ததாக பழி வருகிறது. அந்த சமயத்தில் அங்கு கேவலஞானாவரண கர்ம உதயத்தோடல்லாமல் மற்றபிற ஞானாவரண கர்மங்களின் உதயமும் அங்கு காணப்படுகின்றன.

மதிஞானாவரணம் தேசகாதி பிரக்ருதியாகும். இதன் சர்வகாதி ஸ்பர்தகங்கள் எப்போதும் உதயத்திற்கு வருவதில்லை, எப்போதும் தேசகாதி பிரக்ருதியின் உதயமே நிகழ்கிறது. ஸர்வகாதி ஸ்பர்தகம் உதயமாகும் என்று நீங்கள் எண்ணினால், உயிர் அதன் பர்யாயத்தில் ஞானமில்லாதாக ஆகிவிடும் நிலை உண்டாகும்-உயிர் ஜட அசேத்தனமாக ஆகிவிடும் நிலை வந்துவிடும்-ஆனால் இந்தநிலை எந்த உயிருக்கும் எப்போதும் வருவதில்லை.

இந்த விஷயங்களை தெரிந்துகொண்ட பிறகு இப்போது **க்ஷயோபசமம்** என்றால் என்ன என்பதையும் அதன் வரையறையும் தெரிந்து கொள்ளுதல் மிகவும் சுலபமாக ஆகிவிடும். அதேபோல **க்ஷயோபசமலப்தி** பற்றிய அறிவு பெரும்முன்னர் க்ஷயோபசமத்தின் இயல்பு பற்றி தெரிந்து கொள்ளுதல்கூட மிகவும் அவசியமானதாகும்.

மதிஞானம், சுருதஞானம், அவதிஞானம் மற்றும் மனப்பர்யயஞானம் எல்லாம் க்ஷயோபசமஞானம் என்று நீங்கள் பலமுறை கேட்டிருக்கிறீர்கள். அதற்கு அந்தந்த ஞானங்களின் எதிரியான கர்மங்களின் க்ஷயோபசமம் நிமித்தமாக இருக்கிறது. இதை இப்போது மதிஞானாவரணத்தின் மீது பொருத்திப் பார்க்கலாம். க்ஷயோபசமத்தின் வரையறை இவ்வாறு இருக்கிறது - நிகழ்கால சர்வகாதி ஸ்பர்தகங்கள் உதயமாகாமல் [உதயமாகும் ஸர்வகாதி ஸ்பர்தகங்கள் அதேசமயத்தில் தீயூக(திபுக்) சங்க்ரமணம் அடைந்து தேசகாதியாக மாற்றமடைந்து உதயத்திற்கு வந்து] அழியும்நிலை, எதிர்காலத்தில் உதயத்திற்கு வரவிருக்கும் நிஷேகங்களில் அந்த சர்வகாதி ஸ்பர்தகங்களின் சத்அவஸ்தாவடிவ உபசமம்-அதாவது பலன் கொடுக்க முடியாத நிலையில் உயிரில் படிந்திருத்தல், மற்றும் தேசகாதி ஸ்பர்தகங்களின் உதயம் ஆகிய மூன்றும் அந்த ஞானாவரணகர்ம உதயத்தில் நிகழ்கின்றன, இதையே க்ஷயோபசமம் என்று சொல்கின்றனர்.

நிகழ்காலத்தில் சர்வகாதி ஸ்பர்தகங்கள் அதேவடிவில் உதயமாகாமல் அழிவடைவதையே க்ஷயம் என்று சொல்கின்றனர். இங்கு க்ஷயம் என்பதன் பொருள் சத்துவத்திலிருந்தே அழிதல் என்பதில்லை. எதிர்காலத்தில் வரவிருக்கும் நிஷேகங்களில் அவை மற்ற ஸ்பர்தகங்களுடன் கலந்தே சத்தாவில் இருக்கின்றன, அவை எப்போதும் சர்வகாதி வடிவில் உதயமாவதில்லை, ஆனால் அந்தநிலையில் பந்தவடிவில் இருந்து

கொண்டிருக்கின்றன. அந்தந்த நிஷேகங்களின் ஸ்திதி முழுமை அடைந்ததும் அதிலிருக்கும் சர்வகாதி ஸ்பர்தகங்கள் தேசகாதி ஸ்பர்தகங்களாக திபுக் சங்க்ரமணமடைந்து மற்ற தேசகாதி ஸ்பர்தகங்களுடன் சேர்ந்து உதயத்திற்கு வந்து அழிந்து விடுகின்றன. **அந்த சர்வகாதி நிஷேகங்கள் உதீரணை அடைந்து உதயத்திற்கு வராமல் இருக்கும் நிலையையே சத்அவஸ்தாருப் உபசமம் - அப்ரசஸ்த உபசமம்** என்று சொல்கின்றனர். நிகழ்காலத்தில் தேசகாதி ஸ்பர்தகங்களே உதயத்திற்கு வருகின்றன. தேசகாதி என்றாலே அவை முழுமையாக மறைக்கும் சாமர்த்தியம் கொண்டவைகள் இல்லை என்பதாகும். ஆகையால் ஏகேந்திரியம் முதல் பஞ்சேந்திரியம்வரை உள்ள உயிர்களின் மதி-ஸ்ருத ஞானம் கொஞ்சமாவது வெளிப்படும் நிலையிலேயே இருக்கின்றன. எந்த ஒரு உயிரும் கொஞ்ச ஞானம்கூட இல்லாமல் போவதில்லை. சூக்ஷம நிகோதியா உயிர்களில்கூட ஞானத்தின் ஒரு சிறிய பகுதியாவது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

சற்று முன்னர்தான் நீங்கள் அவதி ஞானாவரண கர்மம் தேசகாதி பிரக்ருதி என்று கூறினீர்கள், பிறகு ஏன் நமக்கு கடுகளவுகூட அவதிஞானம் வெளிப்படவில்லை? என்று நீங்கள் கேட்கலாம். உங்கள் கேள்வி அவசியமான ஆனால் தெளிவற்ற ஒன்று (சுலபமாக புரிதலுக்கு வராத ஒரு விஷயம்தான்) கொஞ்சம் அதிகமாக சிந்தனை செய்தால் நீங்களாகவே இதற்கான பதிலை கண்டுபிடிக்க முடியும்!

பாருங்கள், நமக்கு அவதிஞானம் இப்போது வெளிப்படவில்லை, இது நமக்கு தற்காலத்தில் அந்த ஞானம் வெளிப்படும் தகுதி இல்லாததால் நம்மிடம் வெளிப்படவில்லை என்பதை முதலில் ஏற்றுக் கொள்ளுங்கள்! இப்போது இதில் கர்மத்தின் பங்கு என்னவென்று பார்க்கலாம். அவதிஞானாவரணத்தில் உள்ள சர்வகாதி ஸ்பர்தகங்கள்- கல், எலும்பு, கட்டை (பெரும்பகுதி) நிலை ஸ்பர்தகங்கள் இப்போது அதேநிலையில் உதயத்திற்கு வருகின்றன. ஆகையால் அவதி ஞானம் நமக்கு வெளிப்படவில்லை. இதை நம்முடைய ஔதாயிக அஞ்ஞானம் என்று சொல்கின்றனர். இப்போது எந்த உயிர்களிடம் அவதிஞானம் வெளிப்பட்டிருக்கிறதோ அவைகளிடம் கல், எலும்பு மற்றும் கட்டை (பெரும்பகுதி) நிலை ஸ்பர்தகங்கள் உதயாபாவிஷயம் நிகழ்கிறது, எதிர்காலத்தில் அவைகளின் சத்அவஸ்தாவடிவ உபசமம் இருக்கிறது, மற்ற கொடி நிலை ஸ்பர்தகங்களின் உதயம் காணப்படுகிறது. இது அவர்களுடைய க்ஷயோபசம அவதிஞானமாகும்.

இந்த கொடி வடிவ ஸ்பர்தகங்கள்கூட மந்த மற்றும் தீவிர சக்தி-அனுபாக நிலைகளில் அனேக விதமாக இருக்கின்றன. அதில் தீவிர அனுபாகம் அதாவது தீவிர மறைப்பு சக்தி கொண்டவை உதயமானால் அப்போது குறைந்த சக்தி கொண்ட அவதிஞானம் வெளிப்படுகிறது. ஆனால் மந்த மறைப்பு சக்தி கொண்டவை உதயமானால் அப்போது அதிக சக்தி கொண்ட அவதிஞானம் வெளிப்படுகிறது. இந்த காரணத்தால்தான் தேசாவதி மற்றும் பரமாவதி என அவதிஞானத்தின் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. மிகசக்தி வாய்ந்த ஸர்வாவதி பெயர்கொண்ட ஒருவகை அவதிஞானம் கூட இருப்பது காணப்படுகிறது.

மதி, சுருத ஞானத்தில்கூட தேசகாதி ஸ்பர்தகங்களில் மந்த ஆவரணம் கொண்டவை உதயமானால் மதி சுருத ஞானத்தின் வெளிப்பாடு அதிகமாக இருக்கிறது, மற்றும் தீவிர மறைப்பு சக்தி கொண்ட ஸ்பர்தகங்கள் உதயமானால் வெளிப்படும் மதி சுருத ஞானம் மந்த நிலையில் காணப்படுகிறது.

லப்தி அபர்யாப்த சூக்ஷ்ம நிகோத உயிர்களிடம் சுருத ஞானத்தின் மிகக்குறைந்த அளவு ஞான வெளிப்பாடே காணப்படுகிறது, அந்த ஞானத்தை **பர்யாயஞானம்** என்று சொல்கின்றனர். இதையே அக்ஷரத்தில் அனந்தத்தில் ஒரு பகுதி ஞானம் என்றும் சொல்கின்றனர். அக்ஷரஞானம் என்று சுருதஞானத்தில் ஒரு பிரிவு சொல்லப்படுகிறது. பர்யாய ஞானத்தில் ஞானத்தின் அனந்த அவிபாக பிரதிசேதங்கள் காணப்படுகின்றன. அந்த அவிபாக பிரதிசேதத்தைவிட அனந்தமடங்கு ஞானம் அக்ஷரஞானத்தில் இருக்கிறது. அக்ஷரஞானத்தைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால், ஞானத்தில் எத்தனை அவிபாக பிரதிசேதங்கள் இருக்கின்றனவோ அதில் அனந்தத்தில் ஒரு அவிபாக பிரதிசேத பாக அளவே பர்யாயஞானத்தில் இருக்கிறது. பர்யாயஞானத்திலிருந்து அக்ஷரஞானம்வரை ஞானம் அதிகமாகிக்கொண்டே செல்லச்செல்ல ஞானத்தின் அளவில் அனேக ஸ்தானங்கள் அதாவது பிரிவுகள் காணப்படுகின்றன; அவைகள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு பெயரில் **பர்யாயசமாஜ ஞானம்** என்று அழைக்கின்றனர்.

உயிருக்கு பர்யாயஞானம் என்று சொல்லப்படும் மிகச்சிறிய அளவு ஞானம் என்னவோ இருக்கவே செய்யும், எப்போதும் ஞானமில்லாமல் எந்த உயிரும் இருக்க முடியாது. இதன் பொருளை கொஞ்சம் புரிந்து கொள்ளுங்கள். நமக்கு எவ்வளவு ஞானம் அதாவது எந்தெந்த பொருள்கள் பற்றிய ஞானம் இருக்கிறதோ, அந்த அளவுக்கு ஞானத்தை மறைக்க இயலாத ஞானாவரண கர்ம உதயம் இருக்கிறது என்று புரிந்து கொள்ளவேண்டும். உங்களுக்கு ஜெர்மன்மொழி தெரியாதென்றால், பிறகு உங்களுக்கு ஜெர்மன்பாஷை ஞானாவரண கர்மம் உதயத்தில் இருக்கிறது என்று பொருள். இப்போது ஜெர்மன்மொழி கற்றுக்கொண்டீர்கள் என்றால் அப்போது அந்த மொழி சம்பந்தமான ஞானாவரணம் உதயத்தில் இல்லை என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

அதேபோல பர்யாயஞானம் நிகோத உயிர்களுக்கு வெளிப்பட்டிருக்கிறது, இதன் பொருள் அந்த உயிருக்கு பர்யாயஞானாவரண கர்ம உதயம் இல்லை என்பதாகும். எந்த உயிருக்காவது பர்யாயஞானாவரண கர்மம் உதயம் இருந்தால் அந்த உயிர் எப்போதும் ஞானமில்லாததாக ஜடமாக-அசேத்தனமாக ஆகிவிடும். இந்த நிலைமை முக்காலத்திலும் எப்போதும் ஆவதில்லை. ஆகையால் பர்யாயஞானத்தை **நிராவரணஞானம்**-தடையில்லாத ஞானம் என்று சொல்லப்படுகிறது.

பிறகு இப்போது என்னுடைய கேள்வி, "என்ன உங்களுக்கு பர்யாயஞானம் இருக்கிறதா?" இதற்கு உங்கள் பதில் என்ன என்பதைப்பற்றி கொஞ்சம் சிந்தியுங்கள். "அம்மா! எங்களை நீங்கள் நிகோத உயிர்கள் என்று எண்ணுகிறீர்களா என்ன? நாங்கள் என்னவோ மனமுடைய ஐம்பொறி பர்யாப்த மனித உயிர்கள் ஆவோம். எங்களுடைய ஞானம் என்னவோ நிகோத உயிர்களைவிட அனந்த மடங்காகும்!" இதற்கான பதிலை நான் இரண்டாவது கேள்வி கேட்டபிறகே சொல்லுவேன். நீங்கள் கவனித்து பதில்

சொல்லுங்கள், எந்த கோடீஸ்வரரிடமாவது ஒரு ரூபாய் இருக்குமா, இருக்காதா? சொல்லுங்கள். உங்களிடம் பர்யாயஞானம் இல்லை என்று நீனைப்பீர்களானால், உங்களுக்கு பர்யாய ஞானாவரணகர்ம உதயம் இருப்பதாக எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்!

சம்யக்ஞானசந்திரகாவில் பண்டிட். தோடர்மல்ஜி எழுதுகிறார்-பர்யாயஞானம் இல்லாமல் எந்த உயிரும் இல்லை. கேவலஞானிகளுக்குக்கூட பர்யாயஞானம் சாத்தியமாகும். மஹாஞானத்தில் அல்பஞானம் என்பது ஒரு மிகச்சிறிய பகுதியே என்று தெரிந்து கொள்ளவேண்டும். கேவலஞானிக்கு க்ஷயோபசம ஞானம் இல்லை. அவருடைய ஞானம் என்னவோ ஆவரணங்கள் எதுவுமில்லாத பூரண ஞானமாகும். எப்போது கேவலஞானம் வெளிப்படுகிறதோ அப்போது ஐந்துவகை ஞானாவரண கர்மங்களின் பூரண அழிவு-க்ஷயம் காணப்படுகிறது. முதல் குணஸ்தானத்திலிருந்து 12-ஆம் குணஸ்தானம்வரை உயிர்களுக்கு கேவலஞானம் வெளிப்படவில்லை, இது அவர்களுடைய ஔதாயிக அஞ்ஞானமாகும், மற்றும் அவர்களுக்கு மதி, சுருதம் முதலான ஞானம் க்ஷயோபசம ஞானமாகும்.

இங்கே ஒன்றை புரிந்து கொள்ளுங்கள். கேவலஞானாவரண பிரக்ருதி சர்வகாதி யாகும் ஆனால் அது மற்ற ஞான வெளிப்பாட்டில் பாதிப்பை உண்டுபண்ணுவதில்லை. அது அதற்கு பிரதிபக்ஷமான-எதிரான கேவலஞானத்தையே காதம் செய்வதாக-முழுமையாக மறைப்பதாக இருக்கிறது. அதன் உதயம் இருக்கும்போது மற்ற நான்கு ஞானங்களின் க்ஷயோபசமம் இருக்கவே செய்கிறது. அதேபோல ஸ்தியானக்ருதி முதலான ஐந்து தர்சனாவரண கர்மங்கள் சர்வகாதி யாகும், ஆனால் அவற்றின் உதயம் தர்சனத்தை முழுமையாக மறைப்பதில்லை, அவைகளுக்கு எதிரான விழிப்புடன் இருக்கும் நிலைகளையே அவை முழுமையாக காதம்-மறைப்பு செய்கின்றன. அவைகளின் உதயத்தால் மற்ற நான்கு தர்சனாவரணத்தின் உதயம் அல்லது க்ஷயோபசமம் தகுதியான அளவு இருக்கவே செய்கிறது. இதன் பொருள் கேவல தர்சனாவரணம் சர்வகாதியாகும், அதன் உதயம் 12-ஆம் குணஸ்தானத்தின் கடைசி சமயம்வரை இடைவிடாது உதயத்தில் இருந்து கொண்டிருக்கிறது, அதன் நிமித்தத்தால் கேவலதர்சனம் முழுமையாக மறைக்கப் படுகிறது, ஆனால் மற்ற சக்ஷு, அசக்ஷு தர்சனம் அல்லது அவதி தர்சனம் இருந்துகொண்டிருக்கிறது. விழிப்புடன் இருக்கும்போது நான்கு தர்சனாவரண கர்ம க்ஷயோபசமம்-உதயம் இருக்கிறது, ஆனால் தூங்கும்போது நான்கு தர்சனாவரண கர்ம க்ஷயோபசம உதயத்துடன் ஐந்து நித்திரை சம்பந்தமான ஏதாவது ஒரு நித்ரா தர்சனாவரண கர்மத்தின் உதயமும் உடன் இருக்கிறது.

கர்மம் அழிந்து-க்ஷயமாகி க்ஷாயிகபாவம்-க்ஷாயிகஉணர்வு வெளிப்படுகிறது, கர்மம் க்ஷயோபசமமடைந்து க்ஷயோபசமபாவம்-க்ஷயோபசமஉணர்வு வெளிப்படுகிறது. க்ஷாயிகஞானம் அதாவது கேவலஞானம் சர்வகாதி மற்றும் தேசகாதி ஆகிய இரண்டுவித ஞானாவரண கர்மங்கள் அழிந்ததும் வெளிப்படுகிறது. க்ஷாயிகதர்சனம் அதாவது கேவலதர்சனம் சர்வகாதி மற்றும் தேசகாதி ஆகிய இரண்டு வித தர்சனாவரண கர்மங்கள் அழிந்ததும் வெளிப்படுகிறது. க்ஷயிகசம்யக்துவம் சர்வகாதி மித்யாத்துவம், சம்யக்மித்யாத்துவம் மற்றும் தேசகாதி சம்யக்பிரக்ருதிகள் ஆகிய தர்சனமோஹனீய

கர்மம் அழிந்ததும்-க்ஷயமானதும் வெளிப்படுகிறது. க்ஷாயிக சாரித்திரம்கூட இரண்டு விதமான சாரித்திரமோஹனீய பிரக்ருதிகள் அழிந்ததும் வெளிப்படுகிறது. அந்தராய கர்மத்திற்கு தேசகாதி பிரக்ருதிகள் மட்டுமே இருக்கின்றன, ஆகையால் அதன் அழிவால் க்ஷாயிகதானம், க்ஷாயிகலாபம், க்ஷாயிகபோகம்,க்ஷாயிகஉபபோகம் மற்றும் க்ஷாயிகவீரியம் ஆகியவை வெளிப்படுகின்றன.

ஆனால் க்ஷயோபசமபாவம் என்னவோ தேசகாதி கர்மங்கள் க்ஷயோபசமம் ஆனதும் வெளிப்படுகிறது. சர்வகாதிகளில் க்ஷயோபசமம் நிகழ்வதில்லை. அதேபோல அகாதி கர்மங்களில் கூட க்ஷயோபசமம் என்ற பேச்சுக்கே இடமில்லை. மேலே கூறியபடி க்ஷாயிக பாவங்கள் ஒன்பதாகும், தேசகாதியில் இதை பொருத்திப் பார்த்தால் 18 ஷயோபசம பாவங்கள் உங்களுக்கு சுலபமாகவே தெரியவரும். க்ஷயோபசம பாவம் தேசகாதியின் உதயத்தாலாகும். இவைகளை புரிந்துகொள்ள சர்வகாதி தேசகாதி பிரக்ருதிகளின் பெயர்களைப் பட்டியலிட்டுப் பார்க்கலாம்.

| காதி கர்மம் | | |
|---|---|---|
| **மூல பிரக்ருதி** | **சர்வகாதி** | **தேசகாதி** |
| ஞானாவரணம் | கேவல ஞானாவரணம் | மதி ஞானாவரணம்<br>சுருத ஞானாவரணம்<br>அவதி ஞானாவரணம்<br>மனபர்ய்ய ஞானாவரணம் |
| தர்சனாவரணம் | கேவல தர்சனாவரணம்<br>ஸ்யானகிருத்தி<br>நித்ராநித்ரா<br>பிரசலாபிரசலா<br>நித்ரா<br>பிரசலா | சக்ஷூ தரசனாவரணம்<br>அசக்ஷூ தரசனாவரணம்<br>அவதி தரசனாவரணம் |
| தர்சன மோஹனீயம்<br><br>சாரித்ர மோஹனீயம் | மித்யாத்துவம்<br>சம்யக் மித்யாத்துவம்<br><br>அனந்தானுபந்தி 4<br>அப்ரத்யாக்யானம் 4<br>பிரத்யாக்யானம் 4 | சம்யக்துவம்<br><br><br>சஞ்சுவலனம் 4<br>நோஷாயம் 9 |
| அந்தராயம் | - | தானாந்தராயம்<br>லாபாந்தராயம்<br>போகாந்தராயம்<br>உபபோகாந்தராயம்<br>வீர்யாந்தராயம் |
| மொத்த பிரக்ருதி-47 | 21 | 26 |


இப்போது தேசகாதி பக்கம் பார்த்து க்ஷயோபசம பாவங்களை நினைவில் கொள்ளுங்கள். மதி, சுருதம், அவதி, மனப்பர்யய சம்யக்ஞானங்கள் 4, குஞானங்கள் 3,

தர்சனம் 3, க்ஷயோபசம சம்யக்த்துவம், சராக சாரித்திரம், சய்யமாசய்யமம், மற்றும் தானம் முதலான 5, ஆக மொத்தம் 18 க்ஷயோபசம பாவங்களாகும். இவ்வாறு யோசனை செய்தால், இந்த உணர்வுகள் சுலபமாக நம் கவனத்திற்கு வரும்-எதையும் மனப்பாடம் செய்யாமலேயே நம் ஞாபகத்தில் இருக்கும். இப்போது மேலும்சில வரையறைச் சொற்களின் பொருள்களைப் பார்த்த பிறகு நாம் பஞ்சலப்தி பற்றிய விஷயங்களை தெரிந்துகொள்ள ஆரம்பிக்கலாம்.

உயிரின் பரிணாம நிமித்தத்தால் எப்போது சத்தாவில் இருக்கும் கர்மங்களின் ஸ்திதி மற்றும் பலன் தரும்சக்தி குறைகிறதோ அதை **அபகர்ஷணம்** என்று சொல்கின்றனர், மற்றும் எப்போது அவை அதிகரிக்கிறதோ அதை **உத்கர்ஷணம்** என்று சொல்கின்றனர். அபகர்ஷணத்தில் ஸ்திதி குறைவதை வரைபடம் மூலம் புரியவைக்கின்றனர். முன்னர் நாம் நிஷேக அமைப்பு பற்றி பார்த்தபோது மேலே இருக்கும் நிஷேகங்களிலிருந்து சில பரமாணுக்கள் கீழே இருக்கும் நிஷேகங்களுடன் சேர்ந்து விடுகின்றன என்று சொல்லப்பட்டது மற்றும் வரைபடத்திலும் காட்டப்பட்டிருந்தது.




கர்ம பரமாணுக்கள் என்னவோ அங்கேயே இருக்கின்றன - மேலும் கீழும் போவதில்லை. நாம் தினசரி பத்திரிக்கைகளில் உலக அளவில் நம் ரூபாயின் மதிப்பு கீழே இறங்கும்போது அதை வரைபடத்தின் மூலம் கீழ்பக்கம் கோடு வரைந்து காண்பிப்பக்கப்படுகிறது. ஆனால் நம் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருக்கும் ரூபாய் நோட்டுக்கள் மேலிருந்து கீழே உருளுவதில்லை. பலன்தரும் சக்தியில்கூட இப்படியே புரிந்து கொள்ளவேண்டும். எப்போது ஸ்பர்தகங்களின் பலன்தரும் சக்தி குறைகிறதோ அப்போது மேலே இருக்கும் ஸ்பர்தகங்களில் சிலபரமாணுக்கள் கீழேஉள்ள ஸ்பர்தகங்களுடன் வந்து சேர்ந்து கொள்கின்றன என்று ஆகமங்களில் சொல்லப்படுகிறது. இதன் பொருள் அவைகளின் பலன்தரும் சக்தி குறைந்துவிட்டது என்று புரிந்து கொள்ள வேண்டும்.



மேலே இருக்கும் ஸ்பர்தகங்கள் அல்லது நிஷேகம் எப்போதும் அங்கேயே இருந்து கொண்டே அதிலிருந்து சில பரமாணுக்கள் மட்டும் கீழே உள்ள ஸ்பர்தகங்கள் அல்லது நிஷேகங்களுடன் வந்து சேர்ந்து கொள்ளும்போது அதை அபகர்ஷணம் என்று சொல்கின்றனர், ஆனால் உயிரின் குறிப்பிட்ட விசுத்த பரிணாமத்தின் நிமித்தத்தால் மேலே உள்ள அநேக நிஷேகங்களின் சமூகமே அழிவடைந்து அதிலிருந்த எல்லாப் பரமாணுக்களும் கீழே உள்ள நிஷேகங்களில் வந்து சேர்ந்து கொண்டால் அதை **ஸ்திதிகாண்டக்காதம்** என்று சொல்கின்றனர். மற்றும் மேலே இருந்த அனேக ஸ்பர்தகங்கள் அதேபோல அழிந்து இல்லாமல்போக அதிலிருந்த பரமாணுக்கள் எல்லாம் கீழே குறைந்த அனுபாகம் கொண்ட ஸ்பர்தகங்களுடன் வந்து சேர்ந்து கொள்வதை **அனுபாககாண்டக்காதம்** என்று சொல்கின்றனர்.

காண்டக்காதம் மூலம் கர்மத்தின் ஸ்திதி மற்றும் அனுபாகம் இரண்டும் குறைகிறதே ஒழிய கர்மம் அழிவதில்லை, கர்மம் அழிந்து அகர்மமாக ஆவதில்லை என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். கீழே உள்ள நிஷேகங்களில் பரமாணுக்களின் எண்ணிக்கை அதிகமாகின்றன. இவ்வாறு சத்தாவில் இருக்கும் கர்மத்தின் ஸ்திதி குறைகிறது, அதன் பலன் தரும் சக்தியும் தாழ்ந்து போகிறது. கர்மங்களில் இன்னும் பல அனேக மாற்றங்கள் நிகழ்கின்றன. அவைகளின் பெயர்களையும் மற்றும் ஸ்ரூபங்களையும் பின்னர் அந்தந்த இடங்களில் உங்களுக்கு புரியும்படிச் சொல்கிறேன். அடுத்த கடிதத்திலிருந்து பஞ்சலப்தி விஷயம்பற்றி சர்ச்சை செய்யத் துவங்கலாம்.

ஜெய் ஜினேந்திரா.

உங்கள் அம்மா.

## பிரதமோபசம சம்யக்த்துவம் பெறும் தகுதி

**கடிதம்-5** **30-7-2002**

பிரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

கர்மங்களின் பெயர்கள் மற்றும் அவைகளைப்பற்றி பொதுவாகவும், மற்றும் சில வரையறைச் சொற்களின் அர்த்தங்களையும் தெரிந்து கொண்ட பிறகு நாம் எடுத்துக்கொண்ட மூலவிஷயத்தைப் பற்றி இப்போது சர்ச்சையைத் தொடங்குகிறோம். முன்னர் பீடிகையிலேயே லப்தி பற்றிய சர்ச்சை செய்யப்பட்டது அவசியமானதே யாகும். இந்த விஷயம் இதைப்பற்றி மேலே செல்லச்செல்ல உங்களுக்கே புரியவரும். கடிதம் மூலம் நாம் பஞ்சலப்தி பற்றி மிக மேலோட்டமான அளவிலேயே சர்ச்சை செய்யப்போகிறோம். இந்த விஷயத்தை சூட்க்ஷமமாக கோம்மட்டசாரம், லப்திசாரம், தவளா முதலான கிரந்தங்களில் படித்துத் தெரிந்து கொள்வது தகுதியானதாகும். லப்தி என்ற சொல்லுக்கு பிராப்த்தி, அடைதல், அல்லது லாபம், சில சாதனைகளைச் செய்தல் என்பதாகும். நமக்கு லாபம் அனந்தசுகம் பெறுவதிலேயே இருக்கிறது. அனந்தசுகம் மோக்ஷத்தில் மட்டுமே கிடைக்கிறது. மோக்ஷத்தை அடையும்வழி அதாவது அதற்கு உபாயம் சம்வரையும், நிர்ஜரையுமாகும். அதுவும் சுகவடிவமே யாகும். ஆகையால் அவைகளைப் பெறுவதும் லப்தியாகும்.

எவ்வளவுக்கெவ்வளவு ஊற்றும், கட்டும் (ஆஸ்ரவமும், பந்தமும்) குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு துக்கம் குறைகிறது. கர்ம சித்தாந்தப்படி சொல்ல வேண்டுமென்றால் பந்தத்தில் இழப்பு உண்டாவது அதாவது கர்ம பிரக்ருதிகளின் பந்தம் நின்றுபோவது சம்வரையாகும், மற்றும் முன்னர் கட்டிக்கொண்ட கர்மங்களின் சத்தாவில் இழப்பு அதாவது அதிக அளவில் கர்ம பரமாணுக்கள் விழுந்து போதல் நிர்ஜரையாகும். இந்த காரியம் சம்யக்தரிசனம் அதாவது நம் ஆத்மாவை உறுதிப்படுத்தி அதில் ஆழ்வதின் மூலம் அதாவது ஆன்மனில் ஆழும் சாரித்திரத்தின் மூலம் நிகழ்கிறது, வேறு எந்த வித உயர்ந்த சுப உணர்வு மூலமும் இது நிகழ வாய்ப்பில்லை. எனவேதான் லப்திசாரம் என்ற நூலில் தரிசனமும், சாரித்திரமும் அதாவது நம்பிக்கையும், ஒழுக்கமும் பெறுதலே லப்தி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

லப்தி என்ற சொல் சாஸ்திரங்களில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு அர்த்தங்களில் வருகிறது. க்ஷயோபசம ஞானத்தில் லப்தி மற்றும் உபயோகம் என இரண்டு வேறுபாடுகள் காணப்படுகின்றன. க்ஷயோபசம சிறப்பை லப்தி என்று சொல்கின்றனர் அதாவது அதன் நிமித்தத்தால் ஆத்மாவில் ஏற்படும் ஞான வெளிப்பாடு சக்தியை லப்தி என்று சொல்கின்றனர். தத்துவார்தசூத்திரத்தில் **லப்திஉபயோகௌ பாவேந்திரியம்** என்று ஒரு சூத்திரம் இருக்கிறது. குணம் பெறுதல் என்ற அர்த்தத்தில் குறிப்பிட்ட தபத்தின் மூலம் பாவலிங்கி முனிவர் பெறும் ரித்தியைக்கூட லப்தி என்று சொல்கின்றனர்.

தானாந்தராயம் முதலான அந்தராய கர்மத்தின் ஐந்து பிரக்ருதிகளின் க்ஷயோபசமம் அல்லது க்ஷயத்தால் அடையப்படும் தான, லாப, போக, உபபோக, வீர்யங்களைக்கூட லப்தி

என்று சொல்கின்றனர். அரஹந்த பகவான் ஸ்துதியில் அவரைப்பற்றிய வர்ணனை செய்யும்போது **நவகேவலலப்திரமா தன்ரத்** அதாவது அரஹந்த பகவான் ஒன்பது க்ஷாயிக லப்திகள் பெற்றவராக இருக்கிறார் என சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளாவன க்ஷாயிக ஞானம், க்ஷாயிக தர்சனம், க்ஷாயிக சம்யக்துவம், க்ஷாயிக சாரித்திரம், க்ஷாயிக தானம், க்ஷாயிக லாபம், க்ஷாயிக போகம், க்ஷாயிக உபபோகம், க்ஷாயிக வீரியம் என்ற ஒன்பதாகும்.

இங்கு நாம் தெரிந்து கொள்ளப் போகும் விஷயம் **பஞ்சலப்தி** யாகும். பிரதமோபசம சம்யக்த்வத்திற்கு முன்னர் நிகழும் ஐந்து லப்திகள் பற்றிதான் நாம் இங்கு சர்ச்சை செய்யப்போகிறோம். அவைகளின் பெயர்களாவன: **1.க்ஷயோபசமலப்தி, 2.விசுத்திலப்தி, 3.தேசனாலப்தி, 4.பிராயோக்யலப்தி, 5.கரணலப்தி** என்பனவாகும். இதையே சாகாரதர்மாம்ருதம் என்ற நூலில் **1.சஞ்சித்துவம், 2.சுத்தி, 3.தேசனா, 4.கர்மஹானி, 5.அஸ்தமித்யத்துவம்** என்று வேறு பெயர்களால்-சொற்களால் சொல்லப்பட்டிருக்கின்றன. நியமசாரம் என்ற நூலின் தாத்பர்யவிருத்தி என்ற விளக்கவுரையில் இந்த ஐந்து லப்திகளின் பெயர்கள் 1**.காலலப்தி, 2.கரணலப்தி, 3.உபதேசலப்தி, 4.உபசமலப்தி, 5.பிராயோக்யதாலப்தி** என்று வேறு பெயர்களால் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்த ஐந்து லப்திகள் மூலம் பிரதமோபசம சம்யக்த்துவம் பெறப்படுகிறது. லப்திகளின் ஸ்வரூபத்தைப் பற்றிப் பார்க்கும் முன்னர் பிரதமோபசம சம்யக்த்துவம் என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளலாம். சம்யக்த்துவம் என்ற சொல் உங்களுக்கு நன்கு தெரிந்ததுதான். **தத்துவார்த்த சிரத்தானம் சம்யக்தர்சனம்** என்ற சூத்திரத்தை நாம் முன்னர் விரிவாகவே பார்த்திருக்கிறோம். அனாதி மித்யாதிருஷ்டி உயிர் முதன்முதலில் சம்யக்த்துவத்தைப் பெறும்போது அது ஔபசமிக சம்யக்த்துவத்தையேப் பெறுகிறது. சாதி மித்யாதிருஷ்டி உயிர்கூட கர்மத்தை உபசமம் செய்து சம்யக்த்துவத்தைப் பெறமுடியும். இந்த இரண்டு விதமாகவும் எப்போது கர்மத்தை உபசமம்-தணிவு செய்து மித்யாதிருஷ்டி உயிர் சம்யக்த்துவத்தைப் பெறுகிறதோ அப்போது அதை **பிரதமோபசம சம்யக்த்துவம்** என்று சொல்கின்றனர்.

சாதி மற்றும் அனாதி என்ற சொற்களின் பொருள் உங்கள் நினைவில் இருக்கிறதல்லவா? ச+ஆதி=சாதி மற்றும் அன்+ஆதி=அனாதி. எந்த உயிர் அனாதி காலமாக சம்யக்த்துவத்தை பெறவே இல்லையோ, அது அனாதி காலமாகவே மித்யாத்துவ நிலையிலேயே இருந்து கொண்டு வருகிறதோ அதையே **அனாதி மித்யாதிருஷ்டி** என்று சொல்கின்றனர். எந்த உயிர் சம்யக்த்துவத்தை பெற்றபிறகு மீண்டும் அதத்துவ சிரத்தானத்தால் (தத்துவத்தில் நம்பிக்கையை இழந்ததால்) மீண்டும் மித்யாதிருஷ்டியாக ஆகிறதோ அதை **சாதி மித்யாதிருஷ்டி** என்று சொல்கின்றனர்.

இப்போது எந்த கர்மத்தை உபசமம் செய்து-தணித்து உயிர் சம்யக்த்துவத்தைப் பெறுகிறது என்பதைப் பார்க்கலாம். அனாதி மித்யாதிருஷ்டிகளிடம் தர்சனமோஹனீய கர்மத்தின் மூன்று பிரக்ருதிகளில் மித்யாத்துவப்பிரக்ருதி மட்டுமே சத்தாவில் இருக்கிறது, ஏனென்றால் மித்யாத்துவப் பிரக்ருதி மட்டுமே நேரடியாக பந்தத்தகுதி பெற்றதாக இருக்கிறது. ஆனால் சாதி மித்யாதிருஷ்டியிடம் தர்சனமோஹனீய கர்மத்தின் மூன்று

பிரக்ருதிகளும் அதாவது மித்யாத்துவம், சம்யக்மித்யாத்துவம் மற்றும் சம்யக்த்துவம் ஆகிய மூன்று பிரக்ருதிகளும் கொஞ்சகாலம்வரை சத்தாவில் இருக்கின்றன. ஏனெனில் முதன்முறையாக பிரதமோபசம சம்யக்த்துவம் நிகழ்ந்தபோது மித்யாத்துவப் பிரக்ருதிகளில் உள்ள பரமாணுக்களே மூன்றாக பிரிந்து மூன்று வேவ்வேறு தர்சனமோகனீயப் பிரக்ருதிகளாக பந்த நிலையை அடைகின்றன.

உயிர் முதல் குணஸ்தானத்திலிருந்து நான்காம் குணஸ்தானத்திற்குப் போகும்போது அது தர்சனமோஹனீயம் மற்றும் அனந்தானுபந்தி க்ரோத, மான, மாயா, லோபம் ஆகிய ஐந்து கர்மங்களை உபசமம் செய்கிறது. இங்கு அனாதி மித்யாதிருஷ்டி உயிர் மித்யாத்துவம், அனந்தானுபந்தி நான்கு ஆகிய ஐந்து பிரக்ருதிகளை உபசமம் செய்து பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெறுகிறது. மற்றும் சாதி மித்யாதிருஷ்டி உயிர் தர்சனமோஹனீயத்தின் மூன்று பிரக்ருதிகளையும் [அவைகளின் சத்தா ஒரு கடற்காலத்திற்கும் குறைவாக இருந்தால் மட்டும்] மற்றும் அனந்தானுபந்தியின் நான்கு பிரக்ருதிகளையும் ஆக ஏழு பிரக்ருதிகளையும் உபசமம் செய்து மீண்டும் பிரதமோபசம சம்யக்த்துவத்தை பெறுகிறது. [சாதி மித்யாதிருஷ்டியின் மூன்று தர்சனமோஹனீய பிரக்ருதிகளின் சத்தா ஒரு கடற்காலமோ அதற்கு மேலோ இருந்தால் அவைகளை உபசமம் செய்யும் புருஷார்த்தத்தை மித்யாதிருஷ்டி உயிர் செய்ய முடியாது, அந்த நிலையில் சம்யக்த்துவப் பிரக்ருதி உதயத்திற்கு வர அந்த உயிர் வேதக அதாவது க்ஷாயோபசம சம்யக்த்துவத்தையே பெறுகிறது.]

இதன் பொருள் என்னவென்றால் எப்போதெல்லாம் உயிர் மேலே கூறிய கர்ம பிரக்ருதிகளை உபசமம் செய்து மித்யாத்துவத்திலிருந்து சம்யக்த்துவத்தைப் பெறுகிறதோ அதை **பிரதமோபசம சம்யக்த்துவம்** என்று சொல்வார்கள். முதன்முறையாக சம்யக்த்துவம் பெறப்பட்டது அதனால் பிரதமோபசம சம்யக்த்துவம் என்று சொல்வதில்லை, ஆனால் எப்போதெல்லாம் மித்யாதிருஷ்டி உயிர் இந்த கர்மங்களை ஔபசமிகம்-உபசமம் செய்து சம்யக்த்துவத்தை பெறும்போது அது முதல் முறையோ, இரண்டாவது முறையோ அல்லது அசங்யாதத்துவாத முறையோ அதை பிரதமோபசம சம்யக்த்துவம் என்றே சொல்கின்றனர்.

ஆச்சரியமாக இருக்கிறதா என்ன? நீங்கள் ஒரு முறை சம்யக்த்துவம் பெற்றுவிட்டால் நம் காரியம் முடிந்துவிட்டது என்ற எண்ணம் கொள்ளக்கூடாது! எந்த உயிராவது சம்யக்த்துவமடைந்து பிறகு அதிலிருந்து இழிந்துவிட்டால் (மூடநம்பிக்கை கொள்ளுமானால்) அதிகபட்சம் அர்த்தபுத்கலபராவர்த்தன காலம்வரை அது மித்தியாத்துவத்திலேயே அலைந்து திரிந்து கொண்டிருக்க முடியும். இது அனந்த காலமாகும். தத்துவ ஸ்ரத்தானியாகி ஆத்ம அனுபவம் பெற்ற பிறகு அதிலிருந்து விடுபட்டு உயிர் மீண்டும் மித்யாத்த்வத்திற்குச் செல்லமுடியும். ஆமாம்! திரவ்யானுயோகத்தில் மற்றும் எப்போது உபதேசத்திற்கு முக்யத்துவம் கொடுத்து உயிரை சம்யக்த்துவம் பெறும் புருஷார்த்தத்தில் ஈர்க்கப்படும்போது, அது அதிலிருந்து விடுபட்டு மீண்டும் மித்யாத்துவத்திற்கு செல்வது பற்றி அங்கு பேசப்படுவதில்லை. ஆனால் இங்கு கரணானுயோகத்தில் பொருளின் உண்மையானநிலை எடுத்துச் சொல்லப்படுகிறது. இவைகள் கேவலஞானத்தால் மட்டுமே தெரிந்து கொள்ளக்கூடிய விஷயமாக இருக்கிறது.

ஒரே உயிர் எத்தனைமுறை சம்யக்த்துவத்திலிருந்து மித்யாத்துவத்தில் விழுகிறது என்பதை கரணானுயோகம் துல்லியமாக சொல்லக்கூடியதாக இருக்கிறது.

இதைப் படித்து பயப்பட வேண்டிய அவசியமில்லை. சம்யக்த்துவமடைந்த பிறகு அதை இழந்து விடுவோம் என்ற கட்டாயமுமில்லை. அப்படி சம்யக்த்துவத்திலிருந்து மித்யாத்துவத்திற்கு இழியும் சாத்தியம் இருக்கிறது என்று சொல்லப்படுவதால் நாம் சம்யக்த்துவம் பெறும் முயற்சியை-புருஷார்த்தத்தை செய்யவேண்டியதேயில்லை என்று யாராவது சொல்லுவார்களானால், அவர்களுக்குப் புரியவைக்க ஒருமுறை சம்யக்த்துவம் பெற்றால் அல்ப காலத்தில் நீ முக்தி அடைவாய், இப்போது நீங்கள் விரும்பினால்கூட அதிககாலம் சம்சாரத்தில்-பிறவி சுழற்சியில் சுற்றித் திரிய வேண்டியிருப்பதில்லை. யாராவது சம்யக்த்துவம் பெற்ற பிறகு அவருக்கு மதம் பிடித்துவிட்டல்-கர்வம் வந்துவிட்டால், பெருமை கொண்டால், பர்யாயத்தில் தான் என்ற கர்வம்-அஹங்காரம் இருக்குமானால், அவர்கள் பிரஷ்டராகி மித்யாத்துவத்திற்கு அவர்களாகவே வந்து விடுகிறார்கள். பல்யத்தில் அசங்க்யாத பாகம் எவ்வளவோ அத்தனை முறை உயிர் மித்யாத்துவத்திலிருந்து சம்யக்த்துவத்திற்கும் பிறகு சம்யக்த்துவத்திலிருந்து மித்யாத்துவத்திற்கும் வரமுடியும், ஆகையால் அவரவர்களின் பரிணாமங்களை-உணர்வுகளை கவனித்துக் கொள்ளுங்கள், திடசிரத்தைக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்காகவே அவ்வாறு உபதேசம் செய்யப்படுகிறது.

சம்யக்த்வம் **1.ஔபசமிக** அல்லது **உபசம சம்யக்த்துவம், 2க்ஷாயோபசமிக** அல்லது **க்ஷயோபசம** அல்லது **வேதக சம்யக்த்துவம், 3.க்ஷாயிக சம்யக்த்துவம்** என மூன்று விதமாக இருக்கிறது. தர்சனமோஹனீயம் மற்றும் அனந்தானுபந்தி கர்மங்களின் உபசமம், க்ஷயோபசமம் மற்றும் க்ஷயம் எப்போது நிகழ்கிறதோ அப்போது முறையே அந்த சம்யக்த்துவ நிலையை ஔபசமிக-உபசம, க்ஷயோபசமிக-க்ஷயோபசம-வேதக, மற்றும் க்ஷாயிக சம்யக்த்துவம் என்று சொல்கின்றனர்.

உபசம காலத்தில் இந்த கர்மங்கள் உதயத்தில் இருப்பதில்லை, ஆனால் இந்த கர்மங்கள் என்னவோ சத்தாவில் இருக்கின்றன, ஆனால் அந்தர்முகூர்த்த காலம்வரை அவைகள் உதயத்திற்கு வராமல் அடக்கி வைக்கப்படுகின்றன. க்ஷயோபசம காலத்தில் மித்யாத்துவம், சம்யக்மித்யாத்துவம் மற்றும் நான்கு அனந்தானுபந்தி கஷாயங்கள் ஆகிய ஆறு பிரக்ருதிகளின் உபசமமும் சம்யக்த்துவப் பிரக்ருதியின் உதயமும் இருக்கிறது. சம்யக்த்துவப் பிரக்ருதி தேசகாதியாகையால் அதன் உதயம் சம்யக்த்துவத்தின் வெளிப்பாட்டில் தடங்கள் செய்வதில்லை. சாதி மித்யாதிருஷ்டி உயிர் முதல் குணஸ்தானத்திலிருந்து க்ஷயோபசம சம்யக்த்துவத்தை பெற்று நான்காம் குணஸ்தானத்தை அடைய முடியும், அல்லது பிரதமோபசம சம்யக்த்துவம் பெற்று அதன் அந்தர்முகூர்த்த காலம் முடிவடைந்ததும் க்ஷயோபசம சம்யக்த்துவ நிலையில் நான்காம் குணஸ்தானத்திலேயே இருக்கமுடியும். க்ஷாயிக சம்யக்த்துவத்தில் இந்த எல்லா கர்மங்களும் சத்தாவிலிருந்து முழுமையாக அழிந்த நிலை காணப்படுகிறது.

ஔபஷமிக அல்லது உபசம சம்யக்த்துவம் **1.பிரதமோபசம சம்யக்த்துவம், 2.திவிதியோபசம சம்யக்த்துவம்** என இரண்டு விதமாகும். முதன்முதலில் உண்டானது

பிரதமோபசம சம்யக்த்துவம், இரண்டாவதாக உண்டானது திவிதியோபசம சம்யக்த்துவம் என்பது இதன் பொருளல்ல. பிரதமோபசம சம்யக்த்துவம் பற்றி சற்று முன்னர் நாம் பார்த்தோம். திவிதியோபசம சம்யக்த்துவம் யாருக்கு எப்போது தோன்றுகிறது என்பதை சுருக்கமாக இப்போது பார்க்கலாம். ஆறு, ஏழு குணஸ்தாணங்களில் க்ஷயோபசம சம்யக்த்துவத்துடன் இருக்கும் முனிராஜர் உபசம ஸ்ரேணி ஏற அதாவது 8, 9, 10, 11 குணஸ்தாணங்களில் ஏறுவதற்காக தன் ஆத்மாவை நேர்கொள்ளும்போது ஏழாவது குணஸ்தானத்தில் க்ஷயோபசம சம்யக்த்துவத்திலிருந்து மீண்டும் அவர் அந்த ஏழு கர்மங்களையும் [அவைகளின் ஸ்திதி எவ்வளவளவாக இருத்தாலும்] உபசமம் செய்து இரண்டாவது முறையாக உபசம சம்யக்த்துவத்தைப் பெறுகிறார். இதையே திவிதியோபசம சம்யக்த்துவம் என்று சொல்கின்றனர்.

[பிரதமோபசம சம்யக்த்துவம், ஷாயோபசம சம்யக்த்துவம் இரண்டின் இருப்பும் நான்காம் குணஸ்தானம் முதல் ஏழாம் குணஸ்தானம்வரைதான் காணப்படுகிறது. க்ஷயோபசம சம்யக்த்துவத்தை உடைய முனிவர் ஏழாவது குணஸ்தானத்தின் சாதிசய அபிரமத்த பிரிவில் உபசமஸ்ரேணியைப் பற்ற எதிர்கொள்கிறார். அப்போது அந்த முனிவருக்கு திவிதியோபசம சம்யக்த்துவம் தோன்றுகிறது. திவிதியோபசம சம்யக்த்துவத்தின்போது அனந்தானுபந்தி கஷாயங்கள் நான்கின் விசம்யோஜனமும் (மற்ற மூன்று கஷாய நான்மைகளாக மாற்றமடைதலும்) தர்சனமோஹனீய பிரக்ருதிகளின் உபசமமும் நிகழ்கிறது. இவ்வித சம்யக்த்வ நிலையிலுள்ள உயிர் உபசமஸ்ரேணியைப் பற்றி 11-ஆம் குணஸ்தானம் வரைச் செல்கிறது. பிறகு அங்கிருந்து வீழ்ச்சியடைந்து கீழ் குணஸ்தானங்களில் முறையாக இறங்குகிறது. வீழ்ச்சி நோக்கில் 7, 6, 5, 4-காவது குணஸ்தானங்களில் திவிதியோபசம சம்யக்த்துவம் காணப்படுகிறது.

**க்ஷயோபசம(வேதக) சம்யக்த்துவம்:** மித்யாத்துவம், சம்யக்மித்யாத்துவம், அனந்தானுபந்தி குரோத, மான, மாயா, லோபம் இவைகள் ஆறும் சர்வகாதி பிரக்ருதிகளாகும். இவற்றில் நிகழ்காலத்தில் உதயத்திற்கு வரக்கூடிய நிஷேகங்களின் உதயாபாவி க்ஷயமும், வரும்காலத்தில் உதயத்திற்க்கு தகுதியுடைய நிஷேகங்களின் சத்தாவடிவ உபசமமும், சம்யக்த்வப் பிரக்ருதி எனும் தேசகாதி பிரக்ருதியின் உதயமும் உள்ளபோது தோன்றும் சம்யக்த்துவத்தை க்ஷயோபசம சம்யக்த்துவம் என்று சொல்கின்றனர். இந்த நிலையில் **சல, மல, அகாட** தோஷங்கள் நிகழ்கின்றன. ஆறு சர்வகாதி பிரக்ருதிகளின் உதயாபாவி க்ஷயம் மற்றும் சத்தாவஸ்த வடிவ உபசமம் ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசும்போது அதை க்ஷயோபசம சம்யக்த்துவம் என்றும், சம்யக்த்துவ பிரக்ருதியின் உதயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசும்போது அதை வேதக சம்யக்த்துவம் என்றும் கூறுகின்றனர். எப்படிச் சொன்னாலும் இரண்டும் ஒன்றேயாகும்.

**க்ஷாயிக சம்யக்த்துவம்:** மித்யாத்துவம், சம்யக்மித்யாத்துவம், சம்யக்த்துவம் ஆகிய தர்சனமோஹனீய மூன்று பிரக்ருதிகள், அனந்தானுபந்தி சாரித்ரமோஹனீய குரோத, மான, மாயா, லோபமாகிய நான்கு பிரக்ருதிகளும் முற்றிலும் அழியும்போது தோன்றுவது க்ஷாயிக சம்யக்த்துவமாகும். இதை கர்மபூமி மனிதனே கேவலி அல்லது சுருதகேவலி பாதமூலத்தில் இருக்கும்போது துவங்குகிறான், அங்கு இருந்தால் மட்டுமே க்ஷாயிக

சம்யக்த்துவம் பெறும் செயலைத் துவங்க முடியும். இதன் துவக்கம் கேவலி அல்லது சுருதகேவலி பாதமூலத்தில் இருந்தாலும், இதன் நிறைவு நான்கு கதிகளிலும் எங்கு வேண்டுமானாலும் நிகழலாம். அதாவது ஒரு உயிர் கேவலி அல்லது சுருதகேவலி பாதமூலத்தில் ஏழு பிரக்ருதிகளையும் க்ஷயம் செய்ய ஆரம்பிக்கிறது என்றாலும் அது நிறைவு பெறும் முன்னரே மரணமடையுமானால், அது செல்லும் எந்த கதியிலும் அந்த செயல் நிறைவு பெற்றுவிடும். க்ஷாயிகசம்யக்த்துவத்தை வேதகசம்யக்த்துவ உயிரே செய்ய முடியும். இதை நான்காம் குணஸ்தானத்திலிருந்து ஏழாம் குணஸ்தானம் வரை உள்ள உயிர்களால் செய்ய முடியும். க்ஷாயிக சம்யக்த்துவம் சாதிஅனந்தம் அதாவது இதற்கு துவக்கம் உண்டு ஆனால் முடிவு இல்லை, அதாவது சிந்த நிலையிலும் இது உயிர்களிடம் தொடர்ந்து இருக்கும். க்ஷாயிக சம்யக்திருஷ்டி உயிர் அதே பிறவியில், அல்லது மூன்றாவது, அதிகபட்சம் நான்காவது பிறவியில் அவசியம் முக்தியடையும். க்ஷாயிக சம்யக்திருஷ்டி உயிர் சம்யக்த்துவம் பெறும்முன் ஆயுள் கட்டியிருந்தால் ஒரு நரக பிறவி அல்லது ஒரு தேவ பிறவி எடுத்து பிறகு மனித பிறவியில் பிறந்து முக்தி பெறும். மனித அல்லது திரியன்ச ஆயுள் கட்டியிருந்தால் போக பூமியில் பிறந்து பிறகு தேவனாகி அதன்பிறகு மனிதகதியில் பிறந்து முக்தியடையும்.]

நாம் இப்போது பிரதமோபசம சம்யக்த்துவம் அதாவது மித்யாத்துவத்திலிருந்து சம்யக்த்துவம் பெறுவது சம்பந்தமாக சர்ச்சை செய்து கொண்டிருக்கிறோம். முதன்முதலில் யாரால் பிரதமோபசம சம்யக்த்துவத்தை பெறமுடியும், மற்றும் யாரால் பெறமுடியாது? என்பதைப் பார்க்கலாம்.

நான்கு கதி உயிர்களில் பவ்யர்களும், மித்யாதிருஷ்டிகளும்-மூடநம்பிக்கை கொண்டவர்களும், மனமுடைய ஐம்பொறி உடையவர்களும், பர்யாப்தமடைந்த உயிர்களும், மனித மற்றும் விலங்கு கதிகளில் கர்பத்தில் பிறந்தவர்களும், மந்த கஷாயத்துடன் விசுத்த பரிணாமம் உடையவர்களும், விழிப்பு நிலையில் உள்ளவர்களும், சாகார ஞானோபயோகம் உடைய உயிர்களும் பஞ்சலப்தியின் அனிவிருத்திகரண முடிவின் அடுத்த சமயத்தில் பிரதமோபசம சம்யக்த்துவத்தை பெறுகின்றனர். இப்போது மேலே எவையெவைகளையெல்லாம் பிரதமோபசம சம்யக்த்துவம் பெறப் பாத்திரத்தன்மை என்று சொல்லப்பட்டதோ அவைகளைப் பற்றி சர்ச்சை செய்யலாம்.

மனித, விலங்கு, தேவ மற்றும் நாரகி என நான்குகதியிலும் உள்ள மூடநம்பிக்கை கொண்ட பவ்விய உயிர்கள் மட்டுமே பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெறமுடியும், அபவ்வியர்களாக இருந்தால் பெறமுடியாது.

அப்படிப்பட்ட அநியாயம் ஏன்? அபவ்விய உயிர்களிடம் அப்படி எந்த கர்ம உதயத்தால் அவர்களால் பிரதமோபசம சம்யக்த்துவத்தை பெறமுடிவதில்லை என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம். இதற்கு பதில், பவ்வியர், அபவ்வியர் என்ற பிரிவு எந்த கர்மத்தின் காரணத்தாலும் அல்ல. அவை உயிரின் பாரிணாமிக பாவமாகும் அதாவது இதற்கு எந்த கர்மத்தையும் காரணம் காட்டமுடியாது. பவ்வியர், அபவ்வியர் என்ற தகுதி இயற்கையாகவே உயிர்களிடம் அனாதியாகவே காணப்படுகிறது. அபவ்ய உயிர் மூன்று காலத்திலும் எப்போதும் சம்யக்த்துவத்தை பெறமுடியாதவைகளாகவே இருக்கின்றன.

அவைகளிடம் பிராயோக்ய லப்திவரை நான்கு லப்திகள் என்னவோ நிகழமுடியும், ஆனால் கரணலப்தி அவர்களுக்கு நிகழ்வதில்லை மற்றும் அவர்கள் சம்யக்த்துவத்தை எப்போதும் பெறுவதில்லை.

பவ்விய உயிர்களிடம் பாத்திரத்தகுதி என்னவோ இருக்கிறது. அவைகளில்கூட காலலப்தி வந்தபிறகு பவிதவ்வியத்துவத்திற்கு-காரியம் நிகழும் தகுதிக்கு உகந்தார்போல புருஷர்த்தம் இருந்தால் சம்யக்த்துவம் பெறப்படும், அதற்கு அங்கு தேசனா வடிவ நிமித்தமும் இருக்கும். யார் அர்த்தபுத்கல பராவர்த்தன காலத்தில் மோக்ஷம் அடைவாரோ அவரே முதன்முதலில் சம்யக்த்துவம் பெறும் தகுதியை அடைகிறார். யாருக்கு மோக்ஷமடைய இன்னும் அர்த்தபுத்கல பராவர்த்தன காலத்தைவிட அதிக காலம் இருக்கிறதோ அந்த உயிரும் அல்லது அனந்தானந்த காலத்திற்குப் பிறகும்கூட மோக்ஷம் அடையப்போவதில்லையோ அப்படிப்பட்ட தூரானுதூர பவ்விய உயிர்களாலும் சம்யக்த்துவத்தைப் பெறமுடியாது. நாம் **காரண காரிய இரகசியம்** புத்தகத்தில் ஐந்து சமவாயங்கள் பற்றி சர்ச்சை செய்திருக்கிறோம். சம்யக்த்துவம் பெறும்போதும் ஐந்து சமவாயங்களும் இருக்கின்றன. காலலப்தி வந்துவிட்டது ஆகையால் புருஷர்த்தம் இல்லாமலேயே சம்யக்த்துவம் வெளிப்பட்டுவிடும் சாத்தியம் இல்லை. கர்மங்களை உபசமம் செய்யும் புருஷார்த்தத்தை செய்தால் சம்யக்த்துவத்தைப் பெற்றுவிடலாம் அல்லவா? என்று நீங்கள் கேட்கலாம்.

மகள்களே! பவ்யர்களே!! இங்கே பாருங்கள், உயிரின் புருஷார்த்தம் உயிரால் ஸ்வயம்தன் உயிரிலேயே செய்யப்படுவதாகும். ஒரு திரவியத்தின் எந்த பர்யாயமும் வேறு திரவியத்தை கொண்டு வரவோ அல்லது அதன் பர்யாயத்தை மாற்றவோ அல்லது அதை அழிக்கவோ முடியாது. பிரதமோபசம சம்யக்த்துவம் பெறும் முன்னரும், பின்னரும் பந்த நிலையில் இருக்கும் கர்மங்களிலும், பின்னர் கட்டிக்கொள்ளப்போகும் கர்ம பந்தத்திலும் அனேக மாற்றங்கள்-நிலை வேறுபாடுகள் நிகழ்கின்றன. கர்மத்தின் இந்த எல்லா அவஸ்தைகளும்-நிலை வேறுபாடுகளும் கர்மத்தில் அதன் சுயதகுதியாலேயே நிகழ்கின்றன. உயிர் தன்னில் தத்துவ சிந்தனை(விசார்) மற்றும் தத்துவ நிர்ணயம்-உறுதி படுத்துதல் மட்டுமே செய்கிறது-அதுவே உயிரின் புருஷார்த்தமாகும். உயிர் தத்துவ சிந்தனையில் இருக்கும்போதே, கர்மத்தில் உபசமம் தானாகவே நிகழ்கிறது, உயிர் கர்மத்தில் எதுவும் செய்ய வேண்டியதாகயில்லை-உயிரால் கர்மத்தில் எதுவும் செய்யவும் முடியாது.

இவ்வாறு நான்கு கதியிலும் உள்ள மித்யாதிருஷ்டி உயிர்களே பிரதமோபசம சம்யக்த்துவத்தை பெறுகின்றன என்று நாம் பார்த்தோம். சற்று கவனியுங்கள், இங்கு நாம் மித்யாதிருஷ்டிக்கு என்று கூறினோம், சம்யக்திருஷ்டிக்கு என்று சொல்லவில்லை. ஏனென்றால் க்ஷயோபசம சம்யக்த்துவத்தை உபசம சம்யக்திருஷ்டிகளே பெறுகின்றனர், இதன் பொருள் பிரதமோபசம சம்யக்த்துவத்தின் மூலம் க்ஷயோபசம சம்யக்த்துவம் பெறப்படுகிறது, மற்றும் க்ஷயோபசம சம்யக்த்துவம் மூலம் க்ஷாயிக சம்யக்த்துவம் பெறப்படுகிறது. எனவே பிரதமோபசம சம்யக்த்துவத்தை வெளிப்படுத்தும் காரியத்தை மித்யாதிருஷ்டி உயிர்களே செய்கின்றன.

நான்குகதி உயிர்களிலும் மனமுடைய ஐம்பொறி உயிர்களுக்கு மட்டுமே பிரதமோபசம சம்யக்த்துவம் உண்டாகும். அபர்யாப்த உயிர்களுக்கும், மனமில்லாத உயிர்களுக்கும் பிரதமோபசம சம்யக்த்துவம் உண்டாகாது. பர்யாப்தம், அபர்யாப்தம் பற்றி **கரணானுயோக அறிமுகம்** புத்தகத்தில் விரிவாகவே சர்ச்சை செய்திருக்கிறோம். எந்த உயிருக்கு பர்யாப்தி முழுமை அடைகிறதோ அதை பர்யாப்த உயிர் என்கிறோம். அந்த உயிருக்கு பர்யாப்த நாமகர்ம உதயம் இருக்கிறது. எந்த உயிர் ஒரு பர்யாப்திகூட முழுமை அடையும் முன்னரே, சுவாசத்தின் 1/18 பாகத்தில் மரணத்தை தழுவுகிறதோ அந்த உயிரை அபர்யாப்த உயிர் என்று சொல்கின்றனர். அந்த உயிருக்கு அபர்யாப்த நாமகர்மத்தின் உதயம் காணப்படுகிறது. அந்த உயிரை லப்தி அபர்யாப்தக (லப்திஅபர்யாப்தி) உயிர் என்று சொல்கின்றனர், அல்லது சூத்ரபவ உயிர் என்று சொல்கின்றனர்.

பர்யாப்த உயிர்களில்கூட இரண்டாவதான சரீர பர்யாப்தி முழுமையடையும் காலம்வரை அந்த உயிரை நிவ்ருத்தி அபர்யாப்தக உயிர் என்று சொல்கின்றனர். நான்குகதி பர்யாப்த உயிர்களும் முதலில் நிவ்ருத்தி அபர்யாப்தக்காக இருந்து அவைகளில் சரீர பர்யாப்தி முழுமை அடைந்ததும், அந்த உயிர்களைப் பர்யாப்த உயிர்கள் என்கின்றனர். அப்படிப்பட்ட உயிர்கள், எல்லா பர்யாப்திகளும் பூர்த்தியடையும் முன்னர் மரணமடைவதில்லை. மனிதர்களில் எல்லா கர்பஜ மனிதர்களும் பர்யாப்தக உயிர்களே யாவர், சம்மூர்ச்சன மனிதர்கள் எல்லாம் லப்தி அபர்யாப்தர்களே யாவர்.

தேவர், நாரகி மற்றும் மனிதர்கள் எல்லாம் நியமமாக-விதிப்படி மனமுடைய ஐம்பொறி உயிர்களாவர். விலங்கு கதியில்-திரியன்ச கதியில் ஒருபொறி முதல் மனமுடைய ஐம்பொறி உயிர்கள் வரை காணப்படுகின்றன. ஒருபொறி முதல் மனமில்லத ஐம்பொறிவரை உடைய உயிர்களுக்கு சம்யக்த்துவம் பெரும் தகுதி-பாத்திரத்தன்மை இருப்பதில்லை, சம்யக்திருஷ்டி உயிர் இறந்து இந்த பிறவிகளில்கூடச் சென்றுப் பிறப்பதில்லை. மனமுடைய திரியன்ச உயிர்களிடமே சம்யக்த்துவம் பெறும் தகுதி இருக்கிறது. இதற்கு காரணம் என்னவென்றால் மனமுடைய உயிர்களிடமே உபதேசத்தை கேட்கவும், கேட்டதை நினைவில் வைத்துக் கொள்ளவும், அதைப்பற்றி சிந்தனை செய்யவும், தத்துவ நிர்ணயம் செய்யவும் தேவையான ஞானத்தின் வெளிப்பாடு காணப்படுகிறது. மனமில்லாத உயிர்களிடம் இந்தத் தகுதிகள் எதுவும் இல்லை.

தேவ, நாரகி உயிர்கள் பர்யாப்த நிலையை அடைந்த பிறகு பிரதமோபசம சம்யக்த்துவத்தை வெளிப்படுத்த முடியும். மனித, விலங்கு கதியில் சம்யக்த்துவம் பெற கர்ப்பத்தில் பிறத்தல் அவசியமாகும். இந்த இரண்டு கதியில் பிறக்கும் அபர்யாப்த உயிர்களுக்கும், சம்மூர்ச்சன உயிர்களுக்கும் பிரதமோபசம சம்யக்த்துவம் உண்டாவதில்லை. மனித பிறவியில் கர்ப்ப காலத்துடன் சேர்த்து எட்டு வருடங்கள் ஆன பிறகு பிரதமோபசம சம்யக்த்துவம் பெறும் தகுதி-பாத்திரத்தன்மை பெறப்படுகிறது, அதற்கு முன்னர் அந்தத் தகுதி வருவதில்லை. கர்ப்பத்தில் பிறக்கும் விலங்குகள் கர்ப்பத்திலிருந்து வெளியில் வந்ததும் அதாவது பிறந்த பிறகு அந்தந்த பிறவிக்கு தகுதியன காலத்தில் சம்யக்த்துவம் பெறும் தகுதியைப் பெறுகின்றன. இந்த காலம் திவஸ்பிரதக்-அதாவது நாள் கணக்கில்தான் இருக்கிறது. அதாவது விலங்குகதி உயிர்கள் பிறந்த 3 முதல் 9 நாட்களுக்குள்ளேயே சம்யக்த்துவம் பெறும் தகுதியைப் பெற்று விடுகின்றன.

“நாங்கள் பூஜ்ய கான்ஜி ஸ்வாமிஜியின் பிரவசனங்களில் பலமுறை சுயம்பூரமண சமுத்திரத்தில் அசங்க்யாத சம்மூர்ச்சன மஹாமத்ஸயங்கள்-பெரிய மீன்கள் சம்யக்திருஷ்டகளாகவும், ஐந்தாம் குணஸ்தானத்திலும் இருக்கின்றன என்று படித்திருக்கிறோம். ஆனால் நீங்கள் என்னவோ கர்ப்பத்தில் பிறக்கும் விலங்குகள் பற்றி மட்டுமே சொல்கிறீர்களே?கர்ப்பஜ பிறப்பு மற்றும் சம்மூர்ச்சன பிறப்பு பற்றியும் சொல்லுங்களேன்” என்று நீங்கள் கேட்கலாம்.

நாம் பிரதமோபசம சம்யக்த்துவம் பற்றி இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த சம்மூர்ச்சன மனமுடைய ஐம்பொறி விலங்குகள் சாதி மித்யாதிருஷ்டிகளாகும். ஆகையால் அவைகள் க்ஷயோபசம சம்யக்த்துவம் பெறமுடியும், ஆனால் பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெறமுடியாது. கர்ப்பஜம் என்பதன் பொருள் அம்மாவின் கர்ப்பத்திலிருந்து பிறப்பது. கர்ப்பத்தில் பிறக்கும் உயிர் அம்மாவின் பெண்விதை(முட்டை)யும், அப்பாவின் வீரியம் எனும் விந்துவும் சேரும் நிமித்தத்தால் அம்மாவின் கர்ப்பத்தில் அந்த உயிருடன் உடல் அமைந்து சில(9)மாதங்கள் வளர்ந்து பிறகு பிறப்பது கர்ப்பஜபிறவி என்று சொல்லப்படுகிறது. சம்மூர்ச்சன உயிர்கள் ஆசம்மதாத் அதாவது உயிர் பிறவி எடுக்கும் சுற்றுப்புரத்திலிருந்து புற்கலங்களை ஈர்த்து அதாவது ஆஹார வர்க்கணைகளை கிரஹித்து அதன் உடலை செய்து கொண்டுப் பிறத்தலாகும். மனமுடைய ஐம்பொறி சம்மூர்ச்சன விலங்குகதி உயிர்கள் பர்யாப்தம், அபர்யாப்தம் ஆகிய இரண்டு நிலையிலும் பிறக்க முடியும். ஒருபொறிமுதல் நான்கு பொறிவரை உள்ள எல்லா திரியன்ச-விலங்கு பிறவிகளும் சம்மூர்ச்சன பிறவிகளேயாகும். அவைகளிலும் பர்யாப்தம், அபர்யாப்தம் என இரண்டுவகையான பிறவி எடுக்கும் உயிர்களும் உண்டு.

மனிதர்களிலும்கூட சம்மூர்ச்சன உயிர்கள் காணப்படுகின்றன, ஆனால் அவைகள் எல்லாம் அபர்யாப்த உயிர்களேயாகும். ஆர்ய கண்ட மகளிர்களின் அக்குள், தொப்புள் மற்றும் அவர்கள் உடலின் குறிப்பிட்ட இடுக்கான பாகங்களில் சம்மூர்ச்சன மனிதர்களின் உற்பத்தி காணப்படுகின்றன. பிறப்புகள் பற்றி இவ்வளவு பார்த்த பிறகு தேவ மற்றும் நரக உயிர்களின் பிறப்பு பற்றியும் பார்த்து விடலாம். அவர்களின் பிறப்பு உபபாத பிறப்பாகும். சொர்க்கத்திலும், நரகத்திலும் அம்மா, அப்பா மூலம் குழந்தைகள் பிறப்பதில்லை. அவர்கள் பிறப்பிடம் உபபாதமாகும், அங்கு அவர்கள் அந்தர்முகூர்த்தகாலத்தில் முழு வளர்ச்சியடைந்த இளைஞர் நிலையில் பிறக்கின்றனர். சொர்க்கத்தில் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள், சிறுமிகள் யாரும் இல்லை. அங்கிருப்பவர்களுக்கு குழந்தைகள், சிறிய பிள்ளைகள் என்பதேயில்லை.

“ஹாய்யா! கேட்பதற்கே எவ்வளவு நன்றாக இருக்கிறது!! நாம் நாள் முழுவதும் நம் குழந்தைகளை கவனிக்கவும், அவர்களுக்கு விளையாட்டு காட்டவும், உணவு ஊட்டவும், கல்வி கற்பிக்கவும், வீட்டுப் பாடங்களை செய்விக்கவும் பயித்தியம்போல அலைந்து கொண்டிருக்கிறோம். அதனால்தான் அங்கு எல்லோரும் ஸவர்க்க சுகம் அனுபவிக்கின்றனர் என்று சொல்கிறார்கள் போலும். நம் நாள்முழுவதும் குழந்தைகளைக்

கையாளுதலிலேயேயும், அவர்களுடைய முடியை சீர்படுத்துவதிலுமேயே சென்று விடுகிறது.” என்று நீங்கள் சொல்லுவீர்கள்.

இது போகட்டும், இதோடு மட்டுமல்ல, பின்னால் படும் கஷ்டங்களுக்கும் எந்தக் குறைவும் இல்லை. நம் வாழ்க்கை முழுவதையும் அவர்களுக்குச் செலவிட்டு அவர்களைப் பெரியவர்களாக்கியதும், நம் வயதான காலத்தில் நம் பிள்ளைகள் நம்மை தனிமையில் விட்டுச் சென்ற பிறகும் கூட அவர்கள் நினைவிலேயே நம் காலம் கழிக்கும் நிலை நமக்கு வந்துவிடக்கூடாது.

எந்த மனமுடைய ஐம்பொறி உயிரும் சம்யக்த்துவம் பெற்றுவிடும் என்பதில்லை. மந்த கஷாயவடிவ விசுத்த பரிணாமம் உடைய உயிரே சம்யக்த்துவம் பெறும் தகுதியுடையதாகும். ஏனென்றால் கஷாயம் மந்தமடையாமல் மற்றும் தர்மானுராக புத்தி-தர்மத்தில் ஆர்வம் உண்டாகாமல், உயிர் சாஸ்திரங்களைக் கேட்கத் தயாராவதில்லை, உண்மையான கடவுளின்மேல் நம்பிக்கையும் வருவதில்லை, ஆசாரியர்களின் உபதேசங்களைக் கேட்கும் அணுகுமுறை அவர்களிடம் இருப்பதில்லை. எந்த உயிருக்கு தன்னைப்பற்றி அதாவது ஸ்வயம் ஆத்மாவின் இயல்பு பற்றி கேட்கவே பிடிப்பதில்லையோ, அவர்களுக்கு சம்யக்த்துவம் எப்படி உண்டாகும்? இந்த காரணத்தால் துக்கத்துடனும் தீவிர கஷாயத்துடனும் கூடிய உயிர்களுக்கு சம்யக்த்துவம் பெறும் தகுதி இருப்பதில்லை.

“நாரகி உயிர்களிடம் மூன்று அசுப லேஷ்யாக்களே இருக்கின்றன, அவர்களிடம் தீவிர கோபம் முதலான கஷாய உணர்வுகளே காணப்படுகின்றன. பிறகு அவர்களிடம் மந்த கஷாயம் எப்படி இருக்க முடியும்? ஆம், ஸ்வர்க்கத்தில் உள்ள தேவகதி உயிர்களிடம் மூன்று சுப லேஷ்யாக்கள் இருக்கின்றன, எனவே அவர்களிடம் வேண்டுமானால் மந்தகஷாயம் இருக்க முடியும்” என்று நீங்கள் கேட்கலாம். நரகத்திலும், ஸ்வர்க்கத்திலும் அவரவர்களுக்கு உகந்த நரக அல்லது ஸ்வர்க்க லேஷ்யைகள் இருக்க முடியும். ஒவ்வொரு லேஷ்யாவிலும் அசங்க்யாத லோகப்பிரமாண நிலைகள் இருக்கின்றன. எப்போது மந்த கஷாயி என்று சொல்கிறார்களோ அப்போது அந்த உயிரின் பழைய-முந்தய உணர்வு நோக்கில் அதனுடைய நிகழ்கால கஷாயம் மந்தமடைந்து விடுகிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். மனிதர் மற்றும் விலங்குகளுக்கு நான்காம் குணஸ்தானம்வரை ஆறு லேஷ்யாக்களும் காணப்படுகின்றன. ஆனால் பிரதமோபசம சம்யக்த்துவம் பெறும் முன்னர் அவர்களிடம் நியமமாக பீத, பத்ம அல்லது சுக்ல லேஷ்யா வடிவ மந்த கஷாயத்தை அடைந்தே சம்யக்த்துவத்தை பெறுகின்றனர், அசுப லேஷ்யாவில் இருக்கும்போது பெறுவதில்லை.

பிரதமோபசம சம்யக்த்துவம் பெறுதல் விழிப்புடன் இருக்கும் நிலையிலேயே நிகழ்கிறது, தூக்கத்தில் இருக்கும்போது நிகழ்வதில்லை. விழித்திருக்கும் நிலையிலும்கூட சாகார ஞானோபயோகம் உடையவர்களுக்கே உண்டாகிறது, நிராகார தர்சனோபயோகத்தில் இருப்பவர்களுக்கு பிரதமோபசம சம்யக்த்துவம் பெறுதல் துவங்குவதில்லை. ஒரு சிலருக்கு உபசம சம்யக்த்துவம் பெறும் காலமான அந்தர்முகூர்த்தத்தின் துவக்கத்தில் அவசியம் சாகார ஞானோபயோகமே இருக்கும் பிறகு

இடைபட்ட அந்த பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் தர்சனோபயோகம் இருக்கக்கூடும்.

ஞானோபயோகத்தை சாகார் என்று சொல்கின்றனர், ஏனென்றால் அது அறியப்படும் (ஞேயத்தின்) பொருளின் சிறப்புகளை அறிகிறது. தர்சனோபயோகத்தை நிராகார் என்று சொல்கின்றனர் ஏனென்றால் அதில் பார்க்கப்படும் பொருளின் சாமான்ய அவலோகன் (வெறுமனே பார்த்தல்) அதாவது [கண்ணாடியின் முன் இருக்கும் பொருளின் பிரதிபிம்பம் எப்படி கண்ணாடியில் தெரிகிறதோ அதுபோல] பார்க்கப்படும் பொருளின் பிரதிபிம்பம் மட்டுமே தர்சனோபயோகத்தில் தெரிகிறது. பதார்த்தங்களின் சிறப்புகளை அறிவதையே ஞானத்தின் ஆகார்-ஞானாகார் என்று சொல்லப் படுகிறது. எப்படியென்றால் நறுமணத்தை அறிந்த பிறகு அதைச் சொல்லவேண்டுமென்றால் ஞானம் சுகந்தாகார் ஆனது என்று சொல்கிறோம் அல்லவா. இங்கு ஆகார் என்பதன் பொருள் வடிவம்-shape இல்லை. ஞானாகார் மற்றும் ஞேயாகார் பற்றிய சர்ச்சையை **காரண காரிய இரகசியம்** புத்தகத்தில் பல இடங்களில் விரிவாகவே சர்ச்சை செய்திருக்கிறோம். [பிரதமோபசம சம்யக்த்துவம் பெறுதல் ஞானகுணம் செயல்படும்போது அதாவது அறிவில் ஸ்வ நிஜசுத்தாத்ம தத்துவத்தை சிந்தனை செய்துகொண்டிருக்கும் போதுதான் துவங்குகிறது, சமயம் செல்லச்செல்ல உபயோகம் தானாகவே தர்சனோபயோகமாக ஒருசிலருக்கு மாற்றமடையக்கூடும், அடையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பிரதமோபசம சம்யக்த்துவ அந்தர்முகூர்த்த காலத்தில்தான் ஆத்மானுபூதி சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன் என அறிவது ஞானோபயோகமேயாகும்.]

மனோயோகம், வசனயோகம் அல்லது காயயோகம் ஆகிய மூன்றில் எந்த யோகத்தில் இருந்தாலும் உயிர் பிரதோபசம சம்யக்த்துவத்தை பெறமுடியும். மேலே கூறப்பட்ட ஐந்து லப்திகள் மூலம் பிரதமோபசம சம்யக்த்துவம் பெறப்படுகிறது. நாம் பல வருடங்களாக சாஸ்திர ஸ்வாத்யாயம் செய்துகொண்டு வருகிறோம் ஆகையால் நாம் இதுவரை எத்தனை லப்திகளைப் பெற்றிருக்கிறோம்? என்று யாராவது கேட்கலாம்.

உயிர்கள் ஏன் முதல் நான்கு லப்திகளிலேயே திருப்தி அடைந்து விடுகின்றன? அபவ்விய உயிர்கள்கூட பிராயோக்கியலப்தி வரை நான்கு லப்திகளை அனந்தமுறை அடைந்திருக்கின்றன. பவ்விய உயிரும்கூட பிராயோக்கிய லப்திவரை வந்து கரணலப்திக்கு செல்லவில்லை என்றால்-ஆத்மாவை எதிர்கொள்ளும் முயற்சியை-புருஷார்த்தத்தை செய்யவில்லை என்றால் அவர்கள்கூட சம்யக்த்துவத்தைப் பெறுவதில்லை. தன் முக்கால த்ருவ பகவான் ஆத்மாவின் (ஸ்வ ஆத்ம திரவியத்தின்) மகிமையும், பெருமையும் எதுவரை இந்த உயிர் அறியவில்லையோ, அதை உறுதி செய்யவிலையோ, தன் ஆத்மாவின்மேல் நம்பிக்கை உண்டாகவில்லையோ அதுவரை இந்த தத்துவங்களை கேட்பதாலும், நினைவில் வைத்திருப்பதாலும், மீண்டும் நினைவு படுத்தி அவைகள் முழுமையாக எண்ணத்தில் வரும்படி தாரணையில் வைத்திருந்தாலும் எந்த பலனும் கிடைக்கப்போவதில்லை. அந்த வடிவில் ஆத்மா பரிணமித்தால்தான், தெரிந்துகொண்ட விஷயத்தை தன்னில் பிரயோகப்படுத்தி சுயமாகவே பரிசோதனையில்-practical-லில் ஈடுபட்டால்தான் சம்யக்த்வம் பெறும் காரியம் நிகழும்.

இவைகளில் ஒவ்வொரு லப்தியின் காலமும் அந்தர்முகூர்த்தமாகும், மற்றும் எல்லா லப்திகளும் சேர்ந்த காலமும்கூட ஒரு அந்தர்முகூர்த்தமே யாகும். தத்துவத்தை தெளிவாகப் புரிந்து கொள்வதில் ஆர்வமும், ஆத்மாவைத் தெரிந்து கொள்வதில் தீவிர ருசியும் தோன்றும்போது, விசுத்தியும்கூட அதிகரித்துக் கொண்டே போகிறது. அந்த சமயத்தில் தேசனாவை-அற உபதேசத்தைக் கேட்டு அல்லது முன்னர் கேட்ட அற உபதேசத்தை நினைவு படுத்தி, ஜினேந்திரனால் உபதேசிக்கப்பட்ட தத்துவங்களைச் சிந்தனையில் கொண்டுவந்து, தத்துவங்களில் யோசனையைச் செலுத்தி சிந்தித்தலும், தத்துவத்தை உறுதிப்படுத்துவதையும் செய்யத் தொடங்கும்போது நான்கு லப்திகளும் ஒன்றாக நிகழ்கின்றன. தேசனா-தத்துவ உபதேசம் முற்பிறவிகளில் பெற்றதாகக்கூட இருக்கலாம். இவைகளைப்பற்றி மேலும் அதிகமான சர்ச்சையை தேசனாலப்தி அத்தியாயத்தில் பார்க்கலாம். மேலே கூறிய விளக்கங்களைப் படித்துவிட்டு நீங்கள் இவ்வாறு சிந்திக்கக்கூடும். “தத்துவத்தைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் வந்துவிட்டது, தத்துவங்களையும் கேட்டாகிவிட்டது, ஞாபகத்திலும் இருக்கிறது என்றால் ஆத்மானுபூதி வந்துவிடுமல்லவா? நாம் பிறகு செய்யவேண்டியது எதுவும் இல்லை தானே? திரவியானுயோகத்தைத் தெரிந்து கொண்டால் காரியம் நிகழ்ந்துவிடப் போகிறது. கரணானுயோகம் தெரிந்து இருக்காவிட்டாலும் கூடப்பரவாயில்லை. சரணானுயோகத்திற்கு இப்போது அவசியமே இல்லாமல் போய்விட்டது.”

இங்கே பாருங்கள்! உயிர் இதுவரை ஏதாவது கிரியை செய்வதையே தர்மம் செய்வதாக நம்பிக்கொண்டிருந்தது. இப்போது கிரியைகளால் எதுவும் நிகழாது என்பதைக் கேட்டு, கிரியைகளை விட்டுவிட எண்ணம் கொள்கிறது. அதில்கூட இதன் பிற திரவியத்தின் காரியத்தை தான் செய்கிறேன் அல்லது செய்யாமல் விடுகிறேன் என்ற கர்த்ருத்துவ புத்தியை எப்போதும் வைத்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் உடலின் கிரியையை என்னால் (ஆத்மாவால்) செய்ய முடியும் ஆனால் இப்போது நான் (ஆத்மா) அவைகளைச் செய்யப்போவதில்லை என்ற மூடநம்பிக்கையில் இருக்கிறது. சம்யக்தர்சன வடிவ காரியம் நிகழ, தேவன், குரு, சாஸ்திரங்களிடம் உடலால் செய்யப்படும் குறிப்பிட்ட நடத்தை முதலான காரியங்களால்தான் நிகழகிறது என்ற விபரீத நம்பிக்கையை எப்போதும் கொண்டிருக்கிறது.

இங்கு நாம் கரணானுயோகத்தின் மூலம் பஞ்சலப்தி பற்றி தெளிவாகத் தெரிந்து கொள்ள முயல்கிறோம், இருந்தாலும் எந்த உயிர் சம்யக்த்துவத்தை பெறுகிறதோ அதனுடைய நடத்தை சரணானுயோகத்தில் கூறியுள்ளபடி பரிணாமங்களின் விசுத்தி இயல்பாகவே நிகழ்கிறது. அவருடைய உலக/லௌகிக வாழ்க்கை நடத்துவதும்கூட ஒழுக்கத்துடனே காணப்படுகிறது. அவர்கள் எட்டு மூல குணங்களை கொண்டிருப்பவராக இருக்கிறார், அதாவது அவர்களிடம் ஐந்து உதும்பரப் பழங்கள், தேன், மத்ய(போதைப் பொருள்கள்), மாமிசம் முதலியவைகளின் தியாகம் காணப்படுகிறது. அவர்கள் ஏழு விசனங்களுக்கு அடிமையாகாதவர்களாக இருக்கின்றனர். தன்னிச்சையான வாழ்க்கை வாழ்வதும், ஹிம்சை முதலான மிருகத்தனமான உணர்வுகளும் அவர்களிடம் இருப்பதில்லை. அவர்கள் உண்ணத் தகாதவைகளைத் தியாகம் செய்தவர்களாகவும், அநியாயம், அநீதி வழியில் செயல்படாதவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் திரவியானுயோகத்தில் கூறியபடி தத்துவ சிந்தனை செய்கின்றனர். பிரதமானுயோகத்தை

படித்து அவர்கள் பிறவிசுழற்சியின் துன்பத்தைக்கண்டு பயப்படுகின்றனர். தீர்தங்கரர்களின் முற்பிறவிகளைப்பற்றி படித்து தன் புருஷார்த்தத்தை அதிகப்படுத்துகின்றனர்.

காரணானுயோகத்தில் கூறியுள்ளபடி கர்மத்தின் நிலைகள் தன்னிச்சையாகவே நிகழ்கின்றன, உயிர் கர்மத்தில் எதுவும் செய்ய வேண்டியதாக இல்லை. உயிர் சம்யக்த்துவத்தை தத்துவ சிந்தனையில் ஆழ்ந்து அதிலேயே மூழ்கி இருப்பதால் அந்தர்முகூர்த்த காலத்தில் சம்யக்த்துவத்தை சகஜமாகவே அடைந்துவிடுகிறது. சம்யக்த்துவம் பெறும் உயிர்களிடம் எப்படிப்பட்ட தகுதிகள் காணப்படுகின்றன என்பது பற்றி கரணானுயோக அறிமுகம் என்ற புத்தகத்தில் விரிவாகவே பார்த்திருக்கிறோம். இப்போது இங்கே நம்முடைய விஷயம் பிரதமோபசம சம்யக்த்துவம் பெறுதல் பற்றியதாகும். இதில் உயிரில் உண்டாகும் பரிணாமங்கள் மற்றும் கர்மங்களின் நிலைகளில் உண்டாகும் மாற்றங்கள் பற்றிய வர்ணனைகளின் மூலம் சம்யக்த்துவம் பெறும் முன்னர் நிகழும் பஞ்சலப்தியின் ஸ்வரூபம் பற்றி தெரிந்து கொள்ளப் போகிறோம். அடுத்த கடிதத்திலிருந்து ஒவ்வொரு லப்தியைப் பற்றியும் விரிவாகத் தெரிந்து கொள்ளலாம். இத்துடன் இன்று நாம் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.

ஜெய் ஜினேந்திரா.

- உங்கள் அம்மா.

## ஷயோபசமலப்தி மற்றும் விசுத்திலப்தி

**கடிதம்-6** **18-8-2002**

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

நாம் பிரதமோபசம சம்யக்த்துவத்தை யாரெல்லாம் பெறமுடியம் என்று பார்த்த பிறகு இப்போது அதைப் பெறும்முன்னர் நிகழும் ஐந்து லப்திகளின் ஸ்வரூபம் பற்றிப் பார்க்க இருக்கிறோம். அவைகளின் பெயர்களை நாம் முன்னரே தெரிந்து கொண்டோம். அவைகளில் முதலில் க்ஷயோபசமலப்தி சம்பந்தமான சர்ச்சையை இப்போது செய்யலாம்.

க்ஷயோபசமம் என்ற சொல் உங்களுக்கு இப்போது மிகவும் தெரிந்த ஒன்றுதான். நிகழ்காலத்தில் வெளிப்படும் ஞானத்தின் சக்தியை க்ஷயோபசமம் அல்லது க்ஷயோபசம ஞானம் என்று சொல்கின்றனர். கர்மத்தில் நிகழும் தணிவு, சத்தா மற்றும் உபசம அவஸ்தைகளையும்-நிலைகளையும் கூட கர்மத்தின் க்ஷயோபசமம் என்று சொல்லப்படுவதை நாம் விரிவாகவே சர்ச்சை செய்திருக்கிறோம். ஞானாவரணம், தர்சனாவரணம் மற்றும் அந்தராய கர்மங்களின் க்ஷயோபசமம் அனாதி காலமாக எல்லா உயிர்களிலும் காணப்படுகிறது. மித்யாத்துவம் பெயர்கொண்ட முதல் குணஸ்தானத்திலிருந்து க்ஷீணகஷாயம் பெயர்கொண்ட 12-ஆம் குணஸ்தானம் வரையும், மேலும் ஒருபொறி உயிர் முதல் மனமுடைய ஐம்பொறி உயிர்கள் வரையும் உள்ள எல்லா உயிர்களிடமும் இந்த கர்மங்களின் க்ஷயோபசமம் காணப்படுகிறது. க்ஷயோபசம சம்யக்துவம்கூட நான்காம் குணஸ்தானத்திலிருந்து ஏழாம் குணஸ்தானம்வரை உள்ள உயிர்களிடம் காணப்படுகிறது. க்ஷயோபசம சாரித்திரம் கூட இருக்கிறது.

நாம் இப்போது பார்க்கவிருப்பது க்ஷயோபசமம் பற்றியல்ல, **க்ஷயோபசமலப்தி** பற்றியதாகும். ஷயோபசமலப்தி மனமுடைய ஐம்பொறி உயிர்களிடம் மட்டுமே காணப்படுகிறது. ஆனால் மனமுடைய ஐம்பொறி உயிராக இருத்தல் அதாவது ஐம்பொறி உயிர்களிடம் வெளிப்படும் அறிவு அதிகமாக இருப்பதால் அதை க்ஷயோபசமலப்தி என்று சொல்வதில்லை. அதனுடைய வரையறை கீழ்கண்டவாறு இருக்கிறது.

**க்ஷயோபசமலப்தி:** "ஞானாவரணம் முதலான எல்லா பாப-அசுப-அபிரசஸ்த கர்மப் பிரக்ருதிகளின் சக்தி அதாவது பலன்தரும் சக்தி வரிசையாக தொடர்ந்து அனந்தமடங்கு குறைந்துகொண்டே உதயத்திற்கு வரும் காலத்தில் க்ஷயோபசமலப்தி நிகழ்கிறது. அதாவது க்ஷயோபசமலப்தி பாப கர்ம பிரக்ருதிகளின் சக்தி படிப்படியாக அனந்த அனந்த மடங்காகக் குறைந்த வண்ணம் உதயத்திற்கு வரும்போது நிகழ்கிறது.

அனந்த மடங்கு குறைதல் என்பதின் பொருளை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். ஒரு எண்ணிக்கை அனந்த மடங்கு பெருகுதல் என்று சொல்லும்போது அந்த எண்ணிக்கையை அனந்தத்தால் பெருக்க (multiply-செய்ய) வேண்டும். அதே எண்ணிக்கையை அனந்தமடங்கு குறைதல் என்று சொல்லும்போது அந்த எண்ணிக்கையை அனந்தத்தால் வகுக்க (divide-செய்ய) வேண்டும் அதாவது அந்த

எண்ணிக்கையின் அனந்தத்தில் ஒருபாகம் என்று பொருள்கொள்ள வேண்டும். உதாரணமாக 16-ஐ நான்கால் பெருக்குதல் அதாவது 16-ன் நான்கு மடங்கு என்று சொல்லும்போது 16X4=64 ஆகிறது. அதே 16-ஐ நான்கால் வகுக்கும்போது அதாவது 4 மடங்கு குறைக்கும்போது 16/4=4 ஆகிறது.

உயிர் முன்னர் கட்டிக்கொண்டு சத்தாவில் இருக்கும் பாப கர்மங்களின் பலன்தரும் சக்தி குறைந்து போகிறது மேலும் ஒவ்வொரு சமயமும் பழைய பலன்தரும் சக்தியைவிட அனந்தத்தில் ஒரு பங்காகக் குறைந்து கொண்டே போகிறது. உதயத்திற்கு வரும் சமயத்தில்கூட அனந்தத்தில் ஒரு பங்காகக் குறைந்து உதயத்திற்கு வருகிறது. இங்கு பாப கர்மங்கள் பற்றி மட்டுமே சொல்லப்படுகிறது, புண்ணிய கர்மங்கள் பற்றி இல்லை. முன்னர் நாம் பாப கர்மங்களைப் பற்றி சர்ச்சை செய்திருக்கிறோம், ஞாபகத்தில் இருக்கிறதல்லவா.

எல்லா காதி கர்மங்களும் பாப கர்மங்களே யாகும். அகாதி கர்மங்களில் புண்ணிம், பாபம் என்ற இரண்டு பிரிவுகளுமே இருக்கின்றன. காதி கர்மங்களில் ஞானாவரணம் முதலான பிரக்ருதிகளில் அதனதன் அனந்த ஸ்பர்தகங்கள் இருக்கின்றன. அவைகளில் மந்த பலன் கொடுப்பதிலிருந்து தீவிர பலன் கொடுக்கக் கூடியன வரையிலான கொடி, கட்டை, எலும்பு மற்றும் கல் முதலான நான்கு பிரிவுகளை அல்லது நிலைகளை நாம் பார்த்தோம். அகாதி கர்மங்களில் எந்த பாப பிரக்ருதிகள் இருக்கின்றனவோ அவைகளின் ஸ்பர்தகங்களில் வேம்பு, கடுக்காய், விஷம், ஹாலகால விஷம் என நான்கு பிரிவுகளை அல்லது நிலைகளையும் நாம் பார்த்தோம்.

இந்த 4-4 நிலைகளில் அனந்த ஸ்பர்தகங்களும் மற்றும் ஒவ்வொரு ஸ்பர்தகத்திலும் அனந்த அனந்த வர்கணைகள் இருக்கின்றன, மேலும் ஒவ்வொரு வர்கணையிலும் அனந்த அனந்த வர்கங்கள் இருக்கின்றன. உலகில் உள்ள அபவ்யராசி (எண்ணிக்கை)யை விட அனந்த மடங்கு மற்றும் சித்தராசி (எண்ணிக்கை)யைக் காட்டிலும் அனந்தத்தில் ஒரு பகுதி எந்த அனந்தமோ அத்தனை அனந்த வர்கங்கள் அதாவது அத்தனை கர்ம பரமாணுக்கள் இருக்கின்றன. அத்தனை அனந்த வர்கணைகளே ஒவ்வொரு ஸ்பர்தகத்தில் இருக்கின்றன. இந்த எல்லா பாப கர்மங்களின் பலன்தரும் சக்தி அதாவது அனுபாகம் ஒவ்வொரு சமயமும் அனந்தத்தில் ஒரு பாக அளவாக குறைந்த வண்ணமே உதயத்திற்கு வருகின்றன.

இப்போது க்ஷயோபசமம் மற்றும் க்ஷயோபசமலப்தி இந்த இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் உங்களுக்கு புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். க்ஷயோபசமம் என்னவோ தேசகாதி பிரக்ருதிகளில் மட்டுமே நிகழ்கிறது. ஆனால் க்ஷயோபசமலப்தியில் எல்லா காதி மற்றும் அகாதி கர்மங்களின் பாபப் பிரக்ருதிகளில் ஒவ்வொரு சமயமும் அதன் பலன்தரும் சக்தி அனந்த மடங்கு குறைந்த வண்ணம் இருக்கிறது.

க்ஷயோபசமத்தில் தேசகாதி கர்மங்களில் எவ்வளவு பலன் தரும் சக்தி இருக்கிறதோ அந்த சக்தியுடனே உதயத்திற்கு வருகிறது, ஆனால் க்ஷயோபசமலப்தி காலத்தில் அதன் பலன் தரும் சக்தி ஒவ்வொரு சமயமும் அனந்தத்தில் ஒரு பாகமாகக் குறைந்து

உதயத்திற்கு வருகிறது. க்ஷயோபசமம் என்னவோ எந்த இடைவெளியுமின்றி தூக்கத்திலும், மயக்கத்திலும் மற்றும் எந்த நிலையிலும் எப்போதும் நிகழ்கிறது ஆனால் க்ஷயோபசமலப்தி அந்தர்முகூர்த்த நேரமே நிகழ்கிறது, அதுவும் விழிப்புடன் இருக்கும் நிலையில் மட்டுமே நிகழ்கிறது.

க்ஷயோபசமம் ஞானாவரணம், தர்சனாவரணம் மற்றும் அந்தராயம் ஆகிய கர்மங்களின் தேசகாதி பிரக்ருதிகளில் மட்டுமே காணப்படுகிறது. ஆனால் க்ஷயோபசமலப்தியில் இந்த பிரக்ருதிகளோடு மட்டுமல்லாமல் மித்யாத்துவம் மற்றும் சாரித்திர மோஹனீய கர்மங்களின் அனுபாகம்கூட அனந்தத்தில் ஒரு பாகமாக குறைந்த வண்ணம் உதயத்திற்கு வருகிறது, அவைகளின் தீவிர பலன்தரும் சக்தி உதயத்திற்கு வராமல் மந்த பலன்தரும் சக்தி வடிவில் உதயத்திற்கு வருகிறது அதுவும் ஒவ்வொரு சமயமும் மந்தத்திலிருந்து மந்ததர நிலைக்கு குறைந்து போகிறது.

யாருக்கு கல் அல்லது எலும்பு நிலையில் உள்ள தீவிர பலன்தரும் சக்தி கொண்ட மித்யாத்துவத்தின் உதயம் இருக்கிறதோ, யாரிடம் 70 கோடாகோடி கடற்கால அல்லது அதுபோன்ற அதிக ஸ்திதி உடைய மித்யாத்துவ கர்மபந்தம் நிகழ்கிறதோ அப்படிப்பட்ட நிலையில் உள்ள உயிர்களிடம் க்ஷயோபசமலப்தி இருப்பதில்லை, அந்த நிலையில் அவர்கள் விசுத்திலப்தி, தேசனாலப்தி கூடப் பெறுவதில்லை. **பாவதீபிகா** என்ற நூலில், **தீவிர பலன்தரும் ஸ்பர்தகங்களின் உதயமுடைய தீவிர மித்யாத்வி உயிருக்கு மோக்ஷமார்க்கத்தின் உபதேசம் கொடுப்பது கூட தகுயானதில்லை. உபதேசம் கொடுக்கும் சமயத்தில் கூட பாத்திரத்தின் தகுதி பார்க்க வேண்டியது அவசியமானதாகும்** என்று பண்டிட். தீப்சந்த்ஜி கூறியிருக்கிறார்.

எந்த உயிரிடம் தீவிர மூடநம்பிக்கை மற்றும் தீவிர கஷாயம் இருக்கிறதோ அவருக்கு தர்மோபதேசம் கேட்கவேண்டும் என்ற புத்தி வருவதில்லை, அப்படிப்பட்டவர் தர்மோபதேசத்தை கேட்க நேர்ந்தால் அவருடைய கஷாயங்கள் மேலும் தீவிரமடைகின்றன. அவர் உபதேசம் கொடுப்பவர் மேலும், உண்மையான உபதேசத்தின் மேலும் வெறுப்பையே கொள்கிறார், அந்த உபதேசம் கொடுப்பவருக்கும் அந்த உபதேசத்திற்கும் தடங்கல் செய்யவே முற்படுகிறார். அப்படிப்பட்ட உயிர்களைப் பார்த்து நாம் அவர்கள்மேல் வெறுப்பு கொள்வது தகுதியானதல்ல. அவர்களுக்கு சம்யக்த்துவம்-நற்காட்சி பெறும் காலலப்தி இன்னும் வெகு தூரத்திலிருக்கிறது மற்றும் அவர்கள் நிகழ்த்த வேண்டியது (ஹோனாஹார்) வேறாக இருக்கிறது என்று புரிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு நற்காட்சி பெறும் காலலப்தி வரும்போது இந்த ஐந்து லப்திகளின் வழியாகவேதான் அவர்கள் நற்காட்சியை-சம்யக்தரிசனத்தைப் பெறுவர். அந்த சமயத்தில் அவர்களுடைய மூடநம்பிக்கை, கஷாயங்கள் முதலியன வெல்லாம் மந்தமாகி விட்டிருக்கும், தர்ம உபதேசம் கொடுப்பவரும் அவருக்கு கிடைத்து விடுவார், தர்ம உபதேசத்தை அவர் மகிழ்வுடன் ஏற்கவும் செய்வார்.

அவர்கள் இன்றோ அல்லது சில காலத்திற்குப் பிறகோ உண்மையான மோக்ஷமார்க்கத்தின் ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ளாமல், ஆத்மாவின் ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ளாமல், உண்மையான தேவ, குரு, சாஸ்திரத்தைத் தெரிந்து கொள்ளாமல்

அவர்களால் சம்யக்த்திவத்தைப் பெறமுடியாது. சம்யக்த்துவம் பெறாமல் மோக்ஷமார்க்கம் துவங்காது, மோக்ஷமார்க்கத்தில் முன்னேறாமல் முக்தி அடைய முடியாது-சுகம் பெற முடியாது, பிறவி சுழற்சியிலிருந்து விடுதலை பெறமுடியாது.

மித்யாத்துவம் சர்வகாதி பிரக்ருதி யாகும். அதில் கல், எலும்பு, கட்டையில் பெரும்பகுதி என்ற மூன்று வகையான ஸ்பர்தகங்கள் இருக்கின்றன. க்ஷயோபசமலப்தியில் அவைகளின் பலன்தரும் சக்தி அனந்தத்தில் ஒரு பாகமாகக் குறைந்து போகிறது, ஆனாலும்கூட அவர் மித்யாத்வப் பிரக்ருதியை க்ஷயோபசமம் செய்வதில்லை. அசாதா வேதனீயம் முதலான அகாதி கர்மங்களின் பாபப் பிரக்ருதிகளின் பலன்தரும் சக்தி கூட ஒவ்வொரு சமயமும் குறைந்து கொண்டே போகிறது.

எப்படி ஒரு அழகான மற்றும் சுலபமான விதிமுறை இருக்கிறது என்பதைப் பாருங்கள். ஒரு உயிர் முன்னர் தீவிர மூடநம்பிக்கையுடன் அதிக பாபம் செய்து தீவிர பலன் கொடுக்கக்கூடிய கர்மங்களைக் கட்டிக் கொண்டிருந்தாலும்; **எப்போது அதற்கு தன் ஆத்ம ஸ்வரூபத்தையும், தத்துவஞானம் சம்பந்தமானவைகளையும் தெரிந்து கொள்வதில் ஆர்வமும், ருசியும் கொள்ளுகிறதோ அப்போது அதன் பழைய கர்மங்களின் பலன்தரும் சக்தி தானாகவே மந்தமாகி விடுகிறது.** எப்போது மித்யாத்துவம் மற்றும் சாரித்திர மோஹனீய கர்மம் மந்தமடைந்து உதயத்திற்கு வருகிறதோ அப்போது உயிரில்கூட மந்த கஷாய பரிணாமம் தானாகவே வந்து விடுகிறது, தர்ம வழியில் செல்ல வேண்டும் என்ற உணர்வும் வந்து விடுகிறது.

இதையே விசுத்திலப்தி என்ற பெயரால் சொல்கின்றனர். பழைய கர்மங்களின் பலன்தரும் சக்தி (எவ்வளவாக இருந்தாலும்) அது மந்தமடைந்து உதயத்திற்கு வருவது நிமித்த காரணமாகும். மற்றும் மித்யாத்துவம், ஆசை முதலான கஷாயங்கள் மந்தமடைதல்-சுபஉணர்வு கொள்ளுதல் அதன் நைமித்திக காரியமாகும். ஆகையால் க்ஷயோபசம லப்தியின் காரணத்தைத் தெரிந்து அது முதலில் சொல்லப்பட்டது மற்றும் விசுத்திலப்தியின் காரியத்தை தெரிந்து அதை அடுத்ததாகச் சொல்லப்படுகிறது. இப்படியாக இந்த இரண்டும் அதாவது க்ஷயோபசமலப்தியும், விசுத்திலப்தியும் ஒன்றுடன் ஒன்றாக (உடன்) இருக்கின்றன, அவைகள் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல இருக்கின்றன எனலாம்.

இப்போது புதிய பரிணாமம்-உணர்வு சுபராக வடிவில் நிகழ்கிறது, அதன் நிமித்தத்தால் சாதாவேதனீயம், சுப ஆயுள், சுபநாம கர்மங்கள், உச்ச கோத்திரம் முதலான புண்ணிய பிரக்ருதிகளின் பந்தம் (தானாகவே) நிகழ்கிறது. ஏனென்றால் எட்டு கர்மங்களின் உதயம் இருந்த போதிலும்கூட புதிய பந்தம் மூடநம்பிக்கை மற்றும் கஷாயங்களின் நிமித்தத்தால் நிகழ்கிறது. சுப பரிணாமத்தால் அகாதி கர்மங்களில் புண்ணிய பிரக்ருதிகளே பந்தமாகின்றன மற்றும் அசுப பரிணமத்தால் அகாதி கர்மங்களில் பாப பிரக்ருதிகளே பந்தமாகின்றன. இரண்டு பரிணாமங்களிலும் ஞானாவரணம் முதலான காதி கர்மங்களின் பந்தம் என்னவோ நிகழ்கிறது ஆனால் புதிய ஸதிதி பந்தமும், அனுபாக பந்தமும் சுப பரிணாமத்தால் குறைவாக பந்தமாகும் மற்றும் அசுப பரிணாமத்தால் அதிகமாக

பந்தமாகும். இதையே விசுத்திலப்தி என்று சொல்லப்படுகிறது. அதன் வரையறையை-பரிபாஷையை இப்போது பார்க்கலாம்.

**விசுத்திலப்தி:** க்ஷயோசம லப்தியை யார் அடைந்திருக்கிறாரோ, அந்த காரணத்தால் உயிரில் சாதாவேதனீயம் முதலான புண்ணியப் பிரக்ருதிகளின் பந்தத்திற்குக் காரணமான தர்மானுராகம் (தர்மத்தில் மிகுந்த ஆர்வம்) உண்டாகிறது, இதைப் பெறுவதே விசுத்திலப்தி யாகும்.

க்ஷயோபசம லப்தியின் பலன் உயிருக்கு மித்யாத்துவம் மற்றும் கஷாயம் (மூடநம்பிக்கையும், திரிபு உணர்வுகளும்) ஒவ்வொரு சமயமும் மந்தமடைகின்றன, இதனால் சகஜமாக அதாவது தானாகவே எந்த வற்புறுத்தலுமின்றி தர்மத்தின்மேல் ஆர்வம் பெருகெடுக்கிறது. பகவானை தரிசித்தல், பூஜை, சுவாத்யாயம் செய்தல் நல்லொழுக்கத்துடன் கூடிய வாழ்க்கை நடத்துதல், உண்ணக்கூடாதவைகளை சாப்பிடாமல் தியாகம் செய்தல், ஏழு விசனங்களுக்கும் அடிமையாகாதிருத்தல், அநியாயம் செய்யாமல், நீதி, நேர்மையோடு வாழ்தல் முதலான ஒழுக்கங்கள் சகஜமாகவே வந்துவிடுகின்றன. இந்த சுப பரிணாமங்களின் நிமித்தத்தால் அவருக்கு சாதாவேதனீயம் முதலான புண்ணிய கர்மங்கள் பந்தமாகிக் கொண்டிருக்கின்றன.

விசுத்தி என்ற சொல் சாஸ்திரங்களில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு அர்த்தத்தில் வருகிறது. விசுத்திலப்தி பற்றி சொல்லும்போதும் மற்றும் பொதுவாக சொல்லும்போதும் விசுத்தி என்பதின் பொருள் சுபப்பரிணாமம்- நல்லுணர்வு என்று எடுத்துக் கொள்ளவேண்டும். கரணலப்தி சமயத்தில் விசுத்தி அனந்த மடங்கு பெருகிக்கொண்டே போகிறது என்று சொல்லுமிடத்தில் நிர்மலதா-அழுக்கற்றத்தன்மை மற்றும் ஈடுபாடு-சிரத்தை அல்லது சாரித்திர சம்பந்தமான தூய்மையுடன் கஷாயம் குறைந்து கொண்டே உதயத்திற்கு வரும் நிலையை விசுத்தி என்று எடுத்துக் கொள்ளவேண்டும். பிரதமோபசம சம்யக்த்துவ சமயத்தில் விசுத்தி என்று சொல்லும்போது சிரத்தை அதாவது நம்பிக்கை (பிரதீதி), தத்துவ நிர்ணயம் செய்யும் நிர்மலத்தன்மை என்று எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் அபூர்வகரணம் முதலான ஸ்ரேணி குணஸ்தாணங்களில் விசுத்தி என்று சொல்லும்போது சாரித்திர சம்பந்தமான நிர்மலத்தன்மை அதாவது அதிகரித்துக்கொண்டே செல்லும் வீதராகத் தன்மை என்று எடுத்துக்கொள்ள வேண்டும். அதனுடன் கஷாயங்கள் மந்தமடைந்து கொண்டே உதயத்திற்கு வரும் நிலையையும் விசுத்தி என்று சொல்கின்றனர்.

சில இடங்களில் விசுத்தி அதாவது விஷேச சுத்தி-பூரண வீதராகத்தன்மை என்ற பொருளில்கூட இந்த சொல் வருகிறது. எங்கு எந்த அர்த்தம் தகுதியானது என்று நன்கு தெரிந்து பொருள் கொள்ள வேண்டும். கஷாயங்கள் முழுமையாக அழிந்த பிறகு அதாவது இனி கஷாயமே உதயமாக வாய்ப்பில்லாத நிலையை அடையும்போது பூரணவிசுத்தி என்று சொல்லப்படுகிறது.

உயிரினுடைய துவர்ப்பு உணர்வுகளை-கஷாயங்களை சங்க்லேஷ(சிக்கலான) பரிணாமம் என்றும் விசுத்தி(தூய்மையான) பரிணாமம் என்றும் இரண்டு விதமாகப்

பிரித்திருக்கிறார்கள். கஷாயங்களின் மொத்த ஸ்தானங்கள்-நிலைகள் அசங்க்யாத லோகப்பிரமாணமாகும். அதல் பெரும்பகுதி சங்க்லேஷ ஸ்தானங்களாகும் மற்றும் அதில் ஒருபாகம் விசுத்தியின் ஸ்தானங்களாகும். இவைகளில் என்ன வித்தியாசம் என்று இப்போது பார்க்கலாம்.

சாதா, ஸ்திர, சுப, சுபக, சுஸ்வர, ஆதேய முதலிய சுப(புண்ணிய) பிரக்ருதிகளின் பந்தத்திற்குக் காரணமான கஷாய உதய ஸ்தானங்களை விசுத்தஸ்தானம் என்று சொல்கின்றனர். மற்றும் அசாதா, அஸ்திர, அசுப, துர்பக, துஸ்வர, அனாதேய முதலிய அசுப(பாப) பிரக்ருதிகளின் பந்தத்திற்குக் காரணமான கஷாய உதய ஸ்தானங்களை சங்க்லேஷ ஸ்தானம் என்று சொல்கின்றனர்.

மிகத்தீவிர கஷாயமில்லாமல் எப்படிப்பட்ட மந்த கஷாயம் உயிரில் தோன்றுகிறதோ அந்த உணர்வு நிலையை விசுத்தி என்று சொல்கின்றனர். சாதாவேதனீய கர்மத்தின் சதுஸ்தான நிலை அனுபாக பந்த நோக்கில் சாதாவேதனீய கர்மத்தின் த்ரிஸ்தானநிலை அனுபாக பந்தம் நிகழக்காரணமான உயிரின் பரிணாமம் சங்க்லிஸ்டதர-அதிக சங்க்லேஷமுடைய தாகும், அதாவது முன்னதைவிட பின்னது தீவிர கஷாயம் உடையவராக இருக்கிறார். [அதிக புண்ணிய பந்த உணர்வு உடையவரைவிட குறைந்த புண்ணிய பந்த உணர்வு உடையவர் அதிக சங்க்லேஷ உணர்வு உடையவராவார் என புரிந்து கொள்ள வேண்டும்.]

வளர்ந்து கொண்டே போகும் கஷாயத்தின் சங்க்லேஷ உணர்வை விட குறைந்து கொண்டே போகும் கஷாயத்தின் சங்க்லேஷ உணர்வை விசுத்தி என்று சொல்வது கூட சரியல்ல. கஷாயங்களின் விருத்தி அசாதா-பாப கர்ம பந்த காரணமட்டுமல்ல, ஏனென்றால் காஷாய விருத்தி காலத்தில் சாதா-புண்ணிய பந்தம்கூட காணப்படுகிறது. அதேபோல கஷாயங்கள் குறையும் காலத்தில்கூட அசாதா-பாப பந்தமும் காணப்படுகிறது.

அதிகமாகிக் கொண்டே போகும் கஷாய உணர்வை சங்க்லேஷம் என்றும் குறைந்து கொண்டே போகும் கஷாய உணர்வை விசுத்தி என்றும் ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது? என்ற கேள்வி எழுகிறது. அப்படி எடுத்துக்கொள்ள முடியாது ஏனென்றால் அப்படி எடுத்துக் கொண்டால் சங்க்லேஷ ஸ்தானங்கள் மற்றும் விசுத்தி ஸ்தானங்கள் இரண்டின் எண்ணிக்கையும் சமமாகப் போய்விடும் சூழ்நிலை உண்டாகும். ஆனால் சங்க்லேஷ ஸ்தானங்கள் அசங்க்யாத பகுபாகம் என்றும் விசுத்தி ஸ்தானம் ஒருபாகம் என்றும் சற்று முன்னர் நாம் பார்த்தோம்.

இது பொதுவான சம்சார அவஸ்தை நிலையில் உள்ள உயிர்களில் நிகழ்வதைச் சொல்வதாகும். ஆனால் சம்யக்த்துவத்தைப்பெற எதிர்நோக்கும் உயிர்களிடம் அந்த காலத்தில் குறைந்து கொண்டே போகும் கஷாயஸ்தானங்களையே விசுத்தி என்று சொல்கின்றனர். இங்கு இப்படிச் சொல்வது சரியாகும். ஏனென்றால் தர்சன மற்றும் சாரித்திர மோஹனீயத்தின் அழிவு மற்றும் உபசமம் செய்யும் காலத்தில், முன் சமயத்தில் உதயமான ஸ்பர்தகத்தின் பலன் நோக்கில் அனந்த மடங்கு குறைந்த பலன் கொடுக்கும்

ஸ்பர்தகங்களின் உதயத்தால் உற்பத்தியாகும் கஷாய உதயஸ்தானத்தில் உயிரின் உணர்வில் சுத்திகரிப்பு உண்டாவது ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது.

இதன்மூலம் நரகம் முதலான இடங்களில் உயிர்களிடம் கஷாயங்களின் மூன்று அசுப லேஷ்யைகள் இருந்தாலும்கூட அங்கு விசுத்திலப்தி உண்டாகும் என்று ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளது.

பாருங்கள், இப்போது என்னவோ இந்த விசுத்திலப்தி அடைந்த உயிருக்கு தேசனா அதாவது மோக்ஷமார்க்கத்தின் ஸ்வரூபம் சம்பந்தமான உபதேசம் கேட்கும் காலம் கனியவில்லை. அதைப் பெறுவது பற்றி தேசனாலப்தி பற்றி சர்ச்சை செய்யும்போது பார்க்கவிருக்கிறோம். இப்போது புண்ணியபந்தம் நிகழக் காரணமான தர்மானுராக வடிவ-தர்மத்தை தெரிந்து கொள்வதில் ஆர்வமுடைய பரிணாமம் நிகழ்ந்துகொண்டு இருக்கிறது.

எத்தனையோ உயிர்கள் இந்த நிலையிலேயே திருப்தியடைந்து வாழக்கை முழுவதையும் இதிலேயே கழித்து விடுகின்றனர். மனிதநேய உணர்வுடன் பிறருக்கு உதவி செய்தல், நல்லொழுக்கத்துடன் வாழ்தல், கோயிலுக்கு சென்று பகவானை தரிசித்தல், பூஜை செய்தல், தீர்த்தயாத்திரை செய்தல், பிறர்மீது கருணை கொள்ளல், தானம் செய்தல் இவைகளையே வாழ்க்கையின் வெற்றி என்று நம்புகின்றனர். இதுவரை இந்த உயிர்கள் தத்துவஞானம் பெறவில்லை, உண்மையான தேவ, குரு, சஸ்திரத்தைப்பற்றி அறிந்திருக்கவில்லை. சில உயிர்கள் தர்மானுராக வசத்தால்- தர்மத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தால் பிரவசனம்-சாஸ்திர ஸ்வாத்யாயத்தை கேட்கக்கூட செல்கிறார்கள், ஆனால் உண்மையான உபதேசத்தை கேட்கும் பாக்கியம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இந்த உயிர் மனைவி, மக்கள், குழந்தைகள், வியாபாரம், மற்றும் பொருள் சம்பாதிக்கும் இன்னும் பல வேலைகளை அபூர்வமாக விட்டுவிட்டு ஒரு சில மணி நேரம் சாஸ்திர ஸ்வாத்யாயம் கேட்கப் போகும்போது; **அய்யஹோ! குகுருக்கள் அவர்களை கிரஹீத மித்யாத்துவ வழியில் திருப்பி விட்டுவிடுகிறார்கள்** என்று வணகத்திற்குரிய கான்ஜி ஸ்வாமிகள் அவருடைய பிரவசனத்தில் சொல்லியிருக்கிறார்.

நீங்கள் சிந்தித்துப் பாருங்கள், அனாதி காலமாக நாம் பல பிறவிகளில் பிறந்து, இறந்து கொண்டு வருகிறோம். அதில் அனந்தமுறை சில நேரங்களில் தூயஉணர்வு கொண்டு புண்ணியத்தைக் கட்டிக்கொண்டோம், சில நேரங்களில் சங்க்லேஷ உணர்வு கொண்டு பாபத்தைக் கட்டிக்கொண்டோம், ஆனால் கர்மங்களை கட்டிக் கொள்வதிலிருந்து விடுபடும் மார்க்கத்தை மட்டும் பெறவுமில்லை, அதைத் தெரிந்து கொள்ள முயற்சியும் செய்யவில்லை.

இதிலிருந்து விடுபடும் வழி-மோக்ஷமார்க்கம் மற்றும் அது பற்றிய உபதேசத்தை ஜினேந்திர பகவான் கூறியிருக்கிறார், அதுவே யாதார்த்தமான-சரியான-உண்மையான மோக்ஷத்திற்கு வழியாகும். பந்தத்திலிருந்து விடுபடும் வழி நமக்கு இப்போதும் கிடைக்கிறது, அதன் மூலகர்த்தா- முதன்முதலில் உபதேசம் செய்தவர் தீர்த்தங்கர பகவான் ஆவார். அவருடைய திவ்யத்தொனியில் இந்த உபதேசம் சுலபமாகவே புரிந்து

கொள்ளும் வகையில் சொல்லப்பட்டுள்ளது. அந்த உபதேசத்தின்படி கணதர ஆச்சாரியர்கள் பன்னிரண்டு அங்கங்களைப் படைத்திருக்கிறார்கள். அவைகளை நாம் துவாதசாங்க திரவ்யஸ்ருதம் என்று சொல்கிறோம். ஆச்சாரிய பரம்பரையின் வழியாக இந்த மார்க்கம் இன்றுவரை நமக்குக் கிடைக்கும் வகையில் வந்து கொண்டிருக்கிறது.

க்ஷயோபசமலப்தி மற்றும் விசுத்திலப்தி அடைந்தவர்களுக்கே இந்த மார்க்கத்தின் உபதேசத்தை கேட்கும் ஆர்வம் மற்றும் புத்திசாலித்தனம் வருதல் மற்றும் உண்மையான உபதேசத்தை கேட்கும் வாய்ப்பு மஹாபக்கியம்-மஹா புண்ணியம் கிடைக்கும். விசுத்திலப்தி இல்லாமல் உயிர் ஜினேந்திர பகவானால் சொல்லப்பட்ட உபதேசத்தை கேட்கத் தயாராவதில்லை.

கல்லில் விதைத்த விதை வீனாகப் போகிறது, முளைப்பதில்லை. விதை முளைக்க மிருதுவான-மென்மையான மண்ணில்தான் விதைக்க வேண்டும் அல்லவா, அதுபோல ஜினவாணியை கேட்கும் சௌபாக்கியம் மற்றும் அதைக் கேட்டுச் சரியாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு மென்மையான உணர்வு-விசுத்தி உணர்வு கொண்டவர்களுக்கே கிடைக்கும்.

இரண்டாவதாக ஒன்று இங்கே சொல்லவேண்டும். யாருக்கு மஹாபுண்ணிய உதயம் இருக்கிறதோ அவருக்கே மஹாதுர்லபமான ஜினவாணியை கேட்கும் வாய்ப்பு கிடைக்கும், இல்லையேல் உண்மையான முக்திமார்க்கம் பற்றிய உபதேசம் அவர்கள் காதில் விழுவதுகூட மாஹாதுர்லபமான ஒன்றாகும்.

சொத்து சுகங்கள் வீடு சுற்றங்கள் முதலியவைகளைப் பெறுவது புண்ணியத்தின் பலன் என்று பலரும் சொல்கின்றனர். இதுவரை இந்த புண்ணியத்தை ஒவ்வொரு உயிரும் அனந்தமுறை பெற்று, அதனால் கிடைக்கும் சுகங்களை அனுபவித்து, அவைகளை விட்டு மரணமடைந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் எது நம்மைப் பிறவி சுழற்சியிலேயே கட்டிப்போட்டு விடுகிறதோ அப்படிப்பட்ட அந்த புண்ணியத்தை ஈட்டுவதே சரியானது என்று எப்படிச் சொல்ல முடியும்?

எந்த உயிருக்கு தன் ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்வதில் தீவிரமான ஆர்வம் வருகிறதோ, அந்த தர்மத்தில் தீவிர ஆர்வமுடைய உயிரே மந்த கஷாய நிலையைப் பெறுகிறது. அதற்கு இந்தப் பாத்திரத் தன்மையாலேயே தேசனா வடிவ நிமித்தம் தானாகவே கிடைக்கிறது. [அது தேசனா கொடுப்பவரை தேடிப்போக வேண்டிய அவசியம் வருவதில்லை.] இப்போது தேசனாலப்தி பற்றி பார்க்கலாம். முதன்முதலில் அதன் வரையறையைப் (definition-ஐ) பார்க்கலாம்.

**தேசனாலப்தி:** ஆறு திரவியங்கள், ஏழு தத்துவங்கள், அதாவது ஒன்பது பதார்த்தங்கள் (பாப, புண்ணியத்தையும் சேர்த்து), மோக்ஷமார்க்கம், உண்மையான தேவ, குரு, சாஸ்திரங்களின் ஸ்வரூபம், தான் மற்றும் பிற பற்றிய அறிவு, ஹேய-ஞேய-உபாதேய (விடவேண்டிய, அறியவேண்டிய, ஏற்கவேண்டிய) பாவம்-உணர்வு முதலானவைகள் பற்றிய உபதேசத்தைக் கொடுக்கக்கூடிய ஆச்சாரியர் முதலானவர்கள் அதாவது தீர்த்தங்கரர்,

ஆச்சாரியர், உபாத்தியாயர், சாது, ஐந்தாம் அல்லது நான்காம் குணஸ்தானமுடைய ஞானி உயிர்களின் தொடர்பு கிடைத்தல், அவர்கள் மூலம் கொடுக்கப்படும் உபதேசம் அதாவது தேசனா கிடைத்தல் மற்றும் உபதேசிக்கப்பட்ட பதார்த்தங்களின் அறிவு தாரணையில் இருத்தல்-ஞாபகத்தில் இருத்தல் தேசனாலப்தி என்று சொல்லப்படுகிறது.

உபதேசத்தை தேசனா என்று சொல்கின்றனர் ஆனால் அந்த அந்த உபதேசத்தைக் கேட்டு அதை புரிந்து கொள்ளுதல், ஞாபகத்தில் வைத்திருத்தல், அதை மீண்டும் மீண்டும் சிந்தனையில் கொண்டு வருதலே தேசனாலப்தி யாகும். உபதேசங்களை கவனமாகக் கேட்டல், கேட்பதை அறிவுப்பூர்வமாக ஏற்றல், அறிவப்பூர்வமாக ஏற்றதை ஞாபகத்தில் வைத்திருத்தல், அவைகளைப்பற்றி திரும்பத்திரும்பச் சிந்தித்தல் தேசனாலப்தியின் அங்கங்களாகும்.

உபதேசத்தை வெறுமனே கேட்பது மட்டுமே தேசனாலப்தி இல்லை. தேசனாலப்தி பெறும் உயிர் தன்னுடைய ஸ்வரூபம் சம்பந்தமான உபதேசத்தை மிகுந்த ஆர்வத்துடன் கேட்பதாகும். பத்மநந்தி பஞ்சவிம்சதி என்ற நூலில் ஆசாரிய பத்மநந்தி இவ்வாறு கூறுகிறார்-

**தத்பிரதி பிரீதிசித்தேன யேன வர்த்தாபி ஹீ ஸ்ருதா |**
**நிஸ்சிதம் ச பவேத் பவ்ய பாவி நிவாரணபாஜனம்||**

இதன் பொருள்: **தன் ஆத்மா பற்றி கூறும் உபதேசத்தை யார் ஆர்வத்துடன் கேட்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக பவ்வியர்களாவார்கள் மற்றும் அவர்கள் எதிர்காலத்தில் முக்தி அடையப்போகிறவர்களாவார்கள்** என்பதாம்.

தன் ஸ்வரூப சம்பந்தமான உபதேசத்தைக் கேட்டு ஆனந்தமடைபவருக்கு அது சம்பந்தமாக மேலும் அதிகமாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற தீவிர ஆர்வமும், மகிழ்ச்சியும் உண்டாகிறது. இக்கட்டான குடும்ப சம்பந்தமான தவிர்க்க முடியாத காரியங்களில் ஈடுபட்டிருந்தாலும், எப்படியாவது நேரத்தை ஒதுக்கி அவர் அதிக உற்சாகத்துடன் உபதேசம் கேட்க வருகிறார். இது நமக்கு மிகவும் அனுபவமான ஒன்றுதான். நாம் விரும்பும் TV சீரியல் பார்ப்பதற்காக மற்ற எல்லா வேலைகளையும் சீக்கிரம் முடித்து விட்டு சீரியல் ஒளிபரப்பப்படும் நேரத்தில் சரியாக TV-யின் முன்னர் வந்து அமர்ந்து விடுகிறோம் அல்லவா!

அதுபோல தத்துவ சம்பந்தமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வு ஒருவருக்கு வந்து விடுமானால் அந்த ஆர்வமே அவருக்கு அதைப்பெற வழி செய்கிறது. உலக விஷயங்களில் சிக்கிக்கொள்வதைவிட தத்துவ சம்பந்தமான விஷயங்களில் ஈடுபடுவதையே சுவையானதாக அவர் எண்ணுகிறார். அன்றாட வேலை நின்று போவதால் பொருளாதார இழப்பு வந்தாலும், அவர் தேசனா கேட்பதற்காக நேரம் ஒதுக்கத் தவறுவதில்லை, அவரை அதிலிருந்து திசைத் திருப்பவும் முடியாது. யாருக்கு தேசனாலப்தி பெறும் தகுதி இருக்கிறதோ, பவிதவ்வியமோ அவருக்கு ஞானிகளுடன் நல்லுறவும், அவரிடமிருந்து உபதேசம் பெறுவதும் தானாகவே நிகழ்கிறது. அந்த உயிருக்கு இருக்கும் தீவிர ருசியும் அதற்குக் காரமாக அமைகிறது.

உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? 1975-ஆம் வருடம் ரீனா, நீ ஆறு வயது நிரம்பியவளாகவும், மோனா, நீ மூன்று வயது குழந்தையாகவும் இருந்தபோது உங்கள் இருவரையும் வீட்டில் மாமா, மாமியிடம் விட்டுவிட்டு நானும் உங்கள் அப்பாவும் உங்கள் தாத்தா-பாட்டியுடன் தர்மசக்கர யாத்திரை சென்றோம். நாங்கள் தொடர்ந்து மூன்று மாதங்கள் பாரதம் முழுவதும் உள்ள தீர்த்த க்ஷேத்திரங்களையும், சித்த க்ஷேத்திரங்களையும் வந்தனை செய்து கொண்டே பயணம் செய்து கொண்டிருந்தோம். 1000 யாத்திரிகர்களும் அனேக வித்துவான்களுடன் இந்த யாத்திரை நிறைவடைந்தது. அந்த யாத்திரையின்போது தினமும் அனேக வித்துவான்களின் பிரவசனங்களைக் கேட்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்து.

யாத்திரை செய்வதில் எனக்கு அதிக ஆர்வமிருந்தது, யாத்திரையும் வெற்றியடைந்தது, ஆனால் அதனுடன் பலபிறவிகளிலும் கிடைப்பதற்கரிய மிகவும் துர்லபமான உண்மையான தத்துவஞான பிரவசனங்களைக் கேட்கும் வாய்ப்பும் கிட்டியது. அரே! நான் எப்படிப்பட்ட ஒரு தனித்துவமான வடிவம்! நாம் இந்த விஷயங்களை-இந்த தத்துவங்களைப் பயிற்சி செய்வது பற்றிய எந்த அறிமுகமும் இல்லாமல் இருக்கிறோமே என்று அந்த நேரத்தில் நினைத்தேன். என் இளமைப் பருவத்திலிருந்தே என் பெற்றோர்களைப் பார்த்து நம் ஜினதர்மத்தின் மேல் ஈடுபாடும், பூஜை முதலான சடங்குகள் செய்வதும் என்னவோ எனக்குத் தெரிந்திருந்தது, ஆனால் தத்துவஞானம் பெறும் சாஸ்திரங்களில் பயிற்சி பெறும் அணுகுமுறையும் அதன் மஹத்துவத்தையும் நான் இதுவரை தெரிந்து கொள்ளாமல் இருந்ததை உணர்ந்தேன். அந்த யாத்திரைக்குச் சென்றுவந்த பிறகு பலமுறை உங்களை அழைத்துக் கொண்டும் சில சமயங்களில் உங்களை வீட்டிலேயே விட்டுவிட்டும் நாங்கள் இருவரும் ஷிபீர் மற்றும் பிரவசனங்களுக்கு சென்று கொண்டிருந்தோம்.

நீங்கள் இருவரும் சிறுவயதினராக இருந்த போதிலும் அதி புத்திசாலிகளாகவும், மிகுந்த சகிப்புத்தன்மை உடையவர்களாகவும் இருந்தது என் நினைவுக்கு வரும்போதெல்லாம் நான் மிகவும் ஆச்சர்யத்தில் ஆழ்ந்து போகிறேன். நாங்கள் இருவரும் தத்துவஞானம் பெறுவதில் உங்கள் இருவரின் விலைமதிப்பற்ற ஆதரவு எங்களுக்குக் கிடைத்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்த விஷயத்தில் உங்களுடைய உபகாரம் நினைவுக்கு வரும்போதேல்லாம் மற்றும் இப்போதும்கூட என்னுடைய கண்களில் நன்றியுடன் கலந்த ஆனந்தக் கண்ணீர் வருகிறது.

யாருக்கு உண்மையான தர்மத்தை தெரிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் இருக்கிறதோ அவர்களுக்கு ஞானிகளின் தொடர்பு, அவர்களின் உபதேசம் (தேசனா) கிடைத்தல் மற்றும் அதற்கு உகந்த சூழ்நிலை தானாகவே அமைந்து விடுகிறது. உண்மையில் சொல்ல வேண்டுமென்றால் சூழ்நிலை எப்போதும் பாதகமாக இருப்பதில்லை. சூழ்நிலையின்மேல் நமக்கு ருசியும், பெருமையும் இருக்குமானால் அதுவே நமக்கு தர்ம விஷயத்தில் பாதகமாக அமைந்து விடுகிறது. யாருக்கு தத்துவஞானம் பெறுவதில் ஆர்வம் இல்லையோ அவர் அந்த சூழ்நிலைகளின் சாதகமற்றத் தன்மையில் ஒளிந்துகொண்டு, அதன்மேல்

பழியைப் போட்டு தத்துவஞானம் பெறுவதிலிருந்துத் தப்பித்துக் கொள்ளவே நினைக்கிறார்கள்.

எவ்வாறு உதயத்திற்கு வரும் மூடநம்பிக்கை மற்றும் கஷாயங்களின் பலன்தரும் சக்தி மந்தமாகவும், மந்ததரமாகவும் ஆகிறதோ அதுபோல உதயத்திற்கு வரும் ஞானாவரணம் முதலான கர்மங்களின் பலன்தரும் சக்திகூட மந்தமாகிக்கொண்டே போகிறது. இதனால் உயிர் எந்த உபதேசத்தைக் கேட்கிறதோ, ஏற்கிறதோ அதை தகுதியானதா அல்லது தகுதியற்றதா என்று உறுதி செய்யும் அறிவும்-விவேகமும் கூட அதற்கு வந்து விடுகிறது. எதிரில் இருக்கும் நபர் ஞானிதானா மற்றும் அவர் கூறும் சாஸ்திர உபதேசம் உண்மையானதுதானா என்பது பற்றி தன் சுயபுத்தியாலேயே அடையாளம் கண்டு, தெரிந்து கொள்கிறது. பிறருடைய புத்திக்கு அனுசரணையாக காரியம் செய்பவர் சரியான முடிவு எடுக்கும் தகுதி இல்லாதவர்களாக இருப்பதை நாம் உலக வாழ்க்கையில் கண்கூடாகவே பார்க்கிறோம்.

தர்மத்தின் ஸ்வரூபம் அல்லது ஆத்மாவின் ஸ்வரூபம் பற்றி கூறும் வக்தாக்களில் (சாஸ்திரத்தை எடுத்துச் சொல்பவர்) கூட சிலர் உண்மையான உபதேசம் செய்கின்றனர், மற்றும் சிலர் தர்மம் மற்றும் ஆத்மா என்ற பெயரில் தவறான உபதேசம் செய்து மூடநம்பிக்கையை மேலும் வளர்ச்சி அடையும்படி பிரசாரம் செய்கின்றனர். இந்த சூழ்நிலையில் உபதேசம் உண்மையானதா அல்லது பொய்யானதா என்று பகுத்தறியும் ஞானமும், அதை சோதித்துப் பார்த்து ஏற்கவேண்டியதா, விடவேண்டியதா என்ற முடிவுக்கு வரும் தகுதியான விவேகமும் நம்மிடம் இருக்க வேண்டும்.

நாம் ஒருவருக்கு அமையும் நல்ல சூழ்நிலைகளையும், சொத்து சுகங்கள் கிடைத்திருப்பதையும் பார்த்து, இவையெல்லாம் அவருடை புண்ணிய உதயம் என்ற முடிவுக்கு வருகிறோம். ஆனால் தேசனா (தர்மோபதேசம்) கொடுப்பவர் கிடைத்தல், உண்மையான உபதேசம் கொடுப்பவருடன் தொடர்பு உண்டாதல், அவருடன் கூடிப் பழகும் வாத்சல்யம் வருதல், அவரால் கொடுக்கப்படும் உபதேசத்தை கேட்கும் சந்தர்ப்பம் பெறுதல், அதை புரிந்து ஏற்றுக்கொள்ளும் அதிர்ஷ்டம் முதலியவைகள் தான் உண்மையில் ஒருவருக்குக் கிடைக்கும் உயர்ந்த ஜாதி புண்ணியத்தின் பலனாகும்.

சாஸ்திரங்களைத் தவறாக எடுத்துச் சொல்பவர், கேட்பவரின் மனதுக்குப் பிடித்தவாறு எடுத்துச் சொல்லும் நபர்களுக்கு உலகத்தில் எந்தப் பஞ்சமுமில்லை. அவர்கள் தாங்களே உண்மையான தேசனா-உபதேசம் செய்பவர் என்றும், உலக நன்மைக்காகவே அவர்கள் அவதாரம் எடுத்ததாகவும் சொல்லிக் கொள்கின்றனர். [அப்படிப்பட்ட சுவாரசியமான வதந்திகளைப் பரப்ப ஒரு கூட்டமும் அவர்களுக்கு சுலபமாகவே கிடைத்து விடுவதை நம்மால் பார்க்க முடிகிறது.] இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் அவர்களுக்கு பக்தர்களின் பெரிய கூட்டம் சிலநேரங்களில் தானாகவே வந்து சேர்ந்து விடுகிறது. அப்படிப்பட்டவருக்குப் பின்னால் இருந்துகொண்டு கண்மூடித்தனமாக அவரை பின்பற்றுபவர்களைப் பார்க்கும்போது அவர்களுக்கு நிகழவேண்டியது-ஹோனாஹார் இப்படித்தான் இருக்கிறது போலும் என்று தெரிந்து கொள்ள வேண்டியதுதான்.

ஐயா, நீங்கள் சாப்பிட்டு விட்டீர்களா? என்று ஒருவரிடம் கேட்டால், அவர் இவ்வாறு பதில் சொல்லுவார். "அய்யஹோ! நான் மற்றவர்களுக்கு சாப்பாடு ஏற்பாடு செய்கிறேன். பாருங்கள், நான் 1,000 பேர்களுக்குச் சாப்பாட்டுக்கான டோக்கன்-அனுமதி சீட்டு எழுதி கொடுக்கிறேன்." என்று கூறுவார். அப்போது உங்கள் வயிறு நிறம்பியிருக்கும் அல்லவா? என்று கேட்டால் "ஐய்யோ! எனக்கு ஓய்வு எங்கே கிடைக்கிறது? மற்றவர்களுக்கு சாப்பாட்டு டோக்கன் கொடுத்துக்கொடுத்தே எனக்குச் சாப்பிடக்கூட நேரம்கூட கிடைப்பதில்லை" என்று அவர் சொல்லுவார்.

இன்னுமொரு உதாரணம் பார்க்கலாம். இரண்டாவதாக இன்னொருவரிடம், "உங்களுக்கு பணம் விஷயத்தில் எந்த குறையும் இல்லை அல்லவா? என்று கேட்டால் அவர் இவ்வாறு கூறுவார், "என்னிடமா கேட்கிறீர்கள்? அய்யஹோ! அதை ஏன் கேட்கிறீர்கள், என்னிடமிருந்து பணம் பெறுவதற்காகவும், பணம் கொடுப்பதற்காகவும் தினமும் என் முன்னர் கோடீஸ்வரர்கள் வரிசையில் நிற்கிறார்கள்." மீண்டும் நாம் அவரிடம் , "அப்ப உங்களுக்குப் பணம் பற்றிய கவலை எதுவும் இல்லை அல்லவா?" என்று கேட்டால் அவருடைய பதில் இவ்வாறாக இருக்கும். "நான் உங்களுக்கு என்னவென்று சொல்லுவேன்? நான் வீடு வாங்க வேண்டும், மகளுக்குத் திருமணம் செய்விக்க வேண்டும், மகனை மேல் படிப்புக்காக வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டும். இவைகள் எல்லாவற்றிற்கும் போதிய பணம் என்னிடமில்லை!" அப்போது நாம் அவரிடம் சொல்லுவோம், "நீங்கள் சற்று முன்னர் கேடீஸ்வரர்கள் உங்கள் முன் தினமும் வரிசையாக நிற்பதாக.... கூறினீர்களே", என்றால் அவருடைய பதில், "ஆமாம்! நான் ஒரு வங்கியில் காசாளராக பணிபுரிகிறேன். இவ்வளவு லட்சக்கணக்கான பணத்தை கொடுக்கவும், வாங்கவும், எண்ணிச் சரிபார்த்து வைக்கும் வேலை செய்வதற்கு எனக்கு சில ஆயிரம் ரூபாய்கள் சம்பளமாகக் கிடைக்கிறது" என்பதாக இருக்கும்.

இதேபோல யாரிடமாவது, "அன்பரே, உங்களுக்கு தேசனா கிடைத்திருக்கும். அல்லவா?" என்று கேட்டால் அவர் கூறுவார், "நீங்கள் என்ன கேட்கிறீர்கள்? நான் என்னவோ தேசனா கொடுப்பவனாவேன். நான் இந்த எல்லா கிரந்தங்களையும் தட்டச்சு-டைப் செட்டிங் செய்திருக்கிறேன், பிழைத்திருத்தம் செய்திருக்கிறேன், சொற்பொழிவு ஆற்றுகிறேன்." என்று கூறுவார். அதற்கு நீங்கள் "நன்றாகச் சொன்னீர்கள். அப்ப நீங்கள்தான் அந்த தேசனா கொடுக்கவல்ல ஞானி தர்மாத்மா சம்யக்த்ருஷ்டி யாவீர்கள்." என்று கூறினால் அதற்கு அவர். "இல்லை, எனக்கு எங்கே அந்த சௌபாக்கியம் இருக்கிறது?" என்று சொல்லுவார்.

ஞானிகளின் உபதேசத்தையே தேசனா என்று சொல்கின்றனர். அந்த உபதேசம் மோக்ஷமார்க்கம் சம்பந்தமானதாக இருக்க வேண்டியது அவசியமாகும், திரவியானுயோகம் சம்பந்தமானதாக இருப்பது அவசியமாகும், மற்றும் தான், பிற பற்றி பிரித்தறியும் அறிவு-பேதவிஞ்ஞானம் செய்யப் பிரயோஜனமாக இருக்க வேண்டும். பிற அனுயோக சம்பந்தமான உபதேசமாக இருந்தாலும் அதுகூட வீதராகத்தை உறுதிப் படுத்துவதாகவும், திரவியானுயோக சித்தாந்தங்களை நிரூபிக்கக்கூடியதாகவும் இருப்பது அவசியமாகும்.

யாராவது கிரஹஸ்தராக-வீட்டில் வாழ்பவராக உள்ள ஞானி உயிர் அவருடைய பிள்ளைகளுக்கு வியாபாரம், வாணிபம், குடும்ப சம்பந்தமான ஆலோசனைகள் மற்றும் உபதேசங்கள் கொடுக்கிறார் என்றாலும், சமூகத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி கற்றுக் கொடுப்பாரானாலும் அதை தேசனா என்று சொல்லுவதில்லை.

தேசனா (அற உபதேசம்) முதன்முதலில் அரஹந்த பகவானிடமிருந்தே பெறப்பட்டது, அவருடைய உபதேசத்தைக் கேட்டு அதை அனுசரித்து செய்யப்பட்ட சாஸ்திரங்கள், அந்த சாஸ்திரங்களில் உள்ள உபதேசத்தை உள்ளது உள்ளபடியே எடுத்துச் சொல்லும் குருவின் உபதேசமும் தேசனா வாகும்-அதாவது உண்மையான குருவும் தேசனா கொடுக்கக்கூடியவராவார். உண்மையான குருக்கள் மோக்ஷமார்க்கம் பற்றிய உபதேசம் மட்டுமே கொடுப்பார்கள். **[**லௌகீக உபதேசத்தையும் தர்மோபதேசத்துடன் சேர்த்துக் கொடுக்கும் குருக்களின் உபதேசத்தை தேசனா என்று எடுத்துக் கொள்ளக் கூடாது**.]** ஆனால் நான்கு, ஐந்தாம் குணஸ்தானத்திலிருக்கும் உயிர்கள் இப்போது கிரஹஸ்த அவஸ்தையில்-குடும்பத்துடன் வீட்டில் வாழும் நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் சாஸ்திர ஸ்வாத்யாயம் செய்யும்போது கூட மோக்ஷமார்க்கம் பற்றிய உபதேசத்தையே கொடுப்பார்கள், ஆத்மஸ்வரூபம் பற்றியே விளக்கம் சொல்லுவார்கள், திரவ்யானுயோகத்தின் பல சித்தாந்தங்களை எடுத்துச் சொல்லி புரியவைப்பார்கள். நிமித்த-உபாதானம், நிச்சய-வியவஹாரம், நான்கு அபாவங்கள், ஐந்து சமவாயங்கள், ஆறு காரகங்கள், கிரமபத்தபர்யாயம், தேவ குரு சாஸ்திரங்களின் ஸ்வரூபம், விடவேண்டியவை, தெரிந்துகொள்ள வேண்டியவை, ஏற்கவேண்டியவை முதலான தத்துவங்களின் ஸ்வரூபம் ஆகியவைகளை விரிவாக வர்ணனை செய்வார்கள், நமக்குப் புரியவைப்பார்கள். ஆனால் அவர்கள் குடும்ப வாழ்க்கையை உத்தேசித்து பிற காரியங்கள் பற்றி குடும்பத்தில் உள்ளவர்களிடமும், ஜினதர்மத்தை சார்ந்தவர்களிடமும் மற்றும் பொதுவான மக்களிடமும் அவர்களுக்குத் தேவைப்படுமானால் லௌகீக(நடைமுறை வாழ்க்கை பற்றிய) உபதேசமும் கூட கொடுப்பார்கள். அவர்கள் சாஸ்திர சம்பந்தமாக கூறும் உபதேசங்களை மட்டுமே தேசனா என்று சொல்லுவார்கள். ஆனால் அவர்கள் கொடுக்கும் லௌகீக உபதேசங்களைக்கூட தேசனா என்று எடுத்துக் கொள்ளுதல் தகுதியானதல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இங்கு நாம் இதுவரை தேசனா-உபதேசம் பெறுதல் பற்றிய சர்ச்சை கொஞ்சம் விரிவாகவே செய்து கொண்டிருந்தோம். நம்முடைய விஷயம் என்னவோ தேசனாலப்தி பெறுதல் பற்றியதாகும். அதைப்பற்றி அதிகமான சர்ச்சையை நாம் அடுத்த கடிதத்தின் மூலம் செய்யலாம்.

இப்போது இந்த கடிதம் மேலும் விரிந்துகொண்டே போகாமல் இருக்க இத்துடன் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்.

ஜெய் ஜினேந்திரா!

-உங்கள் அம்மா.

## தேசனாலப்தி

**கடிதம்-7** **15-9-2002**

பிரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

முன் கடிதத்திலிருந்தே நாம் தேசனாலப்தி சம்பந்தமான சர்ச்சையைத் துவங்கியுள்ளோம். பிரமோபசம சம்யக்த்துவம் அதாவது முதன்முதலில் நற்காட்சி பெறும்முன்னர் தேசனாலப்தி பெறுவது அவசியமான ஒன்றாகும். இரண்டாவதாக இந்த தேசனா ஞானி உயிர்களிடமிருந்தே பெறப்பட வேண்டும், அல்லது ஞானிகளால் செய்யப்படும் பிரசங்கத்தை-உபதேசத்தை ஏற்றலே தேசனா என்று சொல்லப்படுகிறது.

“தத்துவார்த்தஸூத்திரத்தில் நற்காட்சி பெறுதலை நிசர்கஜம், அதிகமஜம் என இரண்டு விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிறர் மூலமாகப் பெறப்பட்ட உபதேசத்தின் மூலம் அடையும் நற்காட்சி அதிகமஜம் என்றும், யாருடைய உபதேசமுமின்றி பெறப்படும் நற்காட்சி நிசர்கஜம் என்றும் அங்கு விளக்கம் சொல்லப்படுகிறது. ஆகையால் தேசனாலப்தி பெறும் அவசியம் எல்லோருக்கும் தேவையில்லை என்று எடுத்துக் கொள்ளலாம் அல்லவா?” என்ற கேள்வியை நீங்கள் எழுப்பியுள்ளீர்கள்.

கேளுங்கள்! இந்தப் பிறவியில் ஞானியின் மூலம் உபதேசம்-தேசனா எந்த உயிருக்குக் கிடைக்கவில்லையோ அவருக்கு நற்காட்சி உண்டாகுமானால், அவருக்கு முற்பிறவியில் கட்டாயமாக-நியமமாக-நிச்சயமாக ஏதோ ஒரு ஞானியின் மூலம் தேசனா கிடைத்திருக்கிறது என்றுதான் எடுத்துக் கொள்ளவேண்டும், இந்த பிறவியில் அவர் தேசனா பெறவில்லை ஆகையால் அவர் பெற்ற நற்காட்சியை நிசர்கஜ சம்யக்தரிசனம் என்று சொல்கின்றனர். யார் இந்தப் பிறவியில் தேசனா கிடைத்த பிறகு நற்காட்சி பெறுகிறாரோ அந்த நற்காட்சியை அதிகமஜ சம்யக்தரிசனம் என்று சொல்கின்றனர். ஆனால் தேசனாவே எந்த பிறவியிலும் பெறாமல் நிசர்கஜ சம்யக்தரிசனம் பெற்று விடலாம் என்று எண்ணுதல் தவறாகும், அப்படி எந்த காலத்திலும் நிகழ்வதில்லை.

நாரகி மற்றும் தேவபிறவி உயிர்களிடம் அவதிஞானம் காணப்படுகிறது. அந்த அவதிஞானத்தின் மூலம் அவர்கள் முற்பிறவியில் பெறப்பட்ட தேசனாவை ஞாபகப்படுத்தி அறிகின்றனர். மனித மற்றும் விலங்கு உயிர்களுக்கு ஜாதிஸ்மரணம்-முற்பிறவி நினைவு பெறும் அறிவின் மூலம் முற்பிறவியில் பெற்ற தேசனா நினைவுக்கு வருகிறது அல்லது முற்பிறவியில் கேட்ட அல்லது பயிற்சி செய்த தர்மோபதேசம் தாரணை (மதிஞானத்தின் ஒரு பிரிவு) ஞானத்திலிருந்து நினைவுக்கு வரும் காரணத்தாலும் நற்காட்சியைப் பெறமுடியும்.

அடுத்த பிறவியில் அவருக்கு முற்பிறவியில் கேட்ட அந்த குறிப்பிட்ட சொற்கள் நினைவுக்கு வரவில்லை என்றாலும்கூட தத்துவத்தின் சாராம்சம்-பிழிவு நினைவில் வந்தால், பிறகு அந்தர்முகூர்த்த காலம் அதை சிந்திக்கும்போது, அந்த தத்துவங்களை முன்னர் கேட்ட அனுபவம் வந்துவிடுகிறது. இதற்கு பாஹ்ய-வெளி நிமித்தங்களாக

ஜினபிம்ப தரிசனம், சொர்க்கத்தில் தேவர்களின் ரித்திகளைக் காணல், தேவர்களின் வைபவங்களைப் பார்த்தல் அல்லது நரகத்தில் தீவிர வேதனை அனுபவம் செய்தல், மனித பிறவியில் பகவானின் பிம்பதரிசனம், தர்மோபதேசம் கேட்டல், தர்மத்தை நினைவுகூறுதல், கிரந்தங்களைப் படித்தல் ஆகியவைகளால் முன்னர் பெற்ற தேசனா ஞாபகத்திற்கு வரமுடியும். இவைகளை பாஹ்யதேசனா என்று கூறினாலும், தேசனா என்று சொன்னாலும், தேசனாலப்தி சமயத்தில் உயிர் அதைப்பற்றி சிந்தித்தல், ஏற்றல், ஞாபகத்தில் கொள்ளுதல் ஆகியவைகளைச் செய்கிறது, அதைப்பற்றி மீண்டும் மீண்டும் சிந்தனை செய்கிறது, நிர்ணயம் செய்கிறது-உறுதியான ஒரு முடிவுக்கு வருகிறது. வெறுமனே காதால் தர்மோபதேசத்தை கேட்பது மட்டுமே தேசனாலப்தி என்று சொல்லப் படுவதில்லை.

நீ ரோஹித்திடம் **மகனே, தண்ணீர் கொண்டு வா** என்று கூறினாய் என்று வைத்துக்கொள். அவன் நின்றுகொண்டே உன்னை பார்த்துக்கொண்டு இருந்தானானால், மீண்டும் கூறுவாய். ஆனாலும் அவன் கேட்கவில்லை என்றால், அவனிடம் கொஞ்சம் சப்தமாக **என்ன, நான் சொன்னதை நீ கேட்கவில்லையா?** என்று அதட்டுவாய். அதைக் கேட்டு அவன் தண்ணீர் கொண்டுவந்தால்தான் அவன், நீ சொன்னதைக் கேட்டதாக எடுத்துக் கொள்ளமுடியும். நீ சொன்னபடி அவன் செய்தால்தான் நீ **என் ராஜா, எவ்வளவு நல்ல குழந்தை, நான் சொல்வதை அப்படியே கேட்கிறான்** என்று நீ அவனை புகழ்து சொல்லுவாய் அல்லவா.

பகவானால் அல்லது ஆச்சாரியரால் சொல்லப்பட்டதில் எவ்வளவு கேட்டிருக்கிறோம் என்று நாம் எப்போதாவது சிந்தித்ததுண்டா? உன் பிள்ளையின் உதாரணத்தின் மூலம் எதையும் வெறுமனே காதால் கேட்பதை மட்டுமே, கேட்டதாகச் சொல்லப்படுவதில்லை என்பதை தெரிந்து கொண்டிருப்பாய். அவன் நீ சொன்னதைக் காதால் கேட்டால் மட்டும் போதாது, அதை புரிந்து கொள்வதும் அவசியம், அதை நினைவில் கொள்வதும் அவசியம், அதைப்பற்றி சிந்திப்பதும்-அதைப்பற்றி முடிவு செய்வதும் பிறகு அவ்வழியில் செயல்படுவது எல்லாம் நிகழ்ந்தால்தான் அவன் கேட்டதின் பொருளாகும் அல்லவா. அதேபோல **நம் காதில் பகவானின் உபதேசத்தை வாங்கிக்கொண்டு அதைப்பற்றி எந்த சிந்தனையும் இல்லாமலிருந்தால் எப்படி அந்த உபதேசத்தை நாம் கேட்டதாகச் சொல்ல முடியும்?**

மக்கள் பகவான் சொன்னதை எங்கே கேட்க விரும்புகிறார்கள்? பகவான்தான் அவர்கள் சொல்வதைக் கேட்கவேண்டும் என்று விரும்புகிறார்கள், அவர்கள் சொல்வதை பகவான் கேட்கும்படியும் செய்கிறார்கள். தினமும் கோயிலில் அதிக சப்தத்துடன் பூஜை பாடம் படித்து பக்தி செய்கிறார்கள், பகவான் மேல் பாடல்கள் பாடுகிறார்கள், பகவானுக்கு ஜே! பகவானுக்கு ஜே!! என்று சப்தம் போடுகிறார்கள். ஆனால் பகவான் அவருடைய உபதேசத்தில் என்ன கூறினார் என்பதை மட்டும் சாஸ்திரங்களின் மூலமாகவோ அல்லது குருக்களின் உபதேசம் வாயிலாகவோ, வித்துவான்களின் சொற்பொழிவுகள் மூலமாகவோ கேட்க விரும்புவதில்லை. இது எந்த மாதிரியான நிலை-அவஸ்தை என்று தெரியுமா? இரண்டு இந்திரியம், மூன்று இந்திரியம் மற்றும் நான்கு இந்திரியம் உடைய உயிர்கள்-விகலேந்திரியங்கள், பேசும்சக்தி கொண்டவை, ஆனால் பஞ்சேந்திரியங்கள்போல கேட்கும்சக்தி கொண்டவையல்ல, ஆதலால் அவைகள்

எதையும் கேட்பதில்லை. நாம்கூட பகவானுக்கு அல்லது கோயிலில் தற்போதுள்ள மற்றவர்களுக்கு பக்தி, பூஜை பாடத்தை படித்துக் கேட்கும்படி செய்கிறோம், ஆனால் பகவான் அவருடைய வாணியில் என்ன உபதேசம் செய்தார் என்பதை, அதைப்பற்றி பிரவசனம் செய்பவர்கள் சொல்வதை நாம் கேட்பதில்லை. **இதனால் நம் நிலைகூட விகலேந்திரியங்கள் போலவே ஆகிவிட்டது** என்றால் அது மிகையாகாது.

தேசனா என்னவோ நிமித்தவடிவில் உண்மையான தேவ, குரு, சாஸ்திரம் முதலியவைகளாகும், ஆனால் அதை எப்போது தேசனா என்று சொல்ல முடியுமென்றால், எந்த உயிராவது அவர்கள்-அவைகள் முலம் தேசனாவைக் கேட்டு, கேட்டதை ஏற்று அதாவது கேட்டதைப் புரிந்து கொண்டு, புரிந்து கொண்டதை ஞாபகத்தில் வைத்திருந்தால் அதாவது தாரணையில் எடுத்துக்கொண்டால் அதாவது பிறகு எப்போதாவது அதைப்பற்றிச் சிந்திக்கும்போது அந்த உபதேசத்தின் சாரம் நினைவுக்கு வருமானால் தான் அந்த உயிர் தேசனா பெற்றதாகச் சொல்ல முடியும். ஒரு உயிர் உபதேசத்தைக் கேட்டது, ஆனால் கேட்டதின் பொருளைப் புரிந்து கொள்ளவில்லை என்றால் அதனால் எந்த காரியமும் நிகழப்போவதில்லை. அதேபோல கூறியதைப் புரிந்து கொண்ட பிறகு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவில்லை என்றாலும் என்ன பிரயோஜனம்? எதை கேட்டதோ, புரிந்து கொண்டதோ, பிறகு அதை ஞாபகத்திலும் வைத்துக்கொண்டு அதைப்பற்றி சிந்தனை செய்து, மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்து மற்றும் தன் யுக்தியாலும், நியாயத்தாலும் அந்த விஷயத்தில் தர்க்கம் செய்து-தானே சுய பரிசோதனை செய்து அந்த தத்துவங்களின் உண்மைத்தன்மையை நிர்ணயம்-உறுதி செய்தலே மஹத்துவமான செயலாகும். அப்படி நிர்ணயம் செய்த பிறகு அப்படிப்பட்டவர்களிடம் அந்த வடிவில் பரிணமித்தல்கூட நிகழ்கிறது.

உண்மையான தேவ, குரு சாஸ்திரங்களின் ஸ்வரூபம் எப்படி இருக்கிறதோ, சர்வஞ்ஞரின் ஸ்வரூபம் எப்படி இருக்கிறதோ அதைப்பற்றிக் கேட்டால்தான் அதைப்பற்றி சிந்தனை செய்யமுடியும். பிறகு தான் கொண்டிருக்கும் நம்பிக்கையுடன் கேட்டதை ஒப்பிட்டுப் பார்த்தால்தான், தான் இதுவரை கொண்டிருந்த நம்பிக்கையும் இப்போது கேட்பதும் வேறாக இருக்கிறதே என்பது புரியவரும். இப்போதாவது எனக்கு உண்மையான ஸ்வரூபம் பற்றி தெரிந்து விட்டது என்பதை அது உறுதி படுத்துமானால் அப்போது **அதுவே யாருடைய கட்டாயமுமின்றி குதேவ, குகுரு, குசாஸ்திரங்களை தானாகவே விட்டுவிடும்**, குதேவ, குகுரு, குசாஸ்திரங்களின் மேல் இதுவரை கொண்டிருந்த மரியாதை உணர்வு, பக்தி, வினையம் எல்லாம் தானாகவே அதனிடமிருந்து விடுபட்டுப் போகும்.

உண்மையில் பார்க்கப்போனால், தேசனாவே-தர்மோபதேசத்தை கேட்பதே தேசனாலப்தி பெற நிமித்தமாகும். ஆனால் அதைப் பெறாமல் அதாவது தர்மோபதேசத்தைக் கேட்காமல் பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெறமுடியாது. எனவே பொதுவாகச் சொல்லும்போது உபசாரமாக தேசனாவை, அல்லது தேசனா யார் மூலம் கிடைக்கிறதோ அந்த உண்மையான தேவ, குரு, சாஸ்திரத்தை சம்யக்தரிசனம் பெற நிமித்தம் என்று சொல்லப்பட்டு விடுகிறது.

நிமித்த-நைமித்திக சம்பந்தம் ஒரே சமயத்தில் நிகழும் இரண்டு பொருள்களில் காரியங்களில் காணப்படுகிறது. ஒன்று காரியம் நிகழ அனுகூலமாகத் தோன்றும் நிமித்த வடிவ பிறபொருளின் காரியமாகும், மற்றொன்று நம்மில் நிகழும் (தேசனா பெறும்) நைமித்திக காரியமாகும். இந்த இரண்டு காரியமும் ஒரே காலத்தில்-ஒரே சமயத்தில் நிகழ்வதாகும். இதை சாஸ்திரங்களில் **காலப்பிரத்யாஸ்த்தி** என்று சொல்கின்றனர். இரண்டு வெவ்வேறு காரியங்கள் நிகழும் காலம் ஒன்றாகவே இருந்தாலும் அந்த காரியங்கள் இரண்டுக்கும் நிமித்த-நைமித்திக சம்பந்தம் இருந்தால் மட்டுமே அதை காலப்பிரத்யாஸ்த்தி என்று சொல்கின்றனர். தேசனாலப்தி வடிவ காரியத்தில் தேசனா நிமித்த வடிவமாக இருக்கிறது. சம்யக்தர்சன வடிவ காரியம் என்னவோ இதற்குப் பிறகு நிகழ்வதாகும்.

இங்கு நாம் மீண்டும் மீண்டும் தேசனாவை தேசனாலப்திக்கு நிமித்தம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். தேசனாலப்தி ஞானத்தின் பர்யாயமாகும். அதைப் பெறுவதில் நம்மிடம் தீவிர ஆர்வமும், நம்முடைய ஸ்வரூபத்தை தெரிந்து கொள்ளவேண்டும் என்ற உற்சாகமும் இருந்து தேசனாலப்தி பர்யாயம் தன்தகுதியாலேயே வெளிப்படும் நேரம்(காலலப்தி) வந்துவிட்டால், ஞானியின் உபதேசம் கூட சுலபமாகவே நிமித்த வடிவில் கிடைத்து விடுகிறது. ஆனால் நிமித்தத்தால் ஞானம் வருவதில்லை. இது மட்டுமல்ல, தேவ சாஸ்திர குருக்களிடம் மரியாதை, இராகம் வருகிறது, அந்த இராகத்தாலும் ஞானம் வருவதில்லை. பிரவசனசாரம் காதை 35-ன் விளக்கத்தின் மேல் பூஜ்ய ஸ்ரீ கான்ஜி ஸ்வாமி பிரவசனம் செய்யும்போது - “முன்னால் தீர்த்தங்கரர், ஆச்சாரியர் முதலானோர் இருக்கிறார்கள், உபதேசத்தைக் கேட்டோம், திவ்யத்தொனியைக் கேட்டோம், ஆகையால் நமக்கு ஞானம் வந்தது என்பதில்லை. வாணியின் காரணத்தால் எனக்கு ஞானம் ஏற்பட்டது, ஜடத்தின் காரணத்தால் எனக்கு ஞானம் வந்தது என்று நம்புபவர் தன்னுடைய சைதன்ய ஸ்வபாவத்தை - தன் பார்த்தல் அறிதல் தன்மையை மறுக்கிறார் அல்லது அழிக்கிறார் என்பதாகும்” என்று கூறியிருக்கிறார்.

நிமித்தத்தால் காரியம் நிகழ்வதில்லை, ஆனாலும்கூட குறிப்பிட்ட காரியம் நிகழ்வதில் தகுதியான நிமித்தம் அவசியம் இருக்கும், ஆனால் அப்படிப்பட்ட நிமித்தம் அருகில் இருப்பதால் காரியம் நிகழ வேண்டும் என்ற அவசியமில்லை. தேசனாலப்தியில் சர்வஞ்ஞ பகவானின் - ஜினேந்திர பகவானின் வாணியே நிமித்தமாகும். அந்த வாணி தீர்த்தங்கரர் மூலமாகவோ அல்லது வேறு கேவலி மூலமாகவோ பெற்றாலும் அல்லது அவருடைய திவ்யத்தொனியின்படி வேறு ஆச்சாரியர் அல்லது வேறு சம்யக்ஞானி உயிர் அதை உள்ளபடியே எடுத்துக் கூறினாலும் அதையும் தேசனா என்று சொல்லப்படுகிறது. வேறு தர்மங்களின் கற்பனையான உபதேசங்களால் மோக்ஷமார்க்கத்தில் செல்ல எந்த காலத்திலும் எந்த பிரயோஜனமும் உண்டாவதில்லை. இங்கு நிமித்தம் இருப்பதைப் பற்றிப் புரிய வைக்கின்றனர், அதேசமயம் நிமித்தமே காரியத்தை செய்கிறது என்ற நிமித்தாதிக்க புத்தியையும் விட வைக்கின்றனர்.

யாருக்கு நிமித்த நைமித்திக சம்பந்தத்தின் இயல்புத்தன்மை தெரியவில்லையோ அப்படிப்பட்ட அனேக உயிர்களிடம் “நாம் ஞானியின் தேசனா-உபதேசம் கேட்க

வேண்டியது அவசியம்தான், ஆனால் எதிரில் இருக்கும் நபர் - சம்யக்திருஷ்டியா என்பதை நாம் எப்படி கண்டுபிடிப்பது?” என்ற கேள்வியே அவர்களுக்கு எழுகிறது.

மித்யாத்வி உயிர்களால், ஞானி உண்மையானவரா என்று தெரிந்துகொள்ள முடிவதில்லை. உண்மையில் அவர்களைத் தேடவேண்டிய கஷ்டத்தைப் படவேண்டிய அவசியமில்லை. மித்யாதிருஷ்டி உயிர்கள் பிறருடைய வெளி நடவடிக்கைகளையும், காரியங்களையும் பார்த்து அவர்கள் ஞானிதானா என்று தெரிந்துகொள்ள முயல்கிறார்கள், விரும்புகிறார்கள். எதிரிலிருக்கும் உயிரின் அபிப்ராயம் பற்றியும், சம்யக்தரிசனத்தின் ஸ்வரூபம் பற்றியும் இவர்கள் தெரிந்திருக்கவில்லை. நாம் உபதேசத்தில் உள்ள உண்மைத் தன்மையைத்தான் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால் ஞானி உயிர்கூட எந்த உபதேசம் கொடுக்கிறாரோ அது சர்வஞ்ஞரால் சொல்லப்பட்ட தர்மத்திற்கு சாதகமானதாகவே கொடுக்கிறார், அவருடைய சொந்த கருத்தையோ அல்லது அவருடைய கற்பனையில் தோன்றியதையோ உபதேசமாக சொல்லுவதில்லை.

சாஸ்திரம் படிப்பவர்கூட ஆரம்பத்தில் இவ்வாறு கூறுகிறார் **அஸ்ய மூல கிரந்த கர்தாரஹ ஸ்ரீ சர்வஞ்ஞ தேவாஹ, ததுத்தர கிரந்த கர்தாராஹ ஸ்ரீகணதர தேவாஹ....” இதன் பொருள் “இந்த நூலின் மூலகர்த்தா ஸ்ரீ சர்வஞ்ஞ பகவான் ஆவார், அவருடைய திவ்யத்தொனியைக் கேட்ட பிறகு நூலை எழுதக் காரணமானவர் ஸ்ரீ கணதர ஆசாரியர் ஆவார். அவருடைய உபதேசத்தை அனுசரித்து ஆச்சாரிய பரம்பரையில் எந்த நூல்கள் படைக்கப்பட்டதோ அவைகளிலிருந்து ஆச்சாரிய ஸ்ரீ .....யால் எழுதப்பட்ட இந்த பெயர்கொண்ட குறிப்பிட்ட இந்த நூலை நாம் ஸ்வாத்யாயம் செய்கிறோம். கேட்பவர்கள் கவனமாகக் கேளுங்கள்.** ஆகமத்தின் சொற்கள் பகவானுடையதாகும், சொல்பவர் யாராக இருந்தாலும் இங்கு பேசப்படுவது யாருடைய சொந்தக் கருத்தும் அல்ல. அது என்னவோ வஸ்த்து ஸ்வரூபம் சம்பந்தமான உண்மையான நிலையை விளக்குவதாகும்.

உனக்கு யாராவது ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள டிமாண்டு டிராப்ட் தபாலில் அனுப்புகிறார் என்று வைத்துக்கொள். தபால்காரர் அதை உன்னிடம் கொண்டு வந்து தருகிறார். நீ அந்த தபால்காரர் ஒரு பழைய உடையை அணிந்து கொண்டும், பழைய காலணியை போட்டுக் கொண்டும் இருப்பதைப் பார்க்கிறாய். அவருடைய தபால் பைகூட கொஞ்சம் கிழிந்திருக்கலாம். அவரைப் பார்த்து இவர் இவ்வளவு ஏழ்மையாகக் காணப்படுகிறார், இவர் எப்படி ஒரு லட்ச ரூபாய்க்கான டிமாண்டு டிராப்டை நமக்குக் கொடுக்க முடியும்? என்று நீ சொல்ல மாட்டாய் அல்லவா! ஏனென்றால் இவர் தபால்களைக் கொடுப்பவர் மட்டும்தான் இது அவருடைய சொந்தப் பணமில்லை என்பதும், அதை அனுப்பியவர் வேறு ஒருவர் என்பதும் உனக்குத் தெரியும்.

**நாம் ஞானியை பார்த்து அவர் உண்மையான ஞானிதானா என்று தெரிந்துகொள்ள முடியாது ஆனால் நாம்தான் அவர் கூறும் உபதேசம் உண்மையானதா-சத்தியமானதா என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று இப்போதுதான் நீங்கள் கூறினீர்கள். யாருடைய உபதேசமானாலும் அது உண்மையா அல்லது பொய்யா என்பதை நம்மால் எப்படித் தெரிந்து கொள்ளமுடியும்?** என்று சொல்லுங்களேன் என்று நீங்கள் கேட்கக்கூடும்.

யாருடைய உபதேசம் விருப்பு வெறுப்புகளை போஷாக்கு செய்வதாக இருக்கிறதோ, **நிமித்தத்தால் காரியம் நிகழ்கிறது ஆகையால் நிமித்தத்தை முதலில் தேடு** அல்லது **சுப உணர்வு கொள்வதால் உனக்கு நல்லதே நடக்கும், புண்ணியம் செய்துகொண்டே இருந்தால் நீ மோக்ஷமடைவாய்** அல்லது **பெரிய நூல்களை ஸ்வாத்யாயம் செய்யாதே, அது உன்னுடைய வேலை இல்லை** [முனிவர்கள்தான் செய்ய வேண்டும்] என்றெல்லாம் எவருடைய சொற்பொழிவில் வருகிறதோ; அவர் தான் நல்ல பதவியில் இருந்து கொண்டு தன் விருப்பம்போல (ஸவச்சந்தியாக) நடக்கிறாரோ, குதேவர்களுக்கு பூஜை புனஸ்காரங்கள் செய்ய வேண்டும் என்று உபதேசம் செய்கிறாரோ, தான் மட்டும் எப்படி சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளதோ அதேபோல் நடப்பதில்லையோ, பாமர மக்களை தவறானப் பாதையில் செல்வதற்கும், சமூகத்திற்கு தீங்கிழைக்கும் விரோதச் செயல்களைச் செய்யும்படி கலகம் உண்டுபண்ணுகிறாரோ அப்படிப்பட்டவர்களுடைய எல்லா உபதேசங்களும் பெய்யானதாகும் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

பொய் உபதேசம் செய்பவர்கூட சாஸ்திரங்களிலிருந்து சில சொற்களை எடுத்துச் சொல்லி நம்மிடம் மூடநம்பிக்கை மேலும் போஷாக்கு பெறும் உபதேசங்களையே செய்கிறார்கள். சிலர் **எங்களுக்கு அவரிடம் என்ன கொடுக்கல் வாங்கல் இருக்கிறது? அவருடைய உபதேசத்தில் நாங்கள் நல்ல விஷயங்களை மட்டுமே எற்றுக் கொள்கிறோம்** என்று சொல்லலாம்.

ஆனால் எப்போதும் இப்படிச் சொல்லுவதும், நம்புவதும் தகுதியான செயலல்ல. உலக சம்பந்தமான உபதேசங்களில் உயிர் எவ்வளவு விவேகமாகவும், மிகச் சாதுர்யமாகவும் இருக்கிறது, ஆனால் இந்த தர்மோபதேசம் கேட்பதில் மட்டும் இந்த விவேகத்தை இழந்து விடுகிறது என்பது ஒரு ஆச்சர்யமான விஷயம் தான்! ஒரு பெரிய பால் அண்டாவில் ஒரு சொட்டு விஷம் விழுந்து விட்டால்கூட நாம் எல்லாப் பாலையும் கீழே கொட்டி விடுகிறோம், எந்த பகுதியில் விஷம் விழுந்ததோ அந்த பாகத்தில் கொஞ்சம் பாலைக் கொட்டிவிட்டு மீதிப் பாலை நம் உபயோகத்திற்கு வைத்துக் கொள்வதில்லை. அந்த விஷம் கலந்த பாலை உபயோகித்தால் இந்த பிறவியே முடிவுக்கு வந்துவிடும் என்ற பயத்தால் முழுப்பாலையும் கொட்டிவிடும் திறைமையான முடிவை எடுக்கிறோம், மிகுந்த எச்சரிக்கையாக இருக்கிறோம்.

ஆனால் எந்த உபதேசத்தால் ஒருவருடைய பிறவியில் இழப்பு உண்டாகுமோ, மற்றும் அவர் (ஸ்வயம்-ஆத்மா) பிறவி சுழற்சிக் கடலில் மூழ்கி அனந்த காலம்வரை நிகோதத்தில் சென்று விடுமோ, அந்த உபதேசத்தை அது தனக்கு நல்லதே பயக்கும் என்று தவறான அபிப்ராயம் கொண்டு கேட்கிறது, அது கேட்ட தவறான உபதேசத்திற்கு உகந்த தவறான வழியை பிடித்துக்கொண்டு அந்த தவறான வழியையே பின்பற்றுகிறது. யாருக்கு எப்படிப்பட்டது நிகழவேண்டுமோ - ஹோனாஹார் எதுவோ அதுவே நிகழும் அதனால் அந்த உயிர்களுக்கு புத்தி அப்படி போகிறது என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

வெளி நடத்தைகளைப் பார்த்து ஒரு உயிர் அவிரத சம்யக்திருஷ்டியா என்று நம்மால் தெரிந்துகொள்ள முடியாது, ஆனால் அணுவிரதம் மற்றும் மாஹாவிரதம் ஏற்றுள்ள ஞானி

உயிர்களை அவர்களுடைய வெளி நடத்தைகளைப் பார்த்து நம்மால் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் இவர்கள் எல்லோருடைய வாணியும் நமக்கு நன்மை பயக்குமா பயக்காதா என்பதைப்பற்றிய நம்பிக்கை தேசனாலப்தி அடையப்போகும் உயிருக்கு அவசியம் உண்டாகும். இந்த வாணி, இந்த உபதேசம் ஜினேந்திர பகவானால் சொல்லப்பட்ட பொருள்களின் அமைப்புக்கு உகந்தார்போல் இருக்குமானால், பாவலிங்கி முனிவரின் சாஸ்திரத்தில் இருப்பதுபோலவே அந்த அற உபதேசம் இருக்குமானால் அது உண்மையிலேயே உயிருக்கு ஹிதத்தையே கொடுப்பதாக இருக்கும்.

ஆனால் உபதேசம் செய்பவர் ஜினாகமத்திற்கு எதிரான உபதேசம் கொடுத்தால் அது அவருக்கும் அவரைப் பின்பற்றுபவர்களுக்கும் எந்த நல்லதையும் செய்யாது. சாஸ்த்திரத்தில் அப்படிப்பட்டவரை **உபல்நாவ்-**கல்படகு என்று கூறியிருக்கிறார்கள். உபல் என்றால் கல் என்று பொருள். கல்லால் ஆன படகு தண்ணீரில் அதுவே மூழ்கிப்போகும், அதோடு மட்டுமல்லாமல் அதில் அமர்பவர்களையும் கூட இழுத்துக்கொண்டு மூழ்கிப்போகும். அதுபோல தவறான உபதேசம் கொடுப்பவர் மற்றும் அந்த உபதேசம் தகுதியானதே என்று நம்பி அதை ஏற்கும் எல்லா உயிர்களும் பிறவிக்கடலில் மூழ்கி அதிக காலம் நிகோத அவஸ்தையை அடைவார்கள்.

துவர்ப்பு உணர்வு உடைய உயிர்கள், சாஸ்திரத்தில் மாற்றங்கள் செய்து விருப்பு வெறுப்புகளையும், மூடநம்பிக்கையையும் அதிகமாக்கும் எத்தனையோ வசனங்களை அதில் ஆங்காங்கே செருகி விடுகிறார்கள். ஆனால் ஞானி உயிர்கள் இதை அடையாளம் தெரிந்து கொள்வதால் இந்த வசனங்களை நீக்கி விடுகிறார்கள். நாம்கூட இந்த விஷயத்தில் திசைமாறிவிடாமல் கவனமாக இருப்பது நம் பொறுப்பாகும். இது சம்பந்தமாக சோதிக்கும் திறனை நாம் பெற்றிருத்தல் அவசியமாகும்.

இந்த காலத்தில் அன்றாட தினசரி வாழ்க்கையில் மோசடி செய்பவர்கள், ஏமாற்றுபவர்கள் பலர் உள்ளனர். ஆகையால் நாம் தங்க வைர நகைகள், ஆடை ஆபரணங்கள், உணவுப் பண்டங்கள் முதலியவைகளில் கலப்படங்கள், போலிகள் இல்லையா என்பதில் நாம் எவ்வளவு விழிப்புணர்வுடன் இருக்கிறோம்! அதுபோன்ற விழிப்புணர்வு தேசனா பெறுவதிலும் நம்மிடம் இருக்க வேண்டும்!! ஏனென்றால் இது நம் ஆன்மநலம் பற்றியதாகும், நமக்கு பிறவிப்பிணி இல்லாமல் செய்து மோக்ஷத்தை அடையச்செய்யும் மிக மஹத்துவமான விஷயமாகும்.

**உண்மையான பேச்சாளர் மற்றும் உண்மையான உபதேசத்தின் ஸ்வரூபம் நம் கவனத்திற்கு வந்துவிட்டால், அப்படிப்பட்ட குருவிடம் நாம் முழுமையாகச் சரணடைய வேண்டும் இல்லையா? ஏனென்றால் அப்படி எங்கோயோ கேட்டிருக்கிறோம்** என்று நீங்கள் கேட்கலாம்.

நீங்கள் யாரிடம் சரணடைவீர்கள்? உடல், மனம், செல்வம் எல்லாம் பிற பொருள்களாகும், அதை சமர்ப்பணம் செய்தல் என்பது பிறவற்றைச் சமர்ப்பித்தலாகும், இங்கு நம்மை முழுவதும் சமர்ப்பணம் செய்தல் எங்கே இருக்கிறது? மற்றும் பிற பொருள்கள் யாருக்கும் எந்த வேலையையும் செய்யாது ஆகையால் அவைகளை

சமர்ப்பிப்பதும் நம்முடைய ஆதிக்கத்தில் இல்லை. **ஹே உயிரே! நீ சேத்தனமானாவன், ஞான ஸ்வரூபமானவன், உன் ஞானோபயோகத்தை முழுமையாக சாஸ்த்திராப்யாசத்தில் செலுத்தவேண்டும், தத்துவ நிர்ணயத்தில் எல்லா புத்தியையும் செலுத்துவதே முழுமையான சமர்ப்பணமாகும்.**

சம்யக்த்துவத்தை எதிர்நோக்கும் மித்யாதிருஷ்டி பற்றி வர்ணனை செய்யும்போது பண்டிட். தோடர்மல்ஜி இவ்வாறு கூறுகிறார் - உண்மையான உபதேசத்தைக் கேட்டு இந்த உயிர் மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்வதில் இறங்குகிறது. **அஹோ, எனக்கு இந்த விஷயம் பற்றிய எதுவும் இதுவரைத் தெரியாமலிருந்ததே, நான் பிரம்மையால் எனக்கு கிடைத்த இந்த மனித உடலையே நான் என்று இன்றுவரை எண்ணிக் கொண்டிருந்தேனே. ஆனால் இந்த மனித பர்யாயம் கொஞ்ச காலம் மட்டுமே இருப்பது மற்றும் இங்கு எனக்கு எல்லா நிமித்தமும் கிடைத்திருக்கிறது, ஆகையால் நான் இந்த விஷயத்தை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும் ஏனென்றால் இதில் எனக்கு பிரயோஜனம் காணப்படுகிறது** அப்படி சிந்தனை செய்து எந்த உபதேசத்தைக் கேட்டதோ அதைப்பற்றி சிந்தித்து தீர்மானிக்க முயற்சி செய்கிறது.

நிர்ணயம் செய்தல் மூன்று பகுதிகளாக இருக்கின்றன - 1.நோக்குதல் அதாவது அதன் பெயரை அறிதல். 2.அறிகுறிகள் (லக்ஷண நிர்தேஷ்) அதாவது அதன் அடையாளத்தை அறிதல் மற்றும் பிறகு 3.ஆராய்ச்சியுடன் அதை சோதனை செய்தல் அதாவது இந்த தத்துவம் இப்படித்தான் இருக்கிறதா (அல்லது) இல்லையா என்று ஆராய்ச்சி செய்தல். எதுவரை ஜினேந்திர பகவாவன் கூறிய கூற்றுகளின்படி நம்முடைய முடிவும் ஒத்துப்போகவில்லையோ அதுவரை இவ்வாறே நாம் விவேகத்துடன் சிந்திக்க வேண்டும். இதில் சந்தேகம் இருந்தால், நம் குருவிடம் அல்லது பிற வித்துவான்களிடம் கேட்க வேண்டும் அல்லது பிற சாதர்மிகளிடம் கேட்க வேண்டும். எப்படி உபதேசம் செய்யப்பட்டதோ அப்படிதான் இருக்கிறதா வேறாக இருக்கிறதா என்று விவேகத்துடன் தனிமையில் நம்முடைய உபயோகத்தில் சிந்திக்க வேண்டும்.

இங்கு நம்முடைய சொந்த நம்பிக்கையை திடமாக்கிக் கொள்ளக்கூடாது ஆனால் ஜினேந்திர பகவானால் சொல்லப்பட்ட தத்துவக்கூறுகளை அனுமானம் முதலானவைகளின் மூலம் சிந்தித்து எப்படி முடிவு வருகிறதோ அதுவே நம் முடிவாகவும் [நம்முடைய பழைய கணிப்பு வேறாக இருந்தாலும்கூட] இருக்கும் மாதிரி சிந்திக்க வேண்டும். உதாரணமாக கணிதப்பாடத்தில் ஒரு கணக்கு சம்பந்தமான கேள்விக்கு விடை காணும்போது நாம் பதிலை நாமாகவே கண்டுபிடித்து பிறகு நாம் கண்டுபிடித்த பதில் புத்தகத்தில் கடைசியில் கொடுத்துள்ள விடையுடன் ஒத்துப்போகிறதா என்று சரி பார்க்கிறோம். அந்த விடையுடன் நாம் கண்டுபிடித்த விடை ஒத்துப்போகாவிட்டால் நாம் கணக்கு போட்ட வழியில் என்ன தவறு இருக்கிறது என்று மீண்டும் சரி பார்த்து புத்தகத்தில் இருக்கும் அதே விடை நாம் போடும் கணக்கிலும் வரும்வரை நம் தவறுகளைத் திருத்தி மீண்டும் விடை கண்டுபிடித்து, நம் விடை புத்தகத்தில் உள்ள விடையுடன் சரியாக வரும்வரை, நாம் என்ன தவறு செய்திருக்கிறோம் என்று ஒவ்வொரு step-பையும் சரி பார்த்து நம் வழியைத்தான் திருத்துகிறோம், புத்தகத்தில் நாம் தவறாக கண்டுபிடித்த விடையை போட்டுவிட்டு நாம் கணக்கை சரியாகப் போட்டு விட்டோம்

என்று முடிவு செய்வதில்லை. நம்மால் சரியான விடையை கண்டுபிடிக்கவே முடியவில்லை என்றால், அத்தோடு நாம் விட்டுவிடுவதில்லை; ஆசிரியரிடமோ அல்லது சக மாணவர்களிடமோ கேட்டு நம் தவற்றைத் தெரிந்து திருத்திக்கொள்கிறோம். அதேபோலவேதான் தர்மசம்பந்தமான உபதேச விஷயத்திலும் நாம் செய்யவேண்டும்.

தேசனாலப்தி ஞானத்தின் பர்யாயமாகும் மற்றும் உபயோகவடிவ ஞானத்தில் இந்த எல்லா விஷயமும் நடக்கிறது. தேசனாலப்தி மூலம் உயிர் தத்துவங்களை முதலில் காதால் கேட்கிறது, கேட்டதை அறிவில் எற்கிறது அதாவது என்ன கேட்டோம் என்பதை புரிந்து கொள்கிறது. பிறகு அதை தாரணை செய்கிறது அதாவது பிறகு எப்போது அதைப்பற்றி சிந்தித்தாலும் அது முழுமையாக நினைவில் வரும்படி மனதில் பதித்து வைத்துக் கொள்கிறது, மனப்பாடமாக ஆக்கிக்கொள்கிறது. இப்படி உபதேசத்தை நினைவில் வைத்துக்கொள்ளவில்லை என்றால் பிறகு அது எப்படி முன்பு கேட்ட உபதேசத்தை வேண்டிய சமயத்தில் திரும்பக் கொண்டுவந்து சோதித்துப் பார்க்க முடியும்? அப்படி சோதிக்காவிட்டால் அது கேட்ட உபதேசம் தகுதியானதா அல்லது தகுதியற்றதா என்று எப்படி முடிவுக்கு வரமுடியும்?

பசு புல்லை மேய்ந்துவிட்டு பிறகு அமைதியாக ஒரு இடத்தில் அமர்ந்து மீண்டும் மேய்ந்த புல்லை அதன் வாயில் கொண்டுவந்து நன்கு அசைபோட்டு மென்று மீண்டும் வயிற்றில் தள்ளிவிடுகிறதல்லவா அதுபோல, தாரணையில் ஏற்ற சித்தாந்தங்களை தனிமையில் அமைதியான இடத்தில் அமர்ந்து, அதை நினைவில் கொண்டு வந்து அதை மீண்டும் தியானித்து-அறிவில் தத்துவப் பரிசோதனை செய்து ஒரு சரியான மற்றும் உறுதியான முடிவுக்கு வருதல் அவசியமாகும்.

தேசனா அதாவது உபதேசம் கேட்கும்போது உயிர் விவேகத்துடன் கேட்க வேண்டும், ஏனென்றால் ஜினாகமத்தில் உபதேசங்கள் நான்கு அனுயோகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நான்கு அனுயோகங்களின் பொருளும் வீதராகம் பற்றியதாகவே இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு அனுயோகத்திலும் விளக்கிச் சொல்லும் முறையிலும், சொல்லப்படும் விஷயத்திலும் வேறுபாடுகள் இருக்கின்றன. ஒரே பிரவசனத்தில் குறிப்பிட்ட நோக்கம் வெவ்வேறு அனுயோகங்களிலிருந்து எடுத்துச் சொல்லப்படும். அந்த சமயத்தில் சொல்லப்படும் விஷயத்திறகு தகுதியான அர்த்தத்தையும் அதன் பிரயோஜனத்தையும் நாம்தான் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். சாஸ்திரங்களின் நோக்கம் நாம் வீதராகத்தைப் பெற ஏதுவான உபதேசமாகவே இருக்கும். நம்மிடம் இருக்கும் ஆசை, வெகுளி, மயக்கங்களை அழிப்பதற்காகவே இருக்கும். எந்த இடத்திலும் நம்மிடம் இருக்கும் ஆசை, வெகுளி, மயக்கங்களை அதிகப்படுத்தும்படி இருக்காது.

தேசனா பற்றி நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள திரவ்யானுயோக சித்தாந்தங்கள் மிகவும் முக்கியமானவைகளாகும். ஏனென்றால் அந்த நூல்கள் மூலமாக உயிர் முதலான பதார்த்தங்கள் பற்றி நமக்கு உண்மையான நம்பிக்கை வருவதற்கு தர்க்கம், விவாதம், காரணம் முதலான பல நோக்குகளில் உதாரணங்களுடன் விரிவாக விளக்கங்கள் கொடுத்து நமக்குப் புரியவைக்கப் படுகிறது, பொருட்களின் ஏற்பாடு பற்றி அறிவு புகட்டப் படுகிறது. தான்-பிற (ஸவ-பர) பேதவிஞ்ஞானம் எப்படிச் செய்ய வேண்டும், உயிர் மற்றும்

உயிரல்லாதனவைகளை எப்படி உறுதிப்படுத்த வேண்டும் என்று புரியவைக்கப் படுகிறது. எப்படிப் புரிந்து கொண்டால் உண்மையில் வீதராக பாவம்-நடுநிலை உணர்வு வருமோ அதற்கு உகந்த வழியில் ஆஸ்ரவம் முதலான தத்துவங்களின் ஸ்வரூபம் விளக்கப்படுகிறது. அதனால் ஞானமும், வைராக்யமும் அதாவது உண்மையான அறிவும், தேவையற்றவைகளின் மேல் பாராமுகம் பெறவும், ஸ்வ ஆத்மா பக்கம் நம் ஞானோபயோகத்தை உள்பக்கம் திருப்பி ஆத்மானுபூதி எப்படி அடைய வேண்டும் என்பது பற்றியும், அப்படி செய்வதால் உண்டாகும் மஹத்துவம் பற்றியும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்துச் சொல்லப் படுகிறது.

“எந்த உயிர் அத்மானுபவம் பெறவேண்டும் என்ற தீர்வு செய்யவில்லையோ மற்றும் வெளி நடத்தைகளிலேயே-கிரியைகளிலேயே ஆழ்ந்து கிடக்கிறதோ, அப்படிப்பட்டவர்களை ஆத்மா பக்கம் ஈர்க்க வேண்டி விரதம், சீலம், சைய்யமம் முதலியவைகளை தாழ்வான செயல்களாகச் சொல்லப்படுகின்றன. சுத்தோபயோகத்தை வெளிப்படுத்த வேண்டுமென்றால், சுபோபயோகத்தை நிறுத்த வேண்டும் என்று சொல்கின்றனர். அத்யாத்ம சாஸ்திரங்களில் புண்ணியம் மற்றும் பாபம் இரண்டுமே கர்ம பந்தத்திற்குக் காரணமாகையால் இரண்டுமே சமம் என்று சொல்லப்படுகிறது. புண்ணியம் மந்தகஷாய வடிவம் மற்றும் பாபம் தீவிரகஷாய வடிவம். ஆகையால் புண்ணியத்தை விட்டுவிட்டு பாபம் செய்யுங்கள் என்று எடுத்துக்கொள்ளுதல் தகுதியானதல்ல.” என்று பண்டிட். தோடர்மல்ஜி கூறியிருக்கிறார். உபதேசத்தின் மர்மத்தை நாம்தான் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். [சரணானுயோகத்தில்-ஆகம கிரந்தங்களில் பாபச் செயல்களை விஷக்கும்பம் என்றும், புண்ணியச் செயல்களை அமுதக்கும்பம் என்றும் சொல்கிறார்கள், ஆனால் திரவ்யானுயோகத்தில்-அத்யாத்ம கிரந்தங்களில் புண்ணியச் செயல்களையும்கூட விஷக்கும்பம் என்றும், சுத்தோபயோகத்தை-சுத்தாத்ம அனுபவச் செயலை அமுதக்கும்பம் என்றும் சொல்கிறார்கள்.] இந்த உபதேசத்தின் நோக்கத்தை எதிர்மறையாகப் பொருள் கொண்டு நல்லுபதேசத்தை ஏற்றுக்கொள்ளாமல் கைவிடுதல், மோக்ஷமார்க்கத்தில் இருப்பவர் செய்யும் தகுதியானக் காரியமில்லை.

சிலர் இவ்வாறு சொல்கின்றனர்- “திரவ்யானுயோகத்தில் விரதம், புலனடக்கம் முதலான வியவஹார தர்மத்தை தாழ்வாகச் சொல்கின்றனர், சம்யக்திருஷ்டியின் விஷய போகத்தை நிர்ஜரைக்குக் காரணம் என்று சொல்கின்றனர். இப்படிப்பட்ட உபதேசங்களைக் கேட்டு உயிர் தன் விருப்பம்போல-தன்னிச்சையாக நடக்கும் அபாயம் இருக்கிறது, புண்ணியச் செயல் செய்வதை விட்டுவிட்டு பாபத்தில் ஆழ்ந்து போய்விடுவார்கள் என்று நினைக்கின்றனர். ஆகையால் அப்படிப்பட்ட சாஸ்திரங்களை ஸ்வாத்யாயம் செய்வதும், பிறர் மூலம் உபதேசம் கேட்பதும் தகுதியானதல்ல” என்பதில் பிடிவாதமாக இருக்கிறார்கள்.

நீங்களே யோசித்துப் பாருங்கள், தீவிர மித்தியாத்துவத்தில் இருப்பவர், உயிருக்கு நன்மை பயக்கும் அத்யாத்ம கிரந்த உபதேசங்களைக் கேட்ட பிறகும்கூட ஸ்வச்சந்தியாக அவர்கள் போகும் போக்கிலேயே செல்வார்கள். ஆனால் இந்த காரணத்தால் விவேகி உயிர்கள் அத்யாத்ம கிரந்தங்களை ஸ்வாத்யாயம் செய்யாமல் இருக்க மாட்டார்கள். இவைகளை யதார்த்தமான நோக்கில் கேட்பவர்கள் தன் மனம் போன போக்கில்-

ஸ்வச்சந்தியாக செயல்பட மாட்டார்கள். ஆனால் சிலர் சம்பந்தாசம்பந்தம் இல்லாமல், சில வாக்கியங்களை மட்டும் படித்துவிட்டு அல்லது கேட்டுவிட்டு, அவர்களாகவே தவறான அர்த்தத்தை எடுத்துக்கொண்டு தன் விருப்பம்போல நடப்பார்களானால், கிரந்தங்களில் என்ன குற்றமிருக்கிறது, அந்த உயிர்களிடமே குற்றம் இருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும்.

மோக்ஷமார்க்கத்தின் மூலஉபதேசம் என்னவோ அத்யாத்ம சாஸ்திரங்களில்தான் இருக்கிறது. தவறாக கிரந்தங்களில் குற்றங்களைக் கற்பனை செய்து கொண்டு, அத்யாத்ம சாஸ்திரங்களைப் படித்தலையும்-கேட்டலையும் விட்டுவிட்டால், மோக்ஷமார்க்கம் பற்றி தெரிந்து கொள்ள முடியாமல் போகும். இது மோக்ஷம் என்பதே இல்லை என்றும் சம்சாரம் ஒன்று மட்டுமே இருப்பதாகச் சொல்வதற்குச் சமமாகும், அப்படியென்றால் மோக்ஷமார்க்கமும், மோக்ஷமும் இல்லாமல் போகும். தன் விருப்பம் போல ஸ்வச்சந்தியாக வாழும் உயிர் முன்னரும் மூடநம்பிக்கை கொண்டிருந்தது, மேலும் இப்போதும் அத்யாத்ம சாஸ்திரத்தைப் படித்த பிறகும்கூட மூடநம்பிக்கையுடனேயே இருக்கிறது. ஆனால் அத்யாத்ம சாஸ்திர உபதேசமே இல்லை என்றால் அனேக உயிர்களுக்கு மோக்ஷமார்க்கமே கிடைக்காமல் போய்விடும், அதனால் அனேக உயிர்கள் மோக்ஷமார்க்கத்தில் செல்ல முடியாமல் போகும். எல்லோரும் பிறவி சுழற்சியில் சிக்கிப் பரிதவிக்கும் நிலை வந்துவிடும். ஆகையால் அத்யாத்ம கிரந்த உபதேசத்தை வேண்டாம் என்று ஒதுக்காதீர்கள் என்று உபதேசம் செய்யப்படுகிறது.

இந்த எல்லா விவாதங்களையும் பண்டிட். தோடர்மல்ஜி **மோக்ஷமார்க்கப்பிரகாசம்** கிரந்தத்தில் **உபதேசத்தின் ஸ்வரூபம்** பெயர்கொண்ட எட்டாம் அதிகாரத்தில் கொடுத்திருக்கிறார். அந்த எல்லா விபரங்களையும் அதாவது எட்டாவது அதிகாரம் முழுவதையும் கவனமாகப் படியுங்கள். அதில் உங்களுடைய அனேக கேள்விகளுக்கு சமாதானம்-விடை கிடைத்து விடும். அவர் மேலும் எழுதுகிறார் -

"திரவ்யானுயோக அத்யாத்ம உபதேசம் உயர்ந்த தரமுடையதாகும், உயர்ந்த பதவியில் உட்கார வைப்பதற்கே அது பிரயோஜமுடையதாகும்; இன்னும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு விரதம், சய்யமம் முதலானவைகள் பற்றியே உபதேசம் தருவதே தகுதியாதாகும்" என்று எத்தனையோ உயிர்கள் சொல்கின்றன.

அவர்களுக்கு சமாதானம் இவ்வாறு கூறுகிறார்- "ஜின தர்மத்தில் முதன்முதலில் சம்யக்த்துவம் பெறுதலே முக்கியமானதாகும், அதற்குப் பிறகே விரதங்கள் உண்மையில் ஏற்க முடியும்; [அதற்கு முன்னர் ஏற்கப்படும் விரதம், தபம் எல்லாம் பாலவிரதம், பாலதபம் என்று சொல்லப்படுகிறது.] அந்த விரதங்கள் சம்யக்த்துவம் பெற்ற பிறகே அதாவது தான் யார்? தன்னைத் தவிற பிற பொருள்கள் எவை? என்ற பேதவிஞ்ஞானம் அடைந்த பிறகே ஏற்கப்படுகிறது. அப்படிப்பட்ட ஸ்ரத்தானம்-நன்நம்பிக்கை திரவ்யனுயோக சாஸ்திரங்களைப் பயிற்சி செய்வதாலேயே பெறமுடியும். ஆகையால் முதலில் திரவ்யானுயோகத்துக்கு அனுசரனையாக நன்நம்பிக்கை பெற்று சம்யக்திருஷ்டியாக வேண்டும், பிறகு சரணானுயோகத்தில் சொல்லப்பட்டதற்கு இணங்க விரதம் முதலியவைகளை ஏற்பவரையே உணமையில் விரதி என்று சொல்கின்றனர். இவ்வாறு

முக்கிய வடிவில் தாழ்ந்த (ஸ்ராவக ஸ்ராவகிகள்) நிலையில் உள்ளவர்களுக்கும் திரவ்யானுயோகப் பயிற்சி பயனுள்ளதாகும். கௌண வடிவில் யாருக்கு உணமையான மோக்ஷமார்க்கம் பற்றி தெரியாதோ அதாவது மோக்ஷப்பாதையை எவ்வாறு துவங்கி அதில் எவ்வாறு முன்னேற வேண்டும் என்பதை தெரியாதவர்களுக்கு, முதலில் ஏதாவது விரதத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சிலர் உபதேசம் கொடுத்து விடுகிறார்கள். ஆகையால்தான் உச்ச (நிர்கிரந்த முனி) நிலையில் உள்ளவர்களுக்குத்தான் அத்யாத்ம நூல்களில் பயிற்சி பெறுதல் தகுதியானதாகும் என்று எண்ணிக்கொண்டு, தர்மத்தில் தாழ்ந்த (ஸ்ராவக ஸ்ராவகிகள்) நிலையில் இருப்பவர்களை அத்யாத்ம சம்பந்தமான உபயோகமான தத்துவ உபதேசம் பெறுவதிலிலுந்து தடுத்து அல்லது அந்த கிரந்தங்களை ஸ்வாத்யாயம் செய்வதிலிருந்தும், கேட்பதிலிருந்தும் பாராமுகமாக இருக்கச் செய்வதும், இருப்பதும் மோக்ஷமார்க்கத்தில் உள்ளவர்களின் தகுதியான செயல் அல்ல.”

உயர்ந்த வகையான உபதேசத்தின் ஸ்வரூபம் தாழ்ந்த நிலையில் உள்ள அஞ்ஞானிகளுக்கு எப்படிப் புரியும்? அதாவது முனிவர்களுக்கான உயர்ந்த நிலை உபதேசம் தாழ்ந்த நிலையில் உள்ள கிரஹஸ்தர்களுக்கு - வீட்டில் வசிப்பவர்களுக்கு எப்படிப் புரியும்? என்ற கேள்வி எழுப்புபவர்களுக்கு பதில் தோடர்மல்ஜி இவ்வாறு கூறுகிறார்.

உலக விஷயங்களில் புரிந்து கொள்ள முடியாத பல விஷயங்களைப் பற்றி உபதேசம் செய்வதிலும் அதைப் பெறுவதிலும் சாதுர்யமான கிரஹஸ்தர்கள்; தத்துவஞானம் என்று வந்த உடனே இது உயர்ந்த நிலையில் உள்ள முனிவர்களுக்கான உபதேசம் நம்மைப்போன்ற தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கான உபதேசமில்லை என்று எண்ணும் மூர்க்கத்தனத்தை-முட்டாள்தனத்தை வெளிப்படுத்துவார்களானால் அது தகுதியான செயலல்ல. அத்யாத்ம நூல்களைப் பயிற்சி செய்வதால் ஆத்ம ஸ்வரூபம் நன்றாகவே தெரியவரும், அவரவர்களுடைய தெளிவு பெறும் தன்மைக்கு ஏற்ப (க்ஷயோபசம ஞானத்திற்கு ஏற்ப) கொஞ்சமாகவோ அல்லது அதிகமாகவோ புரிந்துகொள்ள முடியும். ஆனால் அத்யாத்ம நூல்களைப் படிக்கவோ அல்லது அது சம்பந்தமான உபதேசங்களைக் கேட்கவோ மாட்டோம் என்ற முற்றிலும் அலட்சியமான போக்கை வளர்த்துக் கொண்டால் அது ஜினதர்மத்திற்கே எதிரான செயலாகும், ஜினதர்மத்தையே அழிப்பதற்கு சமமாகும்.

மற்றும் இந்த காலம் ஐந்தாம் காலம் தீக்காலம்-துஷ்மா காலம் ஆகையால் உத்கிருஷ்ட உபதேசம் அதாவது உயர்ந்தநிலை அத்யாத்ம உபதேசம் இப்போது முக்கியமானதல்ல என்று சிலர் சொல்லக்கூடும். அதற்கு சமாதானம்-

இந்த காலத்தில் இந்த பரத க்ஷேத்திரத்திலிருந்து மோக்ஷம் போகமுடியாது என்ற நோக்கில் தாழ்ந்த காலம்தான், ஆனால் ஆத்மானுபவம் பெறுதல் மூலம் சம்யக்த்துவம் பெறுதல்-நற்காட்சி பெறுதல் இந்த காலத்திலும் பெறமுடியும் ஒன்றுதான், அதற்குத் தடை இல்லை. [இந்த ஐந்தாம் காலத்திலும் ஜினதர்மத்தைத் தெரிந்து கொண்டு சம்யக்த்துவம் பெறுவதற்கு நாம் மிகப்பெரிய புண்ணியம் செய்துதான் இங்கு மனதப்பிறவியில் பிறந்திருக்கிறோம். அப்படிக் கிடைப்பதற்கரிய இந்த மனிதப் பிறவியை நாம் வீணடித்து

விடக்கூடாது.] ஆகையால் நாம் ஆத்ம அனுபவம் பெரும் கலையை கற்றுத்தரும் திரவ்யானுயோக அத்யாத்ம சாஸ்திரங்களில் அவசியம் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். இந்த பஞ்சம காலத்தில் பிறந்த ஆச்சாரிய குந்தகுந்தர் **மோக்ஷபாகுடம்** என்ற கிரந்தத்தில் இந்த காலத்தில்கூட சம்யக்த்வம் பெறுவதற்கு காரணமான திரவ்யானுயோக பயிற்சி அவசியமானதாகும் என்று கூறியிருக்கிறார்.

திரவ்யானுயோக சாஸ்திரங்களை ஸ்வாத்யாயம் செய்ய வேண்டாம் என்று சொல்லுதல், ஜினவாணியை அவமதிப்பு செய்தல், வெளியில் தூக்கிப் போடுதல், அழித்தல், அப்படிச் செய்பவர்களை ஊக்கிவித்தலும் பாராட்டுதலும், அனுமோதித்தலும், அவர்களுக்கு ஆதரவு தருதல் எல்லாம் நரகம்-நிகோதம் செல்ல பயணச்சீட்டு பதிவு செய்வதற்கு-முன்னேற்பாடு செய்வதற்கு சமமாகும். என்ன புரியவில்லையா? நாம் வெளி ஊர்களுக்கு பயணம் செய்ய வேண்டுமென்றால் இரயில் வண்டியில் செல்ல அல்லது விமானத்தில் செல்ல ஒரு விண்ணப்பக் கடிதம் பூர்த்தி செய்து கையெழுத்திட்டு முன்பதிவு செய்கிறோம் அல்லவா. இதை செய்வதால் நாம் உண்மையில் அங்குபோக தயார்செய்து கொள்கிறோம் என்றுதானே அர்த்தம்!

அதுபோல தர்ம விஷயத்திலும் புரிந்து கொள்ள வேண்டும். மேற்கூறிய உணர்வுகள் கொள்வதின் பலன் ஞானாவரணம் முதலான பாபகர்ம பிரக்ருதிகளின் தீவிர பந்தம் உண்டாகும். அதன் விளைவு எதிர்காலத்தில் அந்த கர்மங்களின் பலனை அனுபவிக்க அனந்த காலம் நிகோதத்தில் பிறந்து இறந்து கொண்டிருக்க வேண்டியிருக்கும்.

தேசனாலப்தி வர்ணனையில் உபதேசம் கேட்டல்(ஸ்ரவண்), கேட்டதைப் புரிந்து கொள்ளுதல்(கிரஹன்), புரிந்து கொண்டதை ஞாபகத்தில் வைத்திருத்தல்(தாரணை), ஞாபகத்தில் இருப்பதை மீண்டும் மீண்டும் சிந்தித்து அதில் உள்ள உண்மையை உறுதிப்படுத்துதல்(நிர்தாரண்) ஆகியவை எல்லாம் தேசனாலப்தியின் அங்கங்கள் என்று தெரிந்து கொண்டோம். திவ்யத்தொனியில் நான்கு அனுயோகங்களின் வர்ணனைகளும் வருகிறது, அதனால் நான்குமே தேசனா வடிவமாகும். அவைகளில் திரவ்யானுயோகத்தில் சொல்லப்படுபவைகளைத் தெரிந்து கொள்ள வேண்டியவை, பிறகு தெரிந்து கொண்டவற்றில் விடவேண்டியவை மற்றும் ஏற்கவேண்டியவை (ஹேய, ஞேய, உபாதேய) வடிவில் பரிசோதிக்க வேண்டும். அவைகளில் உயிர் முதலான திரவியங்களையும் மற்றும் தத்துவங்களையும் நான் யார், பிற பொருள்கள் எவை என்பதையும் அடையாளம் காணவேண்டும். இங்கு விடத்தகுதியான மூடநம்பிக்கை மற்றும் இராகம் முதலாவைகளையும் மற்றும் ஏற்கத் தகுதியான நற்காட்சி முதலானவைகளின் ஸ்வருபத்தை அடையாளம் காணவேண்டும். நிமித்த-நைமித்திக சம்பந்தம் எப்படிப்பட்டது என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

கரணானுயோகம், சரணானுயோகம், பிரதமானுயோகம் முதலியவைகளில் சொல்லப்பட்டவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். தெரிந்து கொண்டவைகளில் எவை எவைகளைப் பரிட்சை செய்துப் பார்க்க முடியுமோ அவைகளைப் பரிசோதனை செய்ய வேண்டும், எவைகளைப் பரிட்சை செய்து பார்க்க முடியாதோ அவைகளை ஆஞ்ஞா-கட்டளை என்ற நோக்கில் அறிந்து கொள்ள வேண்டும்.

"இவ்வாறு இவைகளை அறிந்து கொள்ளுதல் என்பதின் பொருள் சில நேரங்களில் சுயமாகவே சிந்தித்தல், சில நேரங்களில் சாஸ்திரங்களைப் படித்தல், சில நேரங்களில் பயிற்சி-சோதனை செய்தல், சில நேரங்களில் கேள்விகேட்டு சரியான பதிலைத் தெரிந்து கொள்ளுதல் முதலியவைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்பதாகும். நம் காரியம் செய்வதில் நமக்கு அதிக மகிழ்ச்சி இருப்பதால் நம் மனதில் இருக்கும் விருப்பமே அவைகளைச் செய்யக் காரணமாக அமைகிறது. எதுவரை ஒருவருக்கு 1.உண்மையான நம்பிக்கை வரவில்லையோ, 2."தத்துவங்களின் ஸ்வரூபம் இப்படித்தான் இருக்கிறது" என்ற உணர்தல் வரவில்லையோ, 3.எப்படி உடலையே "நான்" என்று நம்புகிறாரோ (அஹம்புத்தி கொள்கிறாரோ) அதுபோல ஆன்மா மட்டுமே நான் என்ற நம்பிக்கை (அஹம்புத்தி) வரவில்லையோ, 4.எத்தகைய உணர்வு நன்மை பயப்பது, எத்தகைய உணர்வு தீமை பயப்பது என்று தெரிந்து கொள்ளவில்லையோ அதுவரை அவர் சம்யக்த்துவத்தை எதிர்கொள்ளும் மித்யாதிருஷ்டியாகவே இருக்கிறார். இப்படிப்பட்ட உயிர் கொஞ்ச காலத்தில் நற்காட்சியை-சம்யக்த்துவத்தை பெறுவார்; இந்த பிறவியிலோ அல்லது அடுத்த சில பிறவிகளிலோ சம்யக்துவத்தைப் அவசியம் பெறுவார்."

அவர் மேலும் எழுதுகிறார், "தத்துவச் சிந்தனையின் மஹிமையைப் பாருங்கள்! தத்துவச் சிந்தனை செய்யாமல் கடவுளை நம்புதல், அதிக சாஸ்திர சுவாத்யாயம் செய்தல், விரதங்களைக் கடைபிடித்தல், தவம் செய்தல் முதலிய செயல்களால் மட்டுமே சம்யக்த்துவம் பெறும் தகுதி வருவதில்லை; ஆனால் தத்துவச் சிந்தனை செய்பவர் மற்றவைகள் எதுவும் செய்யாமல் இருந்தாலும் சம்யக்த்துவத்தைப் பெறும் உரிமை உடையவராகிறார்.

உயிர் தத்துவ சிந்தனையிலும், தத்துவ நிர்ணயம் செய்வதிலும் ஈடுபட்டுவதாலேயே பிராயோக்யலப்தி பெறப்படுகிறது. ஆழமாகத் தத்துவச் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்போது சுத்தாத்மாவை எதிர்கொள்ளும் நிலையில் கரணலப்தி மற்றும் சம்யக்த்துவம் பெறுதல்கூட தானாகவே-சுலபமாகவே நிகழ்கிறது. அதற்காக வேறு எதுவும் செய்ய வேண்டியதாக இல்லை.

பிராயோக்யலப்தி சம்பந்தமான சர்ச்சையை நாம் அடுத்த கடிதத்தில் செய்யலாம்.

ஜெய் ஜினேந்திரா.

-உங்கள் அம்மா

## பிராயோக்யலப்தி

**கடிதம்-8** **30-9-2002**

பிரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

தேசனாலப்தி அத்யாயத்தில் நாம் தேசனா மற்றும் தேசனாலப்தியின் ஸ்வரூபம் பற்றி விரிவாகப் பார்த்தோம். ஜினதர்ம தத்துவ உபதேசம் கேட்டல், அதைப் புரிந்துகொள்ளல், அதை நினைவில் வைத்தல், மீண்டும் மீண்டும் அதைச் சிந்தனை செய்தல் முதலான அங்கங்கள் பற்றியும் பார்த்தோம். திரவ்யானுயோக சாஸ்திர சம்பந்தமான தத்துவங்களையும் சித்தாந்தங்களையும் நாம் பரிட்சை செய்து-நம் அறிவில் பரிசோதனை செய்து தெரிந்து கொண்ட பிறகு அதைப்பற்றி உறுதியான ஒரு முடிவுக்கு வரவேண்டும். இந்த அதிமஹத்துவமான விஷயங்களைப் பற்றிய சர்ச்சையை நாம் **சமண தத்துவ அறிமுகம்** மற்றும் ஜினாகமத்தில் **காரண காரிய இரகசியம்** என்ற புத்தகங்களில் கடித வடிவில் ஸ்வாத்யாயம் செய்துவிட்டோம்.

சாஸ்திர ஸ்வாத்யாயத்தைக் கேட்டும், படித்தும் முடித்த பிறகு **இப்போது நாம் என்ன செய்யவேண்டும்?** என்ற கேள்வியே பெரும்பாலான மக்களின் மனதில் எழுகிறது. இதற்குக் காரணம் உயிர்கள் அனாதி காலமாக தான் ஏதாவது செய்யவேண்டும் என்றே விரும்பிக்கொண்டு இருக்கிறன. ஆனால் அதனால் என்ன செய்யமுடியும் என்ன செய்யமுடியாது என்பதில் உறுதி இல்லாத காரணத்தால், மற்றவர்கள் செய்யும் குறிப்பிட்ட கிரியைகளை, செயல்களைப் பார்த்து தானும் பக்தி, பூஜை, தியானம், சுவாத்யாயம் முதலானவைகளைச் செய்கிறது. அவைகளைச் செவ்வனே செய்து முடித்த பிறகும்கூட தன்னால் சம்யக்தரிசனம் பெறமுடியாத நிலையில் இருப்பதை எண்ணி அது ஏமாற்றத்தை அடைகிறது. ஆனால் தத்துவ சிந்தனை மூலம் தத்தவத்தை உறுதி செய்வதே **புருஷார்த்தம்** மற்றும் எப்போது அந்த புருஷார்த்தத்தை உயிர் செய்கிறதோ அப்போது பிற சமவாயங்கள் எல்லாம் இயல்பாகவே அங்கு காணப்படுகின்றன. கர்மத்தணிவு வடிவ நிமித்தமும் கூட அந்த சமயத்தில் அமைந்து விடுகிறது.

ஆத்யாத்ம நூல்களில் கூறப்பட்டுள்ள தத்துவ உபதேசம் பெறுவதில் வெளியில் இருக்கும் குரு அதாவது ஞானி நிமித்த வடிவில் அங்கு இருக்கிறார். ஆனால் **ஸ்வ தத்துவத்தை அடைய அதாவது சம்யக்தரிசனம் பெறுவதில் ஆத்மா-ஸ்வயம் தானே தனக்கு குரு** வாகும். [குருவால் தன் சிஷ்யனுக்கு சம்யக்தரிசனம் வரும்படி செய்ய முடியாது, குருவின் உபதேசத்தைக் கேட்டு அந்த சிஷ்ய ஆத்மாவே தன்னில் சம்யக்தரிசனத்தை தோற்றுவிக்கும் புருஷார்த்தத்தைச் செய்யவேண்டும்.] எந்த ஆத்மாவுக்கு ஸ்வயம் தன் ஸ்வரூபத்தை அறிந்து கொள்ள உற்சாகம் பிறக்கிறதோ, அதற்கு அந்த ஆர்வமும் தீவிர ருசியுமே **உபாதான சக்தி**யாகும். ஆகையால் அதற்கு வெளியில் உபதேசம் கொடுக்கும் குருவும், உபதேசமும் சுலபமாகவே கிடைக்கிறது. [அதைத் தேட வேண்டியதாக இல்லை.] ஆத்மா ஸ்வயம் அதுவே அடிக்கடி அந்த உபதேசத்தில் கேட்டதை மீண்டும் மீண்டும் சிந்திப்பதில் தன் அறிவின் உபயோகத்தை பயன்கொள்கிறது. அதற்கு அதன் தகுதி மூலமே வேறு வெளி விஷயபோக சம்பந்தமான ஆர்வம் குறைந்து

போகிறது, தன்னை-ஆத்மாவை அனுபவம் செய்வதிலேயே அது தீவிரம் காட்டுகிறது. அதன் உபயோகம் பிற பொருள்கள் மற்றும் பர்யாயங்களின்மேல் இருந்து விலகி நிலையான நிஜமான பார்த்தல் அறிதல் ஸ்வபாவத்தின்மேல் (தன் ஆத்ம திரவியத்தின் மேல்) நிலை கொள்கிறது. வேறு ஒருவருக்கு கற்பிப்பதின் மூலம் இந்த காரியம் நிகழ்வதில்லை. [இதன் பொருள் தத்துவங்களைப் பிறருக்கு எவ்வளவுதான் தெளிவாக எடுத்துக் கூறினாலும், கூறுபவருக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை, இது பிறர் சம்யக்த்துவம் பெற நிமித்தமாக மட்டுமே இருக்க முடியும். அந்த வெளியில் இருக்கும் குரு தான் பிறருக்கு உபதேசம் சொல்வதை விட்டுவிட்டு தன் உபயோகத்தை தன் திரிகால சுத்தாத்மாவின் மேல் செலுத்தினால்தான் அந்த காரியம் அந்த வெளி குருவிடம் நிகழும்.]

இந்த குரு எனக்கு நல்லது செய்வார் என்ற நம்பிக்கை நிமித்தாதீன புத்தி, நிமித்தமே காரியத்தை செய்கிறது என்ற தவறான நம்பிக்கையாகும். நிமித்தம் என்றால் குரு என்னவோ இருக்கிறார், அவர்மூலம் தேசனா கிடைக்கிறது, ஆனால் தேசனாலப்தி என்னவோ உபாதானத்தால்-ஸ்வயம் தன்னால் அடையப் பெறுகிறது. தேசனா என்பது உண்மையான தேவ, குரு, சாஸ்திரம் மூலமே கிடைக்கிறது, குதேவ, குகுரு, குசாஸ்திரம் எப்போதும் தேசனா பெறுவதில் நிமித்தமாக முடியாது. ஆகையால் உண்மையான தேவன், குரு, சாஸ்திரம் எவை என்பதை உறுதி செய்தல் நம்முடைய தலையாய காரியமாகும். குதேவர் முதலியவைகள் மூலம் விபரீத உபதேசமே கிடைக்கும், அதனால் நம்மிடமிருக்கும் பழைய மூடநம்பிக்கையே இதனால் மேலும் வலுவடையும். இந்த காரியத்தை-கிரியைகளை நீ செய்து கொண்டே இருந்தால் உனக்கு நற்காட்சியும், முக்தியும் கிடைத்துவிடும் என்ற பொய்யான உபதேசத்தைக் கேட்டு உயிர்கள் உண்மையான முக்திப்பாதையிலிருந்து திசை மாறிப் போய்விடுகின்றன.

சம்யக்தரிசன வடிவ காரியம் நிகழக் காரணம் வெளியில் இருக்கும் தேவ, குரு, சாஸ்திரம், உடலால் செய்யப்படும் சில குறிப்பிட்ட வழிமுறை என்று நம்பிக்கொண்டு இந்த உயிர் விபரீதமான காரியங்கள் செய்வதில் எப்போதும் ஈடுபட்டு இருக்கிறது. ஆனால் உண்மையான காரணம் உபாதான வடிவில் தன் திரவியத்திலேயே முக்காலத்திலும் இருக்கிறது. ஸ்வபாவ பர்யாயம் அதாவது சுத்த பர்யாயம் வெளிப்படக் காரணம் திரிகால சுத்த ஸ்வபாவமாகும்-பாரிணாமிக பாவமாகும். அதை காரணவடிவில் ஏற்று அதிலிருந்து வேறுபடாமல் அதையே அறிந்து கொண்டு இருப்பதால் சம்யக்தரிசன வடிவ காரியம் தானாகவே வெளிப்படும். அதற்குமுன் வெளிப்படும் ஐந்து லப்திகள் பற்றியே நாம் சில நாட்களாக/மாதங்களாக சர்ச்சை செய்து கொண்டு இருக்கிறோம். தத்துவம் பற்றிய யோசனை மற்றும் சிந்தனை நிலையில் கர்மங்களில் எப்படிப்பட்ட அதிரடி மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதைப்பற்றி இந்த **பிராயோக்யலப்தி** அதிகாரத்தில் நாம் தெரிந்துகொள்ள விருக்கிறோம். முதலில் அதன் ஸ்வரூபம் பற்றி சொல்லி பின்னர் அதை உங்களுக்குப் புரியவைக்கிறேன்.

**பிராயோக்யலப்தி:** க்ஷயோபசமலப்தி, விசுத்திலப்தி மற்றும் தேசனாலப்தி வழியாக உயிரின் தூய்மை-விசுத்தி ஒவ்வொரு சமயமும் அதிகரித்துக் கொண்டே போகிறது, அந்த காரணத்தால் ஆயுள் கர்மம் தவிர மற்ற ஏழு கர்மங்களின் ஸதிதி குறைந்து அந்த்த கோடாகோடி (ஒரு கோடாகோடி கடற்காலத்திற்கும் கொஞ்சம் குறைந்த அளவு)

மட்டுமே இருக்கிறது. ஸ்திதி இந்த அளவு குறைதல் **ஸ்திதிகண்டக்காதம்** (பெரிய பெரிய கட்டி கட்டிகளாக கர்மம் விழுதல்) மூலம் நிகழ்கிறது. பாப கர்மங்களின் பலன்தரும் சக்தி குறைந்து, காதி கர்மங்களில் கொடி மற்றும் கட்டை பாக வடிவிலும், அகாதி கர்மங்களின் வேம்பு மற்றும் கடுக்காய் பாக வடிவிலும் இருப்பவைகள் மட்டுமே மீதம் இருக்கின்றன. பாப கர்மங்களில் இந்த பலன்தரும் சக்தி குறைதல்கூட **அனுபாககாண்டக்காதம்** மூலமே நிகழ்கிறது. பிராயோக்யலப்தியில் புதிய கர்மங்கள் கட்டுவதில் ஸ்திதி பந்தம்கூட அந்த்த கோடாகோடி கடல் அளவு மட்டுமே கட்டுகிறது, அதுவும் கிரமமாகக் குறைந்து கொண்டே போகிறது. இதை **ஸ்திதிபந்தாபசரணம்** என்று சொல்கின்றனர். ஆயிரக்கணக்கான ஸ்திதிபந்தாபசரணம் நிகழ்ந்த பிறகு கிரமமாக சில பிரக்ருதிகளின் பந்தம் நின்றுவிடுகிறது. இதை **பிரக்ருதிபந்தாபசரணம்** என்று சொல்கின்றனர்.

ஸதிதி மற்றும் பிரக்ருதி பந்தம் குறைவது போலவே பாப கர்மங்களின் பலன்தரும் சக்தி குறைந்து கொண்டே போகும் **த்விஸ்தானகத்**-இரண்டு நிலைகள் கொண்ட அனுபாக பந்தம் மட்டுமே நிகழ்கிறது. பிரதேச பந்தம்கூட மிக அதிகமாகவோ அல்லது மிகக் குறைந்தோ இல்லாமல் இடைப்பட்ட அளவே பந்தமாகிறது.

மேலே கூறிய காரியங்கள் நிகழும் தகுதி பெறுதல் **பிராயோக்யலபதி** யாகும். இதை **பிராயோக்யதாலப்தி** என்றும் சொல்கின்றனர். முன்னர் பார்த்த மூன்று லப்திகள் மூலம் உயிர் தத்துவ சிந்தனையில் இருக்கும்போது அந்த சமயத்தில் உயர்ந்து கொண்டே போகும் (விருத்திங்கத்) ஆன்மத்தூய்மை-ஆத்மவிசுத்தி உண்டாகும் காரணத்தால் மேலே கர்மங்களில் நிகழ்வதாகக் கூறிய அவஸ்தைகள்-நிலைகள் எல்லாம் தானாகவே நிகழ்கின்றன. அதற்காக உயிர் வேறு எந்த புருஷார்த்தமும்-முயற்சியும் செய்ய வேண்டியதாக இல்லை. உயிர் வேறு ஏதோ சிறப்பான செயல் செய்கிறது, அதனால்தான் பிராயோக்யலப்தியைப் பெறுகிறது என்பது எதுவும் இல்லை. இந்த நான்கு லப்தியிலும் உயிர் புத்திபூர்வமாக தத்துவத்தில் ஆர்வம்கொண்டு, தத்துவத்தை கேட்டல் முதலானவைகளைச் செய்து, தத்துவ சிந்தனையில் தன் அறிவின் உபபோகத்தை முழுமையாகச் செலுத்துகிறது, அவ்வளவேதான், வேறு எதும் உயிர் செய்வதில்லை.

மேலே கூறிய விஷயங்களில் பல சமண தத்துவ பரிபாஷைச் சொற்கள் இருப்பதால் அவைகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள இப்போது நாம் அவைகளைப் பற்றி விரிவாக சர்ச்சை செய்யலாம். சுலபமாகப் புரியும்படி சொல்ல வேண்டுமென்றால் உயிர் பிராயோக்யலப்தி பெறும்போது அந்த உயிரில் பந்த நிலையில் உள்ள பழைய கர்மங்களின் ஸ்திதி குறைந்து அந்த்த கோடாகோடி கடலளவு-ஒரு கோடாகோடிக்கும் குறைந்த கடற்கால அளவு மட்டுமே இருக்கும் நிலையை அடைகின்றன. அதேபோல நிகழ்காலத்தில் பந்தமாகும் கர்மங்களும் ஒரு கோடாகோடிக்கும் குறைந்த கடற்கால அளவு மட்டுமே ஸ்திதி கொண்டவைகளாக பந்தமாகின்றன மற்றும் சில பிரக்ருதிகளின் பந்தம்கூட நின்றுபோய் விடுகின்றன.

முதன்முதலில் அந்த்த கோடாகோடி கடற்காலம் என்பதன் பொருளைத் தெரிந்து கொள்ளலாம். பத்து கோடாகோடி அத்தாபல்ய காலம் ஒரு அத்தாகடற்காலம் என்பது உங்களுக்குத் தெரியும். கோடாகோடி என்பதன் பொருள் கோடியை கோடிமுறை

பெருக்க வேண்டும் (கோடி to the power of கோடி) கர்மங்களின் ஸ்திதி அத்தா கடற்காலத்தில் சொல்லப்படுகிறது. என்ன, உங்களுக்கு அத்தாபல்யம் என்றால் என்ன என்பது மறந்து விட்டதா? வாருங்கள், மீண்டும் இதை ஞாபகப் படுத்துகிறேன்.

ஒரு யோஜனை விட்டமும் ஒரு யோஜனை ஆழமும் கொண்ட ஒரு பள்ளத்தை தோண்டுங்கள்-இதை உங்கள் கற்பனையில் செய்யுங்கள். பிறகு உத்தம போக பூமியில் பிறந்து ஏழு நாட்களுக்கும் குறைந்த ஆட்டுக்குட்டியின், மேலும் துண்டு செய்ய முடியாத மயிர் முனைகளால் (hairtip bits-ஆல்) அந்த பள்ளத்தை பூமிமட்டத்திற்கு சமமாக நிரப்புங்கள். பிறகு ஒவ்வொரு 100 வருடத்திற்கு, ஒரு மயிர் துண்டு என எடுத்து, அந்த பள்ளத்தை காலி செய்யுங்கள். அந்த பள்ளம் காலியாக எத்தனை வருடங்கள் ஆனதோ அந்த காலத்தை **ஒரு பல்யம்** என்று சொல்கின்றனர். ஒரு பல்யத்தின் அசங்க்யாத பாகமே அசங்க்யாத கோடி வருடங்கள் கொண்டது என அறியவும். அந்த பல்யத்தை **வியவஹார பல்யம்** என்று சொல்கின்றனர். அப்படிப்பட்ட அசங்க்யாத பல்யங்கள் கொண்டது ஒரு **உத்தார பல்யம்** ஆகும், அசங்க்யாத உத்தார பல்யங்கள் கொண்டது ஒரு **அத்தா பல்யம்** ஆகும். பத்து கோடாகோடி அத்தாபல்யத்தை ஒரு **கடற்காலம்** என்று சொல்கின்றனர். ஒரு உயிர் ஒரு சமய நேரமே அதிதீவிர மித்யாத்துவ உணர்வு கொண்டு அதிகத்திலும் அதிகமான அதாவது அதிகபட்சம் 70 கோடாகோடி கடற்காலங்கள் பந்தத்தில் இருக்கும் அளவுக்கு மித்யாத்துவ கர்மத்தைக் கட்டிக்கொள்ள முடியும். இங்கே ஒன்றை நினைவில் கொள்ளுங்கள், இவ்வளவு அதிக பட்ச ஸ்திதி பந்தம் செய்யும் உயிர் அந்த உணர்வு நிலையில் பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெறமுடியாது. அதேபோல ஸ்ரேணியில் ஏற முயற்சிக்கும் உயிருக்கு சமமான மிகக் குறைந்த கால அளவு கர்மபந்தம் செய்யும் உயிரிலும் அந்த சமயத்தில் பிரதமோபசம சம்யக்த்துவம் நிகழாது.

பிராயோக்யலப்தி அடையும் முன்னர் அந்த உயிரில் ஆயுள் கர்மம் தவிர மற்ற ஏழு கர்மங்களின் ஸ்திதி அனேக கோடாகோடி கடற்காலம் அளவில் இருக்கும். அந்த ஏழு கர்மங்களின் ஸ்திதியும் பிராயோக்யலப்தி காலத்தில் குறைந்து அந்த்த கோடாகோடி கடற்கால அளவுக்கு வந்துவிடுகிறது. இதன் பொருள் கர்ம ஸ்திதி ஒரு கோடியை கோடி முறை பெருக்க வரும் அளவு கொண்ட கடற்காலத்திற்கும் குறைவாக ஆகிவிடுகிறது. **ஒரு கோடாகோடி கடற்காலத்திற்கும் ஒரு கோடி கடற்காலத்திற்கும் இடைப்பட்ட கால அளவையே அந்த்த கோடாகோடி கடற்காலம் என்று சொல்கின்றனர்.** கர்மங்களின் ஸ்திதி இந்த அளவு குறைதல் ஸ்திதிகாண்டக்காதம் மூலம் நிகழ்கிறது.

காண்டக் என்றால் துண்டு அல்லது பிளவுபட்ட ஒரு பகுதி எனலாம். பல நிஷேகங்களின் கூட்டத்தை ஒரு துண்டு-காண்டக் என்று சொல்கின்றனர். சமமான ஸ்திதி கொண்ட பரமாணுக்களின் கூட்டத்தை நிஷேகம் என்று சொல்கின்றனர். ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு நிஷேகம் என்ற அளவில் அவைகளில் கோடாகோடி கடற்கால அளவு நிஷேகங்கள் ஒன்றின் மேல் ஒன்றாக சத்தாவில் இருக்கின்றன. அவைகளில் அந்த்த கோடாகோடி கடற்கால அளவு ஸ்திதி கொண்ட நிஷேகங்கள் தவிர, மேலே உள்ள எல்லா நிஷேகங்களின் கூட்டமும் பிராயோக்யலப்தி காலத்தில் ஸ்திதிகாண்டக்காதம் மூலம் குறைந்து போகும் என்று சொல்லப்படுகிறது.

பிராயோக்யலப்தி துவங்கி அந்தர்முகூர்த்த காலத்தில் இந்த ஒரு பெரும் துண்டின் எல்லா நிஷேகங்களிலும் உள்ள பரமாணுக்களும் கீழே உள்ள நிஷேகங்களின் உள்ள பரமாணுக்களுடன் வந்து சேர்ந்து கொள்கின்றன. இதையே ஸ்திதி காண்டக்காதம் என்று சொல்கின்றனர்.

பாருங்கள், இங்கு கர்மங்கள் இப்போதும் சத்தாவில்தான் இருக்கின்றன, ஆனால் தத்துவ சிந்தனை செய்யும் காரியம் நிகழ்வதின் நிமித்தத்தால், அனேக அனேக கோடாகோடி கடற்கால அளவு ஸ்திதியில் இருந்தவை அந்த்த கோடாகோடி கடற்கால அளவுக்குக் குறைந்து அந்த அளவே சத்தாவில் இருக்கிறது. இந்த செயல் ஆயுள் தவிர மற்ற ஏழு கர்மங்களில் நிகழ்கிறது, அதாவது புண்ணிய மற்றும் பாபா சம்பந்தமான எல்லா கர்மங்களின் ஸ்திதியும் குறைந்து போகின்றன. ஆயுள் கர்மத்தின் ஸ்திதி மட்டும் முன்னர் எவ்வளவு இருந்ததோ அந்த அளவே இருக்கிறது.

லப்திசாரம் கிரந்தத்தில் ஸ்திதிகாண்டக்காதத்தின் ஸவரூபம் பற்றி கீழ்கண்டவாறு சொல்லப்பட்டு இருக்கிறது. “பொதுவாக ஸ்திதிசத்தா அதாவது சத்தாவில் இருக்கும் கர்மங்களின் ஸதிதி, ஒவ்வொரு சமயம் கழியும்போதும் ஒவ்வொரு நிஷேகமாக விழுகிறது, சத்தாவில் இருக்கும் ஸ்திதி ஒவ்வொரு சமயமாகக் குறைகிறது. ஆனால் தர்சனலப்தி மற்றும் சாரித்திரலப்திகளின் நிமித்தத்தால் ஸ்திதிகாண்டக்காதம் விதானத்தின் வழியாக அல்லது அபகிருஷ்டி விதானம் மூலமாக அல்லது அபகர்ஷனம் மூலம் மிக அதிக அளவில் சத்தாவில் இருக்கும் ஸதிதி குறைகிறது. ஸ்திதிகாண்டக்காத விதானம் அதாவது அதன் செயல்முறை இவ்வாறு இருக்கிறது.

அதிக அளவுகொண்ட சத்துவ ஸ்திதியில் ஒவ்வொரு சமயமும் உதயத் தகுதி உடைய நிஷேகங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றன. அதாவது ஒரு சமயத்திற்கு ஒரு நிஷேகம் என்ற அளவில் நிஷேகங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றன. அவைகளில் மேல்நிலையில் இருக்கும் அனேக நிஷேகங்கள் அழிந்து ஸ்திதி சத்தா குறைவதை ஸ்திதிகாண்டக்காதம் என்று சொல்கின்றனர். அழியத் தகுதியான எல்லா நிஷேகங்களின் சமூகத்தை இங்கு காண்டக்-துண்டுபடும் பகுதி என்று சொல்லப்படுகிறது. துண்டுபடும் பகுதியில் உள்ள நிஷேகங்களில் உள்ள எல்லா பரமாணுக்களும், மீதம் இருக்கும் நிஷேகங்களின் மேல் பகுதியில் ஆவளி அளவு நிஷேகங்களை விட்டுவிட்டு அதாவது அதிஸ்தாபனாவாலியை விட்டுவிட்டு கீழே இருக்கும் மற்ற எல்லா நிஷேகங்களில் உள்ள பரமாணுக்களுடன் வந்து சேர்ந்து கொள்கின்றன-வந்து கலந்து விடுகின்றன. அவைகளின் ஸ்திதி கீழே உள்ள நிஷேகங்களின் ஸதிதி அளவு ஆகிவிடுகின்றன.

துண்டுபடும் நிஷேகங்களில் உள்ள மொத்தப் பரமாணுக்களில் எல்லா நிஷேகங்களிலிருந்தும் கொஞ்சம் கொஞ்சம் பரமாணுக்கள் (some patricles cut across vertical layer) ஒவ்வொரு சமயமும் கீழ் இருக்கும் நிஷேகங்களுடன் வந்து சேருகின்றன. இவ்வாறு தகுதியான அந்தர்முகூர்த்த காலத்தில், ஒவ்வொரு சமயமும் ஒரு vertical layer-ஆக உடைந்து, கீழ்உள்ள நிஷேகங்களுடன் வந்து சேர்ந்து கொள்கின்றன. இவ்வாறு மேலே துண்டாகி கீழே வந்து சேரவேண்டிய நிஷேகங்களின் பரமாணுக்கள் எல்லாம்

வந்து சேர்ந்ததும் ஸதிதிகாண்டக்காதம் முடிகிறது, இப்போது சத்தாவில் உள்ள நிஷகங்களின் ஸ்திதி குறைந்த அளவாக ஆகிவிடுகிறது.

இதை ஒரு உதாரணம் மூலம் தெரிந்து கொள்ளலாம். ஸ்திதிசத்தா 48 சமயங்கள் என வைத்துக் கொள்ளுங்கள். அதில் 48 நிஷேகங்கள் இருக்கும். அவைகளில் 8 நிஷேகங்களை ஸ்திதிகாண்டக்காத் மூலம் அழித்து ஸ்திதி சத்தாவை 40-தாக குறைக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த 8 நிஷேகங்களில் 1000 பரமாணுக்கள் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்த 1000 பரமாணுக்களும் கீழே உள்ள 40 நிஷேகங்களில் மேலே உள்ள இரண்டு நிஷேகங்களைத் தவிர கீழே உள்ள 38 நிஷேகங்களுடன் வந்து சேர்ந்து விடும். அந்த 1000 பரமாணுக்களில் சில பரமாணுக்கள் முதல் சமயத்திலும், சில இரண்டாவது சமயத்திலும் இவ்வாறாக நான்கு சமயங்களில் 1000 பரமாணுக்களும் கீழ் உள்ள நிஷேகங்களுடன் வந்து சேர்ந்துவிடும். முன்னர் மேலே இருந்த எட்டு நிஷேகங்களும் இல்லாமல் போய்விடும். இவ்வாறு 48 சமயங்கள் ஸதிதிசத்தா குறைந்து 40 சமய ஸ்திதிசத்தா மட்டுமே மிஞ்சும். **[**இந்த நான்கு சமயத்தில் கீழே உள்ள நான்கு நிஷேகங்கள் உதயத்திற்கு வந்து அழிந்திருக்கும்.**]**

உண்மையில் அனேக கோடாகோடி கடற்கால நிஷேகங்கள் காண்டக்காதம் மூலம் அழிந்து அதிலிருந்த எல்லாப் பரமாணுக்களும் அந்த்த கோடாகோடி கடற்கால அளவுக்குக் கீழே உள்ள நிஷேகங்களுடன் வந்து சேர்ந்து விடும். இவ்வாறு ஒரு அந்தர்முகூர்த்த காலத்தில் அனேக கோடாகோடி கடற்கால ஸ்திதிசத்தா குறைந்து போகிறது. இதில் மேல் இருக்கும் ஒரு ஆவளி அளவு நிஷேகங்களில் இந்த பரமாணுக்கள் சேராமல் இருக்கிறதோ அந்த நிஷேகங்களை **அதிஸ்தாபனாவலி** என்று சொல்கின்றனர்.

எவ்வாறு ஸ்திதிகாண்டக்காதம் மூலம் கர்மங்களின் ஸ்திதி குறைந்து அந்த்த கோடாகோடி கற்கால அளவாகக் குறைகிறதோ அதுபோல, பாப கர்மங்களின் பலன்தரும் சக்தி அனந்தத்தில் ஒரு பாகமாகக் குறைந்த அளவே மிஞ்சி இருக்கிறது. இந்த செயல் அனுபாககாண்டக்காதம் மூலம் நிகழ்கிறது. முன்னர் சத்தாவில் இருந்த பாப பிரக்ருதிகளை அனந்தத்தில் ஒரு பாகமாக ஆக்கும்போது அதிக பாக ஸ்பர்தகங்களின் பலன் தரும் சக்தி குறைந்து ஒருபாக பலன்தரும் சக்தி எவ்வளவோ அவ்வளவாகக் குறைந்து விடுகிறது. இதை வேறுவிதமாகக் கூறவேண்டுமென்றால் கல், எலும்பு பாக, மற்றும் ஆலஹால விஷ பாக ஸ்பர்தகங்கள் அழிந்து அந்த பரமாணுக்கள் மந்த பலன் தரும் சக்தி கொண்ட கட்டை, கொடி பாக மற்றும் கடுக்காய், வேம்பு பாக ஸ்பர்தகங்களாக மாற்றமடைந்து விடுகின்றன.

தீவிர பலன்தரும் அனேக ஸ்பர்தகங்களின் அழிவு அதாவது அனுபாகம் குறைதல் ஒரு அந்தர்முகூர்த்த காலம் நிகழ்கிறது, இதை அனுபாககாண்டக்காதம் என்று சொல்கின்றனர். இந்த பலன் தரும் சக்தி குறையும் மாற்றம் வெறும் பாபப் பிரக்ருதிகளில் மட்டுமே நிகழ்கிறது. புண்ணியப் பிரக்ருதிகளில் பலன்தரும் சக்தி அதிகமாகி நான்கு நிலை- வெல்லம், காண்ட், சர்க்கரை, அமிர்த பாக வடிவில் மாற்றமடைகின்றன.

முன்னர் கட்டிக்கொண்ட மற்றும் பந்த நிலையில் இருக்கும் ஆயுள் கர்மம் தவிர மற்ற எல்லா கர்மங்களின் ஸ்திதி இவ்வாறு குறைகிறது. அதேபோல இப்போது புதிதாக நிகழும் கர்ம பந்தமும் கூட அந்த்த கோடாகோடி கடற்கால அளவே நிகழ்கிறது, ஆனால் அதுவும் இப்போது ஸ்திதி எவ்வளவு இருக்கிறதோ அதில் சங்யாதத்தில் ஒரு பாக அளவே புதிய ஸ்திதி பந்தம் நிகழ்கிறது. இதுவும் கிரமமாக சமயந்தோறும் குறைந்து கொண்டே போகிறது. இதையே ஸ்திதிபந்தாபசரணம் என்று சொல்கின்றனர். அபசரணம் என்றால் குறைதல் என்று பொருள். லப்திசாரம் கிரந்தத்தில் ஸ்திதிபந்தாபசரணம் பற்றிக் கீழ்கண்டவாறு வர்ணிக்கப் பட்டிருக்கிறது.

“ஸ்திதி பந்தம் கஷாயத்திற்கு உகந்தார்போல் நிகழ்கிறது. எனவே மூடநம்பிக்கையும், கஷாயமும் குறைவதால் பந்தமாகும் கர்மங்களின் ஸ்திதியும் குறைகிறது-புதிதாக ஆகும் பந்தம் குறைந்த ஸ்திதி கொண்டதாக இருக்கிறது. குறைவதை அபசரணம் என்று சொல்கின்றனர். ஸ்திதி குறைவதை ஸ்திதிபந்தாபசரணம் என்று சொல்கின்றனர். பிராயோக்யலப்தி காலத்தில் ஸ்திதிபந்தம் கிரமமாக-கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே போகிறது. எவ்வளவு ஸ்திதி குறைகிறதோ அதாவது ஸதிதிபந்தமாவதில் எவ்வளவு குறைந்ததோ அவ்வளவு ஸதிதிபந்தாபசரணம் நிகழ்ந்தது, மற்றும் குறைந்த பிறகு எவ்வளவு ஸ்திதி பந்தமாகிறதோ அவ்வளவு ஸ்திதிபந்தமே அங்கு மீதம் இருக்கிறது. எவ்வளவு ஸ்திதிபந்தம் நிகழ்கிறதோ அவ்வளவு ஸ்திதி பந்த அளவே தகுதியான அந்தர்முகூர்த்த காலம்வரை பந்தமாகிறது. இந்த காலத்தை ஸ்திதிபந்தாபசரண காலம் என்று சொல்கிறார்கள். இதற்குப் பிறகு இரண்டாவது ஸ்திதிபந்தாபசரணம் நிகழ்கிறது. [புதிய பந்தம் ஒவ்வொரு சமயமும் குறையாமல் step by step after a gap of some small interval of time குறைகிறது என்று புரிந்து கொள்ள வேண்டும்.]

இதை ஒரு உதாரணம் மூலம் தெரிந்து கொள்ளலாம். முதலில் 100,000 வருட ஸ்திதி பந்தம் நிகழ்ந்ததாக வைத்துக் கொள்ளுங்கள். அதில் 1,000 வருட அளவு ஸ்திதிபந்தாபசரணமாகக் குறைந்து 99,000 வருட ஸ்திதியில் புதிய பந்தம் நிகழும். இதே அளவு புதிய பந்தமே அடுத்த முதலாவது சமயத்திலும், இரண்டாவது சமயத்திலும், ….தகுதியான அந்தர்முகூர்த்த காலம்வரை சமமான அளவு பந்தமே நிகழும். பிறகு 800 வருட அளவு இரண்டாவது பந்தாபசரணம் நிகழும், 98,200 வருட ஸ்திதியில் புதிய பந்தம் நிகழும். அடுத்த தகுதியான அந்தர்முகூர்த்தகாலம் வரை இந்த அளவு பந்தமே நிகழும். அதற்குப் பிறகு மூன்றாவது ஸ்திதிபந்தாபசரணம் நிகழும்.

உதாரணத்தில் 1000 வருடம், 800 வருடம் என்பது நாம் சுலபமாகப் புரிந்து கொள்ள எடுத்துக் கொள்ளப்பட்ட வருடங்களாகும். உண்மையில் இந்த கால அளவுகள் பல்யத்தில் சங்க்யாத பாகப் பிரமாணம் ஸ்திதிபந்தாபசரணம் நிகழும். இதுபோல சங்கியாத முறை (ஆயிரம் ஆயிரம் முறை- கோடி முறை கூட) நிகழ்ந்த பிறகு எப்போது பிரதக்த்துவ நூறு கடற்காலம் அதாவது 700-800 கடற்கால அளவு குறைந்த பிறகு முதல்முறையாக பிரக்ருதி பந்தாபசரணம் நிகழ்கிறது. இதை பிரக்ருதி பந்தாபசரணின் முதல் ஸ்தானம்- பிரதமஸ்தாணம் என்று சொல்கின்றனர். பிரதக்த்துவ என்பதின் பொருள் இங்கு 7-ல் இருந்து 8-வரை என்று எடுத்துக் கொள்ள வேண்டும். வேறு இடங்களில் பிரதக்த்துவ என்பதின் பொருள் 3-ல் இருந்து 9-வரை என்று எடுத்துக் கொள்ள வேண்டும். பிரதக்த்துவ

நூறு கடற்காலம்  என்பதன் பொருள் 700 கடற்காலம் முதல் 800 கடற்காலம் வருடங்கள் என புரிந்து கொள்ள வேண்டும்.”

எவ்வாறு ஸ்திதிபந்தம் கிரமமாக குறைவதை ஸ்திதிபந்தாபசரணம் என்று சொல்கிறார்களோ அதேபோல குறிப்பிட்ட கர்ம பிரக்ருதிகளின் பந்தம் கிரமமாக நின்றுபோவதைப் பிரக்ருதிபந்தாபசரணம் என்று சொல்கின்றனர்.

ஒவ்வொரு ஸ்திதிபந்தாபசரணம் மூலம் பல்யத்தில் சங்க்யாத பாக அளவு ஸ்திதி பந்தம் குறைகிறது. இவ்வாறு சங்கியாத ஆயிரம் ஸ்திதிபந்தாபசரணம் நிகழ்ந்த பிறகு எல்லாம் சேர்த்து எப்போது 700-800 கடற்காலங்கள் குறைகிறதோ அப்போது ஒருமுறை பிரக்ருதிபந்தாபசரணம் நிகழ்கிறது. அப்போது குறிப்பிட்டப் பிரக்ருதியின் பந்தம் நின்று போகிறது. அதற்குப் பிறகு மீண்டும் சங்க்யாத ஆயிரம் ஸ்திதிபந்தாபசரணம் மூலம் எப்போது ஸ்திதிபந்தம் மீண்டும் 700-800 கடற்கால அளவு குறைகிறதோ அப்போது இரண்டாவது பிரக்ருதிபந்தாபசரணம் நிகழ்கிறது. இப்போது வேறு ஒரு குறிப்பிட்ட கர்மபந்தம் நின்று போகிறது.

இவ்வாறு சங்க்யாத ஆயிரம் ஸ்திதிபந்தாபசரண் நிகழ்ந்த பிறகு மூன்றாவது பிரக்ருதிபந்தாபசரணம் நிகழ்கிறது. இதுபோல கிரமமாக பிரயோக்யலப்தி காலத்தில் 34 பிரக்ருதிபந்தாபசரணம் ஸ்தானங்கள் நிகழ்கின்றன. இந்த 34 ஸ்தானங்களில் 46 பிரக்ருதிகளின் பந்தம் நின்றுபோகிறது. பந்தம் நின்றுபோவதை வியுச்சித்தி என்றுகூட சொல்கின்றனர். ஆனாலும் பிரக்ருதிபந்தாபசரணும் பந்தவியுச்சித்தியும் வெவ்வேறாகும். இவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை பிறகு நாம் சர்ச்சை செய்யவிருக்குறோம்.

இந்த 34 ஸ்தானங்களில் எந்தெந்த 46 பிரக்ருதிகளின் பந்தம் நின்றுபோகிறது என்று இப்போது பார்க்கலாம். இவைகளில் சில ஸ்தானங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிரக்ருதிகளின் பெயர்கள் இருக்கின்றன, அங்கு இந்த பிரக்ருதிகளின் சய்யோகவடிவ பந்தம் நின்றுபோகிறது என்று புரிந்துகொள்ள வேண்டும். எப்படியென்றால் சூக்ஷம, சாதாரண, அபர்யாப்தம் ஆகிய மூன்று கர்ம பிரக்ருதிகளின் பந்தமும் ஒன்றாக சேர்ந்து ஒரு நிலையில் நின்றுபோகின்றன, அதேசமயம் சூக்ஷம, சாதாரண, பர்யாப்த பந்தம் நிகழ்கிறது, அல்லது பாதர, பிரத்யேக, இரண்டு இந்திரியம் முதலான கர்மபந்தத்துடன் அந்த நிலைக்கான அபர்யாப்தத்தின் கர்மபந்தமும் நிகழ்ந்து கொண்டிருக்கும். இந்த பிரக்ருதிகள் எல்லாம் குழு குழுவாக சேர்ந்து பந்தம் நின்றுபோகிறது. இந்த பிரக்ருதிகள் சம்பவத்திற்கு தகுதியாக வேறு பிரக்ருதிகளுடன் சேர்ந்து பிறகு பந்தமாகவும் கூடும்.

மேலும் ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள். எப்போது 46 பிரக்ருதிகளின் பந்தாபசரணம் நிகழ்கிறது என்று கூறினாலும், அப்போது இவைகள் அபுனருக்த பிரக்ருதிகள் என்று புரிந்து கொள்ள வேண்டும். அபுனருக்த என்பதின் பொருள் சய்யோகவடிவில்-குழுவடிவில் எந்த பிரக்ருதியின் பெயர் பலமுறை வந்தாலும்கூட அவைகளை ஒருமுறையே கூட்ட வேண்டும். எப்படியென்றால் அபர்யாப்த நாமகர்மத்தின் பெயர் ஒருபொறி முதல் ஐம்பொறிகள் வரை அனேகமுறை வந்தாலும், அதை ஒருமுறைதான் கூட்ட வேண்டும். இவைகளிலிருந்தும் வேறான பர்யாப்த நாமகர்மம் சய்யோகவடிவில் ஒருஇந்திரியம் முதல்

மனமில்லா ஐம்பொறிகளுடன் பலமுறை வந்தாலும்கூட மணமுடைய பஞ்சேந்திரியங்களின் பர்யாப்த கர்ம பந்தம் நிகழ்ந்து கொண்டு இருக்கிறது, அதன் பந்தம் நின்றுபோவதில்லை. ஆகையால் பிரக்ருதிபந்தாபசரணம் நிகழும் 46 பிரக்ருதிகளில் பர்யாப்த நாமகர்மத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. பாதரநாம கர்மத்தைக்கூட கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை என்று புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் இப்போது அந்த கிரமமாக நிகழும் 34 ஸ்தானங்களைப் பார்த்தோமானால் எந்த குறிப்பிட்ட கர்மங்களின் பந்தம் எந்த ஸ்தானத்தில் நின்றுபோகின்றன என்பது உங்களுக்குத் தெளிவாகப் புரியவரும். இந்த ஸ்தானங்களின் வரிசையையும் அந்தந்த ஸ்தானங்களில் நிகழும் பிரக்ருதிபந்தாபசரணம் அடையும் பிரக்ருதிகளையும் பட்டியலிட்டுப் பார்க்கலாம்.

முதல் ஸ்தானம் - நரக ஆயுள்
இரண்டாம் ஸ்தானம் - திரியன்ச-விலங்குஆயுள்
மூன்றாம் ஸ்தானம் - மனித ஆயுள்
நான்காம் ஸ்தானம் - தேவ ஆயுள்

இந்த நான்கு ஸ்தானங்களிளேயே நான்கு ஆயுள் கர்மங்களின் பந்தமும் வரிசையாக நின்று போகிறது. பிரதமோபசம சம்யக்த்துவ காலம் பூர்த்தி அடைந்ததும் க்ஷயோபசம சம்யக்த்வம் நிகழும்போது மனித மற்றும் தேவ ஆயுளின் பந்தம் மீண்டும் தொடங்கி விடுகிறது. மற்ற நின்றுபோன பிரக்ருதிகளில்கூட பலப் பிரக்ருதிகளின் பந்தமும் துவங்கிவிடுகிறது. 33, 34-ஆம் ஸ்தானங்களில் சொல்லப்படும் எல்லா பிரக்ருதிகளின் பந்தமும் மீண்டும் துவங்கி விடுகிறது. இப்போது 4-க்கு மேல் உள்ள ஸ்தானங்களில் நிகழ்வதைப் பற்றிப் பார்க்கலாம்.

ஐந்தாம் ஸ்தானம் - நரக கதி, நரக கத்யானுபூர்வி

இதற்குப் பிறகு அபர்யாப்த நாமகர்மத்தின் பந்தஸ்தானம் சய்யோகவடிவில்-குழுவாக நின்றுபோவது இவ்வாறு நிகழ்கிறது.

ஆறாம் ஸ்தானம் - சூட்சமம், அபர்யாப்தம், சாதாரணம்
ஏழாவது ஸ்தானம் - சூட்சமம், அபர்யாப்தம், பிரத்யேகம்
எட்டாவது ஸ்தானம் - பாதரம், அபர்யாப்தம், சாதாரணம்
ஒன்பதாவது ஸ்தானம் - பாதரம், அபர்யாப்தம், பிரத்யேகம்
10-வது ஸ்தானம் - இரண்டு பொறி, அபர்யாப்தம்
11-ஆவது ஸ்தானம் - மூன்று பொறி, அபர்யாப்தம்
12-ஆவது ஸ்தானம் - நான்கு பொறி, அபர்யாப்தம்
13-ஆவது ஸ்தானம் - மனமில்லாத ஐந்து பொறி, அபர்யாப்தம்
14-ஆவது ஸ்தானம் - மனமுடைய ஐந்து பொறி, அபர்யாப்தம்

இதற்குப் பிறகு பர்யாப்த நாமகர்மத்தின் பந்தஸ்தானம் சய்யோகவடிவில்-குழுவாக நின்றுபோவது இவ்வாறு நிகழ்கிறது.

15-ஆவது ஸ்தானம் - சூட்ஷமம், பர்யாப்தம், சாதாரணம்
16-ஆவது ஸ்தானம் - சூட்ஷமம், பர்யாப்தம், பிரத்யேகம்
17-ஆவது ஸ்தானம் - பாதரம், பர்யாப்தம், சாதாரணம்
18-ஆவது ஸ்தானம் - பாதரம், பர்யாப்தம், பிரத்யேகம், ஒருபொறி, ஸ்தாவரம், ஆதபம்

ஒருபொறி சம்பந்தமான எல்லா கர்மங்களின் பந்தம் இந்த ஸ்தானத்தோடு நின்று போவதால் இவைகளுடன் ஒருபொறி, ஸ்தாவர பிரக்ருதியின் பந்தமும் நின்றுபோகிறது. அதேபோல ஆதப பிரக்ருதி ஒருபொறி, பாதரம், பர்யாப்தம், பிரத்யேகம் முதலியவைகளுடனே பந்தமாகிறது, வேறு எதனுடனும் பந்தமாவதில்லை ஆகையால் ஆதப கர்ம பந்தம்கூட இந்த ஸ்தானத்திலேயே நின்று விடுகிறது.

மேலே எழுதப்போகும் பிரத்யேக ஸ்தானங்களில் கூட இரண்டுபொறி முதல் மனமில்லா ஐம்பொறிவரை மட்டுமே யாகும். ஏனென்றால் மனமுடைய ஐம்பொறி, பர்யாப்த கர்மங்களின் பந்தம் எப்போதும் நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது, அவைகள் பந்தாபசரண நிலையை அடைவதில்லை. இப்போது மேல் ஸ்தானங்களைப் பார்க்கலாம்.

19-ஆவது ஸ்தானம் - இரண்டு பொறி, பர்யாப்தம்
20-ஆவது ஸ்தானம் - மூன்று பொறி, பர்யாப்தம்
21-ஆவது ஸ்தானம் - நான்கு பொறி, பர்யாப்தம்
22-ஆவது ஸ்தானம் - மனமில்லா ஐம்பொறி, பர்யாப்தம்
23-ஆவது ஸ்தானம் - திரியன்ச-விலங்கு கதி, திரியன்ச கத்யானுபூர்வி, உத்யோதம்
24-ஆவது ஸ்தானம் - நீச்ச கோத்திரம்

பாருங்கள், திரியன்ச கதி சம்பந்தமான எல்லா கர்ம பந்தமும் இந்த ஸ்தானத்தில் நின்று போகிறது. ஆகையால் அதனுடன் பந்தமாகும் உத்யோத பிரக்ருதியின் பந்தமும் நின்றுபோகிறது. இந்த பிரக்ருதி திரியன்ச கதியுடன் ஒருபொறி முதல் ஐம்பொறி பர்யாப்தத்துடன் கூட பந்தமாகிறது.

25-ஆவது ஸ்தானம் - அப்ரசஸ்த விஹாயோகதி, துர்பக, துஸ்வர, அனாதேய
26-ஆவது ஸ்தானம் - ஹுன்டக சமஸ்தானம், அசம்ப்ராப்தாஸ்ருபாடிகா சம்ஹனனம்
இங்கு ஆறாவது சம்ஸ்தானம், சம்ஹனனம் சம்பந்த கர்ம்பந்தம் நின்று போகிறது. இவ்வாறு புரிந்து கொண்டால் நினைவில் வைத்துக் கொள்ளச் சுலபமாக இருக்கும்.
27-ஆவது ஸ்தானம் - நபூம்சக வேதம்
28-ஆவது ஸ்தானம் - வாமன சம்ஸ்தானம், கீலித சம்ஹனனம் (ஐந்தாவது சம்ஸ்தானம், சமஹனனம்)
29-ஆவது ஸ்தானம் - குப்ஜக சம்ஸ்தானம், அர்தநாராச சம்ஹனனம் (நான்காவது சம்ஸ்தானம், சமஹனனம்)
30-ஆவது ஸ்தானம் - ஸ்திரி வேதம்

31-ஆவது ஸ்தானம் - ஸ்வாதி சம்ஸ்தானம், நாராச சம்ஹனனம் (மூன்றாவது சம்ஸ்தானம், சம்ஹனனம்)
32-ஆவது ஸ்தானம் - நியக்ரோதபரிமண்டல சம்ஸ்தானம், வஜ்ரநாராச சம்ஹனனம் (இரண்டாவது சம்ஸ்தானம், சம்ஹனனம்)
33-ஆவது ஸ்தானம் - மனிதகதி, மனிதகத்யானுபூர்வி, ஔதாரிகம், ஔதாரிக அங்கோபாங்கம், வஜ்ரவிரஷபநாராச சம்ஹனனம்.

இங்கு முதல் சம்ஹனனை மட்டுமே எடுத்துக் கொண்டோம் ஆனால் முதல் சம்ஹனனின் பந்தம் இந்த நிலையில் நிற்கவில்லை, எட்டாவது குணஸ்தானம்வரை அதன் பந்தம் தொடர்ந்து நிகழ்கிறது. இதறக்குக் காரணம் என்ன என்று நீங்கள் கேட்கும் முன்னரே நானே சொல்லிவிடுகிறேன்.

சம்ஹனன நாமகர்மம் என்னவோ திரியன்ச கதி மற்றும் மனித கதியுடன்தான் பந்தமாகிறது ஏனென்றால் விலங்கு மற்றும் மனிதர்களுக்கே ஔதாரிக உடல் சம்ஹனனம்-பொருத்தப்பட்ட (with joints) அமைப்புடன் இருக்கிறது. இதில் ஒருபொறி உயிரின் உடல்களைத் தவிர மற்ற எல்லா திரியன்ச உயிர்களின் உடல்களில் எனத் தெரிந்து கொள்ளவேண்டும். ஆனால் சம்ஸ்தானம் அதாவது வடிவம் (shape) நான்கு கதிகளுடனும் பந்தமாகிறது. எட்டாம் குணஸ்தானம் வரை தேவகதி தொடர்பான பந்தம் நிகழ்கிறது. அதனுடன் சமசதுரஸ்யம் பெயர் கொண்ட முதல் சம்ஸ்தான நாமகர்மம் பந்தமாகிறது. இப்போது கடைசி ஸ்தானத்தைப் பார்க்கலாம்.

34-ஆம் ஸ்தானம் - அஸ்திரம், அசுபம், அசாதா வேதனீயம், அயசஸ்கீர்த்தி, அரதி, மற்றும் சோகம்

அதற்குப் பிறகு 33-ஆவது ஸ்தானத்தில் கூறப்பட்ட பிரக்ருதிகளின் பந்தம் மீண்டும் துவங்கி நான்காம் குணஸ்தானம்வரை தொடர்ந்து பந்தமாகிறது. நான்காம் குணஸ்தான இறுதியில்தான் அவைகளின் பந்தம் நின்று போகிறது. மற்றும் 34-ஆம் ஸ்தானத்தில் கூறப்பட்ட பிரக்ருதிகளின் பந்தம் மீண்டும் துவங்கி ஆறாம் குணஸ்தான இறுதிவரை தொடர்ந்து பந்தமாகிறது. இவ்வாறு பிராயோக்யலப்தி காலத்தில் 34 ஸ்தாங்கள் மூலம் 46 பிரக்ருதிகளின் பந்தம் நின்று போகிறது.

"அப்படிஎன்றால் சரிதான், நல்லதாப் போச்சு. இப்ப நாம் பிராயோக்யலப்தியிலேயே இருக்கலாம். அப்பதான் இந்த பாபப் பிரக்ருதிகளின் பந்தம் நின்றுபோகும், மற்றும் நம்மில் சம்வரை துவங்கிவிடும். ஏனென்றால் ஏழு தத்துவங்கள் அதிகாரத்தில் பந்தம் நின்றுபோவதே சம்வரை என்று சொல்லப்பட்டதை நாங்கள் தெரிந்து வைத்திருக்கிறோம்" என்று நீங்கள் கூறக்கூடும்.

மகள்களே! அந்த தவறை எப்போதும் செய்யாதீர்கள். பாபப் பிரக்ருதிகள் பந்தமாகாமல், புண்ணியப் பிரக்ருதிகள் பந்தமாவதை சம்வரை என்று எடுத்துக் கொள்ளாதீர்கள். அப்படி எடுத்துக் கொண்டால் புண்ணியப் பிரக்ருதிகள் பந்தமாகாமல், பாபப் பிரக்ருதிகள் பந்தமாவதையும் சம்வரை என்று எடுத்துக் கொள்ள வேண்டிவரும். இங்கு அகாதி

கர்மங்களில் சில பாபப்பிரக்ருதிகளின் பந்தம் வெறும் அந்தர்முகூர்த்த காலத்திற்கு மட்டுமே நின்று போகிறது. மற்றும் இப்படிப்பட்ட பிராயோக்யலப்தி பரிணாமம் மற்றும் பிரக்ருதிபந்தாபசரனின் 34 ஸ்தானங்கள் அபவ்யர்களுக்குக்கூட நிகழ்வது காணப்படுகிறது. அப்போ நீங்கள் அபவ்யர்களுக்குக்கூட சம்வரை நிகழும் என்று நம்புகிறீர்களா என்ன? மேலும் எல்லாக் காதி கர்மங்களும் பாப வடிவமே, அவைகள்கூட இடைவிடாது பந்தமாகிக் கொண்டுதான் இருக்கிறது அல்லவா!

எல்லாவற்றையும் விட மிகப் பெரிய பாபகர்மம் மூடநம்பிக்கை-மித்யாத்துவமாகும். அதன் பந்தமும், உதயமும்கூட இந்த பிராயோக்யலப்தி காலத்திலும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. கரணலப்தியின் கடைசி சமயம்வரை மித்யாத்துவம், அனந்தானுபந்தி கஷாயங்கள் முதலியவைகளின் பந்தம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பிரமோபசம சம்யக்த்துவத்தின் முதல் சமயத்திலிருந்து அவைகளின் பந்தம், உதயம் இரண்டும் நின்று போகின்றன. உயிர் சுத்தோபயோக வடிவ பாவ சம்வரை செய்யும்போது கர்மங்களில் மித்யாத்துவம் முதலான 16 மற்றும் அனந்தானுபந்தி முதலான 25ம் என ஆகமொத்தம் 41 பிரக்ருதிகளின் திரவ்ய சம்வரை தானாகவே நிகழ்கிறது. கர்மத்தின் எந்த அவஸ்தையையும்-நிலையையும் உயிர் மாற்ற முடியாது, உயிர் தன்னில் நிலைத்திருக்கும் சுத்தோபயோக புருஷார்த்தத்தை மட்டுமே செய்கிறது, அதைத்தான் உயிர் செய்ய முடியும்.

புருஷார்த்தம் பர்யாயமாகும். இந்த காரணத்தால் இது ஸ்வ திரவியத்தின் முழு பாகத்திலும் நிகழ்கிறது, திரவியத்திற்கு வெளியில் நிகழ்வதில்லை, வேறு திரவியத்திலும் என்னவோ நிகழ்வதேயில்லை. ஆகையால் உயிரின் புருஷார்த்தம் உயிரில் நிகழ்கிறது, உடலிலோ(நோகர்மத்திலோ) அல்லது கர்மத்திலோ(திரவ்ய கர்மத்திலோ) நிகழ்வதில்லை.

முதன்முதலில் இந்த நான்கு லப்திகளில் நிகழும் சுப, சுபதர விசுத்தி பரிணாமங்கள் மூலம் மோக்ஷமார்க்கத்திற்கு அனுகூலமான சம்வரை நிகழ்வதில்லை என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். இரண்டாவதாக நீங்கள் பிராயோக்யலப்தி நிலையிலேயே இருக்க விரும்புகிறீர்களா என்ன? அல்லது சம்யக்த்துவம் அடைய விரும்புகிறீர்களா? இந்த அளவிலேயே திருப்தி அடைந்து கொஞ்ச புண்ணியம் பந்தித்துக் கொண்டு அதன் பலனை எவ்வளவு காலம் வரை அனுபவிப்பீர்கள்? புண்ணியம் மற்றும் அதன் பலனில் விருப்பம்-வாஞ்சை என்னவோ மித்யாத்துவத்தைத்தான் வளர்க்கும் என்பதைப்பற்றி எப்போது சிந்திப்பீர்கள்? மற்றும் இன்னும் ஒரு விஷயம், இந்த நான்கு லப்திகள் ஒவ்வொன்றின் காலமும் மற்றும் நான்கின் ஒட்டுமொத்த காலமும் தகுதியான அந்தர்முகூர்த்த காலமே யாகும்.

நாங்கள் அனேக வருடங்களாக சாஸ்திர ஸ்வாத்யாயம் செய்துகொண்டு வருகிறோம், ஆகையால் இவ்வளவு வருடங்களாக எங்களுக்கு பிராயோக்யலப்தி நிகழ்ந்து கொண்டுதானே இருக்க வேண்டும் என்று சிலர் நினைக்கலாம். உயிர்களிடம் பிராயோக்யலப்தி அப்படி நிகழ்வதிலைலை என்பதே உண்மையான நிலை என உணர்தல் வேண்டும்.

எந்த பிறவியில் மனமுடைய ஐம்பொறி உடல் கிடைத்திருக்கிறதோ, அது முற்பிறவி க்ஷயோபசமலப்தி இல்லை. ஆனால் சம்யக்த்வம் உற்பத்தியாகத் தகுதியான செயல்முறை எவ்வெப்போது நிகழ்கிறதோ அப்போதுதான் க்ஷயோபசமலப்தி முதலானவைகள் நிகழும். இந்த செயல்முறை மூலமே சம்யக்த்துவம் பெறும் அதாவது அடையும் தகுதி தோன்றும். தகுதி இருப்பதாலேயே சம்யக்த்துவம் வந்துவிடும் என்பதில்லை, ஆனால் சம்யக்த்துவம் பெறும்போது அதற்கு முன்னர் இந்த லப்தி வடிவத் தகுதிகள் பெறுதல் அவசியம் நிகழும் என புரிந்து கொள்ள வேண்டும்.

இப்போது நாம் பிரக்ருதிபந்தாபசரணம் மற்றும் பந்தவியுச்சித்தி இவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்பதைப் பார்க்கலாம். இதனால் பந்தாபசரணம் நிகழ்தலும் சம்வரையும் ஒன்றே என்ற உங்களுடைய தவறான கற்பனையும்கூட விலகிவிடும்.

பிரக்ருதிபந்தாபசரணின் ஸ்வரூபம் பற்றி நாம் விரிவாகவே பார்த்தோம். குறிப்பிட்ட குணஸ்தானத்தில் குறிப்பிட்ட பிரக்ருதியின் பந்த வியுச்சித்தி நிகழ்கிறது என்று சொல்லும்போது, அந்தப் பிரக்ருதியின் பந்தம் அந்த குணஸ்தானத்தின் கடைசி சமயம்வரை மட்டுமே நிகழும், அதற்குமேல் உள்ள குணஸ்தாணங்களில் அந்தப் பிரக்ருதியின் பந்தம் நிகழ்வதில்லை என்று பொருள் கொள்ள வேண்டும். உதாரணமாக மித்யாத்துவ பிரக்ருதியின் பந்த வியுச்சுத்தி முதல் குணஸ்தானத்தில் நிகழ்கிறது. இதன் விளக்கம் என்னவென்றால் மித்யாத்துவப் பிரக்ருதி முதல் குணஸ்தானத்தில் பந்தமாகிறது, இரண்டாவது முதல் மேல் குணஸ்தானங்களில் இந்தப் பிரக்ருதி பந்தமாவதில்லை. இவ்வாறு முதல் குணஸ்தாணத்தில் 16 பிரக்ருதிகளின் பந்த வியுச்சித்தி நிகழ்கிறது.

இதேபோல அனந்தானுபந்தி முதலான 25 பிரக்ருதிகளின்பந்த வியுச்சித்தி இரண்டாம் குணஸ்தானத்தில் நிகழ்கிறது. இதன் விளக்கம் என்னவென்றால் இந்த 25 பிரக்ருதிகள் இரண்டாம் குணஸ்தான இறுதிவரை மட்டுமே பந்மாகின்றன அதாவது முதல் மற்றும் இரண்டாம் குணஸ்தானத்தில் மட்டுமே பந்தமாகின்றன, மேல் குணஸ்தானங்களில் பந்தமாவதில்லை. இவ்வாறு ஒவ்வொரு குணஸ்தானத்திற்கும் பந்த வியுச்சித்தி நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. இதைப்பற்றி விரிவாகப் பின்னர் சர்ச்சை செய்ய விருக்கிறோம். இங்கு நாம் வியுச்சித்தி மற்றும் பந்தாபசரணம் இரண்டுக்கும் உள்ள வித்யாசத்தை மட்டுமே பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

பிரக்ருதிபந்தாபசரணம் பிராயோக்யலப்தி காலத்தில் தொடங்கி உபசம சம்யக்த்துவம் பெறும் காலம்வரை மட்டுமே நிகழ்கிறது, அதிலும் அகாதி கர்மங்களில் சில பாபப் பிரக்ருதிகளின் பந்தம் அந்தர்முகூர்த்த காலம்வரையே நின்று போகிறது. எதுவரை சம்யக்த்துவம் பெறவில்லையோ அதுவரை இதை சம்வரை என்று சொல்வதில்லை. ஏனென்றால் இங்கு மித்யாத்துவ குணஸ்தானமே நடந்துகொண்டு இருக்கிறது.

உயிர் சம்யக்த்துவம் பெற்று மேல் குணஸ்தானத்தை எப்போது அடைகிறதோ அப்போதுதான் முன் குணஸ்தானங்களில் நிகழும் கர்மங்களின் பந்தம் வியுச்சித்தி அடைந்தன என்று சொல்வார்கள். சம்யக்த்துவம் அடைந்த பிறகே, அதாவது நான்காம்

குணஸ்தானத்தை அடைந்த பிறகு மித்யாத்துவம் முதலான 16 மற்றும் அனந்தானுபந்தி முதலான 25 பிரக்ருதிகளின் பந்த வியுச்சித்தி நிகழ்கிறது. இதை 41 பிரக்ருதிகளின் சம்வரை என்று அப்போதுதான் சொல்கின்றனர்.

பந்தாபசரணம் அந்தர்முகூர்த்த காலமே நிகழ்கிறது. ஆனால் பந்த வியுச்சித்தி எதுவரை மேல் குணஸ்தானங்களில் உயிர் நிலைத்து இருக்கிறதோ அவ்வளவு காலம்வரை கீழ் குணஸ்தான சம்பந்த பந்த வியுச்சித்தி தொடர்ந்து எப்போதும் இருக்கிறது. பந்தாபசரணம் பவ்வியர், அபவ்வியர் இரு சாராருக்கும் நிகழ்கிறது, ஆனால் பந்த வியுச்சித்தி பவ்வியருக்கு அதுவும் சம்யக்த்துவம் பெற்றதிலிருந்து, அதிலிருந்து விழாமல் இருக்கும்வரை நிகழும்.

இங்கு நாம் பிராயோக்யலப்தியின் ஸ்வருபம் பற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இங்கு உயிரின் உணர்வுகள் ஒவ்வொரு சமயமும் மேலும் மேலும் விசுத்தி-தூய்மை அடைந்து கொண்டே போகிறது. அந்த தூய்மையின் நிமித்தத்தால் கர்மங்களின் ஸ்திதியிலும் (மீதமுள்ள கர்மங்களின் பந்த காலத்திலும்) மற்றும் கர்ம உதயத்திலும் பல்வேறு மாற்றங்கள் நிகழ்கின்றன. ஸத்தாவில் இருக்கும் கர்மங்களின் ஸ்திதி மற்றும் பலன்தரும் சக்தி ஸ்திதிகாண்டக்காதம் மற்றும் அனுபாககாண்டக்காதம் மூலம் குறைகின்றன. புதிதாகப் பந்தமாகும் கர்மங்களின் ஸ்திதி ஸ்திதிபந்தாபசரணம் மூலமும் மற்றும் குறிப்பிட்ட சிலப் பிரக்ருதிகளின் பந்தம் பிரக்ருதிபந்தாபசரணம் மூலமும் நின்று போகின்றன. நாம் பந்தத்தில் பிரக்ருதிபந்தம், பிரதேசபந்தம், ஸ்திதிபந்தம் மற்றும் அனுபாகபந்தம் என நான்கு பிரிவுகளை முன்னர் பார்த்திருக்கிறோம்.

இங்கு பிரதேச பந்தம்கூட மிகஅதிகமில்லாமலும்(அனுத்கிருஷ்ட), மிகக்குறைவாக இல்லாமலும் (அஜகன்ய) இடைப்பட்ட எண்ணிக்கையில் பந்தமாகின்றன. பிரதேசபந்தம் என்றால் ஒரு சமயத்தில் பந்தமாகும் கர்ம பரமாணுக்களின் எண்ணிக்கை என்று பொருள். மிகக் குறைந்த எண்ணிக்கையில் கார்மண பரமாணுக்கள் பந்தமாவதை ஜகன்யப் பிரதேசபந்தம் என்றும் மிக அதிக எண்ணிக்கையில் கார்மண பரமாணுக்கள் பந்தமாவதை உத்கிருஷ்ட பிரதேச பந்தம் என்றும் சொல்கின்றனர். இவை இரண்டுக்கும் இடையில் அதிக எண்ணிக்கை பக்கம் உத்கிருஷ்டப்பிரதேச பந்தமாக இல்லாமலும், குறைந்த எண்ணிக்கை பக்கம் ஜகன்யப்பிரதேச பந்தமாக இல்லாமலும் நடுவில் உள்ள மத்திய எண்ணிக்கையில் கார்மண பரமாணுக்கள் பந்தமாவதையே இப்படிக் கூறுகின்றனர். பலன்தரும் சக்தி கட்டும் கர்மங்களில் மட்டுமில்லாமல் உதயத்திற்கு வந்து பலன் கொடுப்பதிலும்கூட சில சிறப்பான மாற்றங்கள் காணப்படுகின்றன. பாபப் பிரக்ருதிகளின் பலன்தரும் சக்தி இரண்டு நிலைகளைக் கொண்டதாக இருக்கிறது. அதிலும் ஒவ்வொரு சமயமும் பலன்தரும் சக்தி அனந்த மடங்கு குறைந்த வண்ணம் பந்தமாகிறது, அதாவது பாபப்பிரக்ருதியின் பலன் தரும் சக்தி அதிக அளவில் குறைந்து அல்ப பலன்தரும் சக்தியுடனே பந்தமாகிறது. ஆனால் புண்ணியப் பிரக்ருதிகளில் இதற்கு மாறாக நான்கு நிலையிலும் அதுவும் ஒவ்வொரு சமயமும் மேலும் பலன் தரும் சக்தி அதிகரித்துக்கொண்டே பந்தமாகின்றன.

இப்போது உதயமாகும் கர்மங்களில் எப்படிப்பட்ட மாற்றம் நிகழ்கிறது என்று பார்க்கலாம். எந்த கர்மம் உதயமாகிறதோ அதன் பலனை உயிர் அனுபவிக்கிறது. ஒரு சமயத்தில் ஒரு நிஷேகமே உதயத்திற்கு வருகிறது. நிகழ்காலத்தில் ஒரு சமயமே ஸ்திதி உள்ள ஒரு நிஷேகத்தின் உதயம் நிகழ்கிறது. அனுபாக உதயத்தில் பாப கர்மங்கள் இரண்டு நிலை வடிவிலும், புண்ணிய கர்மங்கள் நான்குநிலை வடிவிலும் பலன்தரும் சக்தியுடன் உதயத்திற்கு வருகின்றன - உயிர் அதையே அனுபவம் செய்கிறது. இங்கே பாருங்கள்! முன்னர் கட்டிக்கொண்ட தீவிர பாப கர்மத்தின் பலன் மந்தமடைந்து இப்போது உதயத்திற்கு வருகிறது மற்றும் முன்னர் கட்டிக்கொண்ட புண்ணிய கர்மத்தின் பலன் அதிகமாகி இப்போது உதயத்திற்கு வருகிறது. இதையே உயிர் அனுபவிக்கிறது. [இதிலிருந்து நம் நிகழ்கால நல்ல பரிணாமத்தின் மூலம் கர்மங்களின் பலனை நாம் முன்னர் கட்டிய நிலையிலேயே அனுபவிக்க வேண்டியதில்லை! நாம் முன்னர் செய்த பாபங்களின் பலனை குறைத்தும், புண்ணியங்களின் பலனை அதிகரித்தும் அனுபவம் செய்யமுடியும் என்பதை நாம் இதன்மூலம் தெரிந்து கொள்கிறோம்!! என்னே ஜினதர்மத்தின் சிறப்பு!!!] பிரதேச உதயம்கூட அஜகன்ய. அனுத்கிருஷ்டமாகவே மத்திம எண்ணிக்கையுடனே நிகழ்கிறது. எந்தப் பிரக்ருதிகள் உதயவடிவில் இருக்கின்றனவோ அவைகளே உதீரணை அடைகின்றன.

இவ்வாறு பிராயோக்யலப்தி அந்தர்முகூர்த்த காலத்தில் கர்மங்களில் நிகழும் அனேக மாற்றங்களைப் பற்றி சர்ச்சை செய்து அவைகளில் நிகழும் விசேஷமான மாற்றங்களை எல்லாம் தெரிந்து கொண்டோம். மேலும் பல விளக்கங்களை அடுத்தக் கடிதத்தில் பார்க்கலாம்.

ஜெய் ஜினேந்திரா.

-உங்கள் அம்மா

## கரணலப்தி-அதப்பிரவர்த்தகரணம்

**கடிதம்-9** **12-10-2002**

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

பிரதமோபசம சம்யக்த்துவம் பெறும்முன் நிகழும் பஞ்சலப்தியின் ஸ்வரூபம் பற்றி நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அவைகளில் இதுவரை நான்கு லப்திகள் பற்றி நாம் கலந்துரையாடி-சர்ச்சை செய்து விட்டோம். பவ்வியர், அபவ்வியர் இருசாராரும் பிராயோக்யலப்தி வரையிலான நான்கு லப்திகளைப் பெறமுடியும் என்றும் தெரிந்து கொண்டோம். ஆனால் ஐந்தாம் லப்தியான கரணலப்தியை பவ்விய உயிர்கள் மட்டுமே பெறமுடியும், அபவ்விய உயிர்கள் கரணலப்தியை அடைவதில்லை.

பவ்விய உயிர்களில்கூட சில உயிர்களே கரணலப்தியைப் பெறுகிறார்கள், பல பவ்விய உயிர்கள் பெறுவதில்லை. அந்த உயிர்களிடம் பாத்திரத்தன்மை இருந்தாலும்கூட, தகுதியுடன்கூடிய செயல்பாட்டுக்கு உதந்தார்போல் (உபாதானத்திற்கு உகந்தபடி) நல்முயற்சிக்கு தகுந்தார்போல (புருஷார்த்தத்திற்கு உகந்தபடி), எதிர்கால நிகழ்வுக்கு உகந்தார்போல (பவிதவ்வியத்திற்கு-ஹோனாஹாருக்கு உகந்தபடி), தகுதியான காலத்திற்கு உகந்தார்போல (காலலப்திக்கு உகந்தபடி) எந்த உயிர் அந்தர்முகூர்த்த காலத்தில் சம்யக்த்துவத்தைப் பெற இருக்கிறதோ அந்த பவ்விய உயிரே கரணலப்தியில் பிரவேசிக்கிறது, அதாவது அப்படிப்பட்ட பவ்விய உயிரிடமே கரணலப்தி உண்டாகிறது. அங்கு நிமித்த வடிவில் கர்மங்களின் உபசமம் கர்ம புத்கலங்களின் சுய உபாதானத் தகுதியால் தானாகவே நிகழ்கிறது.

சாஸ்திரங்களில் காலலப்தி நோக்கில் - காலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துச் சொல்லும்போது, யாருக்கு காலலப்தி வந்துவிட்டதோ அவரிடமே சம்யக்த்துவம் வெளிப்படும் என்று சொல்லப்படுகிறது. சொல்வது ஒரு சமவாய நோக்கில் சொல்லப்பட்டாலும்கூட காரியம் நிகழத் தேவையான ஐந்து சமவாயங்களும் அங்கு சேர்ந்தே இருக்கின்றன. உபதேசத்தில் புருஷார்த்தம் செய்ய ஊக்கமளித்து, புருஷார்த்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துச் சொல்லும்போது, எந்த உயிர் முக்திக்கு செல்லவேண்டிய புருஷார்த்தைச் செய்கிறதோ - முக்தி செல்ல வேண்டிய செயல்களைச் செய்கிறதோ அவருக்கு ஐந்து சமவாயங்களும் அங்கே தயார் நிலையில் இருக்கின்றன மற்றும் அவருடைய மோக்ஷமார்க்கம் துவங்கி விடுகிறது என்று புரிந்து கொள்ள வேண்டும்.

பாருங்கள், இங்கு சம்யக்த்துவம் பெறச்செய்யும் புருஷார்த்தம் என்று சொல்லாமல் மோக்ஷம்-முக்தி பெறச்செய்யும் புருஷார்த்தம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தத்துவத்தை உறுதி செய்து, தன்னைப் பிறவற்றிலிருந்து பிரித்தறிந்து, பிளவில்லாத, பிரிக்க முடியாத, முக்காலத்திலும் எந்த மாற்றமும் அடையாது நிலைத்து இருக்கக்கூடிய உண்மையான தூய ஆத்மாவின் (அபேத, அகண்ட, திரிகாலி த்ருவ, நிஜசுத்தாத்மாவின்) உண்மையான வடிவை அறிந்த வண்ணம் இருத்தலே புருஷார்த்தமாகும். இந்த பேதவிஞ்ஞானம்-பிரித்தறியும் யுக்தி மூலமே சம்யக்த்துவம் பெறப்படுகிறது, இதன் மூலமே

மேல் குணஸ்தானங்களும் அடையப்படுகின்றன மற்றும் கேவலஞானம்கூட இந்த வழியைப் பின்பற்றுவதாலேயே வெளிப்படுகிறது.

இதுவே மோக்ஷமார்க்கம் தோன்றும் விதிமுறையாகும். ஆகையால் **கேவலி பகவான் நமக்கு சம்யக்த்துவம் எப்போது உண்டாகும் என்று தெரிந்திருக்கிறாரோ, அப்போது உண்டாகும். பிறகு புருஷார்த்தம் செய்ய ஏன் உபதேசம் செய்கிறீர்கள்?** அல்லது **கேவலி பகவான் நம் எதிர்காலப் பர்யாயங்கள் எப்படி நிகழுமோ அப்படியே அறிந்திருக்கிறார், ஆகையால் அவை அப்படியேதான் நிகழப்போகின்றன. பிறகு நம்முடைய நிகழ்கால புருஷார்த்தத்தில்-நல்முயற்சியில் என்ன இருக்கிறது? நாம் என்னவோ வேறு ஒன்றின் (பகவான் அறிந்ததின்) கட்டுப்பாட்டில் அல்லவா இருப்பது போல் தெரிகிறது** முதலான கேள்விகளும் மற்றும் நம்பிக்கைகளும் தவறுகள் நிரம்பியது என்பது உங்கள் எண்ணத்தில் வந்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

பவ்வியர்களுக்குச் சமமாக அபவ்வியர்களிடமும் பிராயோக்யலப்தி நிகழ முடியும் என்பதும், மற்றும் அவர்களுடைய கர்மங்களிள்கூட ஸ்திதிகாடக்காதம், அனுபாககாண்டக்காதம், ஸ்திதிபந்தாபசரணம், பிரக்ருதிபந்தாபசரணம் முதலியைவகள் நிகழ்கின்றன என்பதும் ஆச்சர்யமான விஷயமாக இருக்கிறது என்பதை நீங்கள் வெளிப்படுத்தி இருந்தீர்கள்.

மகள்களே! சுப உணர்வு பவ்வியர், அபவ்வியர் இருசாராருக்கும் வருகிறது, அதன் நிமித்தத்தால் புண்ணிய கர்மங்களின் பந்தம் நிகழ்கிறது. ஆனால் பவ்விய உயிர்கள்கூட பிராயோக்கியலப்திவரை வந்து, ஸ்வபாவத்தை எதிர்கொள்வதை, அதாவது தத்துவ நிர்ணயம் செய்து அதை உறுதி செய்யும் முயற்சி-புருஷார்த்தம் செய்யவில்லை என்றால்- அதாவது அவர்களும் கரணலப்தி பெறுவதில் முயற்சி மேற்கொள்ளவில்லை என்றால் அவர்களும்கூட சம்யக்த்துவத்தைப் பெறமுடியாது.

கரணலப்தி என்ற சொல்லை பலமுறை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள் மற்றும் அது நிகழ்ந்ததும் கட்டாயமாக-நியமமாக சம்யக்த்துவம் பெறப்படுகிறது என்றும், மேலும் அது நிகழாமல் சம்யக்த்துவம் வருவதில்லை என்பதையும் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். ஆகையால் அதன் ஸ்வருபத்தை தெரிந்து கொள்வதில் நீங்கள் மிகவும் ஆர்வமாக இருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். இப்போது அதைப்பற்றிய சர்ச்சையைத்தான் செய்ய விருக்கிறோம்.

பரிணாமத்தையே-உணர்வையே கரண்-கரணம் என்று சொல்கின்றனர். மேற்கூறிய நான்கு லப்திகள் வழியாக உயிரின் பரிணாமத்தில் தூய்மை-விசுத்தித்தன்மை ஒவ்வொரு சமயமும் வளர்ச்சி அடைந்து கொண்டே போகிறது. முக்காலத்திலும் நான்கு கதிகளிலும் உள்ள எல்லா உயிர்களிலும் யார்யார் கரணலப்தியில் நுழைந்து விட்டார்களோ அவர்களின் பரிணாம விசேஷங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் அவைகள் மூன்று விதமாக இருக்கின்றன என்பது கேவலஞானத்தில் தெரிகிறது. பாருங்கள், கேவலி பகவான் எல்லா

திரவிய, குண, பர்யாயங்களை அறிகிறார். அனந்த உயிர்களின் அனாதிஅனந்த கால ஒவ்வொரு சமய பரிணாமங்களையும் ஒருசேர ஒரே சமயத்தில் அறிகிறார்.

முன்னர் எந்தெந்த உயிர்கள் கரணலப்தி உணர்வு கொண்டார்களோ, நிகழ்காலத்தில் யாரெல்லாம் கொள்கிறார்களோ மற்றும் எதிர்காலத்தில் எந்த உயிர்களெல்லாம் கொள்ளப் போகிறார்களோ அந்த எல்லா உயிர்களின் பரிணாமங்களையும் கேவலி பகவான் ஒரே நேரத்தில் காண்கிறார். ஒவ்வொரு உயிரின் பரிணாமங்களின் விசுத்தி ஒவ்வொரு சமயமும் அனந்த மடங்கு அதிகரிக்கிறது, ஆனால் அதேசமயம் வெவ்வேறு உயிர்களின் பரிணாமங்களில் விசுத்தித்தன்மை சமமாகவும், சமமில்லாமலும் இருக்கும் நோக்கில் இந்த பரிணாமங்களை மூன்றாகப் பிரித்துக் கூறியிருக்கிறார். அந்த மூன்று பிரிவின் பெயர்களாவன- **1.அதப்பிரவிருத்த கரணம், 2.அபூர்வகரணம், 3.அநிவ்விருத்திகரணம்** என்பனவாகும்.


இவ்வாறு நான்கு லப்திகள் மூலம் உயிரின் உபயோகம் எப்போது நிஜசுத்தாத்மா பக்கம் இருக்கிறதோ அப்போது வரிசையாக அதப்பிரவிருத்தகரண, அபூர்வகரண, அநிவ்விருத்திகரண பரிணாமங்கள் மூன்றும் நிகழ்கின்றன. இதையே **கரணலப்தி** என்று கூறுகின்றனர்.

கரணலப்தியின் காலம் அந்தர்முகூர்த்தமாகும், மூன்று கரணங்களின் காலமும்கூட அதனதன் அந்தர்முகூர்த்தமாகும். இருந்த போதிலும் அநிவ்விருத்திகரணின் காலம் எல்லவற்றையும்விட மிகக் குறைந்ததாகும். அபூர்வகரணத்தின் காலம் அதைவிட சங்க்யாத மடங்கு அதிகமாகும், மற்றும் அதப்பிரவர்த்தகரணத்தின் காலம் அதைவிட சங்க்யாத மடங்கு அதிகமாகும். முதன்முதலில் மூன்று கரணங்களின் ஸ்வருபத்தையும், அவைகளின் விசேஷத்தையும்-சிறப்பையும் பார்க்கலாம், பிறகு அவைகளைப்பற்றி விரிவாகச் சர்ச்சை செய்யலாம்.

**அதப்பிரவர்த்தகரணம்:** அதப்பிரவர்த்தகரணத்தில் வந்து அதிக சமயங்கள் ஆன ஒருவரின் உணர்வுத்தூய்மை நிலை, அதே அதப்பிரவர்த்தகரணத்தில் வந்து கொஞ்ச சமயங்களே ஆன மற்ற சில உயிர்களின் உணர்வுத்தூய்மை நிலைகளோடு ஒப்பிடும்போது அந்த தூய்மை நிலைகள் சமமாக இருக்கமுடியும். இதை **அனுக்கிருஷ்டி** (imitation or riplica) - அதேபோன்றத் தோற்றம் அமைப்பு - உருவாக்கம் என்று சொல்கின்றனர்.

அதப்பிரவர்த்தகரணத்தில் நான்கு **ஆவசியகங்கள்** நிகழும். கண்டிப்பாக-நியமமாக நிகழும் விஷயங்களை ஆவசியகம் என்று சொல்கின்றனர். அவைகளாவன- 1.விசுத்தி-பரிணாமத்தூய்மை ஒவ்வொரு சமயமும் அனந்த மடங்கு அதிகரிக்கிறது. 2.ஸதிதிபந்தாபசரணம் நிகழ்கிறது. 3.புண்ணியப் பிரக்ருதிகள் ஒவ்வொரு சமயமும் அனந்த மடங்கு அதிகரித்தவண்ணம் நான்குநிலை அனுபாகபந்தம் நிகழ்கிறது. 4.பாபப்பிரக்ருதிகள் ஒவ்வொரு சமயமும் அனந்த மடங்கு குறைந்தவண்ணம் இரண்டுநிலை அனுபாகபந்தம் நிகழ்கிறது.

இந்த கரணத்தில் வெவ்வேறு உயிர்களின் தூய்மைப் பரிணாமம் வெவ்வேறாக இருக்கின்றன. முக்காலத்திலும் அனந்த உயிர்களில் நிகழும் கரணலப்தி பரிணாம நிலைகளை ஜினேந்திர பகவான் பிரத்யட்சமாகப் பார்க்கிறார், அவைகள் அசங்க்யாதலோகப்பிரமாணமாக இருக்கின்றன. லோகாகாசத்தில் எத்தனை அசங்க்யாதப் பிரதேசங்கள் இருக்கின்றதோ அந்த எண்ணிக்கையை ஒரு லோகப்பிரமாணம் என்று சொல்கின்றனர்.




அந்த எண்ணிக்கையை ஒரு சின்னம் மூலம் ஆகமங்களில் ஒன்றின் மேல் ஒன்று மூன்று கோடுகள் போட்டு அதற்குப் பக்கத்தில் 1, 2, 3… என்று எண்களை எழுதி ஒரு லோகப்பிரமாணம், இரண்டு லோகப்பிரமாணம், மூன்று லோகப்பிரமாணம், … என்று குறிப்பிடுகின்றனர். அசங்க்யாத லோகப்பிரமாணத்தை மூன்று கோடுகளுடன் ஒன்பதை தலைகீழாகப் போட்டு அந்தச் சின்னம் மூலம் குறிப்பிடுகின்றனர்.

நாங்கள் காலைநேர ஸ்வாத்யாயத்தில் பண்டிட். தோடர்மல் எழுதிய சம்யக்ஞானசந்திரிகா என்ற கோமட்டசார மொழிபெயர்ப்பு நூலில் **அர்த்தசந்துருஷ்டி** அதிகாரத்தைப் படித்துக்கொண்டு இருக்கிறோம். இந்த நூலில் பல்யம், அசங்க்யாதம், அனந்தம், முதலான பெரியபெரிய எண்ணிக்கைகளைச் சின்னங்கள்-symbols-சந்துருஷ்டி மூலம் எடுத்துக்கூறி அது சம்பந்தமான கணிதங்களை-கணக்குகளைப் புரிய வைக்கின்றனர். அதிலிருந்துதான் லோகப்பிரமாணம் என்ற எண்ணிக்கையின் சின்னத்தை உங்களுக்கு இங்கே கொடுத்திருக்கிறேன். இப்போது அபூர்வகரணத்தின் ஸ்வருபத்தையும் விசேஷத்தையும் பார்க்கலாம்.

**அபூர்வகரணம்:** இங்கு ஒவ்வொரு சமயமும் விசுத்தி உணர்வு அபூர்வம், அபூர்வமாக [எந்த உயிருக்கும் ஏற்படாத, அந்த உயிருக்கே உரித்தான புதுப்புது விசுத்தி உணர்வு நிலைகள்.] உண்டாகின்றன. கீழ் மற்றும் மேல் சமயங்களிலுள்ள எந்த உயிரினுடைய பரிணாமத்தோடும், குறிப்பிட்ட உயிரின் பரிணாமநிலை சமமாக இருப்பதில்லை. அதாவது இங்கு அனுக்ருஷ்டி அமைப்பு காணப்படவில்லை. அதப்பிரவத்த கரணத்தில் நிகழும் நான்கு ஆவஸ்யகங்களுடன், இங்கு 1.குணஸ்ரேணி, 2.குணசங்க்ரமணம், 3.ஸ்திதிகாண்டக்காதம், 4.அனுபாக காண்டக்காதம் எனப்படும் மேலும் நான்கு ஆவஸ்யகங்களும் நிகழ்கின்றன.

அதப்பிரவர்த்தகரணில் உண்டாகும் பரிணாமத்தையும்விட இங்கு உண்டாகும் பரிணாமம் அசங்க்யாத லோகப்பிரமாண மடங்கு அதிகமாக இருக்கிறது. இதை கீழே காட்டியபடி அர்த்தசந்துருஷ்டி-சின்னம் மூலம் எழுதிக் காட்டுகின்றனர். மேற்கூறிய எல்லா ஆவஸ்யகங்களின் ஸ்வரூபங்களையும் நாம் பின்னால் விரிவாகப் பார்க்க விருக்கிறோம்.



**அநிவிருத்திகரணம்:** நிவிருத்தி என்றால் பரிணாமங்களில் வேறுபாடு அல்லது சமமில்லாமை என்பதாகும். அநிவிருத்தி என்றால் முக்காலத்திலும் எல்லா உயிர்களிடமும் பரிணாமங்கள் சமமாக இருத்தல் என்று பொருள்.

இங்கு ஒவ்வொரு சமயமும் அனந்தமடங்கு விசுத்தி ஏறிக்கொண்டே போகிறது, ஆனாலும்கூட முக்காலத்திலும் இந்த கரணத்தில் இருக்கும் எல்லா அனந்த உயிர்களுடைய ஒவ்வொரு சமயப் பரிணாமங்களும் சமானமாகவே காணப்படுகின்றன. இங்குகூட ஆயுள் தவிர மற்ற ஏழு கர்மங்களில் குணஸ்ரேணி, குணசங்க்ரமணம், ஸ்திதிகாண்டக்காதம், அனுபாக காண்டக்காதம் எல்லாம் நிகழ்கின்றன. அனிவிருத்தி கரணத்தின் காலத்தில் சங்க்யாதத்தில் பெரும்பகுதி கழிந்ததும் தர்சனமோஹனீய கர்மத்தில் **அந்தர்கரண்-அந்தர்கரணம்** மற்றும் **உபசமகரண்-உபசமகரணம்** அதாவது இடைவெளியும், தணிவும் நிகழ்கின்றன. இப்போது இந்த மூன்று கரணங்களின் ஸ்வரூபங்களைப் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

இங்கு பல புதிய சொற்களைப் படித்து நீங்கள் பயப்பட எந்த அவசியமுமில்லை. திரும்பத் திரும்ப படிப்பதாலும், கேட்பதாலும் எந்த புதிய விஷயமும் நம்மால் தெரிந்து கொள்ளமுடிகிறது. மோனா, நீ தினந்தோறும் ரியாவுக்கு ஆறு திரவியங்கள், ஏழு தத்துவங்கள், இந்திரியங்கள், பாபம், கஷாயம் முதலிய சொற்களைக் கற்றுக் கொடுப்பதாகக் கூறினாய். எப்போது ஐந்து வயது ரியா, கஷாயங்களின் பெயர்களை க்ரோதம், மானம் என்று சொல்லிக்கொண்டிருப்பதை, இரண்டு வயதேயான சோஹன் கேட்டு, அவனுடைய மழலை சொல்லால் 'மாயா, லோப' என்று உடன் சொல்ல ஆரம்பித்து விட்டான் என்றும் சொல்லி சந்தோஷமும், வியப்பும் அடைந்ததாகச் சொன்னாய் அல்லவா! இப்போது இருவருக்குமே நீ கற்றுக் கொடுப்பதாகக் கூறியது எங்களுக்கு மேலும் மகிழ்ச்சியளிக்கிறது.

சிறு வயதில் குழந்தைகளுக்கு மதிப்பீடு, ஆய்வு மற்றும் கற்கும்சக்தி கூர்மையாக இருக்கிறது. அவர்கள் பெரியவர்களைப் பார்த்து சுலபமாகவே கற்றுக் கொள்கிறார்கள். ரீனா, உன் ஏழு வயது ரோஹித்துக்கும், ஐந்து வயது ரோஹனுக்கும், நீ ஸ்வாத்யாயம் செய்வதை அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் கற்றுக்கொடுக்கவும் செய்கிறாய். அதனுடன் குதேவர்களை வணங்காமல் இருத்தல், உண்ணத் தகாதவைகளை உண்ணாமலிருத்தல், கடைகளில் விற்கும் கேக் முதலான தின்பண்டங்களை சாப்பிடாமை முதலியவைகளையும் அவர்கள் தினசரி பழக்கத்தில் வரும்படி பழக்கியிருக்கிறாய். அவர்களுடன் பிறர் வீட்டுக்குச் செல்லும்போது புதிய தின்பண்டங்களை அவர்களுக்கு உண்பதற்குக் கொடுத்தால், அவர்கள் முதலில் உன்னிடம் **அம்மா, நீங்கள் இந்த தின்பண்டங்களைச் சாப்பிடுவீர்களா?** என்று கேட்டு, **நீங்கள் ஆம், சாப்பிடுவேன் என்று சொன்னால்தான் நாங்கள் சாப்பிடுவோம்** என்ற பழக்கம் கொண்டிருக்கிறார்கள் என்பதை கேட்க எங்களுக்கு சந்தோஷமாக இருக்கிறது.

குழந்தைகளுக்கு சரியான பழக்க வழக்கங்களைக் கற்றுத்தருதலே அவர்களுக்கு நல்லதாகும், அதுவே நாம் அவர்களுக்குச் செய்யும் உத்தம தானமாகும். இப்படிப்பட்ட குழந்தைகள் மிகவும் கொடுத்து வைத்தவர்கள், பாராட்டுதலுக்கு உரியவர்கள்! நீங்கள்

இருவரும் கூட பெற்றோர்களுக்கு பொருத்தமான செயல்களைச் செய்துகொண்டு இருப்பதைப் பார்த்து நாங்கள் பூரிப்படைகிறோம். இப்போது நம் பிள்ளைகளுடன் சேர்த்து அருகில் உள்ள நம் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் குழந்தைகளுக்கும் கூட இதை அவசியம் கற்பியுங்கள். இதுவும் ஸ்வாத்யாயத்தின் ஒரு அங்கமாகும்.

எனக்குக்கூட எங்கே அதிக ஞானம் இருக்கிறது? ஜினவாணியில் கூறப்பட்டுள்ள கொஞ்சவிஷயம் என்னுடைய அல்ப ஞானத்தில் வந்தது, அவைகளை நான் ஆழமாகச் சிந்திக்கிறேன், அவைகளை உங்களுடன் பகிர்கிறேன். இந்த நிமித்தத்தால் உங்களுடைய உண்மையான தத்துவங்களை தெரிந்துகொள்ளும் ஆர்வம் விழித்தெழுந்து, நீங்கள் மூல கிரந்தங்களைப் படிக்கத் தூண்டுதலும், அந்த கிரந்தங்களைப் படித்து அதில் புதைந்து கிடக்கும் மர்மங்களைப் புரிந்து கொள்ளும் சாமர்த்தியமும் வரவேண்டும் என்பதே என் பாவனையாகும்.

**சுத்தோபயோகம் பற்றி நீங்கள் அதிகமாக எதுவும் பேசவில்லை, ஆனால் கரண பரிணாமத்தின் விளைவாக நன்நம்பிக்கை-நற்காட்சி பெறப்படுகிறது என்று மட்டுமே சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள், அப்படி ஏன் செய்கிறீர்கள்?** என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்.

நல்ல கேள்வி தான். இங்கு நாம் கரணானுயோகம் மூலம் பரிணாமத்திற்கும் அதனால் கர்மங்களில் உண்டாகும் நுணுக்கமான மாற்றங்கள் பற்றிய வர்ணனைகளைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஒவ்வொரு அனுயோகத்திலும் வர்ணனைகளும் அதைச் சொல்லும் முறையும்-பத்ததியும் வெவ்வேறாக இருக்கின்றன. மோக்ஷமார்க்கப்பிரகாச கிரந்தத்தில் பண்டிட். தோடர்மல்ஜி இந்த விஷயத்தை இவ்வாறு புரியும்படி எடுத்துச் சொல்கிறார் -

“சரணானுயோகத்தில் வெளியில் தெரியும் கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அது சம்பந்தமான விஷயங்களைச் சொல்லிப் புரியவைக்கப்படுகிறது. திரவ்யானுயோகத்தில் ஆத்ம பரிணாமங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அது சம்பந்தமான விஷயங்களைச் சொல்லி புரியவைக்கப்படுகிறது. மற்றும் கரணானுயோகத்தில் நுட்பமான வர்ணனை செய்து புரியவைக்கப்படுகிறது. திரவ்யானுயோகத்தில் பெரிய அளவில்-ஸ்தூலமாக பேசப்படுகிறது. அதாவது திரவ்யானுயோகத்தில் உபயோகத்தை சுபோபயோகம், அசுபோபயோகம், சுத்தோபயோகம் என மூன்று பிரிவாகச் சொல்லப்படுகிறது. சதுமஸ்த்தரின்(அறிவு மறைப்புடன் கூடிய பிறவி நிலையில் உள்ள உயிர்களிடம்) புத்தியின்போக்கு-புத்திகோசர் அதாவது அறிவில் உண்டாகும் பரிணாமத்தின் நோக்கில்-அறிவு செயல்படும் நோக்கில் விளக்கம் அளிக்கப்படுகிறது. இதில் தர்மத்தில் பாசம் கொண்ட பரிணாமம் சுபோபயோகமாகும், பாபத்தில் ஆர்வம் மற்றும் காழ்ப்புணர்ச்சி வடிவம் கொண்ட பரிணாமம் அசுபோபயோகமாகும், மற்றும் விருப்பு வெறுப்புகளற்ற வீதராக பரிணாமம் சுத்தோபயோகமாகும் என்று சொல்லப்படுகிறது.

கரணானுயோகத்தில் கஷாயசக்தி நோக்கில், குணஸ்தானங்களில் சிக்கலான மற்றும் தூய்மையான (சங்க்லேஷ், மற்றும் விசுத்தி) உணர்வு நோக்கில் விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. கரணானுயோகத்தில் இராகங்கள் முதலானவைகள் இல்லாத சுத்தோபயோகம், யதாக்யாதச் சாரித்திரம் அடைந்த பிறகு நிகழ்கிறது, மற்றும் அது மோஹம் அழிந்த பிறகு தானகவே நிகழ்கிறது. கீழ் குணஸ்தானங்களில் அப்படிப்பட்ட சுத்தோபயோகம் எவ்வாறு நிகழமுடியும்? ஆனால் திரவ்யானுயோகத்தில் சுத்தோபயோகம் செய்யவே முக்கியமாக உபதேசம் செய்யப்படுகிறது. ஆகையால் சதுமஸ்த்த உயிர்கள் எந்த காலத்தில் புத்தியின்போக்கு-புத்திகோசர் பக்தி முதலான சுப காரியங்களையும் ஹிம்சை முதலான அசுப காரியங்களையும் செய்வதை விட்டுவிட்டு; ஆத்மானுபவம் செய்யும் காரியத்தில் ஈடுபடுமானால், அந்த காலத்தில் அந்த உயிரை சுத்தோபயோகி என்று திரவ்யானுயோகத்தில் சொல்லப்படுகிறது. அந்த காலத்திலும் கேவலஞானத்துக்கு மட்டுமே வெளிச்சமான சூட்க்ஷும இராகம் முதலியன உயிரில் நிகழ்கிறது, ஆனால் திரவ்யானுயோகத்தில் அந்தப் பாகுபாடுகள் காட்டப்படுவதில்லை, சுயபுத்தியில் தெரிந்து கொள்பவரின் புத்திப்போக்கு இராங்களை விட்டுவிடும் நோக்கில் அவரை சுத்தோபயோகி என்று கூறுகின்றனர்.

யதாக்யாத சாரித்திரம் அடைந்த பிறகு திரவ்யானுயோகம் மற்றும் கரணானுயோகம் இரண்டின் நோக்கிலும் சுத்தோபயோகம் இருக்கிறது ஆனால் கீழ் குணஸ்தான (4-5 இருந்து 10-ஆம் குணஸ்தானம் வரையிலான) நிலையில் திரவ்யானுயோக நோக்கில் சில நேரங்களில் சுத்தோபயோகம் நிகமும் ஆனால் கரணானுயோக நோக்கில் எப்போதும் கஷாயத்தின் ஒருபகுதி அந்த குணஸ்தானங்களில் இருப்பதால் சுத்தோபயோகம் நிகழ்வதில்லை. ஆகையால் திரவ்யானுயோகத்தில் சொல்லப்படும் விதத்தை கரணானுயோகத்தில் சொல்லப்படும் விதத்தோடு ஒப்பிடும்போது சில இடங்களில் அவை ஒத்துப் போகின்றன, சில இடங்களில் ஒத்துப் போவதில்லை."

பண்டிட். தோடர்மல்ஜி மேலும் இதற்கு கீழ்கண்டவாறு விளக்கமளிக்கிறார்-

"கரணானுயோகத்தில் கஷாயசக்தி நோக்கில் வர்ணனைகள் சொல்லப்படுகின்றன. கஷாயங்களின் போக்கு-வெளிப்படுத்துதல் என்பது வேறு, அந்தரங்க கஷாயசக்தி எவ்வளவு இருக்கிறது என்பது வேறு. எந்த உயிர்களின் காஷாயங்களின் போக்கு அதிகமாக இருந்து அவைகளின் அந்தரங்க கஷாயசக்தி குறைவாக இருந்தால் அந்த உயிர்களை மந்தகஷாயி என்று சொல்கின்றனர். ஆனால் எந்த உயிர்களின் காஷாயங்களின் போக்கு குறைவாக இருந்து அவைகளின் அந்தரங்க கஷாயசக்தி அதிகமாக இருந்தால் அந்த உயிர்களை தீவிரகஷாயி என்று சொல்கின்றனர். உதாரணத்திற்கு ஒரு தேவன் கஷாயத்தால் ஒரு நகரம் முதலானவைகளை அழிக்கும் செயலில் ஈடுபட்டாலும் கூட தேவர்களிடம் பொதுவாகவே கஷாயசக்தி குறைவாக இருப்பதால் அவர்களிடம் பீத லேஷ்யாவே இருக்கிறது. இதிலிருந்தும் வேறான ஒரு பொறி முதலான உயிர்கள் எதுவும் கஷாயத்துடன் அழிவுச் செயல்கள் செய்வதை பார்க்க முடிவதில்லை ஆனாலும் அந்த உயிர்களிடம் அந்தரங்க கஷாயசக்தி அதிகமாக இருப்பதால் அவைகளுக்கு கிருஷ்ண முதலான கீழ் மூன்று அசுபலேஷ்யாக்களே இருக்கின்றன.

சர்வார்த்தசித்தி பெயர்கொண்ட எல்லாவற்றிற்கும் மேல் சொர்க்கத்தில் உள்ள தேவன் கஷாய வடிவில் பரிணமிப்பதில்லை ஆனால் அந்தரங்க கஷாயசக்தி அவர்களிடம் அதிகம் இருப்பதால் அவர்களுக்கு அசய்யமம்(விரதம் கைகொள்ள முடியாமை) இருக்கிறது. இந்த நிலையிருந்து முற்றிலும் வேறுபட்ட ஐந்தாம் குணஸ்தானத்தில் உள்ள ஸ்ராவகர் திருமணம் செய்து கொள்கின்றனர், வியாபாரம் முதலான கஷாயங்கள் கொண்ட தொழில்களைச் அதிகமாகச் செய்கின்றனர், ஆனால் அவர்களிடம் அந்தரங்க கஷாயசக்தி மந்தமாக இருப்பதால் அவர்களால் தேசசய்யமம் (அணுவிரதங்களை) கைகொள்ள முடிகிறது."

ஒவ்வொரு லேஷ்யாவிலும் அசங்க்யாத லோகப்பிரமாண நிலைகள் இருக்கின்றன, மந்தத்திலிருந்து தீவிர நிலைகள்வரை எண்ணிக்கையால் சொல்லமுடியாத அளவுக்கு அனேக நிலைகள் இருக்கின்றன. உயிர்களின் எல்லா கஷாயங்களும் அசங்க்யாத லோகப்பிரமாணம் அளவு இருக்கின்றன, அதை தகுதியான அசங்க்யாத லோகப்பிரமாணத்தால் வகுத்தாலும் வருவது அசங்க்யாத லோகப்பிரமாணமேயாகும். அவைகளில் பெரும்பகுதி சங்க்லேஷ-சிக்கலான-துன்பம் தரக்கூடிய பரணாமங்களாகும், இவைகளில் கிருஷ்ண, நீல, காபோத லேஷ்யாக்கள் அடங்கும். ஒருபாகம் மட்டுமே தூய்மை-விசுத்த பரிணாமங்களாகும், இவைகளில் பீத, பத்ம, சுக்ல லேஷ்யாக்கள் அடங்கும்.

சங்க்லேஷ பரிணாமத்தில் ஏதாவது ஒரு லேஷ்யாவில் தீவிர சங்க்லேஷத்தை தீவிரகஷாயம் என்றும் குறைந்த சங்லேஷத்தை மந்தகாஷாயம் என்றும் சொல்கின்றனர். ஆனால் விசுத்தி பரிணாமத்தில் ஏதாவது ஒரு லேஷ்யாவில் விசுத்தியின் வளர்ச்சியை மந்தகஷாயம் என்றும் விசுத்தி குறைவாக இருந்தால் தீவிரகஷாயம் என்று சொல்கின்றனர்.

மேலே கொடுக்கப்பட்ட உதாரணங்கள் மூலம் சர்வார்த்தசித்தி தேவர்களிடம் அப்ரத்யாக்யானம், பிரத்யாக்யானம், சஞ்சுவலம் ஆகிய மூன்று கஷாய நான்மைகள் காணப்படுகின்றன. அதேசமயம் ஐந்தாம் குணஸ்தானத்தில் இருக்கும் ஸ்ராவகர்களிடம் பிரத்யாக்யானம், சஞ்சுவலனம் என்ற இரண்டு கஷாய நான்மைகளே காணப்படுகின்றன. அப்ரத்யாக்யானம் உள்ளவர்களிடம் அந்தரங்க கஷாயசக்தி அதிகமாக இருப்பதால் அவர்களிடம் கொஞ்சம்கூட விரதம் எடுக்க வேண்டும் என்ற எண்ணம் வருவதில்லை. இதனால்தான் சுக்ல லேஷ்யா உடைய சர்வார்த்தசித்தி தேவர்களால் நான்காம் குணஸ்தானத்தற்கு மேல் செல்ல முடிவதில்லை. பிரத்யாக்யானாவரத்தில் அந்தரங்க கஷாயசக்தி குறைவாக இருக்கிறது, அந்த காரணத்தால் ஐந்தாம் குணஸ்தானத்தில் இருக்கும் ஸ்ராவகர்களால் அணுவிரதம் கைக்கொள்ள முடிகிறது, ஆனால் முனி விரதம்-சகல சய்யமம் கைக்கொள்ள முடிவதில்லை. இதனால்தான் பீத முதலான மூன்று சுபலேஷ்யா இருந்தும்கூட இவர்களை தேச சய்யமி-அணுவிரதி என்று கூறப்படுகிறது.

பண்டிட் தோடர்மல்ஜி மேலும் கூறுகிறார் -

"கஷாயத்தில் விளக்கப்பட்டது போலவே யோகத்திலும் அப்படித்தான் இருக்கிறது. யோகம் செயல்படுதல் என்பது வேறு மற்றும் **கர்மாகிர்ஷண** யோகசக்தி என்பது வேறாகும்.

கர்மாகிர்ஷண யோகசக்தி என்பதன் பொருள் கார்மண பரமாணுக்களை ஈர்க்கும் தகுதி கொண்ட யோகசக்தி என்பதாகும், அதையே பாவசக்தி என்றும் சொல்கின்றனர். ஒரு உயிரின் மன, வசன, காய செயல்பாடு-கிரியை மிகக்குறைவாகத் தோன்றலாம், ஆனால் கர்மாகிர்ஷண சக்தி நோக்கில் அதன் யோகம் அதிகமாக இருக்க முடியும். இதற்கு மாறாக வேறு ஒரு உயிரின் இந்த மன, வசன, காய யோக வெளிப்பாடு அதிகமாகக் காணப்படலாம், ஆனால் அதன் கர்மாகிர்ஷண சக்தி அல்பமாக இருந்தால் அதை குறைந்த யோகம் என்றே சொல்லப்படுகிறது. உதாரணமாக கேவலி பகவானிடம் இடம்விட்டு இடம் பெயரும் செயல் இல்லாமல் சமவசரணத்தில் அமர்ந்த நிலையில் இருக்கலாம் ஆனால் அவரிடம் யோகசக்தி அதிகம், அதேசமயம் இரண்டு இந்திரியம் முதலான உயிர்கள் இங்குமங்கும் இடம் பெயர்ந்து கொண்டிருக்கலாம், ஆனாலும் அவைகளின் யோக சக்தி அல்பமாக-குறைவாகக் காணப்படுகிறது.

கரணானுயோகத்தில் பரிணாமம் மற்றும் கர்மங்களின் அவஸ்தைகள்-நிலைகள் பற்றி நுணுக்கமாண-சூட்சமமான விளக்கம் அளிக்கப்படுகிறது. அதற்கு உகந்தபடி விடாமுயற்சியுடன் யாராலும் எந்த முயற்சியும் செய்யமுடியாது. கரணானுயோகத்தில் யதார்த்த வஸ்த்து ஸ்திதி அதாவது என்ன செய்தால் என்ன நிகழும் என்பது எடுத்துச் சொல்லப் படுகிறது, இங்கு நடத்தைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. சரணானுயோகம், திரவ்யானுயோகம் முதலியவைகளின் சொல்லப்பட்ட உபதேசங்களைக் கேட்டு அப்படியே செயல்பட்டால், அதன் நிமித்தத்தால் எந்த காரியம் நிகழ வேண்டுமோ அது நிகழும், அதுவும் தானாகவே நிகழும், அதற்காக வேறு எதுவும் செய்ய வேண்டியதில்லை. எப்படியென்றால் யாராவது கர்மத்தை உபசமம் முதலியன செய்ய விரும்பினால் அது எப்படி நடக்கும்? யார் தானே சுயமாக தத்துவங்களை உறுதி செய்யும் முயற்சி செய்தால் அந்த நிமித்தத்தால் சுலபமாகவே உபசம சம்யக்த்வம் முதலியவை நிகழ்கிறது. ஆகையால் கரணானுயோகத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அப்படியே அறிந்து கொள்ள வேண்டும், ஆனால் போக்கு-நடத்தை அதாவது செயல்படுதல் அறிவின்போக்கில் எது செய்தால் நினைத்த நல்ல விஷயம் நடக்குமோ அதுபோலச் செய்ய வேண்டும்.”

இந்த எல்லா விளக்கமும் மோக்ஷமார்க்கப்பிரகாசம் என்ற நூலின் எட்டாம் அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. **இந்த பிரயத்தனம்-முயற்சி-புருஷார்த்தம் திரவ்யானுயோகத்துக்கு அனுசரனையாக-திரவ்யானுயோகத்தில் கூறியபடித் தத்துவங்களைத் தெரிந்து கொண்டு தத்துவ நிர்ணயம் செய்ய வேண்டும் அவ்வளவுதானே, பிறகு கரணானுயோகத்தில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டியதின் அவசியம்தான் என்ன? எந்த காரணமுமில்லாமல் எங்கள் நேரத்தையும், சக்தியையும் ஏன் வீணாக்க வேண்டும்?** என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம்.

மகள்களே! நமக்கு எதில் அதிக ஈடுபாடு இருக்கிறதோ அந்த மோக்ஷமார்க்கத்தின் எல்லா அங்கங்களையும் அறிந்து கொள்வதில் ஆர்வமும்கூட நமக்கு சுலபமாகவே வந்து விடுகிறது. உலகெங்கும் நிகழும் பிற நிகழ்வுகளைத் தெரிந்து கொள்வதில் இருக்கும் ஆர்வத்தைக் குறைப்பதின் மூலம், உண்மை நிலையை தெரிந்து கொள்ள உற்சாகம் ஏற்படுதல் இயற்கையே! யாருக்கு கிரிக்கெட்டில் ருசி இருக்கிறதோ, அவர்கள்

பந்தயத்தில் யார் வெற்றி பெற்றார்கள் என்பதை மட்டும் தெரிந்து கொள்வதோடு திருப்தி அடைகிறார்களா என்ன? அவர்கள் நாள் முழுவதும் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் அமர்ந்து, பந்தயம் துவங்கியதிலிருந்து கடைசி பந்து போடும்வரை பார்க்கின்றனர். பிறகு இரண்டாவது முறையாக அந்தப் பந்தயத்தின் முதன்மை காட்சிகளை-highlight-ஐயும் பார்க்கிறார்கள், மீண்டும் மீண்டும் அந்த விஷயம் பற்றியே ஒருவருக்கொருவர் விவாதம் வேறு செய்கின்றனர் அல்லவா.

என்னைப் போன்ற சிலருக்கு **ஒரு பந்தை பவுன்ஸ் செய்யும்போது பல விளையாட்டு வீரர்களும் விரைந்து ஓடுகிறார்கள், அதைப் பார்க்கும் கிரிக்கெட் இரசிகர்களும் மேலும் கீழும் குதிக்கிறார்கள்-சிலர் மகிழ்ச்சியும், சிலர் துக்கமும் அடைகிறார்கள்; அதில் அப்படி என்ன இருக்கிறது?** என்ற கேள்வி எழுகிறது. இதற்கு கிரிக்கெட் இரசிகர்கள் **ஹே பகவான்! யாருக்கு கவிதை, இலக்கியம், நகைச்சுவை இவைகளில் ஆர்வம் இல்லையோ, ருசி இல்லையோ, அவர்களுக்கு கவிதை, இலக்கியம், நகைச்சுவை எல்லாம் என்ன என்பதை எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது? அதுபோல கிரிக்கெட் விளையாட்டைப் பற்றி இவர்களுக்குச் சொல்லி புரியவைக்கும் கஷ்டத்தை எனக்குக் கொடுக்காதே, பகவானே!** என்றுதான் பதிலளிப்பார்கள்.

ஆனால் இங்கு யாருக்கு கரணானுயோகத்தில் ஆர்வம் இல்லையோ-அதில் சொல்லப்படும் விஷயங்களைத் தெரிந்து கொள்வதில் ருசி இல்லையோ அப்படிப்பட்ட உயிர்களுக்கும்கூட, அவர்களுக்கும் நல்லதே நிகழ வேண்டும் என்ற கருணை எண்ணம் மனதில் வருவதால் இவ்வாறு உபதேசம் செய்யப்படுகிறது - **ஹே உயிரே, நீ என்ன செய்து கொண்டு இருக்கிறாய் என்பதை நீ இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. அனாதி காலமாக நீ கர்மத்தின் பிடியில் சிக்கிக்கொண்டு இருந்த போதிலும் நிரந்தரமாக அந்தக் கர்மங்களேயே கட்டிக் கொள்ளும் காரியத்தை நீ மீண்டும் மீண்டும் செய்து கொண்டு இருக்கிறாய். இங்கே பார்! இதிலிருந்து விடுபடும் வழி மிகவும் சுலபமானதாகும், எளிமையானதாகும் மற்றும் தன்னிச்சையானதும் அதாவது உன்னுடைய ஆதிக்கத்திலேயே இருப்பதாகும். கொஞ்சம் கேள்! நீ வெறுமனே தத்துவங்களை அறிந்து அதைப்பற்றி சிந்தனை மட்டும் செய்தால் போதும், கர்மங்களில் தானாகவே எல்லா மாற்றங்களும் நிகழும், உனக்கு சம்யக்த்துவமும் கிடைத்துவிடும், உன்னுடைய கர்மபந்தத்தின் பிடியும் தளர்ந்து போகும். முன்னர் கட்டிக் கொண்ட பாப கர்மத்தின் சக்தி குறைந்து போகும், அதன் ஸ்திதியும் குறைந்து போகும். ஆனால் நீ முன்னர் கட்டிக்கொண்ட புண்ணியத்தின் சக்தி மேலும் பலப்படும், அதன் மிகுந்த பலனையும் நீ அனுபவம் செய்வாய், மேலும் எல்லா கர்மங்களும் அழிந்து உனக்கு சீக்கிரமே மோக்ஷமும் கிடக்கும்.**

இங்கு நாம் கரணானுயோகத்தின் ஆதாரத்தில் கரண பரிணாமம் பற்றி விவாதம் செய்துகொண்டு இருக்கிறோம். முன்னர் கூறிய நான்கு லப்திகள் வழியாக உயிர் கரண பரிணாமத்தில் மூழ்குகிறது. ஜெயசேனாசாரியரின் மொழியில் சொல்ல வேண்டுமென்றால் - **அத்யாத்ம பாஷையில் ஞானத்தின் உபயோகம் முழு விருப்பத்துடன் நிஜசுத்தாத்ம பாவனை வடிவில் விழிப்புணர்வு கொள்கிறது; ஆகம பாஷையில் அதப்பிரவதகரணம், அபூர்வகரணம், அநிவ்விருத்திகரணம் ஆகிய மூன்று கரண பரிணாமங்களின் மூலம்**

**ஆத்மாவில் ஆழ்கிறது-அதிலேயே ஒருங்கிணைந்து விடுகிறது.** இங்கு பாவனை வடிவம் அல்லது ஒருங்கிணைத்தல் என்பது அந்த வடிவமாகவே மாறிவிடுவது என்று பொருள், வேறுமனே விருப்பம் கொண்டிருத்தல் மட்டுமே பாவனை வடிவம் என்பதின் பொருள் அல்ல.

பண்டிட். தோடரமல்ஜி மேலும் மோக்ஷமார்க்கப்பிரகாசத்தில் எழுதுகிறார் - **கரணலப்தியில் இருக்கும் உயிர் விசுத்தியுடன் கூடிய முயற்சி உபயோகத்தை தத்துவ சிந்தனையில் செலுத்தும்போது அந்த வடிவாகவே அது ஆகிவிட்டது, தன் திரிகால சுத்தாத்ம திரவியமே அதற்குத் தெரிகிறது, அந்த காரணத்தால் ஒவ்வொரு சமயமும் அதன் பரிணாமம் தூய்மை அடைந்து கொண்டே போகிறது மற்றும் தத்துவ உபதேசத்தில் கேட்டது சிந்தனையில் தெளிவடைந்து அதை உறுதி செய்வதில் லயிக்கும் போதே, அந்த கொஞ்ச காலத்திலேயே தத்துவ சிரத்தை வடிவ நற்காட்சியை-சம்யக்தரிசனத்தை அந்த உயிர் பெறுகிறது. இந்த பரிணாமங்களின் வரிசை கேவலஞானிக்கே வெளிச்சமான ஒன்றாகும். இதையே கரணானுயோகம் நிரூபணம் செய்கிறது.**

பண்டிட். தோடரமல்ஜி மேலும் மோக்ஷமார்க்கப்பிரகாசத்தில் எழுதுகிறார்- **கரணலப்தியில் இருக்கும் உயிர் அறிவுப் பூர்வமாகத் தத்துவ சிந்தனையில் அதன் ஞானோபயோகத்தைச் செலுத்தும்போது அந்த வடிவம் போலவே தெரியுமளவுக்கு அது முயற்சி செய்கிறது, அதாவது தன் திரிகால சுத்தாத்ம திரவியமே அதற்குத் தெரியுமளவுக்கு அது முயற்சி செய்கிறது. இதற்குக் காரணம் ஒவ்வொரு சமயமும் அந்த உயிரின் உணர்வு நிர்மலமாக-அழுக்கற்றதாக ஆகிக்கொண்டே போவதுதான். மற்றும் அது முன்னர் கேட்டுத் அதன் தாரணையில் இருக்கும் தத்துவ உபதேசத்தை தற்சமயம் அறிவின் உபயோகத்தில் கொண்டுவந்து செய்யப்படும் சிந்தனையும் நிர்மலமாகிக்கொண்டே போகிறது-அதாவது பகவான் எப்படிக் கூறினாரோ அப்படியே அந்த உயிரும் தன் சிந்தனையை-அறிவின் உபயோகத்தை செலுத்துகிறது, அதனால் அல்ப காலத்திலேயே-கொஞ்ச நேரத்திலேயே அது தத்துவ ஸ்ரத்தான சம்யக்த்துவ நிலையை அடைகிறது. இந்த பரிணாமங்களின் ஏற்ற இறக்கங்களைக் கேவலஞானியே அறிகிறார், அதையே கரணானுயோகம் உறுதி செய்கிறது.**

இப்போது நாம் ஒவ்வொரு கரண பரிணாமத்தின் ஸ்வரூபத்தைப் பற்றி விரிவாகப் பார்க்கலாம். தத்துவ விசார் மற்றும் தத்துவ நிர்ணயம்-அதாவது தத்துவ சிந்தனையிலும் மற்றும் தத்துவத்தில் ஒரு உறுதியான முடிவுக்கு வருவதிலும் ஞானோபயோகம் மும்முரமாக ஈடுபட்டு இருக்கும்போது உயிரின் பரிணாமம் அனந்த மடங்கு தூய்மை அடைந்து கொண்டே போகிறது. நாம் முன்னர் விசுத்திலப்தியில்கூடப் பரிணாமத்தூய்மை பற்றி பேசியிருக்கிறோம் மற்றும் இப்போது இங்கு கரணலப்தியிலும் கூட பரிணாமத்தூய்மை பற்றிப் பேசப்படுகிறது. முன்னர் சாதாவேதனீயம் முதலான பிரக்ருதிகளின் பந்தத்திற்குக் காரணமான பரிணாமங்களின் தூய்மை பற்றிச் சொல்லப்பட்டது, இப்போது இங்கு சொல்லப்படும் விசுத்தி தத்துவஞான சம்பந்தமானத் தூய்மை பற்றியது-சிரத்தை சம்பந்தமான நிர்மலதா பற்றியே இங்கு பேசப்படுகிறது என அறியவும். இங்கு கரணலப்தியில் மித்யாத்துவம் மற்றும் அனந்தானுபந்தி கஷாயங்கள் மேலும்மேலும் மந்தம், மந்த தரம், மந்த தமம் ஆகிக்கொண்டே போகிறது என்ற நோக்கில் இங்கு சொல்லப்படும் விசுத்தி என்று புரிந்து கொள்ள வேண்டும்.

நான்கு கதி பவ்விய மித்யாதிருஷ்டி உயிர்களும் பிரதமோபசம சம்யக்த்துவம் பெறமுடியும் என்று முன்னர் பார்த்திருக்கிறோம். அதில் சிலர் ஏழாம் நரகத்தில் உள்ள கிருஷ்ண லேஷ்யாவில் இருக்கும் நாரகியாக இருக்கலாம். சிலர் ஒன்பதாவது கிரைவேக்ய வைமானிக சொர்கக்கத்தில் இருக்கும் சுக்ல லேஷ்யா கொண்ட மித்யாதிருஷ்டியாக தேவனாக இருக்கலாம். சிலர் பீத, பத்ம, அல்லது சுக்ல லேஷ்யா கொண்ட மனித அல்லது விலங்கு கதி மித்யாதிருஷ்டியாக இருக்கலாம். இங்கு அவரவர்களுடைய லேஷ்யா என்னவோ அப்படியேதான் எப்போதும் இருக்கும், ஆனால் அசுப லேஷ்யாவில் இருப்பவர்களின் சங்க்லேஷ-சிக்கலான உணர்வுகள் குறைந்து கொண்டே போகும், அதே சமயம் சுப லேஷ்யாவில் இருப்பவர்களின் தூய்மைத்தன்மை-விசுத்தி அதிகரித்துக் கொண்டே போகும். அவர்களுடைய கஷாயங்களின் ஸ்தானங்கள் அவர்களுடைய பழைய பரிணாமங்களின் ஸ்தானங்களைவிட குறைந்து கொண்டே போகின்றன.

ஆனாலும்கூட அந்த எல்லா உயிர்களிலும் ஆரம்பத்தில் தத்துவஞானதில் நிர்மல வடிவ விசுத்தி-அழுக்குகள் குறையும் தூய்மைத்தன்மை பரிணாமங்கள் சமமாகவும் இருக்கலாம், சமமில்லாமலும் இருக்கலாம். ஆனால் அநிவ்விருத்தி கரணத்தில் எல்லோருடைய பரிணாமங்களும் ஒன்றாக, ஒரேமாதிரியான தூய்மைத்தன்மையைக் கொண்டதாக இருக்கும்-சமானமாக இருக்கும்.

அதப்பிரவர்த்தகரணத்தில் பல உயிர்களின் நோக்கில் மேல் கீழ் சமயங்களில் சமான பரிணாமங்கள் காணப்படுகின்றன, அதை அனுக்ருஷ்டி ரசனா-அமைப்பு என்று சொல்கின்றனர். அதைப்பற்றி இப்போது பார்க்கலாம். நீங்கள் தொலைக்காட்சிப் பெட்டியில் கிரிக்கெட் பந்தயம் பார்க்கிறீர்கள். அந்தப் பந்தயத்தின் நேர்முக வர்ணணை-commentary செய்யும்போது முன்னர் விளையாடிய பல பந்தயங்களின் விபரங்களைக் கூறி வர்ணணை செய்கிறார்கள். ஒரு அணி நான்காவது ஓவர் வரை எத்தனை ஓட்டங்கள் எடுத்ததோ, அவ்வளவு ஓட்டங்களை வேறு அணி மூன்று ஓவர்களிலிலேயே எடுத்தது, வேறு ஒரு அணி இரண்டாவது ஓவரிலேயே அவ்வளவு ரன்களை எடுத்தது, வேறொரு அணி அவ்வளவு ரன்களையும் முதல் ஓவரிலேயே எடுத்துவிட்டது போன்ற comparison-களைச் செய்து-ரன்கள் எடுத்ததை ஒப்பு நோக்கி வர்ணணை செய்கின்றனர். அதேபோல இங்கு முக்காலத்திலும் அனந்த உயிர்கள் அதப்பிரவர்த்தகரண நிலையை அடைகின்றனர், அவர்களின் முதல், இரண்டாம், மூன்றாம்.... சமய பரிணாமங்களை ஒப்புநோக்கி-comparison செய்து பல உயிர்களின் நோக்கில் எங்கெங்கு எந்தெந்த சமயங்களில் சமமான பரிணமங்கள் எந்தெந்த உயிர்களிடம் காணப்படுகின்றன என்று விளக்கப்படுகிறது.

கிரிக்கெட்டில் பழைய போட்டிகளில் எடுத்த ரன்களை மட்டுமே ஒப்பு நோக்கிச் சொல்லப்படுகிறது, ஏனென்றால் எதிர்கால பந்தயங்களில் என்ன நிகழும் என்பது அவர்களுக்குத் தெரியாது. ஆனால் கேவலி பகவான் கடந்தகால, எதிர்கால, நிகழ்காலத்தில் இந்த எல்லா பரிணாமங்களை அடையும் எல்லா உயிர்களின் எல்லாப் பரிணாமங்களையும் ஒரே சமயத்தில் அறிகிறார். அந்த எல்லா பரிணாமங்களின் விசுத்தி

நிலைகளையும் பார்த்து வெவ்வேறு உயிர்களிடம் இருக்கும் பரிணாமங்கள் அசங்க்யாத லோகப்பிரமாண அளவு கொண்டுள்ளதை அறிகிறார்.

அதப்பிரவர்த்தகரணத்தின் அந்தர்முகூர்த்த காலத்தில் ஒவ்வொரு சமயத்தின் பரிணாமத்தின் அளவு குறிப்பிட்ட ஒரு எண்ணிக்கையாக இருக்கிறது. அதில் முதல் சமயத்தில் எவ்வளவு பரிணமா விசுத்தியின் எண்ணிக்கையோ அதைவிட இரண்டாவது சமயத்தின் பரிணாமவிசுத்தி அனந்த மடங்கு அதிகரிக்கிறது, அனால் அந்த அதிகரிக்கும் விசுத்தியின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட அளவு ஏற்றம் (delta) கொண்டதாக இருக்கிறது. மூன்றாம் சமயத்தில் அதைவிட அனந்த மடங்கு விசுத்தி உண்டாகிறது அதேசமயம் அந்த ஏற்றம் முன் குறிப்பிட்ட அதே (delta) அளவே ஏற்றமே நிகழ்கிறது. ஒவ்வொரு சமயமும் இதே குறிப்பிட்ட அளவு ஏற்றத்துடனேயே (same delta) பரிணாமங்கள் தூய்மை அடைந்து கொண்டே போகின்றன. இந்த குறிப்பிட்ட அளவு ஏற்றத்தை **சைய்** என்று குறிப்பிடுகின்றனர். இவ்வாறு எல்லா சமயங்களின் மொத்த பரிணாமங்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது அது அசங்க்யாத லோகப் பிரமாண அளவு கொண்டதாக இருக்கிறது. இதைப்பற்றி மிகவிரிவான வர்ணனை கோமட்டசாரம்-ஜீவகாண்டம், லப்திசாரம் முதலான கிரந்தங்களில் மிக விரிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. நாம் இங்கு இதைப்பற்றி சுருக்கமாகப் பார்க்கலாம்.

நாம் இங்கு கற்பனையாகச் சில எண்களை எடுத்துக்கொண்டு அதப்பிரவர்த்தகரணில் நிகழும் அனுக்ருஷ்டி அமைப்பு பற்றி தெரிந்து கொள்ளலாம். இந்த மாதிரி கற்பனையான எண்களின் மூலம் கணிதத்தை புரிந்து கொள்வதை **அங்க்கசந்துருஷ்டி** என்று சொல்கின்றனர், உண்மையான எண்கள் மூலம் அதைத் தெரிந்து கொள்வதை **அர்த்தசந்துருஷ்டி** என்று சொல்லப்படுகிறது. இப்போது அதப்பிரவர்த்தகரணில் நிகழும் அனுக்ருஷ்டி அமைப்பு பற்றி அங்க்க சந்துருஷ்டிமூலம் தெரிந்து கொள்ளலாம்.

அதப்பிரவர்த்தகரணின் காலம் அந்தர்முகூர்த்தமாகும், இங்கு நாம் அதை 16 சமயங்களாக எடுத்துக் கொள்ளலாம். முக்காலத்திலும் அனந்த உயிர்களின் அதகரண (அதப்பிரவர்த்தகரண) பரிணாமம் அசங்க்யாதலோகப் பிரமாணமாக இருக்கிறது, இதை நாம் 3072 என்று வைத்துக் கொள்வோம். முதல் சமயத்தில் வெவ்வேறு உயிர்களின் விசுத்தி வெவ்வேறாக இருக்கிறது. எல்லாவற்றையும்விட மிகக்குறைந்த விசுத்தியில் இருந்து ஒரு உயிர் அதகரணத்தை துவங்குகிறது என்று வைத்துக் கொண்டால் அந்த உயிரின் பரிணாம விசுத்தி முதல் வரிசைக்கிரமத்தில் இருக்கும். அதைவிட கொஞ்சம் அதிக விசுத்தி கொண்ட வேறு ஒரு உயிர் அதகரணத்தை துவங்குகிறது என்று வைத்துக் கொண்டால் அந்த உயிரின் பரிணாம விசுத்தி இரண்டாவது வரிசைக்கிரமத்தில் இருக்கும். இதைவிட அதிக விசுத்தியுடன் அதகரணத்தை துவங்கும் வேறு உயிரின் பரிணாம விசுத்தி மூன்றாவது வரிசைக்கிரமத்தில் இருக்கும். நாம் எடுத்துக்கொண்ட அங்க்க சந்துருஷ்டியில் முதல் சமயத்தில் துவங்கும் வெவ்வெறு பரிணாமவிசுத்தியை 162 வரிசைக்கிரமங்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இந்த 162 வரிசைகளை நாம் நான்காகப் பிரிக்கலாம்-அதாவது நான்கு குழுக்களாக, group-களாகச் செய்யலாம். ஆனால் முதல் குழுவிலிருந்து இரண்டாவது குழுவின் பரிணாம விசுத்தி ஒரு பரிணாம விசுத்தி அதிகம் (+1) கொண்டதாக இருக்கும், இரண்டாவதிலிருந்து மூன்றாவது மேலும்

ஒன்று அதிகமாக (முதல் குரூப்பிலிருந்து +2-வாக) இருக்கும், மூன்றாவதிலிருந்து நான்காவது மேலும் ஒன்று அதிகமாக (முதல் குரூப்பிலிருந்து+3-வாக) இருக்கும். இந்த ஒன்று ஒன்று அதிகமாவதையே **சய** அல்லது சமான விருத்தி என்று சொல்கின்றனர். எல்லா **'சய'** ங்களையும் கூட்ட வரும் எண்ணிக்கையை **சயதன்** என்று சொல்கின்றனர். இங்கு சயதன் 1+2+3=6 ஆகும். 162 வரிசைக்கிரமங்களை நான்காகப் பிரிக்க முதன்முதலில் அதிலிருந்து சயதன்-யை கழிக்க வேண்டும். 162-6=156. இப்போது இதை நான்கு சம குரூப்புகளாகப் பிரிக்க வேண்டும், அப்போது 156/4=39 வரும்.

அந்த எண்ணுடன் சய-வை கூட்ட நான்கு குரூப்புக்களின் முதல் சமய பரிணாம விசுத்தி எண்ணிக்கை 39, 40, 41, 42 என வரும். இதன் பொருள் 1-முதல் 39-வரை வெவ்வேறு பரிணாமங்கள் கொண்டவை முதல் குரூப்பாக இருக்கும். 40-ல் இருந்து 79-வரை வெவ்வேறு பரிணாமங்கள் கொண்ட 40 பரிணாமங்கள் கொண்டவை இரண்டாவது குரூப்பாக இருக்கும். மூன்றாவது குரூப்பில் 80-முதல்120-வரை மொத்தம் 41 பரிணாமங்கள் கொண்டவை மூன்றாவது குரூப்பாக இருக்கும், மேலும் நான்காவது குரூப்பில் 121-முதல் 162-வரை 42 பரிணாமங்கள் கொண்டவை நான்காவது குரூப்பாக இருக்கும். இவ்வாறு முதல் சமயத்தில் மொத்தம் 162 (39+40+41+42=162) பரிணாம விசுத்தி ஸ்தானங்கள் இருக்க முடியும். இவைகள் நான்கு குரூப்புகளாக இருக்கின்றன. முதல் பரிணாமத்தை முதல் குரூப்பின் முதல் சமயத்தின் ஜகன்ய பரிணாமம் என்று சொல்கின்றனர், மற்றும் 39-ஆவது பரிணாமத்தை முதல் குரூப்பின் முதல் சமயத்தின் உத்கிருஷ்ட பரிணாமம் என்று சொல்கின்றனர். மேலும் 2-முதல் 38-ஆவது பரிணாமங்கள் வரை எல்லா பரிணாமங்களையும் முதல் குரூப்பின் மத்திம பரிணாமம் என்று சொல்கின்றனர். ஒவ்வொரு குரூப்பின் ஜகன்ய பரிணாமத்திலிருந்து அதே குரூப்பின் உத்கிருஷ்ட பரிணாமம் அனந்த குணம்-மடங்கு விசுத்தியாகிறது. **[**என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.**]**

அதேபோல 40-ஆவது பரிணாமம் இரண்டாவது குரூப்பின் முதல் சமயத்தின் ஜகன்ய பரிணாமம் என்று சொல்கின்றனர். மற்றும் 71-ஆவது பரிணாமத்தை இரண்டாவது குரூப்பின் முதல் சமயத்தின் உத்கிருஷ்ட பரிணாமம் என்று சொல்கின்றனர். மேலும் 41-முதல் 70-ஆவது பரிணாமங்கள் வரை எல்லாவற்றையும் இரண்டாவது குரூப்பின் மத்திம பரிணாமம் என்று சொல்கின்றனர். இவ்வாறு மூன்றாம், நான்காம் குரூப்களின் ஜகன்ய, உத்கிருஷ்ட, மத்திம பரிணாமங்கள் இருக்கின்றன என்று தெரிந்து கொள்ளவும். 162-ஆம் பரிணாமம் முதல் சமயத்தின் நான்காவது குரூப்பின் உத்கிருஷ்ட பரிணாமமாகும் அல்லது முதல் சமயத்தின் சர்வோத்க்ருஷ்ட-எல்லாவற்றிலும் மிகப்பெரிய பரிணாமவிசுத்தி நிலையாகும்.

இவைகள் எல்லாம் முதல் சமயத்தின் வெவ்வேறு உயிர்களின் வெவ்வேறு பரிணாம விசுத்தி நிலைகள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். முதல் சமய பரிணாம விசுத்தியிலிருந்து இரண்டாம் சமய பரிணாம விசுத்தி அதிகமாகும், அதைவிட மூன்றாம் சமய பரிணாமவிசுத்தி அதிகமாகும். முதல் பரிணாமத்திலிருந்து 39-ஆவது பரிணாமம் அனந்த மடங்கு விசுத்தி யாகும். 39-ஆவது பரிணாமத்திலிருந்து 40-ஆவது பரிணாமம் அனந்த மடங்கு விசுத்தி யாகும். இதன் பொருள் முதல் குரூப்பின் உத்கிருஷ்ட

பரிணமத்தைவிட இரண்டாவது குரூப்பின் ஜகன்ய பரிணாமம் அனந்த மடங்கு விசுத்தி கொண்டது என அறியவும். இவ்வாறு அதகரணத்தின் முதல் சமயத்தின் பல்வேறு உயிர்களின் பரிணாம விசுத்தி நிலைகளைப் பற்றித் தெரிந்து கொண்டோம்.

இப்போது ஒவ்வொரு உயிரின் இரண்டாம் சமயத்தில் அதனதன் முன் சமய பரிணாம நோக்கில் பரிணாமத் தூய்மைத்தன்மை அனந்த மடங்கு அதிகமாகும், அதேபோல நம் கணக்கில் பரிணாமங்களின் எண்ணிக்கையும் அதிகமாகும். ஒவ்வொரு குரூப்பிலும் எண்ணிக்கை ஒவ்வொன்றாக விருத்தியாவதாக நாம் எடுத்துக்கொண்டோம், இதன் பொருள் ஒவ்வொரு சமயமும் நான்கு நான்கு என்ற எண்ணிக்கையில் பரிணாமங்களின் விசுத்தி ஏறிக்கொண்டு போகிறது என்பதாகும். முதல் சமயத்தில் நாம் 162 அதிக பட்ச பரிணாங்களின் எண்ணிக்கை என்று பார்த்தோம் அதனால் இரண்டாம் சமயத்தில் விசுத்தி அனந்த மடங்காக இருப்பதால் பரிணாம விசுத்தியின் எண்ணிக்கை 166 ஆக இருக்கிறது.

முதல் சமயத்தில் முதல் குரூப்பின் பரிணாமவிசுத்தியின் வரம்பு அல்லது எல்லை 1-ல் இருந்து 39-ஆக இருந்தது, அந்த வரம்பு அனந்த மடங்கு அதிகமாகிறது. அந்த வரம்பின் எண்ணிக்கைகளும் அதேபோல விருத்தியடைந்து இரண்டாம் சமயத்தில் விருத்தியின் எல்லை 40-ல் இருந்து 79-ஆக ஆகிறது.

இங்கே பாருங்கள்! முதல் சமயத்தில் இரண்டாம் குரூப்பில் முதல் சமயத்திலிருந்த 40-79 என்ற விசுத்தியின் வரம்பு இரண்டாவது சமயத்தில் முதல் குரூப்பின் விசுத்தி வரம்பாக ஆகிறது என்பதை கவனியுங்கள்.

அதேபோல இரண்டாவது குரூப்பின் முதல் சமயத்தில் இருந்த 40-79 வரை இருந்த விசுத்தியின் வரம்பும் 40 எண்ணிக்கை கொண்ட பரிணாமங்கள் இருந்தன, அதன் பரிணாமங்களின் விசுத்தி அனந்த மடங்காகவும் பரிணாம எண்ணிக்கையில் ஒன்று அதிகமாகி இரண்டாவது சமயத்தில் இரண்டாவது குரூப்பின் விசுத்தி வரம்பு 80-120 வரையும், பரிணாமங்களின் எண்ணிக்கை 40-ல் இருந்து 41-ஆகவும் ஆகின்றன.

அதேபோல மூன்றாவது குரூப்பின் முதல் சமயத்தில் இருந்த 80-120 வரை இருந்த விசுத்தியின் வரம்பும் 41 எண்ணிக்கை கொண்ட பரிணாமங்கள் இருந்தன, அதன் பரிணாமங்களின் விசுத்தி அனந்த மடங்காகவும் பரிணாம எண்ணிக்கையில் ஒன்று அதிகமாகி இரண்டாவது சமயத்தில் மூன்றாவது குரூப்பின் விசுத்தி வரம்பு 121-162 வரையும், பரிணாமங்களின் எண்ணிக்கை 41-ல் இருந்து 42-ஆகவும் ஆகின்றன.

அதேபோல நான்காவது குரூப்பின் முதல் சமயத்தில் இருந்த 121-162 வரை இருந்த விசுத்தியின் வரம்பும் 42 எண்ணிக்கை கொண்ட பரிணாமங்கள் இருந்தன, அதன் பரிணாமங்களின் விசுத்தி அனந்த மடங்காகவும் பரிணாம எண்ணிக்கையில் ஒன்று அதிகமாகி இரண்டாவது சமயத்தில் நான்காவது குரூப்பின் விசுத்தி வரம்பு 163-205 வரையும், பரிணாமங்களின் எண்ணிக்கை 42-ல் இருந்து 43-ஆக ஆகின்றன. இவ்வாறு இரண்டாவது சமயத்தின் மொத்த பரிணாமங்களின் எண்ணிக்கை 40+41+42+43=166

அக ஆகிவிடுகின்றன. இதை இவ்வாறு பட்டியலிடுகின்றனர். முதல் சமய பரிணாமத்தை கீழே எழுதுகின்றனர், மற்றும் இரண்டாவது சமய பரிணாமத்தை அதற்கு மேல் எழுதுகின்றனர். ஆகையால் இதை கீழிருந்து மேலாகப் படிக்க வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இரண்டாம் சமயம்** | **166** | **40** (40 முதல் 79 வரை) | **41** (80 முதல் 120 வரை | **42** (121 முதல் 162 வரை) | **43** (163 முதல் 1205 வரை) |
| **முதல் சமயம்** | **162** | **39** (1 முதல் 39 வரை) | **40** (40 முதல் 79 வரை | **41** (80 முதல் 120 வரை | **42** (121 முதல் 162 வரை) |
| **சமயம்** | **மொத்த பரிணாமம்** | **முதல் குரூப்** | **இரண்டாவது குரூப்** | **மூன்றாவது குரூப்** | **நான்காவது குரூப்** |

மூன்றாம் சமயத்தில்கூட பரிணாமங்களின் தூய்மை-விசுத்தி அனந்த மடங்கு அதிகரிக்கிறது மற்றும் அந்த எண்ணிக்கை சமமாக அதிகமாவதால்-சமமான 'சய' அளவு அதிகரிக்கிறது. சய என்றால் delta-the incremental value என்று பொருள். முதல் சமயத்தில் 162 பரிணாமங்கள் இருப்பதாக எடுத்துக் கொண்டோம். இரண்டாவது சமயத்தில் இது +4 ஆகி அதாவது பரிணாம எண்ணிக்கை 4 அதிகமாகி அது 166 ஆக ஆகிறது. மூன்றாவது சமயத்தில் மேலும் நான்கு அதிகமாகி அதன் எண்ணிக்கை 170 ஆக ஆகிறது. ஒவ்வொரு அடுத்த சமயத்தின் மொத்த பரிணாமங்களின் எண்ணிக்கை நான்கு நான்காக அதிகமாகிக் கொண்டே போகிறது, மற்றும் ஒவ்வொரு குரூப்பிலும் இந்த ஏற்றம் ஒன்று ஒன்றாகவே அதிகமாகிக் கொண்டு போகிறது. அதக்கரணத்தின் காலம் 16 சமயங்கள் என்று நாம் எடுத்துக் கொண்டோம். அவைகளில் ஒவ்வொரு சமய பரிணாமங்களின் எண்ணிக்கை முறையே -162,166, 170, 174, 178, 182, 186, 190, 194, 198, 202, 206, 210, 214, 218 மற்றும் 222 ஆக இருக்கிறது. மேலும் இவைகளை எல்லாம் கூட்ட அதக்கரணத்தின் மொத்த பரிணாமங்களின் எண்ணிக்கை 3072 ஆக ஆகிறது. இந்த 16 சமயங்களின் பரிணாமத்தை குரூப் வாரியாக கட்டங்களில் பட்டியலிட்டுப் பார்க்கலாம்.

| அதப்பிரவர்த்தகரணம்-அங்க்க சந்துருஷ்டி | | | | | |
|---|---|---|---|---|---|
| **16** | **222** | **54** (691 முதல் 744 வரை) | **55** (745 முதல் 799 வரை) | **56** (800 முதல் 855 வரை) | **57** (856 முதல் 912 வரை) |
| **15** | **218** | **53** (638 முதல் 690 வரை) | **54** (691 முதல் 744 வரை) | **55** (745 முதல் 799 வரை) | **56** (800 முதல் 855 வரை) |
| **14** | **214** | **52** (586 முதல் 637 வரை) | **53** (638 முதல் 690 வரை) | **54** (691 முதல் 744 வரை) | **55** (745 முதல் 799 வரை) |
| **13** | **210** | **51** (535 முதல் 585 வரை) | **52** (586 முதல் 637 வரை) | **53** (638 முதல் 690 வரை) | **54** (691 முதல் 744 வரை) |
| **12** | **206** | 5**0** (485 முதல் 534 வரை) | **51** (535 முதல் 585 வரை) | **52** (586 முதல் 637 வரை) | **53** (638 முதல் 690 வரை) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **11** | **202** | **49** (436 முதல் 484 வரை) | 5**0** (485 முதல் 534 வரை) | **51** (535 முதல் 585 வரை) | **52** (586 முதல் 637 வரை) |
| **10** | **198** | **48** ( 388 முதல் 435 வரை) | **49** (436 முதல் 484 வரை) | 5**0** (485 முதல் 534 வரை) | **51** (535 முதல் 585 வரை) |
| **9** | **194** | **47** (341 முதல் 387 வரை) | **48** ( 388 முதல் 435 வரை) | **49** (436 முதல் 484 வரை) | 5**0** (485 முதல் 534 வரை) |
| **8** | **190** | **46** (295 முதல் 340 வரை) | **47** (341 முதல் 387 வரை) | **48** ( 388 முதல் 435 வரை) | **49** (436 முதல் 484 வரை) |
| **7** | **186** | **45** (250 முதல் 294 வரை) | **46** (295 முதல் 340 வரை) | **47** (341 முதல் 387 வரை) | **48** ( 388 முதல் 435 வரை) |
| **6** | **182** | **44** (206 முதல் 249 வரை) | **45** (250 முதல் 294 வரை) | **46** (295 முதல் 340 வரை) | **47** (341 முதல் 387 வரை) |
| **5** | **178** | **43** (163 முதல் 205 வரை) | **44** (206 முதல் 249 வரை) | **45** (250 முதல் 294 வரை) | **46** (295 முதல் 340 வரை) |
| **4** | **174** | **42** (121 முதல் 162 வரை) | **43** (163 முதல் 205 வரை) | **44** (206 முதல் 249 வரை) | **45** (250 முதல் 294 வரை) |
| **3** | **170** | **41**(80 முதல் 120 வரை) | **42** (121 முதல் 162 வரை) | **43** (163 முதல் 205 வரை) | **44** (206 முதல் 249 வரை) |
| **2** | **166** | **40** (40 முதல் 79 வரை) | **41**(80 முதல் 120 வரை) | **42** (121 முதல் 162 வரை) | **43** (163 முதல் 205 வரை) |
| **1** | **162** | **39** (1 முதல் 39 வரை) | **40** (40 முதல் 79 வரை) | **41** (80 முதல் 120 வரை) | **42** (121 முதல் 162 வரை) |
| **சமயம்** | **பரிணம புஞ்சம்** | **முதல் குரூப்** | **இரண்டாவது குரூப்** | **மூன்றாவது குரூப்** | **நான்காவது குரூப்** |

39 பரிணாமங்கள் மட்டுமே முதல் சமயத்தில் முதல் குரூப்பின் பரிணாமங்களாக இருந்தன என்பது இந்தக் கட்டங்களில் அடைப்புக் குறிகளுக்குள் உள்ள வரம்புகளைப் பார்த்தால் உங்களுக்கே தெரியவரும். அதேபோல 16-வது சமயத்தில் நான்காவது குரூப்பின் 57 எண்ணிக்கைகள் கொண்ட பரிணாமங்கள் வேறு எங்கும் இல்லை என்பதையும் நீங்கள் காணலாம். 40 பரிணாமங்கள் முதல் மற்றும் இரண்டாம் சமயங்களில் சமமாக இருக்கின்றன. 41 பரிணாமங்கள் முதல், இரண்டு மற்றும் மூன்றாவது சமயங்களில் சமமாக இருக்கின்றன. மற்றும் 42 பரிணாமங்கள் முதல், இரண்டு, மூன்று மற்றும் நான்காவது சமயங்களில் சமமாக இருக்கின்றன. பரிணாம எண்ணிக்கைகளின் இந்த சமநிலை நான்கு சமயங்கள்வரை மட்டுமே காணப்படுகின்றன. அதேபோல 48 பரிணாமங்கள் 7-வது, 8-வது, 9-ஆவது,மற்றும் 10-ஆவது சமயங்களில் சமமாக இருக்கின்றன. எத்தனை சமயங்கள்வரை சமமான பரிணாமங்கள் இருக்க முடியுமோ அந்த சமயத்தில் அதை **நிர்வர்கணா கான்டக்-**நிர்வர்கணா துண்டம் என்று சொல்கின்றனர். அது நம் கணக்கில் நான்காக இருக்கிறது. நாம் ஒவ்வொரு சமயப் பரிணாமங்களையும் இத்தனை துண்டுகளாகவே (இத்தனை துண்டங்களாகவே) பிரிக்கிறோம். ஒரே சமயத்தின் இந்த சமமில்லாத வெவ்வேறு குரூப்பின் பரிணாமத் துண்டங்களை (horizontal rows in the table-ஐ) வர்க்கணாகான்டக் என்று சொல்கின்றனர். சம சமயத்தன என்பதையே இந்த வர்க்கணாகான்டக்கள்

காட்டுகின்றன. அப்படி இல்லாமல் வேறுவேறு சமயங்களில் உள்ள சமமான எண்ணிக்கை கொண்ட பரிணாமத் துண்டங்களை (the diagonal with same parinam numbers-ஐ) நிர்வர்கணாகாண்டக் என்று சொல்கின்றனர்.

ஒரு சமயத்தின் வேறுவேறு குரூப்பின் காண்டங்களை குறுக்காக (in one row-வாக) எழுதுகிறோம். இந்த நான்கு கண்டங்களை “திரியக் கச்சா” (சாமான காலப் பிரிவுகள்) என்று சொல்கின்றனர். அதக்கரணத்தின் 16 சமயங்களின் கண்டங்களை ஒன்றின் மேல் ஒன்றாக எழுதுகிறோம், அந்த 16-ஐயும் “ஊர்தவ கச்சா” என்று சொல்கின்றனர்.

மூல கிரந்தங்களை படிக்கும்போது சுலபமாக இருக்கும் என்ற எண்ணத்தில் இந்த புதிய சொற்களை இங்கு நான் கொடுத்திருக்கிறேன். கடந்த ஒன்பது வருடங்களாக நாங்கள் சம்யக்ஞானசந்திரிகாவின் எல்லா பாகங்களையும் மற்றும் அர்த்தசந்துருஷ்டி அதிகாரங்களையும் பலமுறை பயிற்சி செய்தோம். நான் இவைகளைப் பிறருக்கும் கற்றுக்கொடுத்துக் கொண்டு இருக்கிறேன். ஆனாலும் நம் மந்தபுத்தியில் அதன் அர்த்தம் தெளிவு அடைய அதிக சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. அந்த கடுமையான முயற்சி எடுக்க வேண்டியிருப்பதைத் தெரிந்தே நீங்கள் அந்த மூல கிரந்தங்கள் படிப்பதற்கு ஏதுவாக இங்கு பல புதிய சொற்களை சொல்லிக்கொண்டு இருக்கிறேன்.

இந்த அங்க்கசந்துருஷ்டி உதாரணத்தில் ஒரு கண்டத்தில்-துண்டில் 39(1-39) வரை உள்ள பரிணாமங்களின் அதிகபட்ச விசுத்தி வளர்ச்சியை மட்டுமே காணமுடிகிறது. ஆனால் யதார்த்தத்தில் ஒவ்வொரு கண்டத்திலும் பரிணாம விசுத்தி அசங்யாத லோகப்பிரமாண அளவு இருக்கிறது, மற்றும் அவைகள் ஆறு ஸ்தானங்கள் கொண்ட விருத்தியின் அசங்யாத லோகப்பிரமாண ஸ்தானங்கள் கொண்டதாகக் காணப்படுகின்றன. இந்த விஷயத்தை எழுதிப் புரியவைப்பது கடினமாகும், ஆகையால் அதைப்பற்றி இங்கே சர்ச்சை செய்யப்போவதில்லை. உங்களுக்கு ஆர்வமிருந்தால் இப்போது ஞானமார்க்கணையில் இந்த விஷயத்தை விரிவாக கூறியிருக்கிறேன், அந்த ஒலிப்பதிவு கேசட்டை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

கீழ் மற்றும் மேல் சமயங்களின் பரிணாமங்களின் விசுத்தி மற்றும் எண்ணிக்கைகள் சமமாக இருக்க முடியும், இதையே அனுக்ருஷ்டி அமைப்பு(ரசனா) என்று சொல்கின்றனர். இந்த சமம் அனேக வெவ்வேறு உயிர்களின் நோக்கில் சொல்லப்பட்டது என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். ஒரு உயிரின் நோக்கில் ஒவ்வொரு சமய பரிணாம விசுத்தி அனந்தமடங்கு அதிகமாகிக் கொண்டே போகிறது. மேலும் ஒரு உயிரில் ஒவ்வொரு சமயமும் ஒரு பரிணாமமே நிகழ்கிறது. அதப்பிரவர்த்த கரணத்தில் நாம் நான்கு தேவைகள்-கட்டாயம் நிகழ்பவைகளைப் பார்த்தோம். அவைகளாவன-

1. ஒவ்வொரு சமயமும் அனந்த மடங்கு விசுத்தி - உயிரின் ஒரு சமயம் முன்னர் இருந்த விசுத்தியைவிட அடுத்த சமயத்தில் அனந்த மடங்கு விசுத்தி அதிகரிக்கிறது, அதற்கு அடுத்த சமயத்தில் அதைவிட அனந்த மடங்கு விசுத்தி அதிகரிக்கிறது, இவ்வாறு தகுதியான அந்தர்முகூர்த்த காலம்வரை விசுத்தி ஒவ்வொரு சமயமும் அனந்த மடங்கு அதிகரித்துக் கொண்டே போகிறது.

2. ஸ்திதிபந்தாபசரணம் - இதன் ஸ்வருபத்தை நாம் பிராயோக்யலப்தியில் பார்த்தோம். ஆனால் இங்கு வேறு குறையும் பிரமாணத்தில்-அளவில் ஸ்திதி பந்தம் நிகழ்கிறது. இந்த ஸ்திதி பந்தம் குறைந்து கொண்டே போகிறது மேலும் இவ்வாறு ஆயிரக்கணக்கான ஸ்திதிபந்தாபசரணம் நிகழ்கிறது. ஸ்திதி பந்தத்தில் ஒவ்வொரு முறையும் பல்யத்தில் சங்க்யாத்வா பாகம் எவ்வளவோஅவ்வளவு முறை குறைகிறது. இந்த காரணத்தால் அதக்கரண துவக்கத்தில் எவ்வளவு ஸ்திதி பந்தம் நிகழ்ந்ததோ அதில் சங்க்யாத பாக அளவு ஸ்திதி பந்தமே இந்த கரணம் முடியும்போது நிகழ்கிறது. எந்த உயிர் பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெற்று முதலிலேயே ஐந்தாம் குணஸ்தானத்தை அடைகிறதோ அதற்கு இதைவிட சங்யாத பாக அளவு குறைந்த ஸ்திதி பந்தமே நிகழ்கிறது. எந்த உயிர் பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெற்று முதலிலேயே ஏழாம் குணஸ்தானத்தை அடைகிறதோ அதற்கு இதையும்விட சங்க்யாத பாகம் குறைந்த அளவு ஸ்திதி பந்தமே நிகழ்கிறது.

3. புண்ணியப் பிரக்ருதிகளில் அனந்த மடங்கு பலன்தரும் சக்தி அதிகரித்த வண்ணம் நான்கு நிலை-சதுஸ்தானகத் பலன் தரும் சக்தியுடன் பந்தமாகிறது. ஸ்திதி பந்தம் ஏழு கர்மப்பிரக்ருதிகளிலும் குறைகிறது ஆனால் பலன்தரும் சக்தி புண்ணியப் பிரக்ருதிகளில் மட்டும் அதிகமாகிறது, பாப ப்பிரக்ருதிகளில் குறைகிறது. புண்ணியப் பிரக்ருதிகளின் பலன்தரும் நோக்கில் நான்குநிலை பந்தமும் நிகழ்கிறது அது வெல்லம், காண்ட், சர்க்கரை மற்றும் அமிர்தம் பெயர் கொண்ட ஸ்பர்தகங்கள் என்பது உங்களுக்கு நினைவில் இருக்கிறதா? அதப்பிரவர்த்தகரணின் அதிகரிக்கும் விசுத்தியின் காரணத்தால் இங்கு புண்ணியப் பிரக்ருதிகளின் பலன்தரும் சக்தி ஒவ்வொரு சமயமும் அனந்த மடங்கு அதிகரித்த வண்ணம் பந்தமாகிறது, அதில் நான்கு வித ஸ்பர்தகங்களும் காணப்படுகின்றன.

4. பாபப் பிரக்ரதிகளில் அனந்த மடங்கு குறைந்த பலன் கொடுக்கும் பந்தமே நிகழ்கிறது, அதுவும் கூட இரண்டுநிலை-துவிஸ்தானகத் - கொடி மற்றும் மூங்கில் பாக வடிவ பந்தமே நிகழ்கிறது.

அதப்பிரவர்த்தகரணுக்குப் பிறகு அபூர்வகரண பரிணாமம் நிகழ்கிறது. அதைப்பற்றிய சர்ச்சையை நாம் அடுத்த கடிதத்தில் பார்க்கலாம்.

ஜெய் ஜினேந்திரா.

- உங்கள் அம்மா.

## கரணலப்தி-அபூர்வகரணம், அறிவ்விருத்தி கரணம்

கடிதம்-10 24-10-2002

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

முன் கடிதம் பற்றி உங்கள் இருவரின் பின்னூட்டத்தைப் (feedbck-ஐ) படித்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். "அதப்பிரவர்த்தகரணத்தில் அதிகரித்துக்கொண்டே போகும் பரிணாமவிசுத்திக்குச் சமமாக அடுத்தடுத்த கரணங்களில் மேலும் என்னென்ன நிகழும் என்று தெரிந்து கொள்வதில் எங்களுடைய ஆர்வமும் மேலும் அதிகரித்துக் கொண்டே போகிறது, இப்போது அபூர்வகரண சம்பந்த அபூர்வ விஷயங்களை தெரிந்து கொள்ள நாங்கள் ஆர்வத்துடன் காத்துக்கொண்டு இருக்கிறோம்!" என்று நீங்கள் எழுதுயிருந்தீர்கள்.

இது நியாயமானது தான். ஆன்ம நலத்தில் அக்கறை உள்ள உயிர்களுக்கு நான்கு அனுயோகங்களின் பயிற்சியிலும் ருசியும், ஆர்வமும் இருக்கவே செய்கிறது. கரணானுயோகப் பயிற்சியில் மட்டும் ஆர்வமின்மை கூட ஜினவாணியின் மேல் ஆர்வமின்மையையேக் காட்டுகிறது. இந்த **பஞ்சலப்தி** விஷயம் பற்றி நான் இதுவரை இரண்டு முறை தேவலாலியிலும், மேலும் இரண்டு முறை ஜெய்பூரிலுமாக ஆகமொத்தம் நான்கு பயிற்சி முகாம்கள் நடத்தியிருக்கிறேன். பிரம்மசாரி பண்டிட். யஷ்பால்ஜி ஜெயின் மற்றும் பயிற்சி முகாமின் இயக்குனர்கள் மற்றும் அமைப்பாளர்களின் தூண்டுதல்களாலும் மற்றும் மக்களிடம் கரணானுயோகத்தைப் படித்துத் தெரிந்து கொள்வதில் இருக்கும் ஆழ்ந்த ஆர்வத்தாலும் நான் தைரியத்துடன் இந்த வகுப்புகளை எடுக்கத் தயாரானேன்.

"கரணனுயோகத்தின் இவ்வளவு சூட்க்ஷமமான விஷயங்களைத் தெரிந்து கொள்ளாமல்கூட சம்யக்த்துவத்தை அடையமுடியுமென்றால் இதில் ஏன் நாங்கள் ஈடுபட வேண்டும்? திரவ்யானுயோகத்தை மட்டும் பயிற்சி செய்து நாங்கள் சம்யக்த்துவத்தைப் பெற்றுவிட்டுப் போகலாம் அல்லவா?" என்று பலர் மனதில் கேள்வி எழுகிறது.

சம்யக்த்துவத்தைப் பெறுவதே நம்முடைய முதல் கடமையாகும். திரவ்யானுயோகம் என்னவோ அந்த காரியத்தை செய்ய வல்லதுதான். ஆனால் கரணானுயோகத்தின் சூட்ஷம வர்ணனையால் திரவ்யானுயோக சித்தாந்தங்கள் நம்மில் உறுதி படுகின்றன, நம்முடைய அறிவிலும், நம்பிக்கையிலும் அதைப் பெறுவதில் விடாமுயற்சி அதிகமாகிறது. நமக்கு மோக்ஷமார்கத்திலும், மோக்ஷத்திலும் ருசி இருக்கிறது, மற்றும் நம் சுத்தாத்மாவின் மேலும் ருசி இருக்கிறது என்றால் அது சம்பந்தமாக விரிவான எல்லாத் தகவல்களையும் பெறுவதிலும் அவ்வளவு ருசி நம்மிடம் வரவே செய்கிறது.

கிரிக்கெட்டில் ருசி உடையவர்களுக்கு பந்தயத்தில் யார் வெற்றி பெற்றார் என்பதை மட்டும் தெரிந்து கொள்வதோடு அவர்கள் விடுவதில்லை, அவர்களுக்கு முழு ஆட்டத்தையும் பார்ப்பதில்தான் அதிக சுவை இருக்கிறது-அவர்களுக்கு அதில்தான்

ஆர்வம் அதிகம் இருக்கிறது என்பதை முன்னரே நாம் பார்த்தோம். “முழு நாளையும் வீணடிக்க அப்படி என்ன அவசியமிருக்கிறது? நான் பார்க்கவில்லை என்றாலும்கூட வெற்றி-தோல்வி யாருக்குக் கிடைக்க வேண்டுமோ அவர்களே அடையப் போகிறார்கள்” என்ற கேள்வி அவர்களுக்கு எழுவதேயில்லை. ஆனால் கரணானுயோகத்தை படிப்பதில் மட்டும் இந்த கேள்வி எழுகிறது என்றால், அவர்களுக்கு ருசி மோக்ஷத்திலும், தன் சுத்தாத்மாவிலும், மோக்ஷமார்க்கத்திலும் இல்லை, வேறு எங்கோதான் இருக்கிறது என்றுதான் புரிந்து கொள்ள வேண்டும்!

நாம் இன்று அபூர்வகரணம் பற்றி சர்ச்சை செய்யலாம். இங்குகூட பரிணாமங்களின் விசுத்தி ஒவ்வொரு சமயமும் அனந்தமடங்கு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. அந்த காரணத்தால் அபூர்வ-அபூர்வ பரிணாமங்கள் நிகழ்கின்றன. இந்த கரணத்தில் கீழ் சமயத்திலும் மேல் சமயத்திலும் வெவ்வேறு உயிர்களின் பரிணாமத்தில் எந்த உயிரின் பரிணாமமும் வேறு எந்த உயிரின் பரிணாமத்தோடும் எப்போதும் ஒத்துப்போவதில்லை, அதாவது இங்கு அனுக்ருஷ்டி அமைப்பு காணப்படவில்லை. வெவ்வேறு சமயத்தில் இருக்கும் எல்லா உயிர்களின் பரிணாமமும் வெவ்வேறாகவே இருக்கின்றன, ஒரே மாதிரி இருப்பதில்லை. ஆனால் ஒரே சமயத்தில் உள்ள வெவ்வேறு உயிர்களின் பரிணாமம் சமமாக இருக்க முடியும் அல்லது சமமில்லாமலும் இருக்க முடியும்.

ஒரே சமயத்தில் முக்காலத்திலும் அனந்த உயிர்களின் நோக்கில் குறைந்த பட்சத்திலிருந்து அதிகபட்சம் வரை அனேக விதமான விசுத்தி நிலைகள் சாத்தியமாகும். அதப்பிரவர்த்த கரணத்தின் கடைசி சமயத்தில் எத்தனை வெவ்வேறு விதமான பரிணாமங்கள் இருந்ததோ அவைகளில் ஒவ்வொரு பரிணாமத்திலும் அசங்க்யாத லோகப்பிரமான வேறுபாடுகள் உற்பத்தியாகின்றன. இந்த காரணத்தால் அதப்பிரவர்த்த கரணத்தில் அசங்க்யாத லோகப்பிரமாண பரிணாமங்கள் நிகழ்கின்றன,



ஆனால் அபூர்வகரணத்தில் எல்லாப் பரிணாமங்களும் அசங்யாதலோகம் X அசங்யாதலோகம் அளவு பரிணாமங்களாக ஆகின்றன.



முதல் சமயத்தில் பரிணாமங்கள் குறைந்த பட்சத்திலிருந்து அதிக பட்சம் வரை அனேக வெவ்வேறு பரிணாமங்கள் காணப்படுகின்றன, அவைகளில் குறைந்தபட்ச விசுத்தியிலிருந்து அதிகபட்ச விசுத்தி அனந்த மடங்காக இருக்கிறது. முதல் சமய பரிணாமங்களில் இந்த விசுத்தியின் ஒரு எல்லை அல்லது வரம்பு இருக்கிறது. ஆனால் இரண்டாவது சமயத்தின் பரிணாமங்களில் குறைந்த விசுத்தி கூட முதல் சமயத்தின் அதிகபட்ச விசுத்தியைவிட அனந்த மடங்கு அதிகமாக ஆகிறது. அதைவிட அனந்த

மடங்கு இரண்டாவது சமயத்தின் அதிகபட்ச விசுத்தியும் அதிகமாகிறது. இரண்டாவது சமய பரிணாமங்களில் குறைந்த பட்சத்தில் இருந்து அதிக பட்சம் வேறு குறிப்பிட்ட எல்லையாக இருக்கிறது. இரண்டாவது சமய பரிணாமம் முதல் சமய எந்த பரிணாமத்துடனும் சமமாக-அதாவது ஒன்றாக இல்லை, அபூர்வ அபூர்வமாகவே இருக்கின்றன. இவ்வாறு ஒவ்வொரு சமய பரிணாமங்களின் விசுத்தி அனந்த அனந்த மடங்காக ஏறிக்கொண்டே போகிறது.

இதுவரை விசுத்தியைப்பற்றிப் பார்த்தோம். ஒவ்வொரு சமய பரிணாமங்களின் எண்ணிக்கையைப் பற்றிப் பார்க்கும்போது முதல் சமய பரிணாமங்களின் எண்ணிக்கை ஒரு "சய" அளவு அதிகமாகி இரண்டாவது சமயத்தின் பரிணாம எண்ணிக்கையாக ஆகிறது. அதனுடன் ஒரு சய அளவு கூட்டி மூன்றாம் சமய பரிணாமங்களின் எண்ணிக்கையாக ஆகிறது. இவ்வாறு ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு சய அளவு அதிகமாகிக்கொண்டே போகிறது. நாம் இதை அங்க்கசந்துருஷ்டி மூலம் புரிந்துகொள்ள முயற்சிக்கலாம், அதாவது கற்பனை எண்ணிக்கைகள் மூலம் தெரிந்து கொள்ள முயற்சி செய்யலாம். முதல் சமயத்தில் 456 பரிணாமங்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதாவது மிகக்குறைந்த விசுத்தி கொண்ட முதல் பரிணாமம் முதல் அதிகபட்ச விசுத்தி 456 ஆவது பரிணாமம் என வைத்துக் கொள்வோம். அவைகளுக்கு இடையில் மத்திமநிலை பரிணாமங்களாகும்.


இரண்டாவது சமயத்தில் தூய்மைத்தன்மை என்னவோ முன் பரிணாமத்தைவிட அனந்தமடங்கு அதிகமாகிறது, ஆனால் பரிணாமங்களின் எண்ணிக்கை 16 அதிகமாகி 472 பரினாமங்களாக ஆகின்றன. இதன் பொருள் முதல் சமயத்தில் 1 முதல் 456 ஆக இருந்த பரிணாமங்கள் இரண்டாவது சமயத்தில் 457 முதல் 928 வரை மொத்தம் 472 பரிணமங்கள் ஆகின்றன. முதல் சமயத்தின் 456-ஆவது அதிகபட்ச பரிணாமமாகும், அதைவிட இரண்டாம் சமயத்தின் 457-ஆவது குறைந்த பட்ச பரிணாமம் அனந்தமடங்கு விசுத்தி கொண்டதாகும். 457-ஆவது பரிணாமத்தைவிட இரண்டாவது சமயத்தின் 928-வது அதிகபட்ச பரிணாமம் அனந்தமடங்கு விசுத்தி கொண்டதாகும்.

நாம் அதப்பிரவத்தகரணத்தில் முதல் சமயத்தில் 162 பரிணாமங்கள் இருந்ததைப் பார்த்தோம், இரண்டாவது சமயத்தில் 166 பரிணாமங்கள் இருந்தன, ஆனால் அங்கு பரிணாமங்கள் இரண்டும் ஒரே சமயத்தனவாக இருந்தன. 40-ஆவது பரிணாமம் முதல் 162-ஆவது பரிணாமம் வரை இரண்டிலும் (முதல் மற்றும் இரண்டாம் சமயத்தில்) சமமாக இருந்தன. அப்படிப்பட்ட சமநிலை அபூர்வகரணத்தில் காணப்படுவதில்லை.

1-முதல் 456-வது வரையிலான எந்த பரிணாமமும் இரண்டாவது சமயத்தில் இருப்பதில்லை. இரண்டாம் சமயத்தின் எல்லாப் பரிணாமங்களும் ஆபூர்வமானதாகவே இருக்கின்றன-அதாவது முன் எப்போதும் இல்லாததாகவே இருக்கின்றன. முன் சமயத்தில் எந்த உயிரின் பரிணாமமும் அப்படி காணப்படுவதில்லை. இரண்டாவது சமயத்தின் 457 முதல் 928 வரை 472 பரிணாமங்களில் சய 16 அதிகமாகி மூன்றாம் சமயத்தில் 488 பரிணாமங்கள் இருக்கின்றன அவை 929 முதல் 1416 வரை இருக்கின்றன.

இவைகளையும் கூட கட்டங்கள் மற்றும் படம் மூலமும் தெரிந்து கொள்வோம். அபூர்வகரணத்தின் காலம் ஒரு அந்தர்முகூர்த்தம் என்று முன்னரே நாம் பார்த்தோம், ஆனால் அது அதப்பிரவர்த்தகரணத்தின் அந்தர்முகூர்த்த காலத்தில் சங்க்யாத்வா பாக அளவாக இருக்கிறது. நாம் அதில் பாதி அதாவது 8 சமயங்கள் என்றும் அபூர்வகரணத்தின் எல்லா பரிணாமமும் 4096 என்றும் எடுத்துக் கொள்வோம். ஒவ்வொரு சமயமும் குறைந்த பட்சத்திலிருந்து அதிக பட்சம்வரை எத்தனை பரிணாமங்கள் இருக்கின்றதோ அதை கட்டம் மற்றும் படம் மூலம் பார்த்தால் நமக்கு சுலபமாகப் புரியவரும்.

| | | | |
|---|---|---|---|
| 8 | 568 | 3529 | 4096 |
| 7 | 552 | 2977 | 3528 |
| 6 | 536 | 2441 | 2976 |
| 5 | 520 | 1921 | 2440 |
| 4 | 504 | 1497 | 1920 |
| 3 | 488 | 929 | 1416 |
| 2 | 472 | 457 | 928 |
| 1 | 456 | 1 | 456 |
| சமயம் | மொத்த பரிணாமம் | குறைந்த பட்ச விசுத்தி | அதிக பட்ச விசுத்தி |




ஒவ்வொரு சமயத் தூய்மைத் தன்மை அடுத்த பக்கத்தில் கட்டத்தில் காட்டியபடி இருக்கிறது. கட்டத்திலும் படத்திலும் காட்டியுள்ளபடி குறிப்பிட்ட சமயத்தின் குறைந்தபட்ச விசுத்தியிலிருந்து அதே சமயத்தின் அதிகபட்ச விசுத்தி அனந்த மடங்காகும். அந்த அதிகபட்ச விசுத்தியிலிருந்து அடுத்த சமய குறைந்தபட்ச விசுத்தி அதைவிட அனந்த மடங்காகும். இதை **பாம்பின் இயக்கம்** போல என்று சொல்கின்றனர்.

இப்போது எந்த நான்கு அவசியங்கள் நிகழ்கின்றதோ அவைகளின் ஸ்வருபத்தைப் இப்போது பார்க்கலாம். அதப்பிரவர்த்தகரணத்தில் சொல்லப்பட்ட நான்கு அவசியங்களும்கூட இங்கும் நிகழ்கின்றன என்பதை நினைவில் கொள்ளவும். அதனுடன் இங்கு மேலும் எந்த நான்கு அவசியங்கள் நிகழ்கின்றன என்று இப்போது பார்க்கலாம். அவைகளின் பெயர்களை நாம் முன்னரே பார்த்திருக்கிறோம், அவைகளாவன - குணஸ்ரேணி, குணசங்கிரமணம், ஸ்திதிகாண்டக்காதம் (ஸ்திதி குறைதல்), அனுபாக காண்டக்காதம் (பலன்தரும் சக்தி குறைதல்) என்பனவாகும். அதப்பிரவர்த்தகரணத்திற்கு சமமாக ஸ்திதிபந்தாபசரணும் இந்த கரணத்திலும் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கிறது.


**1.குணஸ்ரேணி:-** ஸ்ரேணி என்றால் வரிசை, நிஷேகங்களின் வரிசைகள் என்று பொருள். கர்மங்களின் நிஷேக அமைப்பில் நாம் படங்கள் மூலம் ஒவ்வொரு சமயத்தின் ஒவ்வொரு நிஷேகங்களை ஒரு குறுக்குக்கோடு மூலம் காட்டப்படுவதைப் பார்த்தோம். நிகழ்காலத்தில் உதயத்திற்கு வரும் நிஷேகத்தை எல்லாவற்றிற்கும் கீழே ஒரு குறுக்குக்கோடு மூலம் காட்டப்படுவதைப் பார்த்தோம். அதற்கு மேல் இரண்டாவது முதலான சமங்களின் நிஷேகங்களை வேறுவேறு தனித்தனி குறுக்குக்கோடுகளை ஒன்றின்மேல் ஒன்று போட்டு காண்பிக்கப்பட்டன.

அதில் நிகழ்கால சமயத்திலிருந்து ஒரு ஆவளி காலம்வரை உள்ள நிஷேகங்களை **உதயாவளி** என்று சொல்கின்றனர். அதற்குமேல் உள்ள நிஷேகங்களை **உபரிதன் ஸ்திதி** என்று சொல்கின்றனர். பரிணாமங்களின் தூய்மையின் நிமித்தத்தால் கர்மங்களின் சத்தாவில் அபகர்ஷணம் நிகழ்கிறது, அதாவது அவைகளின் ஸதிதி குறைகிறது. மேல் உள்ள நிஷேகங்களின் பரமாணுக்களின் ஸ்திதி குறைவதால் அவைகள் கீழே உள்ள நிஷேகங்களுடன் வந்து சேர்ந்து கொள்கின்றன. இங்கு மேலே கீழே என்று சொல்லப்படுவதெல்லாம் நாம் புரிந்து கொள்வதற்காக மட்டுமே சொல்லப்படுகிறது. கர்ம பரமாணுக்கள் உண்ணமயில் வரிசையில் அவ்வாறு நிற்பதில்லை.

அபகர்ஷணமாகும் பரமாணுக்கள் எந்தக் குறிப்பிட்ட வரிசைப் படுத்தப்பட்ட நிஷேகங்களில் அதிக எண்ணிக்கையில் வந்து சேருகின்றதோ அத்தனை நிஷேகங்கள் கொண்ட **குணஸ்ரேணி அமைப்பு** உருவாகிறது. ஒரு சமயத்தில் எத்தனை பரமாணுக்கள் குணஸ்ரேணியை வந்தடைகிறதோ அவைகள் எவ்வாறு பகிர்ந்து அளிக்கப்படுகின்றன என்பதைப் பார்க்கலாம். எல்லாவற்றையும்விட கீழே உள்ள நிஷேகத்தில் எவ்வளவு பரமாணுக்கள்(திரவ்யம்) கொடுக்கப்படுகிறதோ அதைவிட அசங்க்யாத மடங்கு இரண்டவது நிஷேகத்திற்குக் கொடுக்கப் படுகிறது. அதைவிட அசங்யாத மடங்கு மூன்றாவது நிஷேகத்திற்கு என குணஸ்ரேணியில் உள்ள அசங்யாத நிஷேகங்களுக்கும் அசங்க்யாத மடங்கு கிரமமாகக் கொடுக்கப் படுகின்றன.

குணஸ்ரேணி அமைப்பு துவங்கும் முன்னரேயே அந்த நிஷேகங்களில் கர்ம பரமாணுக்கள் இருந்தன, இப்போது அவைகளுடன் இவ்வளவு பரமாணுக்களும் வந்து சேருகின்றன, அவைகளும் பழைய பரமாணுக்களுடன் சேர்ந்து தகுதியான காலத்தில் உதயத்திற்கு வருகின்றன. ஒரு சமயத்தில் 85 பரமாணுக்கள் அபகர்ஷண் அடைந்து

குணஸ்ரேணி நிஷேகங்களில் பிரித்துக் கொடுக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். அவைகள் முதல் நிஷேகத்தில் 1, இரண்டாவதில் 4, மூன்றாவதில் 16, நான்காவதில் 64 என பிரித்துக் கொடுக்கப் படுகின்றன. இங்கு நாம் குணஸ்ரேணி நிஷேகங்களின் எண்ணிக்கையை 4 என்று வைத்துக் கொண்டுள்ளோம், அசங்யாத எண்ணிக்கையையும் 4 என்று வைத்துக் கொண்டுள்ளோம். இது ஒரு சமயத்தில் நடக்கும் காரியமாகும்.





இரண்டாவது சமயத்தில் அதைவிட அசங்க்யாத மடங்கு பரமாணுக்கள் அபகர்ஷண மாகின்றன. அதாவது 85X4=340 பரமாணுக்கள் குணஸ்ரேணி நிஷேகங்களில் பிரித்தளிக்கப் படுகின்றன. முதல் நிஷேகத்தில் 4, இரண்டாவதில் 16, மூன்றாவதில் 64, நான்காவதில் 256 என பிரித்துக் கொடுக்கப் படுகின்றன.

இதேபோல ஒவ்வொரு சமயமும் அசங்க்யாத மடங்கு கிரமமாக பரமாணுக்கள் அபகர்ஷனமடைந்து குணஸ்ரேணி நிஷேகங்களுடன் வந்து சேர்கின்றன. எப்போது அந்த நிஷேகங்கள் உதயத்திற்கு வருமோ அப்போது அசங்க்யாத மடங்கு சமயப்பிரபத்த நிர்ஜரை நிகழ்கிறது, இதையே **குணஸ்ரேணி நிர்ஜரை** என்று சொல்கின்றனர்.

ஆயுள் கர்மத்தைத் தவிர மற்ற ஏழு கர்மங்களில் இந்த குணஸ்ரேணி அமைப்பு உண்டாகிறது. இந்த குணஸ்ரேணி அமைப்பு உதயாவளிக்கு மேல் உள்ள நிஷேகங்களில் நிகழ்கிறது. “எத்தனை நிஷேகங்களில் - எத்தனை சமயங்கள் கொண்ட நிஷேகங்களில் இந்த குணஸ்ரேணி நிகழ்கிறது?” என்று நீங்கள் கேட்க்கக்கூடும். இதற்கு பதில் குணஸ்ரேணியின் ஆயாம் அதாவது நிஷேகங்களின் எண்ணிக்கை சமயங்களில் சொல்லப் படுகிறது. அபூர்வகரணம் மற்றும் அநிவ்விருத்திகரணம் இரண்டும் சேர்ந்த அந்தர்முகூர்த்த காலம் எவ்வளவோ அதைவிட கொஞ்சம் அதிகமாகும். அதில் எவ்வளவு சமயங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு சமயங்களில் - அதாவது அத்தனை நிஷேகங்களில் இந்த குணஸ்ரேணி அமைப்பு நிகழ்கிறது. கொஞ்சம் அதிகம் என்று சொல்லப்படும் கால அளவு எவ்வளவோஅதை **குணஸ்ரேணி சிர்ஷ்** என்று சொல்கின்றனர்.

அபகர்ஷணமாகும் திரவியம் (பரமாணுக்கள்) குணஸ்ரேணிக்கு மேல் உள்ள மற்ற நிஷேகங்களில் கூட பகிர்ந்தளிக்கப் படுகிறது, அந்த நிஷேகங்களை **உபரிதன் ஸ்திதி** என்று சொல்கின்றனர். ஆனால் இங்கு குறைந்து கொண்டே போகும் அளவில் பகிர்ந்தளிக்கப் படுகிறது. இதை ஒரு படத்தின் மூலம் புரியவைக்கின்றனர்.




ஒவ்வொரு சமயமும் எவ்வளவு பரமாணுக்கள் அபகர்ஷணமடைந்து கீழே வருகின்றன என்பதற்கும் கணக்கு இருக்கிறது. இங்கு நான் எழுதுகிறேன், உங்களுக்குப் புரிந்தால் சரி, புரியவில்லை என்றால் கலவைப்பட வேண்டாம், நேராகப் பார்க்கும்போது புரிய வைக்கிறேன். எல்லா நிஷேகங்களிலும் மொத்த பரமாணுக்களின் எண்ணிக்கையை குறிப்பிட்ட எண்ணிக்கையால் வகுக்க வேண்டும், இதை **அபகர்ஷண பாகஹார்** என்று சொல்கின்றனர். வகுத்த பிறகு வரும் எண்ணிக்கை அளவு பரமாணுக்கள் அபகர்ஷணம் அடைந்து கீழ் இருக்கும் நிஷேகங்களுடன் அதாவது உதயாவளியில், குணஸ்ரேணியில் மற்றும் உபரிதன் ஸ்திதியில் உள்ள நிஷேகங்களுக்குள் பிரித்துக் கொடுக்கப் படுகின்றன. எங்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதையும் பார்க்கலாம். அபகர்ஷண பாகஹார் எண்ணிக்கையை பல்யத்தின் அசங்க்யாத்வா பாகத்தால் வகுத்து வரும் எண்ணிக்கையில் பெரும்பகுதியை உபரிதன் ஸ்திதியில் உள்ள நிஷேகங்களில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆனால் அங்கு அந்த்த கோடாகோடி (ஒரு கோடாகோடிக்கும் சற்று குறைந்த) கடல் அளவு எண்ணிக்கை கொண்ட நிஷேகங்கள் இருப்பதால் ஒவ்வொரு நிஷேகத்திற்கும் கொஞ்ச திரவியமே கொடுக்கப் படுகிறது. இங்கு மிக உயரத்தில் இருக்கும் ஒரு ஆவளி அளவு கொண்ட நிஷேகங்களில் அபர்ஷணமாகும் திரவியம் கொடுக்கப் படுவதில்லை, அந்த நிஷேகங்களை **அதிஸ்தாபனாவளி** என்று சொல்கின்றனர்.

குணஸ்ரேணி மற்றும் உதயாவளியில் அபகர்ஷண பாகஹாரில் மீதமுள்ள ஒரு பாக திரவியம் கொடுக்கப்படுகிறது. அந்த ஒரு பாகத்தை அசங்க்யாத லோக அளவால் வகுக்க வரும் எண்ணிக்கையில் அதிக பங்கு குணஸ்ரேணியில் உள்ள கீழிருந்து மேலாக உள்ள நிஷேகங்களுக்கு அசங்க்யாத மடங்கு கிரமமாக பகிர்ந்தளிக்கப்படுகிறது, மிச்ச ஒரு பாகத்தை உதயாவளியில் உள்ள நிஷேகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு சமயத்திலும் இவ்வாறு அபகர்ஷணம் நிகழ்கிறது. குணஸ்ரேணியில் ஒவ்வொரு சமயமும் அசங்க்யாத மடங்கு திரவியம் கொடுக்கப்படுகிறது. இந்த குணஸ்ரேணி நிகழ்வு ஏழு கர்மங்களிலும் நிகழ்கிறது, ஆயுள் கர்மத்தில் ஒரு சமயத்தில் ஒரு நிஷேகமே விழுகிறது, அதில் குணஸ்ரேணி நிகழ்வு காணப்படவில்லை.

அபகர்ஷணம் மூலம் ஸ்திதி குறைகிறது அதனுடன் பாப கர்மங்களின் பலன்தரும் சக்தி ஒவ்வொரு சமயமும் அனந்த மடங்கு குறைந்து குறைந்து உதயத்திற்கு வருகிறது. குணஸ்ரேணியில் உள்ள நிஷேகங்கள் உதயாவளி காலம் கழிந்த பிறகு அவை உதயாவளியில் வந்து உதயமாகும்போது ஒவ்வொரு சமயமும் அசங்க்யாத சமயப்பிரபத்த

நிர்ஜரை ஆகிறது, அசங்க்யாத மடங்கு நிர்ஜரை ஆகிறது. இதை குணஸ்ரேணி நிர்ஜரை என்று சொல்கின்றனர்.

இதனால் சஹடாலாவில்-

**கோடி ஜென்ம தப தபெளன், ஞான் பின் கர்ம ஜரெளம் ஜெ |**
**ஞானி கே சின்மாங்ஹி திரிகுப்தி தெளம் சஹஜ டரெளன் தெ ||**

என்று கூறப்பட்டிருக்கிறது.

ஞானிக்கு ஒரு சமயத்தில் எவ்வளவு கர்மம் நிர்ஜரையாகிறதோ அவ்வளவு நிர்ஜரை அஞ்ஞானிக்கு கோடி பவங்கள் தபம் செய்தாலும் ஆவதில்லை. ஏனென்றால் சுப பரிணாமம் செய்வதால் அதாவது சுத்தோபயோகம் இல்லாமல் விரதம் தபம் செய்வதால் குணஸ்ரேணி நிர்ஜரை நிகழ்வதில்லை, அங்கு ஒரு சமயப்பிரபத்த அளவு நிர்ஜரையே நிகழ்கிறது, மேலும் அங்கு புதிய பந்தமும் நிகழ்கிறது. அஞ்ஞானிகளுக்கு சம்வரை நிகழ்வது காணப்படவில்லை. ஞானி உயிர்களிடம் சில பிரக்ருதிகளின் பந்த வியுச்சுத்தி நிகழ்வதால் சம்வரை நிகழ்கிறது மற்றும் முன்னர் கட்டிக்கொண்ட கர்மம் அதிக அளவில் விழுவதால் கர்ம நிர்ஜரையுமாகிறது.

**இப்போது அபூர்வகரணம்தான் நிகழ்கிறது, இதுவரை சம்யக்த்துவம் அடையப்படவில்லை, அதற்கு முன்னரேயே குணஸ்ரேணி நிர்ஜரை எப்படி நிகழ முடியும்?** என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு சமாதானம் என்னவென்றால், கரண பரிணாமத்தில் ஞானோபயோகம் நிஜசுத்தாத்மாவை எதிர்கொள்ளுவதிலேயே திகழ்கிறது, ஆனால் உணர்வில் இப்போதும் மித்யாத்துவம் இருக்கிறது, ஏனென்றால் அநிவ்விருத்திகரணத்தின் கடைசி சமயம்வரை மித்யாத்துவத்தின் உதயம் இருக்கிறது. மிகவும் மந்தமடைந்த நிலையில் அதாவது பலன்தரும் சக்தி அனந்த மடங்கு குறைந்து குறைந்தே அதாவது ஒவ்வொரு சமயமும் அனந்த மடங்கு குறைந்த அளவிலேயே மித்யாத்துவம் உதயத்திற்கு வருகிறது. இந்த உயிர் இந்த கரண பரிணாமத்திற்கு அடுத்த சமயத்தில் விதிப்படி-கட்டாயமாக சம்யக்துவத்தைப் பெறுகிறது. ஆகையால் சுத்தோபயோகத்தின் பலன் இங்கு குணஸ்ரேணி நிர்ஜரை நிகழ்கிறது. குணஸ்ரேணி மூலம் அசங்க்யாத மடங்கு பரமாணுக்கள் உதயத்திற்கு வருகின்றன, ஆகையால் மித்யாத்துவ கர்மத்தின் பரமாணுக்களும் அதிகமாக உதயமாவதால் மித்யாத்துவமும் இங்கு அதிகமாக வேண்டுமல்லவா? என்ற கேள்வி சிலருக்குத் தோன்றலாம்.

அப்படி ஆவதில்லை. பரமாணுக்களின் எண்ணிக்கையைச் சார்ந்து அந்த கர்மத்தின் பலன் இருப்பதில்லை, அதன் பலன்தரும் சக்தியின் உதயத்தை வைத்தே பலன் கிடைக்கிறது, அதாவது அவை உயிரினுடைய பரிணாமத்தின் நிமித்தத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளன. இங்கு பரமாணுக்களின் எண்ணிக்கை அதாவது பிரதேச உதயம் அதிகமானாலும்கூட பலன்தரும் சக்தியின் உதயம் மந்தமாவதால் உயிரின் மித்யாத்துவ பரிணாமமும்கூட மந்தம் மந்ததர நிலையை அடைந்தே உதயமாகின்றன. மற்ற பாப கர்மங்களின் பலன்கூட குணஸ்ரேணியின் மூலம் இவ்வாறே நிகழ்கின்றன என்று புரிந்து கொள்ள வேண்டும்.

இப்போது நாம் தர்சனமோஹத்தை தணிவு-உபசமம் செய்யும் உயிரைப் பற்றிப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். தர்சனமோகத்தை அழிக்கும் கரணத்தை செய்பவர்களிடமும் மற்றும் ஸ்ரேணி ஏறும் உயிர்களிடம்கூட கரண பரிணாமங்கள் நிகழ்கின்றன. அங்கு நிகழும் குணஸ்ரேணி நிர்ஜரை இங்கு நிகழும் குணஸ்ரேணி நிர்ஜரையைவிட அசங்க்யாத மடங்கு அதிகமாக இருக்கும். இதன் பொருள் மேல் குணஸ்தானங்களில் நிர்ஜரையாகும் பரமாணுக்களின் எண்ணிக்கை அசங்க்யாத மடங்கு அதிகமாக இருக்கிறது. இப்போது குணசங்க்ரமணத்தின் ஸவரூபத்தைப் பார்க்கலாம். இங்கு நிகழும் அபூர்வகரணத்தில் குணசங்கிரமணம் நிகழ்வதில்லை, உபசம சம்யக்த்துவ காலத்தில் நிகழ்கிறது. ஆனால் ஸ்ரேணி ஏறும்போதும் மற்றும் வேறு இடங்களில் நிகழும் அபூர்வகரணத்திலும் குணசங்க்ரமணம் நிகழ்கிறது. ஆகையால் அதன் ஸ்வரூபத்தையும் நாம் இப்போது பார்க்கலாம்.

**குணசங்க்ரமணம்**: இதனுடைய வரையறை இவ்வாறு இருக்கிறது-**எந்த பாபப் பிரக்ருதி பந்தமாகவில்லையோ அந்த பிரக்ருதிகளின் திரவியம்(பரமாணு) தன் இயல்பை விட்டுவிட்டு ஒவ்வொரு சமயமும் அசங்க்யாத மடங்கு வரிசையாக, அந்த சமயத்தில் பந்தமாகும் ஸ்வஜாதி பிரக்ருதியில் வந்து தொற்றிக்கொண்டு அந்த பிரக்ருதியின் இயல்பாகவே தன்னை மாற்றிக் கொள்கிறது, இந்த விதிமுறை மாற்றத்தையே குணசங்க்ரமணம் என்று சொல்கின்றனர்.**

இவ்வாறு ஒவ்வொரு சமயமும் அசங்க்யாத மடங்கு வரிசையாக, ஸ்வஜாதி பிரக்ருதியில் வந்து தொற்றிக்கொள்வதையே குணசங்க்ரமணம் என்று சொல்கின்றனர். இதுபோன்ற குணசங்க்ரமணம் ஸ்ரேணி ஏறும்போது அபூர்வகரண, அநிவ்ருத்திகரண குணஸ்தானத்தில் நிகழ்கிறது. அங்கு அசாதாவேதனீய பிரக்ருதி சாதாவேதனீய பிரக்ருதியில் தொற்றிக்கொள்ளுதல் நிகழ்கிறது. அதேபோல அனந்தானுபந்தியில் விசம்யோஜனம் நிகழும்போது எல்லா பரமாணுக்களும் குணசங்க்ரமண விதானத்தின் மூலம் அபிரத்யாக்யானாவரணம், பிரத்யாக்யானாவரணம் மற்றும் சஞ்சுவலன பிரக்ருதி வடிவில் மாற்றமடைந்து விடுகின்றன. அங்குகூட கரணபரிணாமத்தின் மூலம் இந்த குணசங்க்ரமணம் நிகழ்கிறது.

உயிர் எப்போது க்ஷயோபசம சம்யக்த்துவத்திலிருந்து க்ஷாயிக சம்யக்த்துவத்தை அடைகிறதோ அப்போது முதலில் இந்த மூன்று கரணங்கள் மூலம் அனந்தானுபந்தியை விசம்யோஜனம் செய்கிறது, அந்த காரணத்தால் சத்தாவில் இருக்கும் அனந்தானுபந்தியின் எல்லாப் பரமாணுக்களும் மற்ற மூன்று கஷாய வடிவில் சங்க்கரமித்து விடுகின்றன. அதற்குப் பிறகு அந்தர்முகூர்த்த காலம் உயிர் ஓய்வு எடுத்துவிட்டு மீண்டும் மூன்று கரணங்களில் ஏறி முதலில் மித்யாத்வத்தின் எல்லா பரமாணுக்களையும் அதற்குப்பிறகு மீண்டும் இரண்டாவதாக மூன்று கரணங்கள் மூலம் சம்யக்மித்யாத்துவ எல்லா பரமாணுக்களையும் சம்யக் பிரக்ருதி வடிவமாக சங்க்கரமித்து அந்த இரண்டு பிரக்ருதிகளையும் முழுவதுமாக இல்லாமல் அழிக்கிறது. இங்குகூட குணசங்க்ரமணம் மூலமே இந்த காரியம் நிகழ்கிறது.

பார்த்தீர்களா, இங்கே சங்க்ரமணம் என்று சொல்லவில்லை ஆனால் குணசங்க்ரமணம் என்று கூறப்படுகிறது. சங்கிரமணம் என்னவோ க்ஷயோபசம சம்யக்த்துவ காலத்திலும்கூட நிகழ்கிறது, அங்குகூட மித்யாத்துவ மற்றும் சம்யக்மித்யாத்துவ பரமாணுக்கள் சம்யக்பிரக்ருதி வடிவமடைந்து அந்த வடிவில் உதயத்தில் வந்துகொண்டு இருக்கின்றன. ஆனால் அங்கு சங்க்ரமணம் அடையும் பரமாணுக்களின் எண்ணிக்கை அல்பமாக-கொஞ்சமாக இருக்கிறது.

பிரமோபசம சம்யக்த்துவ கால ஆரம்பத்தில் விசுத்தி அனந்த மடங்கு விருத்தியாகிறது அதாவது ஏற்றமடைகிறது. அந்த காலத்திற்குப் பிறகு விசுத்தி மந்தமடைவதால் குறைந்த பரமாணுக்களே சங்க்ரமணத்தை அடைகின்றன, அதை **வித்யாத சங்க்ரமணம்** என்று சொல்கின்றனர். க்ஷயோபசம சம்யக்த்துவத்தில் வித்யாத சங்கிரமணமே நிகழ்கிறது.

ஒரு சமயத்தில் எத்தனை பரமாணுக்கள் சங்க்ரமணம் அடைகிறதோ அதன் எண்ணிக்கை எவ்வளவு என்று பார்க்க எல்லாப் பரமாணுக்களின் எண்ணிக்கையை குறிப்பிட்ட எண்ணிக்கையால் வகுக்கப்படுகிறது. எப்போது 'குணசங்க்ரமண பாகஹார்' எண்ணிக்கையால் வகுக்க எந்த எண்ணிக்கை வருகிறதோ அந்த அளவு பரமாணுக்கள் சங்க்ரமணமாகும்போது, அதை குணசங்க்ரமணம் என்று சொல்கின்றனர்.

எப்போது வித்யாத சங்கிரமண பாகஹார் எண்ணிக்கையால் வகுத்தால் எந்த எண்ணிக்கை வருகிறதோ அந்த அளவு பரமாணுக்கள் சங்க்ரமணமாகும்போது, அதை வித்யாத சங்கிரமணம் என்று சொல்கின்றனர். இவ்வாறே வெவ்வெறு பாகஹார் எண்ணிக்கையால் வகுக்கும் காரணத்தால் வெவ்வேறு ஐந்து விதமான சங்க்ரமணங்கள் சாந்தியாமாகின்றன. ஆனால் அந்த விஷயம் இங்கு நோக்கத்தில் கொள்ளவில்லை. அதைப்பற்றி கர்மகாண்டத்தில் **ஐந்து பாகஹார் இணைப்பு** என்ற அதிகாரத்தில் விரிவான வர்ணனை இருக்கிறது. இவ்வாறு குணசங்க்ரமணத்தில் ஒவ்வொரு சமயமும் அசங்க்யாத மடங்கு-அசங்க்யாத மடங்கு பரமாணுக்கள் சங்க்ரமிக்கின்றன. அபூர்வகரணத்தின் நான்கு அவசியங்களில் ஸ்திதிகாண்டக்காதம் மற்றும் அனுபாக்காண்டக்காதம் கூட நிகழ்கிறது. அவைகளைப்பற்றி இப்போது பார்க்கலாம்.

**ஸ்திதிகாண்டக்காதம்**: சத்தாவில் இருக்கும் கர்மங்களின் ஸதிதி அதாவது ஸ்திதிசத்தா துண்டாகிக் குறைதல் ஸ்திதிகாண்டக்காதம் என்று சொல்லப்படுகிறது. காண்டக் என்பதன் பொருள் துண்டாதல்-அனேக நிஷேகங்களின் சமூகத்தை காண்டக் என்று சொல்கின்றனர். ஒரு காண்டக்கில்-துண்டில் எந்த பல சமயங்களின் நிஷேகங்கள் இருக்கின்றனவோ அவைகள் இல்லாமல்போய் அவைகளிலிருந்த எல்லாப் பரமாணுக்களும் ஒரு அந்தர்முகூர்த்த காலத்தில் கீழே உள்ள நிஷேகங்களுடன் வந்து சேர்ந்து விடுகின்றன. பிராயோக்யலப்தி அதிகாரத்தில் நாம் இதன் ஸ்வரூபத்தைப் பார்த்தோம். ஆனால் பிராயோக்யலப்தியில் ஸ்திதிகாண்டக்காதம் ஆனாலும்கூட சம்யக்த்துவம் உண்டாகும் என்ற நியமம் இல்லை, அதாவது சம்யக்த்துவம் உண்டாக வேண்டும் என்ற அவசியமில்லை.

அதப்பிரவர்தகரணத்தின் முதல் சமயத்திலிருந்தே ஸ்திதிபந்தாபசரணம் நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது என்று பார்த்தோம், அந்த காரணத்தால் புதிதாக நிகழும் பந்தம் குறைந்த ஸ்திதி கொண்டதாக பந்தமாகிறது, அதுவும் ஒவ்வொரு அந்தர்முகூர்த்தத்தில் குறைந்து கொண்டே பந்தமாகிறது. அபூர்வகரணத்தில் ஸ்திதிபந்தாபசரணம் என்னவோ நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது, அதனுடன் ஆயிரக்கணக்கான ஸ்திதிகாண்டக்காதம் மூலம் ஸ்திதிசத்தாவும் குறைந்து கொண்டே போகிறது.

ஸ்திதிபந்தம் என்றால் புதிதாக பந்தமாகும் கர்மங்களின் ஸ்திதி மற்றும் ஸ்திதிசத்தா என்றால் முன்னர் பந்தமாகி உயிருடன் ஏற்கனவே பந்த நிலையில் இருக்கும் கர்மங்களின் ஸ்திதி என்று புரிந்து கொள்ளவேண்டும். இதில்தான் பல ஆயிரக்கணக்காண ஸ்திதிகாண்டக்காதங்கள் நிகழ்கின்றன. இந்த கர்மத் துண்டுகளின் அளவு சிறியாகவோ, பெரியதாகவோ அல்லது நடுத்தரமாகவோ இருக்கமுடியும். இந்த அளவு ஸ்திதிசத்தாவைப் பொருத்து இருக்கிறது.

வெவ்வேறு உயிர்களில் ஸ்திதிசத்தா வெவ்வேறாக இருக்கிறது. சிலருக்கு குறைந்த ஸ்திதிசத்தா அந்த கோடாகோடி பல்யங்களில் இருக்கும், வேறு சிலருக்கு அதிக ஸ்திதிசத்தா அந்த கோடாகோடி கடற்காலத்தில் இருக்கும். இடைப்பட்ட ஸ்திதிகள் அசங்க்யாத வெவ்வேறு சத்தாக்கள் கொண்டதாக இருக்கமுடியும். ஆகையால் ஸ்திதி சத்தாவை அனுசரித்து துண்டுகளின் அளவு சிறியதாகவோ, நடுத்தரமானதாகவோ அல்லது பெரியதாகவோ அமைகின்றன.

எவ்வளவு நிஷேகங்கள் இல்லாமல் போகிறதோ அதையே காண்டகம் - துண்டு என்று சொல்கின்றனர், மற்றும் அதை அத்தனை சமயங்களின் காண்டக ஆயாம் என்று அதாவது அத்தனை சமயங்கள் கொண்டத் துண்டின் உயரம் என்று சொல்கின்றனர். குறைந்த ஸ்திதிகாண்டக ஆயாம் பல்லியத்தின் சங்க்யாத்வாபாக அளவாகும். அதிக ஸ்திதிகாண்டக ஆயாம் பிரதக்த்துவசாகர் அதாவது 7-8 சாகர் அளவு கொண்டதாக இருக்கும். ஒரு ஸ்திதிகாண்டக்காதம் ஆனதும் அந்த அவ்வளவு ஸ்திதி குறைகிறது.

ஒருமுறை ஸ்திதிகாண்டக்காதம் நிகழ ஒரு தகுதியான அந்தர்முகூர்த்த காலம் ஆகிறது. ஏனென்றால் ஒவ்வொரு சமயமும் கொஞ்சம் பரமாணுக்கள் அபகர்ஷித்தாகி (got sliced into verticl pieces) நெடுக்குத் துண்டுகளாகப் பிளந்து கீழ் உள்ள நிஷேகங்களுடன் வந்து சேர்கின்றன, ஒரு அந்தர்முகூர்த்த காலத்தில் அந்த துண்டின் எல்லாப் பகுதியும் அதாவது அதில் இருந்த எல்லா நிஷேகங்களின் பரமாணுக்களும் கீழே வர அந்தத்துண்டு காணாமல் போகிறது. இந்த காலத்தை **ஸ்திதிகாண்டகோத்கரண காலம்** என்று சொல்கின்றனர்.

இங்கே இந்த எல்லா பரமாணுக்களும் இன்னும் சத்தாவில்தான் இருக்கின்றன என்பதை கவனத்தில் கொள்ளுங்கள், மேல் நிஷேகங்களிலிருந்து கீழே உள்ள நிஷேகங்களுக்கு வருகின்றன. ஆகையால் கீழே உள்ள நிஷேகங்களில் பரமாணுக்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போகிறது. ஸ்திதிகாண்டக்காத்துடன் இங்கு ஸ்திதிபந்தாபசரணம் மற்றும் அனுபாகபந்தாபசரணம் இரண்டும் நிகழ்கிறது என்று நாம்

பார்த்தோம். ஸ்திதிபந்தம் குறையும் அந்த அந்தர்முகூர்த்தகாலம்வரை சமமான ஸ்திதிபந்தமே நிகழ்கிறது, இந்த அந்தர்முகூர்த்த காலத்தை **ஸ்திதிபந்தாபசரண காலம்** என்று சொல்கின்றனர். ஸ்திதிகாண்டகோத்கரண காலம் மற்றும் ஸ்திதிபந்தாபசரண காலம் இரண்டும் சமமான அந்தர்முகூர்த்த காலங்களாகும். அனுபாககாண்டகோத்கரண காலம் அதைவிட அல்பமானதாகும்-மிகக்குறைந்த காலமாகும். ஒரு ஸ்திதிகாண்டகோத்கரண காலத்தில் சங்க்யாத ஆயிரம்முறை அனுபாககாண்டக்காதம் நிகழ்கிறது. அதன் ஸ்வரூபத்தை இப்போது பார்க்கலாம்.

**அனுபாககாண்டக்காதம்:** ஒவ்வொரு அந்தர்முகூர்த்தத்திலும் ஒவ்வொரு அனுபாககாண்டக்காதம் நிகழ்கிறது, அந்த அந்தர்முகூர்த்த காலத்தை **அனுபாககாண்டோத்கரண காலம்** என்று சொல்கின்றனர். அனுபாககாண்டம் மூலம் பாபப் பிரக்ருதிகளின் பலன்தரும் சக்தி குறைகிறது.

முன்னர் நாம் ஸ்பர்தகங்களின் ஸ்வரூபம் பற்றி பார்த்திருக்கிறோம். ஒவ்வொரு பிரக்ருதியிலும் அனந்த ஸ்பர்தகங்கள் காணப்படுகின்றன. பாபப் பிரக்ருதிகளின் அனந்த ஸ்பர்தகங்களைக் குறிப்பிட்ட அனந்தத்தால் வகுத்தால் வரும் எண்ணிக்கையில் பெரும்பகுதி ஸ்பர்தகங்களின் பலன்தரும் சக்தி குறைந்து, மீதமுள்ள ஒரு பாகஅளவுக்கு சமமாக ஆகிவிடுகின்றன. இவ்வாறு அனந்த பகுபாக ஸ்பர்தகங்கள் ஒரேகாண்டகம் மூலம்-ஒரே துண்டாக அழிகிறது. இதை ஒரு அனுபாககாண்டக்காதம் என்று சொல்கின்றனர்.

மீதமுள்ள ஸ்பர்தகங்களின் அனந்த பகுபாகம் இரண்டாவது அனுபாககாத்காண்டகம் மூலம் அழிந்து அதன் பலன்தரும் சக்தியும் குறைகிறது. இவ்வாறு ஒவ்வொரு அனுபாககாண்டக்காதம் மூலம் பாபப் பிரக்ருதிகளின் பலன்தரும் சக்தி அனந்தத்தில் ஒருபகுதி அனந்தத்தில் ஒருபகுதியாக ஆகிக்கொண்டே போகிறது. இதுபோன்ற அனுபாககாண்டக்காதங்கள் சங்க்யாத ஆயிரம் முறைகள் நிகழ்கின்றன, இந்த அளவு காலத்தில் ஸ்திதிகாண்டக்காதம் ஒருமுறை நிகழ்கிறது. மேலும் அபூர்வகரண மற்றும் அநிவ்விருத்திகரண காலத்தில் இதுபோன்ற ஸ்திதிகாண்டக்காதங்கள் சங்க்யாத ஆயிரம் முறைகள் நிகழ்கின்றன.

அனுபாககாண்டக்காதத்தில் சாதாவேதனீயம் முதலான புண்ணியப் பிரக்ருதிகளின் பலன்தரும் சக்தி குறைவதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதற்கு மாறாக ஒவ்வொரு சமயமும் புண்ணியப் பிரக்ருதிகளின் பலன்தரும் சக்தி அதிகமாகிக்கொண்டே போகிறது. ஆனால் ஸ்திதிகாண்டக்காதம் மூலம் ஸ்திதி என்னவோ பாபம், புண்ணியம் ஆகிய இரண்டு பிரக்ருதிகளிலும் குறைகிறது.

இவ்வாறு அபூர்வகரணத்தின் முதல் சமயத்தில் புண்ணிய மற்றும் பாபப் பிரக்ருதிகளின் பலன்தரும் சக்தி எவ்வளவு இருந்ததோ அது, அபூர்வகரணத்தின் கடைசி சமயத்தில் புண்ணியப் பிரக்ருதிகளின் பலன் தரும் சக்தி முன் இருந்ததைவிட அனந்த மடங்கு அதிகரித்தும், பாபப் பிரக்ருதிகளின் பலன் தரும் சக்தி முன் இருந்ததைவிட அனந்த

மடங்கு குறைந்து போவதும் காணப்படுகின்றன. இவ்வாறு ஆபூர்வகரணத்தின் தகுதியான அந்தர்முகூர்த்த காலம் முடிந்த பிறகு அநிவ்விருத்தி கரணம் ஆரம்பிக்கிறது.

**அநிவ்விருத்திகரணம்:** மேலே அபூர்வ கரணத்தில் எந்த நான்கு அவசியங்கள் நிகழ்வதாகச் சொல்லப்பட்டதோ அவைகள் இந்த கரணத்திலும்கூட நிகழ்கின்றன. அதாவது குணஸ்ரேணி, குணசங்க்ரமணம், ஸ்திதிகாண்டக்காதம், அனுபாககாண்டக்காதங்கள், மேலும் ஸ்திதி பந்தாபசரணம் முதலாவைகள் எல்லாமும்கூட நிகழ்கின்றன. இதில் வேறுபாடு என்னவென்றால் இந்த கரணத்தில் எல்லா சமயத்திலும் எல்லா உயிர்களிடமும் பரிணாம விசுத்தி ஒரே மாதிரியாக சமமாகக் காணப்படுகிறது. அதாவது முக்காலத்திலும் அநிவ்விருத்தி கரணத்தை செய்யும் எல்லா உயிர்களின் ஆன்மத்தூய்மை-பரிணாமவிசுத்தி இந்த கரணத்தின் ஒவ்வொரு சமயத்திலும் சமானமாகவே-ஒன்றுபோலவே இருக்கின்றன.

அநிவ்விருத்திகரணத்தின் தகுதியான அந்தர்முகூர்த்த காலத்தில் ஒவ்வொரு சமயமும் விசுத்தி அனந்த மடங்கு அதிகரித்துக் கொண்டே போகிறது, ஆனால் பல உயிர்கள் நோக்கில் ஒவ்வொரு சமயமும் ஒரே மாதிரியான விசுத்தியே காணப்படுகிறது. ஆகையால் அநிவ்விருத்தி கரணத்தின் தகுதியான அந்தர்முகூர்த்த காலத்தில் எத்தனை சமயங்கள் இருக்கின்றனவோ அத்தனை ஒரேமாதிரியாக அதிகரித்துக்கொண்டு செல்லும் பரிணாமங்கள் இருக்கின்றன. இங்கு ஒவ்வொரு சமயமும் ஒரே மாதிரியாகவே ஒவ்வொரு பரிணாமமும் இருப்பதால் இவைகளில் குறைந்தது, மத்திமமானது, அதிகமானது என்ற வேறுபாடுகள் காணப்படுவதில்லை. இதனால்தான் இந்த கரணத்தை அநிவ்விருத்திகரணம் என்று சொல்கின்றனர். நிவ்விருத்தி என்றால் பரிணாமங்களில் வேறுபாடு இருத்தல், அநிவ்விருத்தி என்றால் பரிணாமங்களில் வேறுபாடு இல்லாமை என்பதாகும்.

இங்கு விசுத்தி நோக்கில் மட்டுமே பரிணாமங்களின் சமத்தன்மை இருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். கதி, லேஷ்யா, உடலின் வடிவம், நிறம், ஞானம், உதயமாகும் கஷாயங்கள் முதலியனவற்றில் வேறுபாடுகள் இருந்தாலும்கூட; முக்காலத்திலும், மூவுலகிலும் இந்த கரணத்தை செய்யும் எல்லா அனந்த உயிர்களின் விசுத்தி மட்டும் சமமாகவே இருக்கறது. அந்த விசுத்தியும் ஒவ்வொரு சமயமும் அனந்த மடங்காக அதிகரித்துக் கொண்டே போகிறது.

அபூர்வகரணம் மற்றும் அநிவ்விருத்திகரணம் இந்த இரண்டிலும் இன்னும் ஒரு வித்யாசமும் இருக்கிறது. இந்த கரணத்தில் நிகழும் ஸ்திதி காண்டக்காதத்தில் ஸ்திதி காண்டகம், அனுபாககாண்டகம் மற்றும் ஸ்திதிபந்தத்தின் அளவு எல்லாம் குறைகின்றன. இதற்குக் காரணம் ஸ்திதிசத்தா மேலும்மேலும் குறைந்துகொண்டே போவதால் இந்த காண்டகங்களும் மற்றும் ஸ்திதிபந்த அளவும்கூட மேலும்மேலும் குறைந்துகொண்டே போகிறது. காண்டகங்களுக்குள்ளும் அதாவது துண்டங்களின் அளவும் சிறிதுசிறிதாக ஆகின்றன, மற்றும் ஸ்திபந்தத்தில் குறைந்து கொண்டே போகும் அளவும்கூற குறைகிறது.

எப்போது உயிர் அபூர்வகரணத்தை முடித்து விட்டு அநிவ்விருத்திகரணத்தின் முதல் சமயத்தில் வருகிறதோ அப்போது அதன் ஸ்திதிகாண்டக ஆயாம் ஜகன்ய பல்யத்தின் அசங்க்யாதத்தில் ஒரு பாகத்திற்கு சங்யாதத்தில் ஒருபகுதி அளவே அதிகமாக இருக்கிறது. முதல் சமயத்திலேயே அந்த அதிகமாக இருக்கும் பகுதி துண்டாகி விழுந்த பிறகு எல்லா உயிர்களின் பரிணாம விசுத்தி அல்லது கஷாயத்தின் மந்தத்தன்மை சமமாக ஆகும் காரணத்தால் ஸ்திதி காண்டக்காதம், அனுபாககாண்டக்காதம், ஸ்திதிபந்தாபசரணம், குணஸ்ரேணி நிர்ஜரை மற்றும் குணசங்க்ரமணம் இவைகள் எல்லாம் எல்லா உயிர்களிடத்தும் சமமாக இருப்பதைக் காணமுடிகிறது.

ஆனால் இங்கு எல்லா உயிர்களிடமும் ஒரேமாதிரியான யோகம் இருக்க வேண்டும் என்ற நியமம் இல்லை ஆதனால் அவைகளின் பிரதேசபந்தம் சமமாக இருக்க வேண்டும் என்ற நியமம்-கட்டாயம் இல்லை.

அபூர்வகரணத்தின் காலத்தைவிட அநிவ்ருத்திகரணத்தின் காலம் அல்பமானது-குறைவானது என்று முன்னரே நாம் பார்த்தோம். அதாவது அபூர்வகரணத்தின் காலத்தில் சங்யாதத்தில் ஒருபகுதி அளவே அநிவ்ருத்திகரணத்தின் காலமாகும். நாம் அங்க்கசந்துருஷ்டியில் அபூர்வகரணத்தின் காலம் 8 சமயங்கள் என்று எடுத்துக் கொண்டோம். அந்த சமயங்களின் எல்லா பரிணாமங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 4096 என்று எடுத்துக் கொண்டோம். இப்போது இங்கு அநிவ்ருத்திகரணத்தின் காலம் 4 சமயங்கள் என்று வைத்துக் கொள்வோம். ஒவ்வொரு சமயத்திலும் ஒரு பரிணாமம் என்ற கணக்கின்படி இங்கு மொத்தம் 4 பரிணாமங்கள் இருக்கும், அவையும் கிரமமாக அனந்த மடங்கு விசுத்தி அடைந்து கொண்டே போவதாக இருக்கும் அதாவது கஷாயம் மேலும் மேலும் மந்தமாகிக்கொண்டே போகும்.


அபூர்வகரணத்தில் நிகழும் எல்லா அவசியகங்களும் இங்கும்கூட நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. ஞானோபயோகம் சுத்தாத்மாவில் ஒன்றிக்கொள்ளும் முயற்சியில் இருக்கிறது-நெருங்கிக் கொண்டிருக்கிறது, ஆனாலும்கூட இப்போது பரிணாமத்தில் மித்யாத்துவம் இருக்கிறது, இப்போதும் மித்யாத்துவ கர்மத்தின் நிஷேகங்கள் உதயத்திற்கு வந்துகொண்டு இருக்கின்றன. அநிவ்விருத்திகரண காலத்தை சங்க்யாதத்தால் வகுக்க வரும் எண்ணிக்கையில் பகுபாகம்-அதிகபாகம் கழிந்த பிறகு அதாவது இந்த அநிவ்விருத்தி காலத்தில் ஐந்தில் நான்கு பாகம் கழிந்த பிறகு **அந்தர்கரணம்** நிகழ்கிறது.

**அந்தர்கரணம்:** குறிப்பிட்ட நிஷேகங்களின் எல்லா திரவியங்களையும் வேறு நிஷேகங்களில் அதாவது அங்கேயே உள்ள கீழ் அல்லது மேல் உள்ள நிஷேகங்களின் கொண்டு சேர்த்து அந்த குறிப்பிட்ட நிஷேகங்களை இல்லாமல் செய்வதை **அந்தர்கரணம்** (இடைவெளி உண்டுபண்ணுதல்) என்று சொல்கின்றனர். இந்த **அந்தர்கரணம்** தர்சனமோஹனீய கர்மத்தில் மட்டுமே செய்யப்படுகிறது.

அனாதி மித்யாதிருஷ்டி உயிரிடம் தர்சனமோஹனீய கர்மத்தின் மித்யாத்துவ பிரக்ருதி ஒன்று மட்டுமே சத்தாவில் இருக்கிறது. ஆகையால் இங்கு மித்யாத்துவ பிரக்ருதியில்

இடைவெளி உண்டுபண்ணப் படுகிறது. சாதி மித்யாதிருஷ்டி உயிரிடம் தர்சனமோஹனீய கர்மத்தின் மித்யாத்துவம், சம்யக்மித்யாத்துவம், சம்யத்வப் பிரக்ருதி ஆகிய மூன்றும் சத்தாவில் இருக்கிறது. அங்கு அந்த மூன்று பிரக்ருதிகளிலும் இடைவெளி உண்டுபண்ணப் படுகிறது.

இந்த இடைவெளி அநிவ்விருத்தி காலத்திற்குப் பிறகு உதயத்திற்கு வரும் தகுதியுடைய நிஷேகங்களில் அதாவது குணஸ்ரேணிசிர்ஷ் மற்றும் அதற்கு மேல் உள்ள சில நிஷேகங்களில் செய்யப்படுகிறது. அதாவது அந்த குறிப்பிட்ட நிஷேகங்களின் எல்லா பரமாணுக்களும் கொஞ்சம் கீழேயும், கொஞ்சம் மேலேயும் கொண்டு சேர்க்கப் படுகின்றன. இந்த காரியம் அபகர்ஷணம் மற்றும் உத்கர்ஷணம் மூலம் நிகழ்கிறது. அதனால் அங்குள்ள நிஷேகங்கள் இல்லாமல் போகின்றன. எத்தனை நிஷேகங்கள் இல்லாமல் போகிறதோ அந்த எண்ணிக்கையை **அந்தராயாம்** என்று சொல்கின்றனர். இந்த அந்தர்கரணத்தின் மூலம் நிஷேகங்கங்களில் உடைக்கப்படாத வரிசை, இங்கு ஒன்று பிரதமஸ்திதி-பூர்வஸ்திதி (கீழ் பகுதி) மற்றும் இரண்டாவது-உபரிதன் ஸ்திதி (மேல் பகுதி) என உடைந்து இரண்டு பாகமாகப் பிளவு படுகிறது. அதாவது இந்த கர்மத்தின் நிஷேக அமைப்பின் இடையில் அந்தர்முகூர்த்த அளவு இடைவெளி விழுந்து விடுகிறது. இடைவெளியை உண்டுபண்ணும் இந்த விதானம்-இந்த செயல்-இந்த காரியம் ஒரு அந்தர்முகூர்த்தத்தில் பூர்த்தியாகி விடுகிறது. இந்த காலத்தை **அந்தர்கரணகாலம்** என்று சொல்கின்றனர். ஒரு ஸ்திதிகாண்டக்காதம் நிகழ எவ்வளவு அல்ப-மிகக்குறைந்த சமயங்கள் ஆகிறதோ அவ்வளவு அல்ப காலத்தில் இந்த அந்தர்கரணம் நிகழ்ந்து முடிந்து விடுகிறது.




அந்தர்கரணம் மூலம் எந்த நிஷேகங்கள் இல்லாமல் போகிறதோ அதற்குக் கீழே உள்ள நிஷேகங்களை பிரதமஸ்திதி என்று சொல்கின்றனர். பிரதமஸ்திதியில் உள்ள நிஷேகங்கள் அநிவ்விருத்திகரணத்தின் மீதமிருக்கும் காலத்தில் உதயமாகி விழுந்து விடுகின்றன. இடைவெளிக்கு மேலே உள்ள நிஷேகங்களை த்விதிய ஸ்திதி அல்லது உபரிதன் ஸ்திதி என்று சொல்கின்றனர். அதில் அந்த்த கோடாகோடி கடற்கால அளவு நிஷேகங்கள் இருக்கின்றன.

பிரதமஸ்திதியின் மித்யாத்துவ கர்ம நிஷேகங்கள் ஒவ்வொரு சமயமும் உதயத்திற்கு வருகின்றன மற்றும் அப்போது உயிருக்கு மித்யாத்துவ உணர்வு இருந்துகொண்டு இருக்கிறது. மித்யாத்துவ கர்மம் உதயமாகிக்கொண்டே இருக்கும்போதே உயிர்

சம்யக்த்துவத்தைப் பெற்றுவிடும் என்பது எப்போதும் இயலாத ஒன்றாகும். அந்தர்கரணம் நிகழ்ந்த பிறகு அநிவ்விருத்திகரண காலத்திலேயே த்விதிய ஸ்திதியில் இருக்கும் மித்யாத்துவகர்ம நிஷேகங்கள் உபசமநிலையை அடையவைக்கப் படுகின்றன அதாவது அவைகளில் உதீரணை அல்லது உதயம் நிழ்ந்து சீக்கிரமாக உதயத்திற்கு வர முடியாதவாறு அவைகள் பதப்படுத்தப் படுகின்றன.

**உபசமகரணம்:** தர்சனமோஹனீய கர்மத்தில் இடைவெளியை உண்டுபண்ண பிறகு த்விதிய ஸ்திதியில் இருக்கும் மித்யாத்துவகர்ம நிஷேகங்கள் அதாவது மித்யாத்துவப் பிரக்ருதிகளின் பரமாணுக்கள் எந்த வித்திலும் உதயத்திற்கு வரமுடியாமல் செய்யப் படுகின்றன. இதையே **உபசமகரணம்** என்று சொல்கின்றனர். எவ்வாறு குணசங்க்ரமணத்தில் ஒவ்வொரு சமயமும் அசங்க்யாத மடங்கு திரவியம் சங்கரமிக்கிறது என்று பார்த்தோமோ அதுபோல இங்கு உபசமகரணில்கூட ஒவ்வொரு சமயமும் அசங்க்யாத மடங்கு திரவியம் உபசமமடையச் செய்யப்படுகிறது. அதாவது உதயமோ அல்லது உதீரணையோ அடைய முடியாதபடிச் செய்யப்படுகிறது.

இந்த உபசம விதானத்தில் அதாவது உபசமகரணத்தில் த்விதீய ஸ்திதியில் உள்ள மித்யாத்துவத்தின் பரமாணுக்களை **குணசங்க்ரமண பாகஹார்** எண்ணிக்கையால் வகுத்தால் ஈவுத்தொகை எவ்வளவு வருகிறதோ அவ்வளவு பரமாணுக்கள் ஒவ்வொரு சமயமும் உபசமம் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு சமயமும் அசங்க்யாத மடங்கு-அசங்க்யாதகுண திரவியம் உபசமிக்கப் படுகிறது மற்றும் இவ்வாறு ஒரு அந்தர்முகூர்த்த காலத்தில் த்விதீய ஸ்திதியில் உள்ள எல்லா திரவியமும்-மித்யாத்துவத்தின் எல்லா பரமாணுக்களும் உபசமிக்கப் படுகின்றன. இந்த காலத்தை **உபசமகரணகாலம்** என்று சொல்கின்றனர்.

பிரதம ஸ்திதியில் தர்சனமோஹனீய கர்மத்தில் எவ்வளவு நிஷேகங்கள் இருக்கின்றனவோ அத்தனை சமயம்வரை அல்லது அநிவ்விருத்திகரணம் முடிய எவ்வளவு காலம் பாக்கி இருக்கிறதோ அதுவரை இந்த உபசமவிதானம் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. இந்த காலத்தில் மித்யாத்துவ கர்மத்தில் மட்டும் குணஸ்ரேணி நிகழ்வதில்லை ஆனால் ஆயுள் கர்மம் தவிர மற்ற எல்லா கர்மங்களிலும் குணஸ்ரேணி நிகழ்ந்து கொண்டேயே இருக்கிறது. முன்னர் மித்யாத்துவ கர்மத்தில் எவ்வளவு குணஸ்ரேணி அமைப்பு நிகழ்ந்ததோ அதிலிருந்து ஒவ்வொரு நிஷேகமாக உயத்திற்கு வந்து விழுந்துகொண்டு இருக்கிறது.

இவ்வாறு எதுவரை உபசமவிதானத்தின் மூலம் த்விதீயஸ்திதியில் உள்ள மித்யாத்துவ கர்மத்தின் திரவியம் உபசமத்தில் வைக்கப்படும் காரியம் நிகழ்ந்து கொண்டு இருக்கிறதோ, அதுவரை பிரதமஸ்திதியின் மித்யாத்துவ கர்ம நிஷேகங்கள் ஒவ்வொன்றாக உதயமாகிக் கொண்டு இருக்கிறது. உபசமவிதான காலத்தில் உயிர் சாசாதன குணஸ்தானத்தை அடைவதில்லை ஏனென்றால் அந்த சமயத்தில் மித்யாத்துவ கர்மம் உதயத்தில் இருக்கிறது, குணஸ்தானமும் முதல் மித்யாத்துவ குணஸ்தானமாகவே இருக்கிறது. சாசாதன குணஸ்தானத்திற்கு வரும் உயிர் ஔபசமிக சம்யக்த்துவ

நிலையிலிருந்து இழிந்து அனந்தானுபந்தி கஷாயத்தின் உதயத்தால் சாசாதன சம்யக்த்துவம் என்ற பெயர் கொண்ட இரண்டாவது குணஸ்தானத்திற்கு வருகிறது.

அநிவ்விருத்திகரணத்தின் கடைசி சமயத்தில் பிரதமஸ்திதியின் கடைசி நிஷேகம் உதயத்திற்கு வந்து விழுந்து விடுகிறது, அதற்கு அடுத்த சமயத்தில் அந்தராயாம்-இடைவெளி இருக்கிறது. அங்கு மித்யாத்துவ கர்ம நிஷேகமே இல்லையாகையால் மித்யாத்துவ கர்ம உதயம் கூட இல்லாமல் போகிறது. த்விதீயஸ்திதியில் மித்யாத்துவ கர்ம திரவியங்கள் சத்தாவில் படிந்திருக்கின்றன ஆனாலும் அவை எல்லாம் உபசமம் - தணிவு செய்யப்பட்ட நிலையில் வைக்கப்பட்டு இருக்கின்றன. அதனால் அங்கிருந்து பிரிந்து அந்தராயாம் காலத்தில் அவைகள் தப்பித்து உதயத்திற்கு வரும் நிலையும் தடைசெய்யப் பட்டுள்ளது. அவைகளில் இந்த காலத்தில் அபகர்ஷணம்-உத்கர்ஷணம் முதலியன எதுவும் நிகழமுடியாது. ஆகையால் அநிவ்விருத்திகரணம் முடிந்த அடுத்த சமயத்தில் **இடைவெளி** காலம் துவங்கியவுடனேயே உயிர் பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெறுகிறது.

இங்கு தர்சனமோஹனீய கர்மம் அந்தர்கரணம் மற்றும் உபசமகரணம் மூலம் உபசமமாகிறது, மற்றும் அனந்தானுபந்தி க்ரோத, மான, மாயா, லோபம் ஆகியவை அப்ரசஸ்த உபசமம் அடைகின்றன. அனந்தானுபந்தி பிரக்ருதிகளில் இடைவெளி உண்டாவதில்லை, ஆனால் அவைகளின் உதயம் அப்பிரத்யாக்யானம் முதலான வேறு பிரக்ருதிகள் வடிவில் உண்டாகின்றன. இங்கு அனந்தானுபந்தியில் அப்ரசஸ்த உபசமம் நிகழ்கிறது. அப்ரசஸ்த உபசமம் மூலம் எந்தக் கர்மப் பிரக்ருதிகள் உபசாந்த மடைகிறதோ அவைகளில் அபகர்ஷணம், உத்கர்ஷணம், சங்க்ரமணம் அடைதல் சாத்தியமாகும், ஆனால் அவைகள் உதயாவளியில் நுழைய மட்டும் அனுமதி இல்லை. இந்த வழிமுறைப்படி அந்தராயாமின் முதல் சமயத்திலிருந்தே தர்சனமோஹனீயம், அனந்தானுபந்தி க்ரோதம் முதலானவைகளின் பிரக்ருதி, பிரதேச, ஸ்திதி மற்றும் அனுபாகம் இவைகளில் முழுமையாக உபசமம் நிகழ்வதால், ஔபசமிக தத்வார்த்தஸ்ரத்தான வடிவ சம்யக்த்துவத்தைப் பெற்று உயிர் பிரதமோபசம சம்யக்திருஷ்டியாக ஆகிறது.

அனாதி காலமாக ஒவ்வொரு சமயமும் மித்யாத்துவ கர்ம உதயமும் மற்றும் உயிரின் மூடநம்பிக்கை உணர்வும் இருந்து கொண்டே இருந்தது, இப்போது அவைகள் முழுமையாக தடுக்கப்பட்டு விட்டன. இங்கு இப்போது மித்யாத்துவ கர்ம உதயமும் இல்லை, உயிரிடம் மூடநம்பிக்கை உணர்வும் இல்லை, ஆனால் சம்யக்த்துவத்தை-நன்நம்பிக்கையைப் பெற்று விடுகிறது. இப்போது உபயோகமும் சுத்தமாக இருக்கிறது மேலும் பரிணதியும் கூட சுத்தமாக இருக்கிறது. **இங்கு உபயோகம் என்பது அறிவின் அறியும் தன்மையையும், அறிந்ததை நன்கு சிந்தித்து செய்யும் பரிந்துரை (அதாவது அறிந்ததை சிந்தித்து ஒரு உறுதியான முடிவுக்கு வருதல்) என்றும், பரிணதி என்பது ஸ்ரத்தை-அபிப்ராயம்-பிரதீதி-உணர்வு என்றும் புரிந்து கொள்ள வேண்டும்.**

கரண பரிணாமத்தில் உபயோகத்தின் சுத்தத்தன்மை காரணமாக அதாவது நிஜசுத்தாத்ம திரவியத்தை-தன்னை தன் ஞானத்தால் அறியும் விஷயமாகச் செய்து அதையே பார்த்துக்கொண்டு இருப்பதால் பரிணதி-நம்பிக்கை நன்நம்பிக்கையாக

ஆகிவிடுகிறது- சம்யக்தரிசனம், சம்யக்ஞானம், சம்யக்சாரித்திரம் வடிவ மோக்ஷமார்க்கம் துவங்கி விடுகிறது, அதீந்திரிய (இந்திரியத் தொடர்பில்லாத ஆத்மாவே தானே எந்த புலன்களின் சகாயமும் இன்றி நேரடியாக அனுபவிக்கும்) ஆனந்தத்தைப் பெறுகிறது.

ஜெயசேனாசாரியாரின் மொழியில் சொல்ல வேண்டுமென்றால் **நிஜசுத்தாத்மபாவனா வடிவ சவிகல்ப ஸ்வசம்வேதன ஞானத்தின் பலத்தால், நிர்விகல்ப நிஜசுத்தாத்மானுபூதி அடையப்படுகிறது.** இங்கு முந்தய பர்யாயத்தைப் பற்றி நமக்கு தெரியப்படுத்தப் படுகிறது. ஞானம் தன் நிஜசுத்தாத்மாவை அறிவதில் எப்போது ஒன்றிவிடுகிறதோ அப்போது அதற்கு பேதமில்லாத அகண்ட ஆத்மாவே (ஆத்மாவே ஒரு பிரிக்கமுடியாத ஒரு முழுப்பொருளாக) மற்றும் வீதராக (இராக உணர்வு இல்லாத) ஆத்மா அனுபவத்திற்கு வருகிறது. இங்கு நிஜசுத்தாத்ம**பாவனா**வில் பாவனா என்பதின் பொருள் ஏகாக்ரதா-ஒன்றிவிடுதல்-ஒன்றாகிப்போதல் என்பதாகும். **சவிகல்பம்** என்பது ஞானத்தின் விசேஷமாகும்-சிறப்பாகும் மற்றும் **நிர்விகல்பம்** என்பது பேதமில்லாத-பிரிவுகள் அற்ற அபேத நிஜசுத்தாத்மா மற்றும் இராகமற்ற சுத்தோபயோகத்தைக் காட்டுவதாகும். இப்போது பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் என்னென்ன வெல்லாம் நிகழ்கின்றன என்பதைப் பற்றி அடுத்த கடிதத்தில் சர்ச்சை செய்து புரிந்து கொள்ளலாம்.

ஜெய் ஜினேந்திரா.

- உங்கள் அம்மா.

## பிரதமோபசம சம்யக்த்துவம்

கடிதம்-11 4-11-2002

பிரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

அனாதி காலமாகக் கொண்டுள்ள மூடநம்பிக்கையின் காரணத்தால் இந்த உயிர் பிறப்பு, இறப்பு வடிவப் பிறவிச்சுழற்சியில் சிக்கி இந்த உலகம் முழுவதிலும் சுற்றித் திரிந்து கொண்டிருக்கிறது. எப்போது குறிப்பிட்டத் தகுதியுடைய உயிர், ஜினேந்திர பகவானால் சொல்லப்பட்டத் தத்துவ உபதேசத்தை ஆர்வமுடன் கேட்டு, கேட்ட அந்த தத்துவங்களைப் பற்றி திரும்பத்திரும்ப சிந்தனை செய்து, அந்த தத்துவங்கள் இப்படித்தான் இருக்கின்றன என்று அதை உறுதிப்படுத்துகிறதோ அப்போது அந்த உயிர் ஐந்து லப்திகளின் வழியாக பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெறுகிறது.

உயிரின் வளர்ந்து கொண்டே போகும் விசுத்தி உணர்வின் நிமித்தத்தால் கர்மங்களில்கூட என்னென்ன மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதைப் பற்றி நாம் சர்ச்சை செய்து கொண்டு வருகிறோம். அநிவ்விருத்தி கரணத்தின் அடுத்த சமயத்திலேயே உயிர் பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெறுகிறது. பரிணாம விசுத்தியின்-தூய உணர்வுத்தன்மையின்-மந்தகஷாயத்தின் தன்மையால் இங்குகூட என்னென்ன சிறப்பான மாற்றங்கள் நிகழ்கின்றனவோ அவைகளைப் பற்றி இப்போது சர்ச்சை செய்யலாம்.

பிரதமோபசம சம்யக்த்துவத்தின் முதல் சமயத்திலிருந்தே த்விதீய ஸ்திதியில் உபசமம் செய்யப்பட்ட மித்யாத்துவப் பிரக்ருதிகளின் திரவியத்தில் குணசங்கிரமணம் நிகழத் துவங்கிவிடுகிறது. தர்சனமோஹனீயத்தின் மித்யாத்துவப் பிரக்ருதியின் திரவியம் (பரமாணுக்கள்) ஒவ்வொரு சமயமும் அசங்க்யாத மடங்கு கிரமமாக சம்யக்மித்யாத்துவம் மற்றும் சம்யக்த்துவப் பிரக்ருதி வடிவில் மாற்றமடைகின்றன. ஆனால் இப்போது மித்யாத்துவ கர்மத்தில் குணஸ்ரேணி, ஸ்திதிகாண்டக்காதம், அனுபாக காண்டக்காதம் முதலியன நிகழ்வது நின்றுபோகின்றன. ஆனால் ஞானாவரணம் முதலான கர்மங்களில் இவைகள் எல்லாம் இப்போதும் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கின்றன. இங்கு மித்யாத்துவ கர்மத்தின் உதயமும் இல்லை, பந்தமும் இல்லை.

முன்னர் மித்யாத்துவத்தில் என்ன பலன்தரும் சக்தி இருந்ததோ அது ஆயிரக்கணக்கான அனுபாக காண்டக்காதம் மூலம் அனந்தத்தில் ஒருபாக அளவு பலன் கொடுக்கக் கூடியதாக ஆகி அவ்வளவே மீதமிருக்கிறது. அவைகளிலிருந்து கொஞ்சம் பரமாணுக்களின் பலன்தரும்சக்தி மேலும் அனந்தத்தில் ஒருபகுதியாகப் பலவீனமடைந்து விடுகின்றன, அதையே சம்யக்மித்யாத்துவப் பிரக்ருதி என்று சொல்கின்றனர். மற்றும் அதைவிட எந்த பரமாணுக்களின் பலன்தரும் சக்தி மேலும் அனந்தத்தில் ஒரு பகுதியாகப் பலவீனமடைந்து விடுகின்றனவோ அவைகள் சம்யக்த்துவப் பிரக்ருதியாக ஆகிவிடுகின்றன.

இவ்வாறு மித்யாத்துவத்தின் பலன்தரும் சக்தி அனந்த மடங்கு பலவீனமடைந்து ஒரு மித்யாத்துவப் பிரக்ருதியிலிருந்து மூன்று பிரக்ருதிகளாக-மித்யாத்துவம், சம்யக்மித்யாத்துவம், சம்யக்த்துவம் என மூன்று தர்சனமோகனீயப் பிரக்ருதிகளாக ஆகிவிடுகின்றன. இதைத்தான் பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் மித்யாத்துவம் மூன்று துண்டுகளாகப் பிரிந்து மூன்று தர்சனமோகனீயப் பிரக்ருதிகள் வடிவில் சத்தாவில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.


இவைகளில் பலன்தரும் சக்தி என்னவோ கிரமமாக அனந்தத்தில் ஒருபாகம்-அனந்தத்தில் ஒருபாகமாகக் குறைந்து போகின்றன, ஆனால் இவைகளின் பரமாணுக்களின் எண்ணிக்கை கிரமமாக அசங்க்யாதத்தில் ஒருபகுதி-அசங்க்யாதத்தில் ஒருபகுதியாகவே இருக்கின்றன. இவ்வாறு எண்ணிக்கை நோக்கில் மித்யாத்துவ திரவியத்தின் எண்ணிக்கையில் அசங்யாதத்தில் ஒருபாகம் சம்யக்மித்யாத்துவ திரவியத்தின் எண்ணிக்கையாகவும், அதைவிட அசங்க்யாதத்தில் ஒருபாகம் சம்யக்த்துவ திரவியத்தின் எண்ணிக்கையாகவும் இருக்கின்றன. ஆனால் பலன் தரும் சக்தி நோக்கில் மித்யாத்வ திரவியத்தின் பலன்தரும் சக்தி ஐந்து லப்திகளுக்கு முன் இருந்ததைவிட அனந்தத்தில் ஒருபாகமாக வலுவிழந்து விடுகிறது. சம்யக்மித்யாத்துவ திரவியத்தின் பலன் தரும் சக்தி அதைவிட அனந்தத்தில் ஒருபாகமாக வலுவிழந்து விடுகிறது. மேலும் சம்யக்த்வ திரவியத்தின் பலன் தரும் சக்தி அதைவிட அனந்தத்தில் ஒருபாகமாக வலுவிழந்து விடுகிறது.

முதல் சமயத்திலிருந்தே ஒரு அந்தர்முகூர்த்தகாலம் வரை மித்யாத்துவ கர்ம திரவித்தில் குணசங்க்கிரமணம் நிகழ்கிறது. ஒவ்வொரு சமயமும் அசங்க்யாத மடங்கு பரமாணுக்கள் சங்க்ரமணத்தை அடைகின்றன. முதல் சமயத்தில் மித்யாத்துவ கர்மத்தின் சில பரமாணுக்கள் சம்யக்மித்யாத்துவ மற்றும் சம்யக்த்துவப் பிரக்ருதி வடிவில் மாற்றமடைகின்றன. இதில் சம்யக்பிரக்ருதியின் திரவியத்தைவிட சம்யக்மித்யாத்துவப் பிரக்ருதியின் திரவியம் அசங்க்யாத மடங்காகும்.

மித்யாத்துவ கர்மத்தின் முதல் சமயத்தில் மாற்றமடைந்த திரவியத்தைவிட அசங்க்யாத மடங்கு திரவியம் இரண்டாவது சமயத்தில் அந்த இரண்டு பிரக்ருதி விடிவில் மாறுகிறது. இதனால் முதல் சமயத்தில் இருந்த சம்யக்மித்யாத்துவ திரவியத்தைவிட இரண்டாவது சமயத்தில் சம்யக்த்துவப் பிரக்ருதியின் திரவியம் அசங்யாத மடங்காக அதிகமாகிறது. அதேபோல இரண்டாவது சமயத்தில் இருந்த சம்யக்மித்யாத்துவ திரவியத்தைவிட மூன்றாவது சமயத்தில் சம்யக்த்துவப் பிரக்ருதியின் திரவியம் அசங்யாத மடங்காக அதிகமாகிறது. அதேசமயம் மூன்றாவது சமயத்தின் சம்யக்மித்யாத்துவத்தின் திரவியம் அதைவிட அசங்க்யாத மடங்காக இருக்கிறது.

[அதாவது மாற்றமடையும் கர்மங்களின் எண்ணிக்கை சம்யக்மித்யாத்துவத்தில் கொஞ்சம் அதிகமாவும் அதைவிட சற்று குறைவான திரவியம் சம்யக்த்வப் பிரக்ருதியாகவும் மாறுகின்றன என்று அறியவும்.] இவ்வாறு அந்தர்முகூர்த்த காலம்வரை-குணசங்க்கிரமண காலம்வரை பாம்பு நகர்வதுபோல அசங்க்யாத மடங்கு கிரமமான மாற்றம் நிகழ்கிறது. இதை நாம் அங்க்க சந்துருஷ்டி மூலம் பார்க்கலாம். 4 என்ற

எண்ணிக்கையை அசங்க்யாதமாக எடுத்துக்கொண்டு இதை படத்தில் காட்டியபடி புரியவைக்கின்றனர்.




குணசங்க்ரமணகாலம் முடிந்த பிறகு இதுபோன்ற சங்க்ரமணம் அல்ப அளவில்-மிகக் குறைந்த எண்ணிக்கையில் நிகழ்ந்து கொண்டு இருக்கிறது, அதை **வித்யாத் சங்க்ரமணம்** என்று சொல்கின்றனர். வித்யாத் என்றால் மந்தமாக நிகழ்தல் என்று புரிந்து கொள்ளுங்கள். இங்கு விசுத்தி மந்தமாவதால் அல்ப எண்ணிக்கையிலேயே சங்க்ரமணம் நிகழ்கிறது.

இவ்வாறு சம்யக்துவத்தைப் பெற்று சில உயிர்கள் முதல் மித்யாத்துவ குணஸ்தானத்திலிருந்து 4-வது அசய்யம சம்யக்திருஷ்டி குணஸ்தானத்திற்கும், சிலர் 5-ஆவது தேசவிரத குணஸ்தானத்திற்கும், மற்றும் சிலர் 7-வது அபிரமத்த குணஸ்தானத்திற்கும் செல்கின்றனர். 5-ஆவது மற்றும் 7-வது குணஸ்தானத்திற்குச் செல்லுபவர்களிடம் (மூன்றாகப் பிரிந்த தசர்சனமோஹனீய கர்மத்தின்) ஸ்திதி சத்தா 4-ஆவது குணஸ்தானத்திற்குச் செல்லுபவர்களின் (மூன்றாகப் பிரிந்த தசர்சனமோஹனீய கர்மத்தின்) ஸ்திதி சத்தாவைவிட சங்க்யாத்வாபாக-சங்க்யாத்வாபாக அளவாக இருக்கிறது. ஏனென்றால் அவர்களுடைய விசுத்தி அதிகமாக இருப்பதே இதற்க்குக் காரணமாகும்.

4-ஆவது குணஸ்தானத்திற்குச் செல்லும் உயிர் மித்யாத்துவத்துடன் அனந்தானுபந்தி கஷாய நான்மைகளை அபிரசஸ்த்த உபசமம் செய்கிறது, 5-ஆவது குணஸ்தானத்திற்குச் செல்லும் உயிர் மித்யாத்துவத்துடன் அனந்தானுபந்தி, அப்ரத்யாக்யானம் ஆகிய கஷாயத்தின் இரண்டு நான்மைகளை அபிரசஸ்த்த உபசமம் செய்கிறது, அதேசமயம் 7-வது குணஸ்தானத்திற்குச் செல்லும் உயிர் மித்யாத்துவத்துடன் அனந்தானுபந்தி, அப்ரத்யாக்யானம், பிரத்யாக்யானம் ஆகிய கஷாயத்தின் மூன்று நான்மைகளை அபிரசஸ்த்த உபசமம் செய்கிறது. அவைகளின் உதயம் இல்லையாகையால் உயிரின் மந்த கஷாயவடிவ விசுத்தி அதிகமாகிறது. இந்த காரணத்தால் ஸ்திதிசத்தா அதிகஅளவு குறைகிறது மற்றும் குணஸ்ரேணி நிர்ஜரைகூட அசங்க்யாத மடங்காக ஆகிறது. 7-ஆவது

குணஸ்தானத்திற்குச் செல்லும் உயிர் 4-ஆவது, 5-ஆவது குணஸ்தானத்திலிருந்து மேலே செல்கிறது என்ற நம்பிக்கை தவறானது என்பது இந்த கர்மங்களின் அவஸ்தைகளிலிருந்து-நிலைவேறுபாடுகளிலிருந்து உறுதியாகிறது. அதேபோல ஒருவர் மித்தியாத்துவ நிலையில் திரவியலிங்கி ஸ்ராவகர், அல்லது திரவியலிங்கி முனி நிலையை ஏற்பதால் மட்டுமே அவர் சம்யக்த்துவத்துடன் 5-ஆவது, அல்லது 7-ஆவது குணஸ்தானத்தை அடைகிறார் என்பதுகூட உறுதி இல்லை. 5-ஆம் குணஸ்தானத்திற்கு செல்பவர் திரவியலிங்கி ஸ்ராவகர் நிலையை ஏற்றிருப்பதும், 7-ஆம் குணஸ்தானத்திற்கு செல்பவர் திரவியலிங்கி முனிவர் நிலையை ஏற்றிருப்பதும் அவசியம் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதான். ஏனென்றால் தகுதியான திரவியலிங்கம் இல்லாமல் பவலிங்கத்தைப் பெறமுடியாது.

[திரவிய லிங்கியாக இருந்தாலும் ஒருவரின் விசுத்தித் தன்மையை வைத்தே அவர் பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் 5-அது அல்லது 7-வது குணஸ்தான நிலையை அடைகிறார். பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் எந்த திரவிய லிங்கத்தையும் ஏற்காதவர் 4-ஆம் குணஸ்தானத்தையே அடைகிறார். திரவியலிங்கி ஸ்ராவகர் பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் அனந்தானுபந்தி கஷாய நான்மை இல்லாத விசுத்தித் தன்மையை மட்டுமே வெளிப்படுத்தினால், 4-ஆம் குணஸ்தானத்தையே அடைவார், ஆனால் அதேசமயம் வேறுஒரு திரவியலிங்கி ஸ்ராவகர் அனந்தானுபந்தி மற்றும் அப்ரத்யாக்யான கஷாய நான்மைகள் இரண்டும் இல்லாத விசுத்தித் தன்மையை வெளிப்படுத்தினால் அவர் 5-ஆம் குணஸ்தானத்தை அடைகிறார். அதேபோல திரவியலிங்கி முனிவர் பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் அனந்தானுபந்தி கஷாய நான்மை இல்லாத விசுத்தித் தன்மையை மட்டுமே வெளிப்படுத்தினால் 4-ஆம் குணஸ்தானத்தையே அடைவார், அவரே அனந்தானுபந்தி மற்றும் அப்ரத்யாக்யான கஷாய நான்மைகள் இரண்டும் இல்லாத விசுத்தித் தன்மையை மட்டுமே வெளிப்படுத்தினால் 5-ஆம் குணஸ்தானத்தையே அடைவார். ஆனால் எந்த திரவ்யலிங்கி முனிவர் பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் அனந்தானுபந்தி, அப்ரத்யாக்யானம், பிரத்யாக்யானம் ஆகிய மூன்று கஷாய நான்மைகளும் இல்லாத விசுத்தித் தன்மையை வெளிப்படுத்துகிறாரோ அவர் மட்டுமே 7-ஆம் குணஸ்தானத்தை அடைவார். இதிலிருந்து விசுத்தி நிலைக்கும் திரவ்ய லிங்கத்திற்கும் ஏற்ப உயிர் 4 அல்லது 5 அல்லது 7-ஆவது குணஸ்தானத்தைப் பெறுகிறது என அறியவும். பின்னர் இந்த உயிர்கள் தகுதியான விசுத்தித் தன்மையை பிரதமோசம காலத்திற்குப் பிறகு வெளிப்படுத்தும் போது 4-ல் இருந்து 5-ஆவது, 7-ஆவது குணஸ்தானங்களை அடைய முடியும் எனவும் அறியவும்.]


இப்போது பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் என்னென்னச் சிறப்புகள் நிகழ்கின்றன என்பதைப் பார்க்கலாம். பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் மரணம் நிகழ்வதில்லை என்பது நியமமாகும். இங்கு தர்சனமோஹனீயம் மற்றும் அனந்தானுபந்தி கஷாய உதயமும் இல்லை, அவைகளின் பந்தமும் இல்லாமல் நின்று விடுகின்றன. ஆனால் ஆயுள் கர்மம் தவிர ஞானாவரணம் முதலான மற்ற கர்மங்களில் குணஸ்ரேணி, ஸ்திதிகாண்டக்காதம், அனுபாக காண்டக்காதம் ஆகியவைகள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. இதன் பலன் இந்த கர்மங்களில் குணஸ்ரேணி நிர்ஜரை நிகழ்கிறது. 4-ஆவது குணஸ்தானத்தைவிட 5-

ஆவது மற்றும் 7-வது குணஸ்தானத்திற்குச் செல்பவர்களிடம் நிர்ஜரை அதிகமாகக் காணப்படுகிறது, ஏனென்றால் அவர்களிடம் விசுத்தி அதிகமாக இருக்கிறது.

பிரதமோபசம சம்யக்த்துவம் பெறும் முதல் சமயத்திலிருந்தே சம்வரையும், நிர்ஜரையும் துவங்கி விடுகின்றன. பிராயோக்யலப்தியில் எத்தனையோ பிரக்ருதிகளின் பிரக்ருதிபந்தாபசரணம் நிகழ்ந்தன, அவைகள் இங்கும் கூட நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. அவைகளுடன் முதல் மற்றும் இரண்டாம் குணஸ்தானத்தில் எத்தனை கர்மங்கள் பந்த வியுச்சித்தி நிகழ்கிறதோ அந்த எல்லாப் பிரக்ருதிகளின் பந்தமும்கூட நின்று விடுகின்றன-அவைகள் சம்வரையாகின்றன. 5-ஆவது மற்றும் 7-ஆவது குணஸ்தானத்திற்கு செல்லும் உயிர்களுக்கு மேலும்பல பிரக்ருதிகளின் பந்த வியுச்சுத்தி நிகழ்கிறது, அவைகளைப் பற்றி பிறகு பார்க்கலாம்.

பிரதமோபசம சம்யக்த்துவ அந்தர்முகூர்த்த காலத்தில் அதிகபட்சம் 6 ஆவளிகள் அல்லது குறைந்த பட்சம் ஒருசமயம் மீதம் இருக்கும்போது அனந்தானுபந்தி கோபம், மானம், மாயை, லோபம் ஆகியவைகளில் ஏதாவது ஒன்று உதயத்திற்கு வருமானால், உயிர் சம்யக்த்துவத்திலிருந்து இழிந்து-பிரஷ்டராகி 2-ஆவது சாசாதன குணஸ்தானத்தைப் பெறுகிறது, மற்றும் அங்கிருந்து விழுந்து மித்யாத்துவத்தை அடைகிறது.

மேல் கூறியது நிகழாமலிருந்து, உபசம சம்யக்த்துவ காலம் பூர்த்தியடைந்ததும் நியமமாக தர்சனமோஹனீயத்தின் மூன்று பிரக்ருதிகளில் ஏதாவது ஒன்று உதயத்திற்கு வருகிறது. அது எவ்வாறு நிகழ்கிறது என்பதை ஒரு படத்தின் மூலம் பார்க்கலாம்.




பிரதமோபசம சம்யக்த்வ காலத்தில் த்விதீய ஸ்திதியில் தர்சனமோஹனீய கர்மம் மூன்று துண்டுகளாக ஆகிறது. இந்த உபசம சம்யக்த்துவ காலத்தில் அவைகளில் அபகர்ஷணம் மூலமாக உதயமோ, உதீரணையோ எதுவும் நிகழ வாய்ப்பில்லை. உபசம சம்யக்த்துவ காலம் முடியும்வரை அந்தராயாமில் தர்சனமோஹனீய நிஷேகங்கள் இல்லாமையே தொடர்கிறது. ஆனால் இந்த சம்யக்த்துவ காலம் பூர்த்தியடைந்ததும் த்விதீய ஸ்திதியின்

மூன்று பிரக்ருதிகளின் பரமாணுக்களும், அபகர்ஷணம் மூலம் அந்தராயாமுக்கு வந்து அந்த இடைவெளியை நிறப்புகின்றன-அங்கு நிஷேக அமைப்பு உண்டாகி விடுகிறது, இதன் பொருள் இடைவெளி மூடப்படுகிறது-இதை **அந்த்தர்பூரணம்** என்று சொல்கின்றனர். உபசம சம்யக்த்துவகாலம் கழியும்வரை அந்த்தராயாமில் நிஷேகங்கள் இல்லாத நிலையில், அந்த காலம் கழிந்ததும் த்விதீயஸ்திதியில் அபகர்ஷணம் நிகழ்ந்து அதல் ஏதாவது ஒன்று உதயத்திற்கு வருகிறது.

இதிலிருந்து நாம் ஒன்றைத் தெரிந்து கொள்ளலாம், அதாவது தர்சணமோஹனீய பிரக்ருதியின் உதயத்தால் உபசம சம்யக்த்துவம் விடுபடுவதில்லை, ஆனால் உபசம சம்யக்த்துவ காலம் அந்தர்முகூர்த்தமாகவே இருப்பதால், அந்த காலம் முடிந்ததும் உபசமம் முடிவுக்கு வருகிறது, ஆனால் சம்யக்த்துவமும் விடுபட வேண்டும் என்ற நியமம் இல்லை. அந்த மூன்றுப் பிரக்ருதிகளில் உயிரின் பரிணாம நிமித்தத்தால் எந்தப் பிரக்ருதி உதயத்திற்கு வருகிறதோ அதுவே உதயாவளிக்கு வருகிறது, மற்ற இரண்டு பிரக்ருதிகள் உதயாவளிக்கு மேலேயே இருக்கின்றன, மற்றும் உதயமாகிக் கொண்டிருக்கும் பிரக்ருதி வடிவில் [தியூக]சங்க்ரமணம் அடைந்து அந்த வடிவில் உதயத்திற்கு வருகின்றன.

இவ்விதமாக பிரதமோபசம சம்யக்த்துவ காலம் முடிந்ததும் - 1. மித்யாத்வப் பிரக்ருதி உதயமானால் உயிர் மீண்டும் மித்தியாத்துவ குணஸ்தானத்தை அடைகிறது, அல்லது 2. சம்யக்மித்யாத்துவப் பிரக்ருதி உதயமானால் உயிர் சம்யக்மித்யாத்துவ (மிஸ்ர) குணஸ்தானத்தை அடைகிறது, அல்லது 3. சம்யக்த்துவ பிரக்ருதி உதயமானால் உயிர் க்ஷயோபசம சம்யக்திருஷ்டி அதாவது வேதக சம்யக்திருஷ்டியாகிறது, அதனுடைய சம்யக்த்துவமும் மற்றும் குணஸ்தானமும் அதிலேயே நீடிக்கிறது.

இதிலிருந்து பிரதமோபசம சம்யக்திருஷ்டி உயிர் நியமமாக மித்யாத்துவத்திற்கே செல்கிறது என்ற நம்பிக்கை நிராகரிக்கப்படுகிறது. கஷாயபாஹுடம், **தவளா**, லப்திசாரம், மோக்ஷமார்க்கப்பிரகாசம் முதலான கிரந்தங்களில் இதைப் பற்றிய வர்ணனை இருக்கிறது. இங்கு பிரதமோபசம சம்யக்த்துவம் பற்றி நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். **தவளா** கிரந்தத்தில் இந்த பிரதமோபசம சம்யக்த்துவ உயிர்கள் **பிரதம சம்யக்த்வி** மற்றும் **அபிரதம சம்யக்த்வி** என இரண்டு விதமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. அனாதி மித்யாதிருஷ்டி உயிர் முதன்முறையாக (பிரதம சம்யக்த்வி) சம்யக்த்துவத்தைப் பெறும்போது உபசம சம்யக்த்துவ காலம் பூர்த்தியானதும் நியமமாக மித்யாத்துவத்திற்கே போகிறது. ஆனால் அப்பிரதம முறையாக அதாவது மீண்டும் இரண்டாவது முறையாக பிரதமோபசம சம்யக்துவத்தை பெறும்போது அதற்கு மேலே கூறப்பட்ட மூன்று மார்க்கங்களும் திறந்திருக்கிறது-அப்போது நியமமாக அந்த அபிரதம சம்யக்த்வி உயிர் மித்யாத்துவத்திற்கே செல்லவேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்ற விளக்கம் காணப்படுகிறது. மற்ற கிரந்தங்களில் இதைப்பற்றி இவ்வாறு பிரித்துப் பேசப்படவில்லை.

**ஒருமுறை பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெற்ற பிறகு மீண்டும் மீண்டும் பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெறுதல் என்று எப்படி சொல்லுகிறீர்கள்?** என்று நீங்கள் கேட்கக்கூடும். கேளுங்கள், உயிர் பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெற்ற பிறகு

மித்யாத்துவத்திற்குப் போகமுடியும், அல்லது சிலகாலம் ஷயோபசம சம்யக்த்துவ நிலையில் இருந்துவிட்டுப் பிறகு மித்யாத்துவத்திற்குச் செல்லமுடியும். எப்போது உயிர் இரண்டாவது முறையாக சம்யக்த்துவத்தை பெறுகிறது என்றால் சில உயிர்கள் கர்மங்களை க்ஷயோபசமம் செய்து சம்யக்த்துவத்தைப் பெறும் அல்லது சில உயிர்கள் கர்மங்களை உபசமம் செய்து சம்யக்த்துவத்தைப் பெறும்.

சம்யக்த்துவத்திலிருந்து மித்யாத்துவம் பிறகு இரண்டாவது முறையாக சம்யக்த்துவம் என அசங்க்யாதமுறை (பல்யத்தில் அச்ங்யாதத்தில் ஒரு பாகம் எவ்வளவோ அத்தனை முறை) நிகழமுடியும். ஒருமுறை பிரதமோபசம சம்யக்த்துவத்தை பெற்ற பிறகு தர்சனமோஹனீயத்தின் மூன்று பிரக்ருதிகளின் சத்தா அசங்க்யாத வருடங்கள்வரை மட்டுமே இருக்கிறது. ஆனால் அந்த உயிர் மித்யாத்துவத்திற்கு வந்த பிறகு அசங்க்யாத வருடங்கள் கழிந்த பிறகு இரண்டாவது முறையாக பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெறமுடியும், ஆனால் க்ஷயோபசம சம்யக்த்துவத்தை மித்யாத்துவத்திற்கு வந்து ஒரு அந்தர்முகூர்த்தம் கழிந்த பிறகுகூடப் பெறமுடியும். இதற்கான காரணத்தைப் பார்க்கலாம்.

பிரதமோபசம சம்யக்த்துவ உயிர் மித்யாத்துவத்திற்குச் செல்லும்போது தர்சனமோஹனீயத்தின் மூன்று பிரக்ருதிகளின் ஸ்திதிசத்தா அந்த்தகோடாகோடி கடற்கால அளவு இருக்கிறது. எப்போதும் மற்ற இரண்டுப் பிரக்ருதிகள் மித்யாத்துவ வடிவில் உதயத்திற்கு வந்துகொண்டே இருக்கின்றன, அதனால் அவைகளிலிருந்து ஒவ்வொரு நிஷேகமாக விழுந்த வண்ணம் இருக்கிறது. ஆனால் புதிதாக பந்தமாகும் கர்மம் மித்யாத்துவம் மட்டுமேயாகும். இவ்வாறு ஒருஒரு நிஷேகமாக அழிந்து எப்போது சம்யக்மித்தியாத்துவ மற்றும் சம்யக்த்துவ பிரக்ருதிகளின் ஸ்திதிசத்தா மிகவும் அல்பமாக ஆகிவிடுகிறதோ அப்போது அந்த உயிர் இரண்டாவது முறையாக இந்த மூன்றுப் பிரக்ருதிகளையும் மற்றும் அனந்தானுபந்தி கஷாயத்தையும் உபசமம் செய்து இரண்டாவது முறையாக பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெறுகிறது.

மிகவும் அல்பம் என்பது எவ்வளவு காலம் என்பதை கோமட்டசாரம் கர்மகாண்டம் காதை 615-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு பிரக்ருதிகளின் ஸ்திதிசத்தா திரச உயிர்களில் பிரதக்த்துவ சாகர் அளவு இருக்கிறது, ஒருபொறி உயிர்களிடம் ஒரு கடற்காலத்திலிருந்து பல்யத்தில் அசங்க்யாதத்தில் ஒரு பாகத்தைக் கழித்த பிறகு வரும் கால அளவு இருக்கிறது. இந்த காலம் வரும்வரை உள்ள காலத்தை **வேதகயோக்ய காலம்** என்று சொல்கின்றனர். எப்போது ஸ்திதிசத்தா இதைவிடக் குறைந்துபோகிறதோ அப்போது அதை **உபசம காலம்** என்று சொல்கின்றனர்.

வேதகயோக்ய காலத்தில் உயிர் மீண்டும் பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெறமுடியாது, ஆனால் க்ஷயோபசம சம்யக்த்துவத்தைப் பெறமுடியும், க்ஷயோபசம சம்யக்த்துவம் என்றாலும், வேதக சம்யக்த்தும் என்றாலும் ஒன்றுதான். உபசம காலத்தில்தான் உயிர் பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெறமுடியும். இந்த உபசம யோக்ய காலத்தில் அந்த மித்தியாத்துவத்திலிருந்து பிரிந்த மற்ற இரண்டு பிரக்ருதிகளும் மீண்டும் மித்யாத்துவ வடிவமாகவே சங்கரமித்து விடுகின்றன, இதையே **உத்வேலனா** என்று சொல்கின்றனர். முதலில் சம்யக் பிரக்ருதி உத்வேலனா அடைந்து சத்தாவில்

இல்லாமல் போகிறது. பிறகு சம்யக்மித்யாத்துவப் பிரக்ருதியும்கூட உத்வேலனா அடைந்து சத்தாவில் இல்லாமல் போகிறது. இவ்வாறு உயிர் சாதி மித்யாதிருஷ்டியாக ஆனபிறகு அதன் சத்தாவில் தர்சனமோஹனீயத்தின் மித்யாத்துவப் பிரக்ருதி ஒன்று மட்டுமே மீதமிருக்கிறது.

ஆகையால் ஒருமுறை பிரதமோபசம சம்யக்த்துவத்தை பெற்று பிறகு மித்தியாத்துவத்திற்குச் சென்று அங்கேயே இருக்கும் உயிர் மீண்டும் பிரதமோபசம சம்யக்த்துவத்தை அசங்க்சாத கோடி வருடங்கள் கழிந்த பிறகே பெறமுடிகிறது-இந்த இடைப்பட்ட காலத்தை பிரமோபசம சம்யக்த்துவத்தின் **அந்தர்**-இடைவெளி என்று சொல்கின்றனர். ஆனால் பிரதமோபசம சம்யக்துவத்திலிருந்து விழுந்து மித்யாத்துவத்திற்கு வந்த உயிர் ஒரு அந்தர்முகூர்த்த காலம் கழிந்த பிறகேகூட க்ஷயோபசம சம்யக்த்துவத்தைப் பெறமுடியும், ஏனென்றால் அது அதனுடைய வேதக யோக்ய காலமாகும்.

பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் எந்த இடைவெளி காலம் என்று பார்த்தோமோ அந்த இடைவெளி காலம் சாசாதன குணஸ்தானத்திற்கும் இடைவெளி காலமாகும் என்று தெரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் பிரமோபசம சம்யக்த்துவத்திலிருந்து இழிந்தே உயிர் சாசாதன குணஸ்தானத்திற்கு வரமுடியும், க்ஷயோபசம சம்யக்த்துவத்திலிருந்து இழிந்து சம்யக்மித்தியாத்துவ 3-ஆம் குணஸ்தானத்திற்கோ அல்லது மித்யாத்துவம் எனும் முதல் குணஸ்தானத்திற்கோ தான் இழிய முடியும், 2-ஆம் சாசாதன குணஸ்தானத்திற்கு வரமுடியாது.

பிரதமோபசம சம்யக்த்துவத்தைப் பெற்றவுடன் உயிர் மித்யாத்துவ குணஸ்தானத்திலிருந்து நான்காவது அவிரத சம்யக்த்துவ குணஸ்தானத்திற்கு வரும்போது அதற்கு 41 பிரக்ருதிகளின் பந்தம் தடைபட்டுப் போகிறது-பந்த வியுச்சுத்தி ஆகிறது. பந்தத்தகுதியானப் பிரக்ருதிகள் 120 என்று நாம் பார்த்திருக்கிறோம், அவைகளில் மோக்ஷமார்க்கம் துவங்கியதுமே 41 பிரக்ருதிகளின் பந்த வியுச்சித்தி நிகழ்கிறது. இப்போது வியுச்சித்தி என்றால் என்னவென்று பார்க்கலாம்.

எந்தப் பிரக்ருதிகளின் பந்தம் குறிப்பிட்ட குணஸ்தானம்வரையே காணப்படுகிறதோ, அதற்கு மேல் குணஸ்தானங்களில் காணப்படவில்லையோ, அவைகளை அந்த குறிப்பிட்ட குணஸ்தானத்தில் பந்த வியுச்சித்தி என்று கூறுகின்றனர்.

உதாரணமாக, மித்யாத்துவம் முதலான 16 பிரக்ருதிகளின் பந்தம் முதல் குணஸ்தானத்தில் மட்டுமே நிகழ்கிறது, இரண்டாவது அல்லது அதற்கு மேல் எந்த குணஸ்தானங்களிலும் நிகழ்வதில்லை ஆகையால் முதல் குணஸ்தானத்தில் 16 பிரக்ருதிகள் பந்த வியுச்சித்தி அடைகின்றன என்று சொல்லப்படுகிறது. வியுச்சித்தி அடைதல் என்பதன் பொருள் மேல் குணஸ்தானங்களில் பந்தமாவதில்லை என்பதாகும். ஆனால் முதல் குணஸ்தானத்தில் பந்த வியுச்சித்தி என்று சொல்லும்போது அந்த குணஸ்தானத்தின் கடைசி சமயம்வரை பந்தம் நிகழ்கிறது, ஆனால் இரண்டாவது மற்றும் அதன் மேல் குணஸ்தானங்களில் பந்தமாதல் தடை செய்யப்படுகிறது என்று புரிந்து

கொள்ள வேண்டும். “அங்கு பந்தம் நிகழ்கிறது, பிறகு அந்த குணஸ்தானத்திலேயே பந்த வியுச்சித்தியாகிறது என்று ஏன் சொல்கின்றனர்? மேல் குணஸ்தானங்களில் பந்தமில்லை என்று சொல்வதுதானே பொருத்தமாக இருக்கும்” என்ற சந்தேகம் உங்களுக்கு எழலாம்.

இது திரவ்வியார்த்திக நயநோக்கில் சொல்லப்படுவதாகும். இதை ஒரு உதாரணம் மூலம் உங்களுக்குப் புரியவைக்கிறேன். நாம் எல்லோரும் தத்துவக் கருத்தரங்கத்தில் பங்குபெற தேவலாலியில் ஒன்றாகக் கூடினோம். தத்துவக் கருத்தரங்கம் முடிந்ததும் மோனா, நீ ஔரங்காபாத்துக்குச் சென்றாய். ரீனா, நீ எங்களுடன் மும்பைக்கு வந்து விட்டாய். இப்போது மோனாவும் நாமும் எங்கே பிரிந்தோம்? என்று எனக்கு சொல்லுங்கள் பார்க்கலாம். இதற்கு பதில் நாம் தேவலாலியில்தான் ஒருவருக்கொருவர் தனித்தனியாகப் பிரிந்தோம் என்றுதானே சொல்லுவாய். நாம் தேவலாலியில் எல்லோரும் ஒன்றாகத்தானே இருந்தோம், பிறகு நாம் அங்குதான் பிரிந்தோம் என்று எப்படிச் சொல்கிறாய் என்று நான் கேட்டால், உன் பதில் என்னவாக இருக்கும்? அதற்கு பதில், அங்கு ஒன்றாகத்தான் இருந்தோம், ஆனால் அதற்குப்பிறகு நாம் ஒன்றாக இல்லையாகையால் அங்கேயே நாம் பிரிந்துவிட்டோம் என்று சொல்லும்முறை இருக்கிறதல்லவா! அதுபோல எந்த குணஸ்தானம்வரை ஒன்றாக பந்தமாகிக் கொண்டிருந்த கர்மங்கள் அங்கேயே வியுச்சுத்தி அடைகின்றன என்ற முறையில் சொல்லப்படுகிறது என புரிந்து கொள்ள வேண்டும்.

முதல் குணஸ்தானத்தில் 16 பிரக்ருதிகளின் பந்த வியுச்சித்தி நிகழ்கிறது, பிறகு இரண்டாவது குணஸ்தானத்தில் மேலும் 25 பிரக்ருதிகளின் பந்த வியுச்சித்தி நிகழ்கிறது, மூன்றாவது குணஸ்தானத்தில் பந்தவியுச்சித்தி எதுவுமில்லை. ஆகையால் எப்போது உயிர் சம்யக்த்துவத்தைப் பெறுகிறதோ அப்போதே முதல் குணஸ்தானத்திலிருந்து நான்காம் குணஸ்தானத்திற்கு தாவி விடுவதால் 41 பிரக்ருதிகளின் பந்தம் அதனிடம் நிகழாமல் தடை செய்யப்படுகிறது-அவ்வளவு கர்மங்களை அந்த உயிர் சம்வரை செய்யும் தகுதியைப் பெற்று விடுகிறது.

நான்காம் குணஸ்தானத்தில் மேலும் 10 பிரக்ருதிகளின் பந்த வியுச்சித்தி நிகழ்கின்ற காரணத்தால் பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் நேராக ஐந்தாம் குணஸ்தானத்திற்குத் தாவும் உயிர்களிடம் 51 பிரக்ருதிகளின் பந்தம் தடைபட்டுப் போகிறது. ஐந்தாம் குணஸ்தானத்தில் மேலும் 4 பிரக்ருதிகளின் பந்த வியுச்சித்தியும், ஆறாம் குணஸ்தானத்தில் மேலும் 6 பிரக்ருதிகளின் பந்த வியுச்சித்தியும் நிகழ்வதால் பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் நேராக ஏழாம் குணஸ்தானத்திற்குத் தாவும் உயிர்களிடம் 61 பிரக்ருதிகளின் பந்தம் தடைபட்டுப் போகிறது.

“அம்மா, அந்தத் தடைபட்டுப் போகும் பிரக்ருதிகளின் பெயர்களை உடனே சொல்லுங்கள், அதனால் நமக்கு என்ன லாபநஷ்டம் என்றுப் பார்க்க வேண்டும், நல்லப் பிரக்ருதிகளின் பந்தம் தடைபடுமானால் நமக்கு என்ன பிரயோஜனம்?” என்று நீங்கள் கேட்கிறீர்கள் அல்லவா!

பாருங்கள்! இப்போது கூட சில கர்மப் பிரக்ருதிகள் நல்லவை, அவைகள் பிற்காலத்தில் நமக்கு லாபமளிப்பவை என்ற நம்பிக்கையை விடுவதற்கு இன்னும் நீங்கள் தயாராகவில்லையா?! [புண்ணியம் பாபம் இரண்டுமே நம்மை பிறவிச்சுழற்சியில் தள்ளுபவைகள்தான் என்ற சிந்தனைதான் வரவேண்டும், அப்போதுதானே நாம் முக்தி அடைய முயற்சி செய்வோம்.] ஆனலும்கூட மோக்ஷமார்க்கம் துவங்கியதுமே மிக அதிகப் பாபப் பிரக்ருதிகளின் பந்தமே தடை செய்யப்படுகிறது மற்றும் தடை செய்யப்படாத பாபப் பிரக்ருதிகளின் பலன்தரும் சக்தியும் ஒவ்வொரு சமயமும் அனந்த மடங்கு குறைந்து கொண்டேதான் போகிறது என்பது இயற்கையின் விதியாக-நியமாக இருக்கிறது என்பதைக் கேட்க உங்களுக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கும். இங்கு எல்லாம் லாபமோ லாபம் தான், அதனால்தான் இதை லப்தி [நல்லதைப் பெறுதல்] என்று சொல்கின்றனர். உங்கள் ஆர்வத்தை கருத்தில் கொண்டு அந்த 41 பிரக்ருதிகளின் பெயர்களை இப்போதே சொல்கிறேன்.

முதல் மித்யாத்துவ குணஸ்தானத்தில் பந்த வியுச்சித்தி அடையும் 16 பிரக்ருதிகளாவன:- 1.மித்யாத்துவம், 2.ஹுன்டக சமஸ்தானம், 3.நபூம்சக வேதம், 4. அசம்ப்ராப்தாஸ்ருபாடிகா சம்ஹனனம், 5.ஏகேந்திரியம், 6.ஸ்தாவரம், 7.ஆதபம், 8.சூக்ஷமம், 9.அபர்யாப்தம், 10.சாதாரணம், 11.இரண்டு இந்திரியம், 12.மூன்று இந்திரியம், 13.நான்கு இந்திரியம், 14.நரக கதி, 15.நரக கத்யானுபூர்வி, 16.நரகாயு என்பனவே இந்த 16 பிரக்ருதிகள் முதல் மித்யாத்துவ குணஸ்தானத்தில் பந்த வியுச்சித்தி அடைகின்றன.

அனந்தானுபந்தி சம்பந்த 25 பிரக்ருதிகள்:- அனந்தானுபந்தி 4 - க்ரோத, மான, மாயா, லோபம், ஸ்த்யானக்ருத்தி முதலான 3 - ஸ்த்யானக்ருத்தி, நித்ராநித்ரா, பிரசலாபிரசலா, சம்ஸ்தானத்தில் 4 - நியக்ரோதபரிமன்டலம், ஸ்வாதி, குப்ஜகம், வாமனம், சம்ஹனனத்தில் 4 - வஜ்ரநாராச, நாராச, அர்த்தநாராச, கீலித, திரியன்ச சம்பந்தமான 4 - திரியன்ச கதி, திரியன்ச கதியானுபூர்வி, திரியன்ச ஆயுள், உத்யோதம், பிற 3 - துர்பக, துஸ்வர, அனாதேய, மேலும் பிற 3 - ஸ்திரிவேதம், நீச்சகோத்திரம், அப்ரசஸ்த விஹாயோகதி என்பனவாகும்.

முன்னர் பிராயோக்யலப்தி அதிகாரத்தில் பிரக்ருதிபந்தாபசரணம் மூலம் 46 பிரக்ருதிகளின் பந்தம் நின்றுபோகிறது என்று நாம் பார்த்தோம். இங்கு நான்காம் குணஸ்தானத்திற்கு செல்லும் உயிருக்கு 41 பிரக்ருதிகளின் சம்வரைதானே நிகழ்கிறது, பிறகு எந்தப் பிரக்ருதிகளின் பந்தம் மீண்டும் துவங்கி விடுகின்றன? என்ற சந்தேகம் உங்களுக்கு எழலாம்.

பாருங்கள், 46 பிரக்ருதிகளில் மனித ஆயுள், மற்றும் தேவ ஆயுள் ஆகிய இரண்டு ஆயுள் கர்மங்கள் மற்றும் 33-ஆவது மற்றும் 34-ஆவது ஸ்தானத்தின் மொத்த 11 பிரக்ருதிகள் எல்லாம் சேர்ந்து 13 பிரக்ருதிகளின் பந்தம் நான்காம் குணஸ்தானத்தில் நிகழும், ஆனால் வேறு 8 பிரக்ருதிகளின் பந்தம் தடைபடும். அதாவது மித்யாத்துவம், அனந்தானுபந்தி க்ரோத, மான, மாயா, லோபம், மற்றும் ஸ்த்யானக்ருத்தி, நித்ராநித்ரா, பிரசலாபிரசலா ஆகிய 8 பிரக்ருதிகளின் பந்தம் நின்று போகிறது. ஆக 46-13+7=41 பிரக்ருதிகளாகும்.

இவ்வாறு ஒவ்வொரு குணஸ்தானத்திலும் பந்தவியுச்சித்தி நிச்சயிக்கப் பட்டதாகும். இங்கு குணஸ்தான வாரியாக பந்தவியுச்சித்தியாகும் பிரக்ருதிகளின் எண்ணிக்கையைக் கட்டங்கள் மூலம் காட்டுகிறேன். கோமட்டசாரம் கர்மகாண்டத்தில் இதைப் பற்றிய விரிவான வர்ணனை இருக்கிறது.

| குணஸ்தானம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பந்தவியுச்சித்தி | 16 | 25 | 0 | 10 | 4 | 6 | 1 | 36 | 5 | 16 | 0 | 0 | 1 |

மேலே குறிப்பிட்டுள்ளபடி 120 பிரக்ருதிகளின் பந்தவியுச்சித்தி நிகழ்கிறது. 14-ஆவது அயோககேவலி குணஸ்தானத்தில் யோகம் நின்று போவதால் பந்தம் நிகழ்வதில்லை, அந்த நிலையிலிருந்து உயிர் எப்போதும் அபந்த நிலையை அடைகிறது. இங்கு எல்லாக் கர்மங்களின் ஆஸ்ரவமும் மற்றும் பந்தமும் ஒட்டுமொத்தமாக நின்று போவதால் இங்கு முழுமையான சம்வரை வெளிப்படுகிறது.

எவ்வாறு பந்தம் இல்லாமல் போகிறதோ அதேபோல குறிப்பிட்ட குணஸ்தானத்தில் குறிப்பிட்டப் பிரக்ருதிகளின் உதயமும் இல்லாமல் போகிறது-அவைகளில் உதய வியுச்சித்தி நிகழ்கிறது. சம்யக்துவத்தைப் பெற்ற உடனேயே நான்காம் குணஸ்தான உயிர்களிடம் மித்தியாத்துவம், அனந்தானுபந்தி நான்மை, சூட்சமம், சாதாரணம், அபர்யாப்தம், ஆதபம், ஸ்தாவரம், ஏகேந்திரியம், இரண்டு இந்திரியம், மூன்று இந்திரியம், நான்கு இந்திரியம், சம்யக்மித்யாத்துவம் இவைகளின் உதயம் இல்லாமல் போகிறது.

“அப்படி என்றால் பிறகு நாம் முன்னர் கட்டிக்கொண்ட கர்மங்கள் எங்கே போகும்?” என்று நீங்கள் கேட்கலாம். அதைப்பற்றி பீதியடையத் தேவையில்லை. சத்தாவில் இருக்கும் கர்மங்களால் நமக்கு லாபநஷ்டமோ, தொந்தரவோ இல்லை. இந்த கர்மங்களின் நிர்ஜரை, க்ஷயம், அல்லது அதே ஜாதி பிரக்ருதிகளில் சங்க்ரமணம் முதலான மாற்றங்களின் வர்ணனை க்ஷபணாசாரம் முதலான கிரந்தங்களில் படித்துத்தெரிந்து கொண்ட பிறகு எல்லா கேள்விகளுக்கும் விடை உங்களுக்குக் கிடைத்துவிடும்.

கோமட்டசார கர்மகாண்ட கிரந்தத்தில் பந்த மற்றும் உதய வியுச்சித்தி பற்றி நன்கு படித்து அவைகளை மனப்பாடம் செய்யுங்கள். ஏனென்றால் அதைப்பற்றிய அறிவு வந்த பிறகு மோக்ஷமார்க்கத்தின் ஸ்வரூபம் மிகவும் தெளிவாக உங்கள் மனதில் பதியும், பிற சம்ப்ரதாயவாதிகளின்-மதவாதிகளின் அனேக மாயமான, தவறான கற்பனைகள் எல்லாம் அகன்றுவிடும்.

“பந்த மற்றும் உதய வியுச்சித்தியைத் தெரிந்து கொள்வதால் பிற சம்ப்ரதாயவாதிகளின்-மதவாதிகளின் அனேக மாயமான, தவறான கற்பனைகள் எல்லாம் எவ்வாறு அகலும்? ஏதாவது உதாரணம் சொல்லி எங்களுக்குப் புரிய வையுங்களேன்” என்று நீங்கள் கேட்கக்கூடும்.

அதற்குமுன் சில நியமங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த நியமங்கள் கூட பந்த மற்றும் உதய வியுச்சித்திக்கு காரணங்களாவும் இருக்கின்றன. நான்கு கதி உயிர்களும் சம்யக்த்துவத்தைப் பெறமுடியும் என்று நாம் பார்த்தோம். நரக உயிர்கள் நபூம்சக வேதம் மட்டுமே உடையவர்கள். தேவர்கள் ஸ்திரி அல்லது புருஷ வேதம் உடையவர்கள். மனித மற்றும் விலங்கு கதி உயிர்கள் மூன்றில் ஏதாவது ஒரு வேதத்தில் இருப்பவர்கள். இந்த எல்லா உயிர்களும் சம்யக்த்துவத்தைப் பெறமுடியும். ஆனால் சம்யக்த்துவத்துடன் மனித, விலங்கு மற்றும் தேவ கதியில் பிறக்கும் உயிர்கள் புருஷ வேதம் உடையவர்களாகவே பிறப்பர், மற்ற வேதங்களில் பிறப்பதில்லை. நரகத்தில் நபூம்சக வேதம் ஒன்று மட்டுமே இருக்கிறது. எந்த கதியிலும் ஸ்திரி வேதத்தில், தேவகதி ஸ்திரியாக இருந்தாலும் பிறக்கும்போதிலிருந்தே சம்யக்திருஷ்டியாகப் பிறக்க முடியாது. மனித பிறவியிலும் ஸ்திரி பிறக்கும்போதே சம்யக்திருஷ்டியாகப் பிறக்க முடியாது. இன்னுமொரு விஷயம், மனித கதியில் ஸ்திரி ஐந்தாம் குணஸ்தானம்வரை மட்டுமே முன்னேற முடியும், முனி நிலையை அடையமுடியாது, அவர்கள் ஆறு மற்றும் அதற்கு மேல் குணஸ்தானங்களை அடைவதில்லை.

இப்போது நாம் ஒரு தவறான கற்பனை எவ்வாறு மறுக்கப்படுகிறது என்று பார்க்கலாம். மல்லிநாத தீர்த்தங்கரர் பெண் பிறவியில் பிறந்து அந்த ஸ்திரி பர்யாயத்திலிருந்தே தீர்த்தங்கரராகி முக்தியடைந்தார் என்ற மிகவும் குழப்பமான கற்பனை சில சம்ப்ரதாயங்களில் இருக்கிறது. மல்லிநாத பகவான் பரதக்ஷேத்திரத்தில் தோன்றிய தீர்த்தங்கரராவார். பரதக்ஷேத்திரத்தில் தோன்றிய தீர்த்தங்கரர்களுக்கு கர்ப்ப கல்யாணம், ஜென்ம கல்யாணம், தீக்ஷா கல்யாணம், கேவலஞான கல்யாணம், மோக்ஷ கல்யாணம் முதலிய ஐந்து கல்யாணங்களும் நிகழ்கின்றன. யாருக்கு கர்ப்ப கல்யாணம் நிகழ்கிறதோ அந்த உயிர் நியமமாக சம்யக்த்துவத்துடனேயே கர்ப்பத்தில் வருகிறது, அவர் முன் பவத்தில் சம்யக்திருஷ்டியாகவே இருந்தார். சம்யக்துவத்துடன் பிறக்கும் உயிர் புருஷராகவே பிறக்கிறது, ஸ்திரி பர்யாயத்தில் ஒருபோதும் பிறப்பதில்லை. தீர்த்தங்கரர்களுக்கு பாவவேத நோக்கில்கூட புருஷ வேதமே இருக்கிறது, ஸ்திரி வேதியாக இருக்கவே முடியாது. மல்லிநாத தீர்த்தங்கரருடைய உயிர் முன் பவத்தில் அபராஜித ஸ்வர்க்க தேவராக இருந்தது. அந்த பவம் முடிந்ததும் அவர் மனிதராகப் பிறந்தார். அபராஜித ஸ்வர்க்க தேவர்கள் எல்லோரும் பிறவியிலிருந்தே சம்யக்திருஷ்டிகளாவர். [மித்யாதிருஷ்டி உயிர்கள் நவகிரைவேக்ய சொர்க்கத்திற்கு மேல் சென்றுப் பிறப்பதில்லை.] அங்கு தேவியர்கள்கூட இருப்பதேயில்லை, அங்கு புருஷ பர்யாயத்தில் உள்ள தேவர்களே இருக்கின்றனர். ஆகையால் அவர் முன் பவத்திலேயே புருஷ பர்யாயத்தில்தான் இருந்தார்.

மற்றுமொரு விஷயம் கிரைவேக்ய சொர்க்கத்திற்கு மேல் அனுதிசை மற்றும் அனுத்தர சொர்க்கத்தில் பிறக்கும் எல்லாத் தேவர்களும் முந்தய பவத்தில் பாவலிங்கி முனிவர்களாவே இருந்தவர்களாவர், அந்த பவத்திலும் அந்த உயிர்கள் ஸ்திரி பர்யாயத்தில் இல்லை. இதன் மூலம் மல்லி தீர்த்தங்கர உயிர் முன் மூன்று பவங்களிலிருந்தே புருஷ பர்யாயத்தில் பிறந்தவர் என்பதையும், ஸ்திரி பர்யாயத்தில் பிறக்கவில்லை என்பதை நாம் உறுதி செய்யலாம்.

இன்னும் ஒரு நியமத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். பாவத்தால் ஸ்திரி வேதமுடைய, திரவிய புருஷவேதி உயிர்களால் தீர்த்தங்கரநாமகர்மப் பிரக்ருதியை பந்தம் செய்ய முடியுமே ஒழிய, தீர்த்தங்கர பிரக்ருதியின் உதயம் நிகழ பாவம் மற்றும் திரவ்யம் இரண்டுமே புருஷ வேதமாக இருத்தல் அவசியமாகும். தீர்த்தங்கரப் பிரக்ருதியின் உதயம் 13-ஆம் குணஸ்தானத்தில்தான் நிகழ்கிறது, அதேசமயம் எந்த திரவ்ய ஸ்திரியும் ஐந்தாம் குணஸ்தானத்திற்கு மேல் செல்லமுடியாது என்பது உங்களுக்குத் தெரிந்ததே யாகும்.

மேலும் தெரிந்து கொள்ள வேண்டுமா? அதே பவத்தில் மோக்ஷம் செல்லும் உயிரை சரமசரீரி என்று சொல்கின்றனர். அவர்கள் நியமமாக வஜ்ரவிரஷபநாராச சம்ஹனனம் கொண்டவர்களாகவே இருப்பர். ஆனால் ஸ்திரிகளுக்கு கீழ் மூன்று சம்ஹனனமே இருக்க முடியும், மேல் மூன்று சம்ஹனனங்கள் இருக்கவே முடியாது. “மல்லிநாதர் ஸ்திரியா அல்லது புருஷரா என்ற குழப்பத்தில் நாம் ஏன் இறங்க வேண்டும்? அதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? யாராவது அவரை ஸ்திரி என்று நம்பினாலோ அல்லது வேறு யாராவது அவரை புருஷர் என்று நம்பினாலோ அதனால் நமக்கு என்ன ஆகப்போகிறது?” என்று நம்மிடம் யாராவது சொல்லலாம்.

மகள்களே, யாரை யார் எப்படி நம்புகிறாரோ, அவருடைய அனுமானம் அப்படித்தான் இருக்கும். ஆனால் உண்மையாக ஒரு பொருள் எப்படி இருக்கிறது என்ற நம்முடைய முடிவு யதார்த்தமாக-பொருள் எப்படிக் காணப்படுகிறதோ அப்படியே இருக்கிறதா இல்லையா என்று பார்ப்பது நம் ஒவ்வொருவருடையக் கடமையாகும். தேவன்(கடவுள்), முனி, மற்றும் சாஸ்த்திரம் இவைகளின் வடிவம் உண்மையில் இப்படித்தான் இருக்கிறது, வேறு விதமாக இல்லை என்ற திடமான உறுதித்தன்மை வராமல் சம்யக்த்துவத்தைப் பெறவே முடியாது.

நான்கு அனுயோகங்களின் பயிற்சியின் மூலம் நம்முடைய தவறான நம்பிக்கை மற்றும் ஒழுக்கத்தை விலக்கி வீதராகத்தன்மையை-விருப்பு வெறுப்பற்ற நிலையை அடைவதே நம்முடைய முழுமுதற் கடமையாகும். இங்கு பிற உயிர்களிடம் என்ன தவறு நிகழ்கிறது என்று பார்ப்பதால் நமக்கு எந்தப் பிரயோஜனமுமில்லை, ஆனால் நம்முடைய நம்பிக்கையும், ஒழுக்கத்தையும் மேம்படச் செய்வதே நமக்குப் பிரயோஜனமாகும். மற்ற உயிர்களின் நடத்தை மற்றும் நம்பிக்கைகளைப் பார்த்துப் பார்த்து, நாம் அவர்கள்மேல் விருப்பு, வெறுப்பு கஷாய உணர்வுகள் கொள்ளுதல் தகுதியான காரியமில்லை. [அதனால் நம்முடைய ஆன்மீக முன்னேற்றம்தான் கெடும்.]

ஸ்வாத்யாயம் மற்றும் தத்துவஞானம் பெறும் பயிற்சி இல்லாமல் வெறும் நடத்தைகள்-செயல்கள் மட்டுமே மேம்படச் செய்யும் உபதேசத்தால், ஒருவருடைய நம்பிக்கை மேம்படுவதில்லை. நாம் மற்றவர்களின் நெறிமுறைகளைப் பற்றி கவலைப்படுவதை விட்டுவிட்டு நம்முடைய நெறிமுறைகள் மற்றும் நம்பிக்கைகளைக் கவனித்து நம்முடைய குறைபாடுகளை நாமே அறிந்து அவைகளை நாமே களைய முற்பட வேண்டும்.

மகள்களே, அனந்த காலமாக அலைந்து திரிந்து நாம் இப்போது மனிதப் பிறவியைப் பெற்றிருக்கிறோம். இந்தக் கிடைப்தற்கரிதான மனிதப்பிறவி பற்றி நாம் முன்னரே

விவாதம் செய்திருக்கிறோம். இப்போது தத்துவ அடிப்படையும் அதில் ஆர்வமும் உங்களுக்கு இருக்கிறது, ஜினேந்திர பகவானல் கூறப்பட்ட தத்துவ உபதேசமும் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இப்போது நீங்கள் அவைகளை மீண்டும் மீண்டும் சிந்தனை செய்துகொண்டே இருங்கள். நம்முடைய சூழ்நிலைகளையும், உடனிருப்பவைகளையும் மாற்ற வேண்டும் என்ற கவலையை விடுங்கள். நம் சூழ்நிலையும், உடனிருப்பவைகளும் அவைகளின் சுயத் தகுதியால் எப்படி ஆகவேண்டுமோ அப்படியே ஆகும். உங்களுடைய ஆர்வம் எப்போதும் நீங்கள் முக்தி பெறுவதில் மட்டுமே நிலைக்கட்டும். சஹடாலாவில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது -

**“பரதிரவ்யநதௌ பின்ன ஆப் மே ருசி சம்யக்த்துவ பலாஹை”**

மகள்களே, அனாதி காலமாக இந்த உயிர் உடனிருப்பவைகளிடமும், உடம்பிலும், ஆசை முதலான உணர்வுகளிலும்தான் மிகுந்த ஈடுபாடு கொண்டிருக்கிறது. பெரும்பாலும் மக்கள் “பேதஞானம் என்னவோ செய்ய வேண்டியதுதான்; ஆனால் அதற்கு முன்னர் நாங்கள் பணம் சம்பாதிக்க வேண்டும், என் பிள்ளைகளைப் படிக்கவைத்துப் பெரியவர்களாக ஆக்க வேண்டும், அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும்” என்று சொல்கின்றனர். **தன்னைப் பிற பொருள்களிலிருந்து பிரித்தறிய வேண்டுமென்றால், உடலிலிருந்து தன்னைப் பிரித்தறிய வேண்டுமென்றால், ஆசை முதலான துவர்ப்பு உணர்வுகளிலிருந்து நம்மைப் பிரித்தறிய வேண்டுமென்றால் எந்த உடனிருப்பவைகள் இருந்தால், இது சாத்தியம்?** என்று எனக்கு சொல்லுங்கள் பார்க்கலாம். **அமெரிக்காவில் இருக்கவேண்டுமா ஆல்லது இந்தியாவில் இருக்க வேண்டுமா? குடிசையில் வாழ்ந்தால் பேதஞானம் சுலபமாக வருமா அல்லது மாளிகையில் வாழ்ந்தால் சுலபமாக வருமா? கருப்பு உடம்பாக இருந்தால் பேதஞானம் சுலபமாக வருமா அல்லது சிகப்பாக இருந்தால் வருமா? கருப்பு முடியுடன் இருக்கும்போது பேதஞானம் செய்வது சுலபமா அல்லது வெள்ளை முடியுடன் இருந்தால் சுலபமா? எந்த இராக உணர்வால் தன்னை பிரித்தறிய வேண்டும்?** தான் யாருக்கும் எந்த தீங்கும் விளைவிப்பதில்லை என்று தன்னை இந்த உயிர் வேறுபடுத்திச் சொல்லுகிறது, ஆனால் நான் எப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்கிறேன் பாருங்கள் என்று சொல்லிக் கொள்வதில் மட்டும் சந்தோஷமடைகிறது. இவைகளுக்கெல்லாம் காரணம் தன்னை ஒரு பெரிய மஹானாக அது நம்பிக் கொண்டிருக்கிறது.

மகள்களே, இந்த தத்துவஞானம் கேட்பதற்கும் படிப்பதற்குமான ஒரு பொருள் மட்டுமே என்று எண்ணாதீர்கள். இது உங்களுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய ஒரு பொருளாகும்-உங்களுடன் இதைப் பொருத்தி உங்களை நீங்களே உள்நோக்கிப் பார்க்கும் முயற்சில் ஈடுபட வேண்டிய ஒரு பொருளாகும். ஆத்மக்யாதி கிரந்தத்தில் ஆச்சாரிய அமிர்தசந்திரர், **அலம் அலம் ஆதி விஸ்தரேன, பஹு விகல்பேன** என்று எழுதுகிறார். அதனால் என்ன இப்போது நாம் அதிகம் படிக்க வேண்டும் என்று மட்டுமே உங்களுக்குத் தோன்றுமானால், பிறகு எப்போது அந்தரங்கத்தில் ஒன்றுவதாக உத்தேசம்?

அரே, சிறிய குழந்தைகூட அம்மா தனக்கு உணவு ஊட்டுவதை விரும்பாமல், தன் கையாலேயே எடுத்து உண்ண முயற்சி செய்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிறுவர்கள் கூட தொலைக்காட்சிப் பெட்டியில் கிரிக்கெட் விளையாட்டைப் பார்த்து, பிறகு அவர்களே கிரிக்கெட் மட்டையை அவர்கள் கையில் எடுத்துப் பந்தை அடிக்கும் செயலில் ஈடுபடுவதைப் பார்க்கிறோம். நமக்கு விருப்பமான காரியமாக இருக்கும் பட்சத்தில் முன்னால் இருக்கும் நபர் விளக்கத் தொடங்கியதும், போதும் எனக்குப் புரிகிறது என்று சொல்லி அவரை நிறுத்திவிட்டு, நாமே அதைச் செய்வதில் இறங்கி விடுகிறோம். ஆனால் அத்யாத்ம சாஸ்த்திர விஷயத்தில் மட்டும் யாராவது புரியும்படி கூறினால் மட்டும் கேட்டுக்கொண்டு இருக்கவே விரும்புகிறோம், பிறகு அதைப்பற்றி எதுவும் செய்யாமல் அப்படியே விட்டுவிட்டு வேறு லௌகீக விஷயங்களைச் செய்வதில் இறங்கி விடுகிறோம். நமக்கு என்ன ஆயிற்று? [ஆன்மநலம் சம்பந்தமான விஷயத்தில் மட்டுமே நம்மில் பலரிடம் ஏன் இவ்வளவு ஊதாசினம்-ஈடுபாடின்மை காணப்படுகிறது?]

லௌகீக விஷயங்களில் மட்டும் நாம் மிகவும் புத்திசாலியாக இருக்கிறோம். நீ சமயலறையில் தோசை சுடும்போது தோசைக்கல்லை சூடு படுத்துகிறாயா அல்லது கேஸ் சிலிண்டரை மூடிவைத்துவிட்டு வேறு காரியங்களை செய்வதில் இறங்கி பிறகு திரும்பிவந்து சூடாகாத தோசைக் கல்லில் தோசை சுடுகிறாயா? தோசைக்கல் சூடானால்தான் தோசை வரும் என்பது குழந்தைகளுக்குக் கூடத் தெரியும். **பொரிக்கும் தட்டு சூடாக இருக்கும்போதே ரொட்டி சுட்டுக்கொள்** என்று ஒரு பழமொழி கூட மராட்டி மொழியில் இருக்கிறது.

அதேபோல சாஸ்திரத்தைப் படிக்கும்போதே அல்லது கேட்கும்போதே ஆத்மாவில் விசுத்தி உண்டா வேண்டும் - அத்யாத்ம சுவை ஊற வேண்டும் - அப்போதே சாஸ்திரத்தைப் பற்றிய லட்சியம் விடப்பட்டு உள்நோக்கும் உணர்வு உற்பத்தியானால் சம்யக்தரிசன வடிவ காரியம் அப்போதே நிகழும். எதுவரை சாஸ்திரத்தை கேட்கிறீர்களோ/படிக்கிறீர்களோ அதுவரை உணர்வு நன்றாக இருக்கிறது மக்கள் கூறுவதை நாம் பார்க்கிறோம். வெறுமனே விசுத்தி அதாவது சுப உணர்வு கொள்வதால் மட்டுமே நமக்குப் எந்தப் பிரயோஜனமில்லை. அதை என்னவோ நாம் அனந்தமுறை செய்திருக்கிறோம். **சாஸ்திரம் படிக்கும்போதோ அல்லது அதற்குப் பிறகோ எப்போது சுவை வருகிறதோ - உள்ளிருந்து தீவிர ருசி உண்டாகிறதோ - நம்முடைய ஞான ஸ்வபாவத்தின் அபூர்வ மஹிமை வருகிறதோ அப்போதே படிப்பதை விட்டுவிட்டு உன் அந்தரங்கத்தில் மூழ்கி விடு!**

நான் எவ்வளவு படித்தால் சம்யக்த்துவம் உண்டாகும்? என்று உயிர் எண்ணுகிறது. சித்தாந்தத்தைக் கேட்டு சரியான தத்துவ நிர்ணயம் செய்தோம் என்றால் பிறகு வேறு என்ன செய்ய வேண்டும்? வேறு ஒருவரின் பர்யாயத்தையோ அல்லது நம்முடைய பர்யாயத்தையோ மாற்ற வேண்டியதில்லை. நாம் இயல்பாகவே பார்ப்பவர் அறிபவர்தான், அந்த வடிவில் இருக்க வேண்டியதுதான். நாம் பரிபூரணமாக எந்தவிதக் குறையுமின்றி முழுமையாகவே இருக்கிறோம், ஆகையால் அந்த திட விஸ்வாசத்துடன்-நம்பிக்கையுடன் ஆனந்தத்தில் இருக்க வேண்டியதுதான்!

“இப்போது நான் எதை சிந்தித்தால் எனக்கு சம்யக்த்துவம் உண்டாகும்? என்ற சந்தேகம் யாருக்காவது எழலாம். **அரே, நீ தத்துவ நிர்ணயம் செய்துவிட்டாய், சிந்தித்ததின் மூலம்தான் நிர்ணயம் செய்யும் அளவுக்கு வந்திருக்கிறாய். இப்போது உனக்கு வேறு எந்த சிந்தனை தேவை? உன்னில் ஆழ்ந்து போய்விடு! அங்கேயே நின்று அதிலேயே கலந்து விடு!! பால் தயிராவதற்கு அமுது இட்ட பிறகு, அதை என்ன கிளறி விட்டுக்கொண்டேவா இருக்கிறீர்கள்? அல்லது அதுவே தயிராகிறதா? மழைக்குப் பிறகு தண்ணீர் தெளிய படிகாரம் போட்ட பிறகு அந்த தண்ணீரை கலக்கிக்கொண்டே இருக்கிறீர்களா, இல்லை அப்படியே விட்டு விடுகிறீர்களா? கண்ணாடியின் மூலம் சூரிய ஒளிக் கற்றைகளை ஒன்று சேர்த்து காகிதத்தை எரிக்க முடிகிறது, அங்கு கண்ணாடியை ஆட்டிக் கொண்டே இருந்தால் காகிதம் எரியுமா? கொஞ்ச நேரம் நிலையாக வைத்திருந்தால் எரியுமா?** இதுபோன்ற விஷயங்களில் மட்டும் நீங்கள் புத்திசாலியாக இருக்கிறீர்கள், ஆனால் உங்களில் நீங்கள் உறைய மட்டும் விருப்பமில்லாமல் இருக்கிறீர்களே! விகல்பங்களில்-வெவ்வேறு சிந்தனைகளில் ஈடுபடும் மாயாஜாலத்தில் ஈடுபடவே விரும்புகிறீர்கள், ஏன் அப்படி இருக்கிறீர்கள்?

விகல்பங்கள்-சிந்தனைகள் கூட ஆசையின் வடிவம்தான்-இராக பாவம்தான். இராகம் அதன் தகுதியால் வரும்-போகும். உடனிருப்பவைகள் கூட வந்துசேர்வதும்-விலகிப்போவதுமாக இருக்கும். எல்லாவற்றிற்கும் மேல் அவைகளிலிருந்து நான் வேறானவன் என்று அறிதல் மிகமிக அவசியமானதாகும். ஆனால் நாம் உடனிருப்பவைகளைச் சேர்ப்பதிலும், விலக்குவதிலும்தான் அதிக விருப்பமும், மிகுந்த கவனமும் உடையவர்களாக இருக்கிறோம். **நாம் தேவலாலிக்கு தத்துவ முகாம்களுக்கு வருகிறோம், இங்கு நிலவும் இயற்கையின் அழகையும், மகிழ்ச்சி அளிக்கக்கூடிய சூழ்நிலைகளையும் பார்த்து ஆனந்தமடைகிறோம். பிறகு மனதில் முதலில் வருவது நாம் இங்கு ஒரு மாளிகையையோ அல்லது வீட்டையோ அமைத்துக் கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்பதே! ஆனால் இங்குள்ள பகவானை தரிசனம் செய்து கொண்டே இவரைப்போல் நாமும் பகவான் ஆகவேண்டும் என்ற சிந்தனை எப்போதாவது நம்மிடம் வருகிறதா?** என்று கொஞ்சம் சிந்த்தித்துப் பாருங்கள்!!!

சாஸ்திரங்களில் சுத்தாத்மா மற்றும் அத்யாத்ம என்ற சொல்லைக் கேட்டதும், மக்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் **இவைகள் எல்லாம் எட்டாத கனிகள், மிகவும் உயரத்தில் இருப்பவை, முதலில் நாம் புண்ணியம் சம்பாதிக்க வேண்டுமல்லவா?** என்பதுதான்! மகள்களே, புண்ணிய உணர்வு வரத்தான் செய்யும் ஆனால் **புண்ணியம் செய்வது எதிர் காலத்தில் நல்லதைக் கொடுப்பது அதனால் அதை செய்ய வேண்டும் அல்லவா** என்ற எண்ணம்-என்ற நம்பிக்கை தவறானதாகும்-விபரீதமான-எதிர்மறையான-நம்மைப் பிறவிச் சுழற்சியில் சிக்கவைக்கும் அபிப்ராயமாகும்.

தத்துவச் சிந்தனை உணர்வு என்னவோ மிக உயர்ந்த சுப பாவம்தான்-புண்ணிச் செயல்தான். [அதை சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கில் நாம் தத்துவப் பயிற்சியும், சிந்தனையும் செய்வதில்லை; நாம் பிறவி சுழற்சியிலிருந்து விடுபட்டு முக்தியை இலக்காகக் கொண்டு அந்த மிக உயர்ந்த சுபச் செயல்களைச் செய்கிறோம். அதனால் சாதிக்ஷய புண்ணியம் தானாகவே, நம் விருப்பம் இல்லாமலே நமக்கு பந்தமாகிறது.

அதனால் முக்தி பெறும் காலம் கனியும்வரை அந்த புண்ணியப் பலத்தால் சுகமும் ஆன்ம சிந்தனையும் உள்ள தேவ, மனிதப் பிறவிகளே நமக்கு அமைகின்றன.] இந்த பஞ்சலப்தி பற்றிய விளக்கத்தைப் பயிற்சி செய்து, அந்த தத்துவத்தை சிந்தனை செய்து, அதை உறுதி படுத்தும் அளவுக்கு முன்னேறுவதின் மூலமே மிகக் குறைந்த காலத்தில் சம்யக்த்துவம் பெறப்படுகிறது என்பதைப் பற்றிய விரிவான விளக்கங்களை நாம் இதுவரைப் பார்த்தோம்.

**சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள இந்த மர்மங்களைப் புரிந்து கொண்டு, ஜினேந்திரனால் சொல்லப்பட்ட சித்தாந்தங்களை மீண்டும் மீண்டும் பயிற்சி செய்து-அவைகளைச் சிந்தனை செய்து-அவைகளை உறுதி செய்து நீங்கள் சம்யக்த்துவத்தைப் பெறுவீர்கள் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கிறது.** இதன் மூலம் பஞ்ச பரிவர்த்தனை வடிவ சம்சாரத்திலிருந்து-துன்பம் நிறைந்த பிறவிச்சுழற்சி சமுத்திரத்தைக் கடந்து நிலையான மோக்ஷ சுகத்தைப் பெறலாம்.

நாம் அனாதி காலமாக இந்த பிறப்பு இறப்பு வடிவ சமுத்திரத்தில் எவ்வளவு காலத்தை இழந்திருக்கிறோம் என்பதைப் பற்றிய விளக்கத்தைப் பெற வேண்டுமென்றால் திரவ்ய பரிவர்த்தனை, க்ஷேத்ர பரிவர்த்தனை, கால பரிவர்த்தனை, பவ பரிவர்த்தனை, பாவ பரிவர்த்தனை ஆகிய இவைகளின் ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். இந்த விஷயம் பற்றிய சொற்பொழிவுகள் சம்பந்தமான யூடியூப் பதிவுகள் (youtube videos) இணைய தளத்தில் இருக்கின்றன, அவைகளைக் கேளுங்கள். இப்போது பஞ்சலப்தி பற்றிய இந்த விரிவான விளக்கத்தை இத்துடன் முடிக்கிறேன். இந்த விஷயம் கொஞ்சம் ஆழமானது தான். இதை எழுதும் போது நான் அனேக முறை கிரந்தங்களைப் படிக்க வேண்டியிருந்தது, ஜெயிநேந்திர சித்தாந்த கோஷ் (jain Dictionary), லப்திசாரம், மோக்ஷமார்க்கப்பிரகாசம் ஆகிய நூல்களில் பலமுறை ஆதாரங்களைத் திரட்ட வேண்டியிருந்தது.

நீங்கள் இந்த நூலை மீண்டும் மீண்டும் படித்து நல்ல முறையில் புரிந்து கொள்ளுங்கள். இதனால் எதிர்காலத்தில் மூல கிரந்தங்களை நீங்கள் படிக்கும்போது உங்களுக்கு மிகவும் சுலபமாக இருக்கும். ஒன்றை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். இவைகளில் கர்மங்களின் பெயர்கள் மற்றும் அவைகளின் பல்வேறு நிலைகள் பற்றி கொஞ்சம் ஞாபகத்தில் இல்லாமல் போனாலும் பரவாயில்லை, ஆனால் உயிர் மற்றும் கர்மத்தின் சுதந்திரத் தன்மையை மட்டும் எப்போதும் மறக்காதீர்கள். உங்கள் ஸ்வபாவம் பற்றிய சிந்தனையை எப்போதும் இழக்காமல் இருங்கள். மோக்ஷத்திற்கு சரியான தீர்வு காண விரும்புபவர்களுக்கு எல்லா காரணங்களும் தாமாகவே சுலபமாகவே கிடைத்து விடுகின்றன. இந்த ஆண்டு மஹாவீர ஜெயந்தி தினத்தில் கடிதம் மூலம் பஞ்சலப்தி பற்றி எழுதத் துவங்கி, இன்று இந்த மஹாவீரர் பரிநிர்வாண தினத்தில் தேவலாலியில் இதை பூர்த்தி செய்கிறேன். இதைப் படித்து பல உயிர்கள் பரிநிர்வாண சுகத்தைப் பெறவேண்டும் என்பதே என் பாவனையாகும்!


கல்யாணமஸ்து!

ஜெய் ஜினேந்திரா!!

- உங்கள் அம்மா

சாஸ்திரதானம் அளித்தவர்கள்:

1. திருவறப்பொறியாளர்.சின்னதுரை, திருமதி.சரோஜா, சென்னை. ₹2,500
2. திரு.பகவான்குமார், திருமதி.உமாராணி, மாம்பலம்(மேற்கு). ₹2,500
3. திரு.ஜெயகுமார், திருமதி.வசந்தலட்சுமி, காஞ்சிபுரம். ₹2,500
4. திரு.J.ஸ்ரீதர், திருமதி.ஆனந்தி, சென்னை. ₹2,500
5. திரு.தஞ்சை சுகுமாரன். சென்னை. ₹2,500
6. திரு.S.சம்பத், காவாங்கரை, புழல். ₹2,500
7. திரு.A.சதீஷ்பாபு, திருமதி.பத்மினி, தாம்பரம்(கிழக்கு). ₹2,500
8. திரு.அப்பாசாமி, திருமதி.சாந்தா, உப்புவேலூர். ₹2,500
9. திருமதி.ஜினதத்தை அனந்தராஜ், வங்காரம். ₹2,500
10. திரு.பரதகுமார், திருமதி.அமரசுந்தரி, சென்னை. ₹2,500
11. திரு.ஜீவேந்திரன், திருமதி.பத்மலதா, இராமாபுரம். ₹2,000
12. திரு.இரவிசந்திரன், திருமதி.லதா, பம்மல். ₹2,000
13. திருமதி.சரஸ்வதி ஸ்ரீதர், சென்னை. ₹2,000
14. திரு.அனந்தவிஜயன், திருமதி.சாந்தி, நங்கநல்லூர். ₹2,000
15. கவிஞர்.இரா.தங்கராஜ், திருமதி.பானுமதி, சென்னை. ₹1,500
16. திரு.C.விருஷபதாஸ், திருமதி.நாகசுந்தரி, சென்னை ₹1,500
17. திரு.M.P.R.குமார், திருமதி மேகலா, செஞ்சி. ₹1,500
18. திரு.பிரபாகரன், திருமதி.மணிமேகலை, சென்னை ₹1,250
19. திரு.J.ரமேஷ், திருமதி.மலர்விழி, சென்னை ₹1,250
20. திரு.பத்மராஜ் ராமசாமி, திருமதி. ஜெயாபானு, மன்னார்குடி. ₹1,000
21. திரு.தன்யகுமார், திருமதி.சந்திரா, பம்மல் ₹1,000
22. செல்வி.அனிகா ரிஷப்ஸாகர் , மான்செஸ்டர், U.K. ₹1,000
23. திரு.C.S.P.ஜெயின், திருமதி.காந்தா, பாண்டிச்சேரி ₹1,000
24. திரு.தரநேந்திரதாஸ், திருமதி.ஜான்சி, வில்லிவாக்கம் ₹1,000
25. திரு.உதயகுமார், திருமதி.எஸ்ஸெஸ்வதி, ஆயலவாடி ₹1,000
26. திரு.சந்திரமோஹன், திருமதி நீலகேசி, சென்னை ₹1,000
27. திரு.கனகதாஸ், திருமதி.மல்லிகா, வேளச்சேரி. ₹1,000
28. திரு J.அகஸ்தியப்பன், திருமதி.ஜெயந்தி, பம்மல் ₹1,000
29. திரு G.ஜினதத்தன், ஆரணி. ₹1,001
30. திரு.குமார், திருமதி.விஜயலட்சுமி, செய்யாறு ₹1,000
31. திரு.பாபுலால், திருமதி.மாலா, சென்னை ₹1,000
32. திரு.சோமப்பிரபன், திருமதி.எஸ்ஸெஸ்வதி, வீடூர்(கடலூர்) ₹1,000
33. திரு.ஜினதத்தன், திருமதி.பிரேமா. திருநின்றவூர். ₹1,000
34. திருமதி.சாந்தா வசுகுமார், விழுக்கம் ₹1,000
35. திரு ஜெயவிஜயன், திருமதி மலர்விழி, திருநின்றவூர். ₹1,000
36. திரு.ரமேஷ், திருமதி.சங்கீதா, கொளத்தூர். ₹1,000
37. திரு.பாஹுபலி, திருமதி.வாசுகி, சென்னை. ₹1,000
38. திரு. இராஜேந்திரபிரசாத், திருமதி. இராஜலட்சுமி, சென்னை. ₹1,000
39. திரு. பேரணி ஸ்ரீதரன், திருமதி.விஜயா, விழுப்புரம். ₹1,000
40. திரு.K.A.சிம்மசந்திரன், திருமதி.சாந்தி, ஆதம்பாக்கம் ₹1,000
41. திரு.தேவன் குமார், திருமதி. பத்மா ஆனந்தி, பெங்களூர். ₹1,000
42. திரு.ஜீவகன், திருமதி வசந்தா, பம்மல். ₹1,000
43. திருமதி.சுகந்தி பத்ரபாஹு, திண்டிவனம் ₹1,000
44. குமாரி.S.ஹர்ஷதா, குமாரி.S.பிருத்திவிஸ்ரீ, சென்னை ₹1,000
45. திருமதி.சசிகலா ஜீவதாஸ், திண்டிவனம் ₹1,000
46. திரு.இளங்கோவன், திருமதி.கஸ்தூரி,சென்னை. ₹1,000
47. செல்வி.A.சுபிரியா அருன் சக்கரவர்த்தி, சென்னை. ₹1,000


ॐ